# ALAGAPPA UNIVERSITY




**[ACCREDITED WITH ‘A+’ Grade by NAAC (CGPA:3.64) in the Third Cycle and Graded as Category-I University by MHRD-UGC]**
**(A State University Established by the Government of Tamilnadu)**

**KARAIKUDI – 630 003**

## DIRECTORATE OF DISTANCE EDUCATION

## M.Com.,

**IV SEMESTER**

# 10233/12533 - வியாபாரவங்கிமற்றும் நிதிதேவைகள்

Copy Right Reserved For Private use only

**Author:**
**Dr.S.Nazar**,
Assistant Professor PG and Research Department of Commerce,
PG and Research Department of Commerce,
Dr.ZakirHussain College
Illayangudi.

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

## SYLLABI – BOOK MAPPING TABLE

## 10233/12533 - வியாபாரவங்கிமற்றும் நிதிதேவைகள்

| Syllabi | Mapping in Book |
|---|---|
| **அலகு** 1 வியாபாரவங்கிமற்றும் நிதிசேவைகள் கருத்தக்கள் - நிதிமுறை இந்தியாவில் வியாபாரவங்கிகளைவளர்த்தல் மற்றும் நெறிமுறைகள் | **Pages 1-23** |
| **அலகு** 2 இ'யூ மேலாண்மைபிரிஇ'யூ போஸ்ட் இ'யூ மேலாண்மைசெயல்கள். | **Pages 24-33** |
| **அலகு** 3 அன்டர் ரைட்டிங் மற்றும் புரோகிரே' பங்கவெளியீட்டில் அன்டர் ரைட்டர்ஸ் மற்றும் புரோக்கர்களின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிஅறிதல். | **Pages 34-42** |
| **அலகு** 4 சர்வதேசசந்தையில் இருந்த மூலதனம் பெறுதல் இந்தியகம்பெனிகளுக்குவெளிநாட்டுசந்தை மூலதனத் தேவை– யூரோசெலாவணிநாணயத்தின் பயன்கள் பலவகையானடெபாசிட்டரிரெசிப்டஸ்ஜ மதிப்பீடுசெய்தல் அமெரிக்கடெபாசிட்டரிரெசிப்ட்ஸ் குளோபலடெபாசிட்டரி ரெஸிப்ட்ஸ்- எப்சிசிபிகள் மற்றும் எப்சிஈபிகள் | **Pages 43-54** |
| **அலகு** 5 நிதிசேவைகள் இந்தியாவில் நிதிச் சேவைகள் வகைகள் முக்கியத்துவம் ஆன்லைன் டிரேடிங் பணமதிப்புநடவடிக்கைமற்றும் ரீமெட்ரியலைசேசன் | **Pages 55-75** |
| **அலகு** 6 டெபாசிட்டரிமுறைகள் இந்தியாடெபாசிட்டரிமுறைகள் டெபாசிட்டரிசட்டம் 1996 டெபாசிட்டரிபங்காளர்கள் என் எஸ் டீ எல் சீடி எஸ் எள் மற்றும் பலன்கள் | **Pages 76-86** |
| **அலகு** 7 மீட்சுவல் பன்ட்ஸ் மற்றும் ஏ எம்சிபரஸ்பரநிதிகள் வகைகள் பலன்கள் பாதகங்கள் சட்டகட்டஅமைப்பு இந்தியாவில் பரஸ்பரநிதியங்களைஒழுங்குபடுத்ததல் | **Pages 87-103** |
| **அலகு** 8 லீஸ் (குத்தகை) கத்தகைவிடுதல் பயன்கள் லிமிடேசன்ஸ் வகைகள் | **Pages 104-115** |
| **அலகு** 9 வாடகைமுறையில் வாங்குதல் கயர்பர்செஸ் முக்கியமானநிதிகண்டுபிடிப்புகுத்தகைநிதிமுறைகள் மற்றும் வாடகைகொள்முதல் முறைகள் | **Pages 116 -121** |
| **அலகு** 10 இணைத்தல் மற்றும் எடுத்தல் இணைத்தலின் பலன்கள் இணைத்தலுக்கானவரையறைமற்றும் செயல்முறைகள் | **Pages 122-131** |

| | |
|---|---|
| சட்டபூர்வவி'யங்களை இந்தியாவில் ஒருநிறுவனத்தைமுழுமையாகஆட்கொள்ளுதல் மற்றும் எடுத்தல். | |
| **அலகு** 11 போர்ட்போலியோமேலாண்மை–வரையறைகள் மதிப்பீடுநட்பங்கள் மற்றும் போர்ட்போலியோமாற்றம் மற்றும் நடவடிக்கைகள் | **Pages 132-152** |
| **அலகு** 12 கடன்களைபரிசீலித்தல் பரிசீலித்தல் சிறப்பியல்புகள் பயன்கள் மற்றும் பின்பற்றப்படவேண்டியவழிகள் வழிகாட்டும் முறைகள் | **Pages 153-165** |
| **அலகு** 13 பென்சர் மூலதனநிதியம் பென்ஸர் கேபிடல் பன்ட் சிறப்பியல்புகள் இந்தயிாவில் வென்சர் மூலதனத்தின் வளர்ச்சிசெயல்பாடு–கிரெடிட் ரேட்டிங் செயல்முறைகள் - இந்தியாவில் கிரெடிட் ரேட்டிங் நிறுவனத்திற்கானஎதிர்காலம் | **Pages 166-200** |
| **அலகு** 14 பேக்டரிஸ் செயல்முறைமற்றும் சிறப்பியல்புகள் ஒப்பந்த வகைகள் பலன்கள் மற்றும் பாதகங்கள் பேக்டரிக்கும் பில் டிஸ்கவுண்டிங்கும் உள்ளவேறுபாடு. இந்தியாவில் உள்ளபேக்டரிஸ் செயல் முறைகள் பர்பீட்டிஸ் செயல்முறைகள் விவரித்தல் | **Pages 201-210** |

# CONTENTS


**அலகு– 1 வணிகர் வங்கியியல்** **1-23**

1.1 அறிமுகம்

1.2 இந்தியாவில் வணிகர் வங்கியியலின் வளர்ச்சி

1.3 இந்தியாவில் வணிகள் வங்கியியலின் அவசியம் மற்றும் முக்கியத்துவம்

1.4 வணிகர் வங்கிகளின் பணிகள்

1.5 வணிகர் வங்கியர்களுக்கானவழிகாட்டிச் சரத்துக்கள்

1.6 வணிகர் வங்கியருக்குசெபியால் அளிக்கப்பட்டஅதிகாரம்

1.7 இந்தியநிதிநிலைமுறை

1.8 இந்தியநிதிநிலைமுறையின் கட்டமைப்பு

1.9 இந்தியநிதிநிலைமுறையின் மேம்பாடு

1.10 இந்தியநிதிநிலைமுறையின் போக்குகள்

1.11 தற்போதைய இந்தியநிதிநிலைமுறையின்நிலை

1.12 தொகுத்தறிவோம்

1.13 கலைச்சொற்கள்

1.14 வினாக்கள்

1.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 2 வெளியீட்டுமேலாண்மை** **24-33**

2.1 அறிமுகம்

2.2 வெளியீட்டிற்குமுந்தையமேலாண்மை

2.3 வெளியீட்டிற்குபிந்தையமேலாண்மை

2.4 வெளியீட்டுமேலாண்மையில் வணிகர் வங்கியரின் பங்கு

2.5 தலைமைமேலாளர்களின் பொறுப்புக்கள்

2.6 வணிகர் வங்கிகளின் சேவைகள்

2.7 தொகுத்தறிவோம்

2.8 கலைச்சொற்கள்

2.9 வினாக்கள்

2.10 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 3 ஒப்புறுதி** **34-42**

3.1 அறிமுகம்

3.2 ஒப்புறுதிசெய்தலின் நன்மைகள்

3.3 ஒப்புறுதிகழவு

3.4 துணைஒப்புறுதியர்கள்

3.5 ஒப்புறுதிஒப்பந்தம

3.6 ஒப்புறுதிநடைமுறை

3.7 ஒப்புறுதிதொடர்பானகம்பெனிச் சட்டச்சரத்துக்கள்

3.8 கூட்டவைஒப்புறுதி

3.9 இந்தியாவில் ஒப்புறுதிமுகவாண்மைகள்

3.10 தொகுத்தறிவோம்

3.11 கலைச்சொற்கள்

3.12 வினாக்கள்

3.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு–4 மூலதனத்தைஉயர்த்துவது** **43-54**

4.1 அறிமுகம்

4.2 சர்வதேசசந்தைகளில் இருந்து மூலதனத்தைஉயர்த்துவது.

4.3 வெளிநாட்டுபத்திரங்களின் மாறுபட்ட வகைகள்

4.4 மதிப்பீடு–அமெரிக்கவைப்புத் தொகைரசீதுகள்.

4.5 மதிப்பீடு–உலகளாவியவைப்புத் தொகைரசீதுகள்.

4.6 மதிப்பீடு–வெளிநாட்டுநாணயமாற்றத்தக்கபத்திரம்(FCCB)

4.7 மதிப்பீடு–வெளிநாட்டுநாணயபரிமாற்றம் செய்யக்கூடியபத்திரங்கள்

4.8தொகுத்தறிவோம்

4.9 கலைச் சொற்கள்

4.10 வினாக்கள்

4.11 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 5 நிதிச் சேவைகள்** **55-75**

5.1 அறிமுகம்

5.2 நிதிச் சேவைகளின் தற்போதையநிலைமை

5.3 நிதிச் சேவைகளின் முக்கியத்துவம்

5.4 நிதிச் சேவைகளின் வகைகள்

5.5 நிதிச் சேவைகளும் பொருளாதாரசுற்றுச் சுழலும்

5.6 நிதிச் சேவைகள் துறையின் பங்கேற்பாளர்கள்

5.7 தொகுத்தறிவோம்

5.8 கலைச்சொற்கள்

5.9 வினாக்கள்

5.10 பரிந்துரைக்கப்பட்ட நூல்

**அலகு– 6 ஈடுகள் களஞ்சியம் அமைப்பு** **76-86**

6.1 அறிமுகம்

6.2 களஞ்சியத்தின் தேவை

6.3 இந்தியதேசியப் பங்குமாற்றகம்லிட்

6.4 தேசியப் பங்குமாற்றகத்தின் நோக்கங்கள்

6.5 உறுப்பினர் நிலை

6.6 வியாபாரஉறுப்பினர் நிலைக்கானதகுதிஅளவைகள்

6.7 இந்தியப் பங்குக் கோவைகள் பற்றுதல் கழகம் லிட்

6.8 இந்தியப் பங்குக் கோவைகள் பற்றுதல் கழகத்தின் பணிகள்

6.9 தேசியஈடுகள் களஞ்சியம் லிட்

6.10 களஞ்சியத்தின் நன்மைகள்

6.11 களஞ்சியப்பங்கேற்பாளர்கள

6.12 தொகுத்தறிவோம்

6.13 கலைச்சொற்கள்

6.14 வினாக்கள்

6.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 7 பரஸ்பர நிதிகள் 87-103**

7.1அறிமுகம்

7.2 பரஸ்பரநிதிகளின் நோக்கம்

7.3 பரஸ்பரநிதிகளின் தோற்றமும்,திட்டங்களும்

7.4 பரஸ்பரநிதிகளின் வகைகள்

7.5 பரஸ்பரநிதிகளின் நன்மைகள்

7.6 பரஸ்பரநிதிகளைஒழுங்குபடுத்துதல் - செபியின் வழிகாட்டிச் சரத்துக்கள்

7.7 பரஸ்பரநிதித் திட்டங்களுக்கானவரிப் பயன்கள்

7.8 பரஸ்பரநிதியின் அமைப்புசார்ந்தகட்டமைப்பு

7.9 பரஸ்பரநிதிகளின் தற்போதையநிலை

7.10 பரஸ்பரநிதிகளின் குறைபாடுகள்

7.11தொகுத்தறிவோம்

7.12 கலைச் சொற்கள்

7.13 வினாக்கள்

7.14 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 8 குத்தகைநிதியிடல் 104-115**

8.1 அறிமுகம்

8.2 குத்தகையிடலின் பொருள்

8.3 குத்தகைஒன்றின் இயல்புகள்

8.4 நிதிஆதாரம் என்றநிலையில் குத்தகையிடுதல்

8.5 குத்தகைநடவடிக்கைகளின் கட்டங்கள்

8.6 குத்தகைநிதியிடுதலின் வடிவங்கள்

8.7 குத்தகையிடுதலின் நன்மைகள

8.8 குத்தகையிடுதலின் தீமைகள்

8.9 இந்தியாவில் குத்தகையிடல்

8.10 தொகுத்தறிவோம்

8.11 கலைச்சொற்கள்

8.12 வினாக்கள்

8.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 9 வாடகைக் கொள்முதல் 116 -121**

9.1 அறிமுகம்

9.2 தவணைமுறைக்கடனின் வடிவங்கள்

9.3 வாடகைக் கொள்முதல் நிதியின் நன்மைகள்

9.4 வாடகைக் கொள்முதல் நிதியின் குறைபாடுகள்

9.5 குத்தகைமற்றும் வாடகைக் கொள்முதல் ஒற்றுமை

9.6 குத்தகைக்கும் வாடகைக் கொள்முதலுக்கும் இடையிலானவேறுபாடுகள்

9.7 முடிவுரை

9.8 தொகுத்தறிவோம்

9.9 கலைச்சொற்கள்

9.10 வினாக்கள்

9.11 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு–10 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் 122-131**

10.1 அறிமுகம்

10.2 இணைப்புபள் மற்றும் கையகப்படுத்துதலுக்கானகாரணங்கள்

10.3 எந்த இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் சம்பந்தப்பட்டநிலைகள்

10.4 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்களின் நன்மைகள்

10.5 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதலஒப்பந்தத்தில் பத்துபடிகள்

10.6 சட்டபூர்வநோக்கங்கள் மற்றும் கையகப்படுத்துதல்

10.7 இந்தியா இணைப்பைகையகப் படுத்துபவரின் மற்றும் நிறுவனங்களுக்கானகையகப்படுத்துதல்

10.8 இணைப்புகளின் வகைகள்

10.9 கையகப்படுத்துதறுக்கானமிகமுக்கியமானகாரணம்

10.10 சேர்க்கைகள் மற்றும் கையகப்படுத்துபவர்களின்முன்னேற்றங்கள்

10.11 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதலதோல்விக்கானகாரணங்கள்

10.12தொகுத்தறிவோம்

10.13 கலைச் சொற்கள்

10.14வினாக்கள்

10.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 11 முதலீடுகளின் பட்டியல் மேலாண்மை 132-152**

11.1 அறிமுகம்

11.2 முதலீடுகளின் பட்டியலுடையபழையமற்றும் புதியபகுப்பாய்வுமுறை

11.3 முதலீடுகளின் பட்டியல் மேலாண்மையின் நோக்கம்

11.4 முதலீடுகளின் பட்டியலின் பல்வேறுநிலை

11.5 முதலீடுகள் பட்டியலின் நவீனப் பகுப்பாய்வு

11.6 முதலீடுகளின் பட்டியல் மேலாண்மையின் அடிப்படைக் கூறுகள்

11.7 முதலீடுகளின் பரவலாக்குதல் வடிவங்கள்

11.8 பரவலாக்குதல் கோட்பாடுகள்

11.9 சிறந்தமுதலீடுகளின் பட்டியல் தேர்வு

11.10 இடர்கள் மற்றும் வருவாய்கள்

11.11 முதலீடுகளின் பட்டியல் நிறைவேற்றத்தின் மதிப்பீடு

11.12 தொகுத்தறிவோம்

11.13 கலைச்சொற்கள்

**அலகு– 12கடனை பாதுகாத்தல் 153-165**

12.1 அறிமுகம்

12.2 பாதுகாப்புஏளகாரணி

12.3 மோடஸ் ஓபராண்டி

12.4 பத்திரமயமாக்கலினசெயல்பாட்டில் ஈடுபட்டுள்ளபல்வேறுகட்டங்கள்

12.5 பாதுகாப்பிற்கானகட்டமைப்பு (வகைகள்)

12.6 பாதுகாப்பின் நன்மைகள்

12.7 இந்தியஉள்ளடக்கத்தல் பாதுகாப்பு

12.8 பத்திரமயமாக்களின் புதியவழிகாட்டுதல்கள்

12.9 பத்திரமயமாக்கலுக்கானசட்டகட்டமைப்பு

12.10தொகுத்தறிவோம்

12.11 கலைச் சொற்கள்

12.12வினாக்கள்

12.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 13 துணிகரமுதலீடு** **166-200**

13.1 அறிமுகம்

13.2 துணிகரமுதலீட்டின் சிறப்பியல்புகள்

13.3 துணிகரமுதலீட்டின் வடிவங்கள்

13.4 துணிகரமுதலீட்டு நிதியிடலின் கட்டங்கள்

13.5 இந்தியாவின் துணிகரநிதியிடலின் வடிவங்கள்

13.6 துணிகரமுதலீட்டின் பணிகள்

13.7 துணிகரமுதலீட்டின் நன்மைகள்

13.8 இந்தியாவின் நிலை

13.9 துணிகரமுதலீட்டுநிதிமீதானசெபிஒழுங்குமுறைகள்

13.10 ஈடுகடன் தகுதிநிலைமதிப்பீட்டுத் தரமிடல்

13.11 மதிப்பீட்டுக் காரணிகள்

13.12 கடன் தகுதிநிலைமதிப்பீட்டுத் தரமிடலின் பணிகள்

13.13 இந்தியமதிப்பீட்டுத் தரநிறுவனங்களின் மதிப்பீட்டுமுறைகள்

13.14 வரிசைப்படுத்தல் நடைமுறை

13.15 தொகுத்தறிவோம்

13.16 கலைச்சொற்கள்

13.17 வினாக்கள்

13.18 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**அலகு– 14 ஏட்டுக் கடன் தரகுவணிகம்** **201-210**

14.1 அறிமுகம்

14.2 ஏட்டுக் கடன் தரகுவணிகத்தின் இயக்கஆற்றல் அல்லதுகட்டங்கள்

14.3 ஏட்டுக் கடன் தரகுவணிகத்தின் தேவை

14.4 ஏட்டுக் கடன் தரகுவணிகத்தின் பணிகள்

14.5 ஏட்டுக் கடன் தரகுவணிகத்தின் வகைகள்

14.6 ஏட்டுக் கடன் தரகுவணிகத்தின் நன்மைகள்

14.7 ஏட்டுக் கடன் தரகுவணிகத்தின் குறைபாடுகள்

14.8 இந்தியாவில் இயக்கும் ஏட்டுக்கடன் தரகுவணிகஅமைப்புக்கள்

14.9 பற்றுஅட்டைகள்

14.10 தொகுத்தறிவோம்

14.11 கலைச்சொற்கள்

14.12 வினாக்கள்

14.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

**Model Question** **211**

# அலகு – 1 வணிகர் வங்கியியல் Merchant Banking

1.1 அறிமுகம்
1.2 இந்தியாவில் வணிகர் வங்கியியலின் வளர்ச்சி
1.3 இந்தியாவில் வணிகள் வங்கியியலின் அவசியம் மற்றும் முக்கியத்துவம்
1.4 வணிகர் வங்கிகளின் பணிகள்
1.5 வணிகர் வங்கியர்களுக்கான வழிகாட்டிச் சரத்துக்கள்
1.6 வணிகர் வங்கியருக்கு செபியால் அளிக்கப்பட்ட அதிகாரம்
1.7 இந்திய நிதிநிலை முறை
1.8 இந்திய நிதிநிலை முறையின் கட்டமைப்பு
1.9 இந்திய நிதிநிலை முறையின் மேம்பாடு
1.10 இந்திய நிதிநிலை முறையின் போக்குகள்
1.11 தற்போதைய இந்திய நிதிநிலை முறையின்நிலை
1.12 தொகுத்தறிவோம்
1.13 கலைச்சொற்கள்
1.14 வினாக்கள்
1.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 1.1 அறிமுகம்

வணிகர் வங்கியியல் என்ற சொற்றொடர் பல்வேறு நாடுகளிலும் பலவாறாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே, இதற்கென சரியாகப் பொருந்தக் கூடிய இலக்கணம் ஏதுமில்லை. இலண்டனில், இச்சொற்றொடரானது பிரிட்டிஷ் வணிகர் வங்கியியல் மற்றும் ஈடுகளகக் கழகத்தின் உறுப்பினராக இருந்து கலந்தாய்வு, குத்தகையிடல், பட்டியல் சேவைகள், சொத்து மேலாண்மை,யூரோ கடன், கடன் வணிக மன்றக் கூட்டுப் பணிகள் போன்ற பணிகளை நிறைவேற்று பவரே வணிகர் வங்கியராகக் கருதப்படுகிறார். அமெரிக்காவில், இவரது பணி சேமிப்புகளைத் திரட்டி வணிக நிறுவனங்களுக்குத் திருப்பி விடும் பணியுடன் தொடர்புடையாக உள்ளது. இம்முன்னுரையுடன் இப்பொழுது நாம் இந்தியாவில் இவர்களது, வளர்ச்சி முக்கியத்துவம், தகுதிகள், வகைகள், நடத்தைவிதி. பணிகள் ஆகியவற்றைப் பற்றிப் பார்க்கலாம்.

வணிகர் வங்கியியல் பிரிவு இந்தியாவில் முதல் முதலில் 1969 ஆம் ஆண்டில் கிரைண்ட்லேய்ஸ் வங்கி (Grindlays Bank) ஆல் தொடங்கி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்திய மாநில வங்கி,இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் மற்றும் ஏனைய அயல்நாட்டு வங்கிகள் 1974 ஆம் ஆண்டில் வணிகர் வங்கியியல் பிரிவுகளைத் திறந்தன. 1974 மற்றும் 1985-களுக்கு இடைப்பட்ட காலத்தில், இப்பிரிவுகள் வெளியீட்டு மேலாண்மையில் பேரளவில் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன. 1980களில் இந்தியாவில் வணிகர் வங்கியியலின்

அதிவேக வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், பொது முதலீட்டாளர்கள் மூலதனச் சந்தையில் சீரான வளர்ச்சியைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்ததே ஆகும். இதனால் பல கம்பெனிகள் தமது நீண்டகால நிதித் தேவைகளுக்கு மூலதனச் சந்தையை அணுகத் தொடங்கின அது முதல், நிதிக்கலந்தாய்வு நிறுவனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் அபிவிருத்தி அடையத் தொடங்கின இவை வெளியீட்டு மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதை சிக்கலானதாக ஆக்கின. இதனால் கம்பெனிகள் இந்நடவடிக்கைகளை திறமையுடனும் சட்டபூர்வமாகவும் மேற்கொள்ள ஏதுவாக வணிகர் வங்கிகளின் உதவியை நாடின. இவை தங்களின் வணிகர் வங்கியர்களுடன் சேர்ந்து செயல்பட்டன. இதனால் அபாயம் பரவலாக்கப்பட்டது.

**வணிகர் வங்கி – பொருளும் இலக்கணமும்**
**(Merchant Banking – Meaning and Definition)**

வணிகர் வங்கியின் மிக முக்கியமான பணி பொது வெளியீடுகள் மேலாண்மை (Public Issues Management) ஆகும் இவை புதிய முயற்சிகள். புதிய கம்பெனிகளைத் தொடங்கி வைத்தல், புதிய திட்டங்களைத் தயாரித்தல் திட்டமிடுதல். நிதிநிலை. நிர்வாகம் மற்றும் அமைப்புத் துறைகள் தொடர்பான ஆலோசனை மற்றும் அறிவுரைகளை, தொழில் திட்டங்கள் அல்லத கழக நிறுவனங்களுக்கு அளிக்கின்றன மேலும், புனர் நிர்மானம். சொத்துக்களின் மறு மதிப்பீடு, ஒன்றிணைப்புக்கள்,கம்பெனிகளை எடுத்துக்கொள்தல். வாங்குதல் போன்ற பிற பணிகளையும் இவ்வங்கிகள் மேற்கொள்கின்றன இவை வெளியீட்டு அவைகள் (Issuse Houses) எனவும் அழைக்கப்படுகின்றன.

வணிகர் வங்கி என்ற சொற்றொடருக்கு அகராதி தரும் பொருள் பின் வருமாறு

‘‘பொதுமக்கள் வாங்காத பங்குகளை எல்லாம் தாம் வாங்கிக் கொள்வதாக கழக நிறுவனங்களுக்கு ஒப்புறுதியளிக்கும் மற்றும் வணிக முயற்சிகளை சொந்தமாக்கிப் கொள்ளும், நடைமுறையில் உள்ள கழக ஒன்றிணைப்புகள் போன்ற வி‘யங்களி தேவையான ஆலோசனைகளை அந்நிறுவனங்களுக்கு அளிக்கும் ஓர் அமைப்பே வணிகர் வங்கி ஆகும்’’

செபி (வணிக வங்கியர்கள்) விதிகள், 1992 வணிகர் வங்கியர் என்ற சொற்றொடருக்கு பின்வருமாறு இலக்கணம் வரைகின்றது

‘‘ஈடுகளை விற்றல், வாங்குதல் அல்லது அவற்றில் பங்களிப்புச் செய்தலின் மேலாளர், அறிவுரையாளர் மற்றும் ஆலேசகராக பணிபுரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் வெளியீட்டு மேலாண்மை வணிகத்தில் ஈடுபடும் நபர் அல்லது அவ்வெளியீட்டு மேலாண்மை தொடர்பான கழக ஆலோசனைப் பணியில் ஈடுபடும் நபரே வணிகர் வங்கியர் ஆவார்’’



கழகத் துறைக்கு வணிகர் வங்கியர் ஆற்றும் பணி பல வகைப்பட்டதாகவும் கழகத் துறையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும்

மிகவும் இன்றியமையாதவா்களாக இவா்கள் உள்ளனா். என்பதும் மேற்கண்ட விவாதத்திலிருந்த நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

## 1.2 இந்தியாவில் வணிகா் வங்கியியலின் வளா்ச்சி

## (Growth Merchant Banking in India)

இந்தியாவில் வணிகா் வங்கியியல் நடவடிக்கைகள் முதல் முதலில் 1969 ஆம் ஆண்டு கிரைண்டலேய்ஸ் வங்கியால் வணிகா் வங்கியியல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. இப்பிரிவால் ஆரம்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளாவன (1) பொது வெளியீடுகள் மேலாண்மை, மற்றும் (2) நிதிநிலை சாா்ந்த ஆலோசனை அளித்தல். இதைச் தொடா்ந்த சிட்டி வங்கி, சாா்ட்டா்டு வங்கி போன்றவைகளும் கூட இப்பணிகளை ஏற்று நடத்த ஆரம்பித்தன. இப்பணி இந்திய மாநில வங்கியால் 1973 ஆம் ஆண்டிலும், இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகத்தால் 1974 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டு வணிகா் வங்கிகளும் தமது ஆரம்ப காலத்திலிருந்து அந்நிய வங்கிகளுக்கு இணையாக வணிகா் வங்கித் தொழிலில் பணியாற்றி வணிகா் வங்கியியலின் தலைவா்களாக உருவாகியுள்ளன. 1970 களின் மத்தியில் பலதரப்பட்ட வணிகா் வங்கிகள். நிதி நிறுவனங்கள், தரகா் நிறுவனங்கள் போன்றன வணிகா் வங்கியியல் துறையில் நுழைந்து வணிகா் வங்கியியல் அமைப்புக்களின் வளா்ச்சியில் ஓா் உச்சநிலையை ஏற்படுத்தின.

## 1.3 இந்தியாவில் வணிகா் வங்கியியலின் அவசியம் மற்றும் முக்கியத்துவம்

## (Importance and Need of Merchant Banking in India)

இக்காலத்தில் வளா்ச்சிப் பணிகள் இந்தியாவில் நாடு முழுவதும் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வணிகமும் தொழிலும் விரிவிடைந்து கொண்டே வருகின்றன. இதனால் நிதியின் தேவை அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. ஆனால் நிதியின் அளிப்பு, அதன் தேவைக்கேற்றபடி அதிகரிக்கவில்லை. எனவே, நிதியின் தேவைக்கும் அளிப்பிற்கும் இடையே பரந்த இடைவெளி இருந்து கொண்டே இருக்கின்றது. இதுவே. இந்தியாவில் வணிகா் வங்கியியல் வளா்ச்சியுற்றதன் காரணம் ஆகும். கழக நிறுவனங்கள் தங்களின் நீண்ட கால நிதித் தேவைகளை பங்குச் சந்தையில் பங்குகளையும். கடன் பத்திரங்களையும் வெளியிடுவதன் மூலம் தான் நிறைவேற்றிக் கொள்கின்றன இவைகள் நிதி நிறுவனங்களிடம் இருந்து நடுத்தரத் தேவைகளுக்குரிய நிதியைப் பெறுகின்றன. நிதித் தேவையின் வளா்ச்சி பங்குச் சந்தையில் வளா்ச்சியை ஏற்படுத்தின. பங்குச் சந்தையின் இவ்வித வளாச்சியே, வணிகா் வங்கிகள், பங்குத்தரகா்கள், நிதி ஆலோனை நிறுவனங்கள் போன்றவைகளையும் வணிகா் வங்கியியல் துறையில் நுழைய உற்சாகப்படுத்தின இதன் விளைவு, அந்நிய நாட்டு வங்கிகள் உள்பட அனைத்துப் பொதுத்துறை. தனியாா் துறை மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் இத்துறையில் தமது வணிகா் வங்கியியல் பிரிவை ஆரம்பித்தன

மேற்கூறப்பட்ட வி'யங்கள் மட்டுமின்றி, பெருமளவிலான பொதுமக்களின் சேமிப்பு நன்முறையில் முதலீடு செய்யப்படாமல் வீணாக இருந்த சூழ்நிலையும் வணிகர் வங்கியியல் நிறுவனங்களின் அவசியத்தை சமூகம் உணர ஆரம்பித்ததற்கு மற்றுமொரு காரணம் ஆகும். பொதுமக்களின் சேமிப்பைத் திரட்டி இலாபகரமான முதலீட்டு வழிகளுக்கு அளிப்பதில் வணிகர் வங்கிகளின் பணி மிகவும் மகத்தானது ஆகும். வணிகர் வங்கியியல் அலுவலின் வளர்ச்சிக்குப்பிறகே. கழக நிறுவனங்களுக்கு தங்களின் நீண்ட கால நிதித் தேவைகள் முழுவதையும் மூலதனச் சந்தையிலிருந்து பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது. எனவே. கழக நிறுவனங்கள், தங்களின் நிறுவனத்தை நவீனமயமாக்குதல், அதன் விரிவாக்கம் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான மூலதனத்தைப் பெறும் பொருட்டு வணிகர் வங்கிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடுகின்றன. இது கழக நிறுவனங்களால் மூலதனச் சந்தையிலிருந்து பெறப்படும் பேரளவு மூலதனத் தொகையிலிருந்து நமக்கு நன்கு தெரிகின்றது

வணிகர் வங்கியர்கள் வரி விலக்கு. பிற சட்ட விதிவிலக்குகள், சிறந்த மூலதன மீள்வருகை மற்றும் மூலதன மதிப்புயர்வு போன்ற பலதரப்பட்ட செயல் தூண்டு விசைகளை (Incentives)பற்றி முதலீட்டாளர்களுக்கு எடுத்துக் கூறி கழகத் துறையின் ஈடுகளில் தங்களின் சேமிப்புகளை முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கின்றனர். எனவே, வணிகர் வங்கியர்கள் முதலீட்டாளர்கள் தங்களின் சேமிப்பை நம்பிக்கை. பாதுகாப்பு மற்றும் அதிக இலாப எதிர்பார்ப்புகள் போன்றவற்றோடு கழக ஈடுகளில் முதலீடு செய்யவும். தொழில் மற்றும் வணிகத் துறைகள் தங்களுக்குத் தேவையான நிதிகளைப் பெறும் வகையிலும் உதவி செய்கின்றனர். மேலும், அவ்வப்பொழுது அரசாங்கத்தால் கழகத் துறையின் மீது விதிக்கப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள், வழிகாட்டிச் சரத்துக்கள் போன்ற சட்டக் கடமைகளை பின்பற்ற உதவும் வகையில் கழகத் துறைக்கு திறமை பெற்ற மேற்கொள்கின்றன. கம்பெனிச் சட்டம், வருமான வரிச் சட்டம், அந்நியச் பிற கழகச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் போன்ற பலவித சட்ட திட்டங்களின் கீழ், பொது வெளியீட்டுக்கு வரும் கம்பெனிகள், பலவிதச் சட்டத தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளன. இவை தொடர்பான அனைத்து விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்றத் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் கம்பெனிகளுக்கு இவ்வங்கிகள் வழங்குகின்றன. எனவே, எந்தவிதச்சட்டச் சிக்கலும் இன்றி கம்பெனிகளால் எளிதில் தமக்குத் தேவையான மூலதனத்தைப் பெறமுடிகின்றது.

## 1.4 வணிகர் வங்கிகளின் பணிகள் (Functions of Merchant Banks)

வெளியீடு மேலாண்மைப் பணிகள் வணிகர் வங்கியரின் பணிகளுள் தலையாய பணியாகும் எனவே, வணிகர் வங்கிகளின் பணிகளை நாம் பின்வருமாறு இரு தலைப்புகளின் கீழ் தொகுத்துக் கூறலாம்.

### 1. வெளியீடு மேலாண்மை (Issue management)

இப்பணி பின்விரும் பணிகளை உள்ளடக்கியுள்ளது.

1. செபியிடமிருந்து வெளியீட்டிற்கான அங்கீகாரத்தைப் பெறுதல்
2. வரப்போகின்ற வெளீட்டிற்குத் தேவையான ஒப்புறுதியைப் பெறுவது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்தல்
3. தகவறிக்கையை வரைந்து முடிவு செய்தல்
4. விண்ணப்ப படிவங்களையும் செய்தித்தாளின் அறிவிப்புகள் மற்றும் பங்கு மாற்றகங்களுக்கு அனுப்ப வேண்டிய விண்ணப்பம் போன்ற ஆவணத்தையும் வரைந்து முடிவு செய்தல்
5. வெளியீட்டின் பதிவாளர், அச்சடிக்கும் பிரஸ், விளம்பர எஜென்சிகள், தரகர்கள் மற்றும் வெளியீட்டு வணிகர்கள் போன்றவர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களுக்குத் தரவேண்டிய கட்டணம் மற்றும் செலவுகளை முடிவு செய்தல்
6. அச்சகம், தரகர்கள் மற்றும் முதலீட்டாளர் மாநாடுகள் போன்றவைகளை விளம்பர ஏஜென்சி மூலம் ஏற்படும் செய்தல்.
7. வெளியீடு தொடர்பான விளம்பரம், செய்திப்பரப்பு மற்றும் அச்சடித்தல் போன்றவற்றை ஒன்றினணத்தல், விண்ணப்பங்களைப் பெற்று அவற்றை செயல்முறைப்படுத்தல், ஒதுக்கீட்டு அடிப்படைகளைத் தயார் செய்தல், பங்கு மாற்றகங்களுடன் இவை தொடர்பான பேரம் பேசுதல் மற்றும் ஒதுக்கீட்டுப் பதிவேட்டைத் தயார் செய்தல்

வெளியிடும் ஈடு கடன் பத்திரமாக இருப்பின் வெளியீட்டு மேலாளர்கள் மேற்சொன்னைவை தவிர, கீழ்க்கண்ட பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

1. வெளியீடு தொடர்பான சொற்கூறுகளை முடிவு செய்தல்
2. கடன் பத்திரங்கள் தொடர்பான பிணையத்தை முடிவு செய்தலில் உதவி செய்தல் மற்றும் கம்பெனியின் பொறுப்பாண்மையர் மற்றும் வழக்குறைஞரிடம் இவை தொடர்பான அங்கீகாரத்தைப் பெறுதல்

### 2. பிற பணிகள் (Other Functions)

வணிகர் வங்கியர் மேற்கொள்ளும் பிற பணிகளாவன

1. திட்ட மதிப்பீடு (Project Appraisal) : இது. கையில் போதிய நிதி இருந்தும், வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்த போதிய அளவு தகுதி அல்லது தொழில் நுட்ப அறிவு இல்லாதிருக்கும்

நபர்களுக்கும் உதவும் நோக்கோடு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வித நபர்களை வணிகர் வங்கி அழைத்து அவர்களுக்குத் தேவையான தகவல்களைத் தந்து அவர்களுக்குத் தகுந்த மற்றும் நல்ல இலாபம் கிடைக்கக் கூடிய தொழிலில் அவர்களின் பணத்தை முதலீடு செய்ய வழிகாட்டுகிறது.

2. வெளியீட்டிற்குப் பின் சேவைகள் (Post – issue Services): மறுத்து அளித்த விண்ணப்பங்களுக்குரிய விண்ணப்பத் தொகை திருப்ப ஆணைகளை அளித்தல், அழைப்புத் தொகை போன்றவற்றைப் பெறுவதற்குரிய அழைப்பை விடுத்தல் போன்ற பணிகள் இவற்றுள் அடங்குவனவாகும்.
3. கழக ஆலோசகர் பணிகள் (Corporate Advisor Services): வெளியீட்டைத் திறத்தல் மற்றும் கடன்களைப் பெறுதல் போன்றவை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் இவ்வங்கிகள் கழக ஆலோசகராகவும் பணிபுரிகின்றன.
4. கடன் உரிமைக் குழு (Loan Syndicatin): வணிகர் வங்கிகள் நிதிச் சந்தையை நன்கு ஆய்வு செய்து, நிதி வேண்டும் தமது வாடிக்கைக்காரர்களுக்கு கடனைப் பெற்றுத் தருகின்றன. சில நேரங்களில் இவை, அந்நிய நாட்டு அமைப்புகளிடமிருந்து கூட நிதியைப் பெற்றுத் தருகின்றன. இதன் மூலம், தமது வாடிக்கைக்காரரின் நிதித் தேவையை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நாட்டின் அந்நிய நாணயக் காப்பையும் அதிகப்படுத்துகின்றன.
5. கடல் கடந்த வங்கி முறை (Off –shore Banking ): வெளிநாடுகளிலிருந்து கடன்களைப் பெற்று அவற்றை இந்தியாவில் பாதுகாப்பான மற்றும் இலாபகரமான முதலீட்டில் முதலீடு செய்ய இவ்வங்கிகள் தற்பொழுத அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இவை தங்கள் வாடிக்கைக்காரர்களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.
6. பட்டியல் மேலாண்மை (Portfolio Management) : வணிகர் வங்கியின் மற்றுமொரு மிக முக்கியமான பணி, பட்டியல் மேலாண்மை ஆகம். தமது பணத்தை முதலீடு செய்ய விரும்பும் ஓர் நபர் அப்பணத்தை வணிகர் வங்கியரிடம் ஒப்படைத்து விடுகிறார். அவ்வாறு ஒப்படைக்கும் பொழுது இம்முதலீட்டிலிருந்து இவர் எதிர்பார்க்கும் நோக்கம் என்ன என்பதைக் கூறிவிடுகிறார். உதாரணமாக. அந்நோக்கமானது. அதிவேக மீள்வருகை வளர்ச்சி அல்லது அமைதியான ஆனால் நிலையான மீள்வருகை போன்றவைகளாக இருக்கலாம். இவர்களின் நோக்கத்திற்கேற்ப வணிகர் வங்கியர் முதலீட்டில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு இவ்வங்கியர் முதலீட்டாளர்களின் முதலீட்டுப் பட்டியலையும் மேலாண்மை செய்கின்றனர்.

## 1.5 வணிகர் வங்கியர்களுக்கான வழிகாட்டிச் சரத்துக்கள்

## SEBI GUIDELINES FOR MERCHANT BANKERS

வணிகர் வங்கிகள் பொது வெளியீடுகளை நிர்வகிக்கின்றன ஆனால், இவை செபியால் நிர்வகிக்கப்படுகின்றன. எனவே, செபியை நாம் பொது வெளியீடுகள் மேலாளர்களின் மேலாளர் என்க கூறலாம். செபி ஸ்தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்துதலும் பங்கு மாற்றகங்கள் மீதான நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளைத் தடுப்பதுமே ஆகும். வணிகர் வங்கியர்களின் ஒழுங்குமுறை தொடர்பான செபியின் வழிகாட்டிச் சரத்துக்களின் முக்கியமான பகுதிகளை நாம் பின்வருமாறு காணலாம்.

1. ரூ. 5 கோடி குறைந்தபட்ச நிகரமதிப்பை உடையவர்கள் தலைமை மேலாளர்களாகவும் அளிப்பின் மேலாளர்களாகவும் பணிபுரிய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

அளிப்பிற்கான சக மேலாளருக்குத் தேவையான குறைந்தபட்ச நிகரமதிப்பு ரூ.50 இலட்சங்களாகும். அளிப்பின் கலந்தாய்வு ஆலேசகர்களின் குறைந்தபட்ச நிகரமதிப்பு ரூ.20 இலட்சங்களாகும்.

2. அளிப்பிற்கான தலைமை மேலாளர்களின் எண்ணிக்கை ரூ.50 கோடிகளுக்குக் குறைவான வெளியீடுகளுக்கு 2 ஆகவும் ரூ.100 கோடிகளுக்கு மேற்பட்ட வெளியீடுகளுக்கு 4 ஆகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.
3. வணிகர் வங்கியியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள செபியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

வணிகர் வங்கியியல் நடவடிக்கைகள் வணிக அகங்களுக்கு பல்வேறு வசதிகளையும் அளிக்கின்றன. இது வங்கியருக்கு கட்டணங்கள், தரகு மற்றும் கழிவு போன்ற கூடுதல் வருமானத்தையும் அளிக்கின்றுத. இது பேரளவு நிதிகளைப் பெற வழி வகுக்கிறது. வணிகர் வங்கியியலின் ஆலோசனையும் நிபுணத்துவமும் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் கிடைக்குமாறு செய்யப்பட வேண்டும்.

## 1.6 வணிகர் வங்கியருக்கு செபியால் அளிக்கப்பட்ட அதிகாரம் (Authorisation bu SEBI to Merchant Bankers)

**1. அதிகாரம் வழங்குதல் (Authorisation):** எந்தவொரு நபரோ அல்லது அமைப்போ வணிகர் வங்கியியல் நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பினால், அதற்குரிய அதிகாரத்தை செபியிடம் இருந்து உரிய வடிவத்தில் பெற்ற பிறகுதான் ஈடுபட முடியும். இவ்விதி, தற்பொழுது வெளியீட்டு மேலாளர்கள், ஆலோசகர்களாகப் பணிபுரியும் நபர்கள் உள்பட வணிகர் வங்கியியல் நடவடிக்கையில் ஈடுபடும் அனைவருக்கும் பொருந்தும்.

**2. அதிகாரம் வழங்கப்பட்ட நடவடிக்கைகள் (Authorised Activities):** செபியால் அதிகராம் வழங்கப்பட்ட வணிகர் வங்கியியல் நடவடிக்கைகள் பின்வருமாறு:

1. வெளியீடு மேலாண்மை தொடர்பான பணிகள்.

2. வெளியீடு தொடர்பான கழக ஆலோசனைப் பணிகள்.
3. ஒப்புறுதிப் பணிகள்.
4. பட்டியல் மேலாண்மைப் பணிகள்.
5. வெளியீட்டின் மேலாளர்கள், அறிவுரையாளர்கள் அல்லது ஆலோசகர்களின் பணிகள்.

**அதிகாரம் வழங்குதலின் அடிப்படைத் தத்துவங்கள்**

**(Authorisation Criterial)**

அனைத்து வணிகர் வங்கியர்களும் தமது அனைத்து நடவடிக்கைகளிலும் மிகவும் நேர்மையாகவும் நாணயமாகவும் பணியாற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். அதிகாரம் வழங்குதல் தொடர்பான செபியின் அடிப்படைத் தத்துவங்களானது பின்வருமாறு:

**1. அலுவல் தகுதி (Professional Competence):** வணிகர் வங்கியராக பணிபுரிவதந்கான அதிகாரத்தை செபியிடம் இருந்து பெறவிரும்பும் நபர் அல்லது அமைப்பிற்கு வணிகர் வங்கியராகப் பணிபுரிவதற்குத் தேவையான தகுதி மற்றும் அலுவல் சார்ந்த தொழில்நுட்ப அறிவு உள்ளதா என செபி பார்க்கிறது.

**2. உள்ளமைப்பு (Infrastreucture)** : அவர்களுடைய பணியாளரின் தகுதி அடிப்படை மற்றும் உள்ளமைப்பையும் செபி கருத்தில் கொள்கின்றது.

**3. மூலதனம் (Capital):** அவர்களின் மூலதனம் போதிய அளவினதாக உள்ளதா என செபி பார்க்கின்றது.

**4. கடந்த காலப் போக்கு (Past Track Record):** அதிகார வழங்கலைப் பெறவிரும்பும் நபர் அல்லது அமைப்பு நல்ல தெளிவான கடந்த காலப் போக்கை உடையதாக இருத்தல் வேண்டும். அதன் செயல்நிறைவேற்றமும் திருப்திகரமானதாக இருத்தல் வேண்டும். அவர்களின் முன் அனுபவம், செயல்நிறைவேற்றம், நேர்மைத் தன்மை, நற்பெயர் போன்றவைகளும் செபியால் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

**5. நிகர மதிப்பு (Net Worth):** வருங்கால வணிகர் வங்கியரின் நிகர மதிப்பு மிக முக்கியமான ஓர் காரணியாகும். இம்மதிப்பை முன்பு செபி 5 கோடி என நிர்ணயித்திருந்தது. ஆனால், தற்பொழுது, செபி இந்த நிகர மதிப்பை வணிகர் வங்கியர் விரும்பி ஏற்க உள்ள பிரிவிற்கு ஏற்ப மாறுபட்ட அளவில் நிர்ணயித்து உள்ளது. அவை பிரிவு வாரியாக கீழே தரப்பட்டுள்ளன.

| பிரிவுகள் | பணிகள் | குறைந்தளவு நிகர மதிப்பு ரூ. |
|---|---|---|
| I | வெளியீடு மேலாண்மை | 5,00,00,000 |
| II | ஆலோசகர்கள், அறிவுரையாளர்கள், சக-மேலாளர், ஒப்புறுதியர், பட்டியல் | 50,00,000 |

| | | |
|---|---|---|
| | மேலாளர் | |
| III | வெளியீட்டின் ஒப்புறுதியர், ஆலோசகர் ∴ அறிவுரையாளர் | 20,00,000 |
| IV | வெளியீட்டின் ஆலோசகர் அல்லது அறிவுரையாளர் | ஒன்றுமில்லை |

1995 ஆம் ஆண்டு வழிகாட்டிச் சரத்துக்களின்படி இது 1,00,00,000 ஆக இருந்தது.

**அதிகாரம் வழங்குதலின் நிபந்தனைகள் (Terms of Authorisation)**

1. செபியின் வழிகாட்டிச் சரத்துக்கள் வெளியிடப்பட்ட மூன்று மாதத்திற்குள் தற்பொழுத இயங்கிவரும் வணிகர் வங்கிகள் உள்பட அனைத்து வணிகர் வங்கிகளும் செபியிடம் இருந்து வணிகர் வங்கியராகச் செயல்படுவதற்கான அதிகாரத்தைக் பெற வேண்டும்.
2. அனைத்து வணிகர் வங்கிகளும் குறைந்தபட்சம் ரூ.5 கோடி நிகர மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும் (இது பின்னர் பிரிவு வாரியாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. இதன் விளக்கம் முன்னரே தரப்பட்டுள்ளது).
3. அதிகாரம் முதல் மூன்று வருடங்களுக்கு மட்டும் பெற்றால் போதுமானது.
4. வணிகர் வங்கியர்களிடம் இருந்து செபி, ஆரம்ப அதிகார வழங்கல் கட்டணம், வருடக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் போன்றவற்றையும் பெறலாம்.
5. அனைத்து வெளியீடுகளும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு வணிகர் வங்கியால் மட்டுமே நிர்வகிக்கப்பட வேண்டும். சாதாரணமாக, ஒரு பொது வெளியீட்டை நிர்வகிக்க இரண்டு வணிக வங்கியர்களுக்கு மேல் இருக்க மாட்டார்கள். ரூ.400 கோடிகளுக்கு மேற்பட்ட வெளியீடுகளில், வணிகர் வங்கியரின் எண்ணிக்கை 5 வரை போகலாம்.
6. ஒவ்வொரு தலைமை மேலாளரின் குறிப்பிட்ட பொறுப்புக்களும், வெளியீட்டிற்கு முன்னதாகவே செபிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
7. தகவலறிக்கையின் வெளியீட்டை அங்கீகரிக்கும் இயக்குநர்கள், தோற்றுவிப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு நபரும், தகவலறிக்கையின் உள்ளடக்கத்திற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும். ஆயினும், வணிகர் வங்கிகளும் தகவலறிக்கையின் உள்ளடக்கங்களையும் அங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளன எண்ணங்களின் நியாயமான தன்மையையும் தேவையான அளவு சான்றுகள் மற்றும் சான்றாளர்களையும் கொண்டு சுதந்திரமாக சரிபார்க்க வேண்டும். வெளியீட்டின் வணிகர் வங்கியர்க்ள் இது தொடர்பான எழுத்து மூல அறிவிப்பு ஒன்றையும் செபிக்குச் செய்ய வேண்டும்.

8. வணிகர் வங்கியர்கள் நிர்வகிக்கும் வெளியீட்டில் அவர்களுக்கு ஓர் நேரடிக் பங்கீடுபாட்டை (Direct Stake) உறுதி செய்வதற்காக, தலைமை மேலாளர்கள் அவ்வெளியீட்டின் குறைந்தபட்சம் 5% -க்காவது ஒப்புறுதி அளிக்கும் கடமைப் பொறுப்பை (இதற்கு ஓர் உச்சவரம்பும் உள்ளது) ஏற்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.
9. உரிய நேரத்தில் திருப்ப ஆணை மற்றும் ஒதுக்கீட்டுக் கடிதம் போன்றவற்றை முதலீட்டாளர்களுக்கு அனுப்பும் பொறுப்பும் தலைமை மேலாளர்கள் மற்றும் வணிகர் வங்கியர்களுடையதே ஆகும்.
10. வெளியீட்டுடனான வணிகர் வங்கியர்களுடைய தொடர்பு ஆனது தேவையான பின் தொடர் நடைமுறைகள் வரையிலாவது தொடர வேண்டும். அதாவது, ஈடுகளைப் பட்டியலிடுதல் மற்றும் சான்றிதழ்கள் திருப்ப ஆணைகள் போன்றவற்றை அனுப்புதல் வரையிலாவது வணிகர் வங்கியர்களுக்கு வெளியீட்டுடன் உள்ள தொடர்பு தொடர வேண்டும்.
11. செபியால் குறிக்கப்பட்ட மற்றும் கேட்கப்பட்ட தகவல்கள், ஆவணங்கள், அறிக்கைகள், விபர அறிக்கைகள் போன்றவற்றை வணிகர் வங்கியர்கள் செபிக்கு அளிக்க வேண்டும்.
12. வணிகர் வங்கியர்கள் பின்பற்ற வேண்டிய நடத்தை விதிகளின் அடைவ (Code of Conduct) செபியால் தயார் செய்யப்படும்.
13. செபியின் வழிகாட்டிச் சரத்துக்களை மீறி நடக்கும் பட்சத்தில் வணிகர் வங்கியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படும்

**தகவலறிக்கை (Prospectus)**

பொது வெளியீட்டிற்கான தகவலறிக்கை உறுப்பினர் வங்கியர்களாலேயே பதிவு செய்யப்பட வேண்டும். இவர்கள் செபியின் அங்கீகாரத்தைப் பெற்றவர்களாகவும் செபியின் அடையாள எண்ணைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஏதேனும் சட்டம் அல்லது சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு மீறிய தகவல்களைக் கொண்டுள்ள தகவலறிக்கையை கம்பெனிகளின் பதிவாளர் பதிவு செய்ய மாட்டார்

வணிகர் வங்கியர்களின் பதிவு (Registration of Merchant Bankers)

1997 ஆம் ஆண்டில், செபி பிரிவு I –ற்குக் கீழே உள்ள அனைத்துப் பிரிவுகளையும் நீக்கி விட்டது. அவ்வணிகர் வங்கியர்கள் பிரிவு I –க்கு விண்ணப்பிக்க வேண்டும். அல்லது வேறு ஏதேனும் பணியை மேற்கொள்ள வேண்டும். பட்டியல் மேலாண்மைக்கு தனிப்பட்ட முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். ஒப்புறுதியளிக்கும் கூடுதல் பதிவு ஏதுமின்றி செய்யப்பட முடியும் வணிகர் வங்கியர்கள் எந்தவித வெளியீட்டு மேலாண்மைப் பணியையும். மேற்கொள்ளலாம். இதில் தகவலறிக்கை

மற்றும் வெளியீடு தொடர்பான ஏனைய தகவல்களைத் தயாரித்தல். நிதிக் கட்டமைப்பை நிர்ணயித்தல், நிதி அளிப்பவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்தல், பங்களிப்பை திருப்பி அளித்தல், மேலாளர் வெளியீட்டின ஆலோசகர் அல்லது அறிவுரையாளர், பட்டியல் மேலாளர் மற்றும் ஒப்புறுதியர் என்ற நிலையில் பணிபுரிதல் ஆகியன அடங்கும்

வணிகர் வங்கியரின் குறைந்தபட்ச நிகரமதிப்ப ரூ5 கோடிகளாகும். பதிவுக் கட்டணம் முதல் இரண்டு வருடங்களுக்கு வருடம் ஒன்றிற்கு ரூ.2.5 இலட்சங்களாகும். மூன்றாவது வருடத்திற்கு ரூ1. இலட்சமாகும். ஆண்டு ஒன்றிற்கு ரூ.1 இலட்சம் பதிவுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். தலைமை மேலாளர்களின் எண்ணிக்கை பொது வெளியீட்டின் அளவைப் பொறுத்து அமையும் செபியின்படி. ரூ50 கோடிகள் வரையிலான வெளியீட்டிற்கு தலைமை மேலாளர்களின் எண்ணிக்கை 2-க்கு மேல் போகக் கூடாது. ரூ.50 முதல் 100 கோடிகள் வரையுள்ள வெளியீடுகளுக்கு அதிகபட்சம் 3 தலைமை மேலாளர்கள் இருக்கலாம் ரூ.100 முதல் 200 கோடிகள் வரையுள்ள வெளியீடுகளுக்கு நான்கிற்கு மேலும் ரூ.400 கோடிகளுக்கு மேற்பட்ட வெளியீடுகளுக்கு 5 அல்லது செபியால் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு எண்ணிக்கை மேல் தலைமை மேலாளர்கள் இருக்கக் கூடாது. ஒப்புறுி தவிர வேறு ஏதும் நிதி தொடர்பான நடவடிக்கைகளில் வணிகர் வங்கியர்கள் ஈடுபடக்கூடாது பட்டியல் மேலாண்மைக்கு தனிப்பட்ட பதிவு அவசியம்

### நடத்தை விதி (Code of Conduct )

வணிகர் வங்கியரின் கடமை நிறைவேற்றம் தொடர்பான நடத்தை விதியை செபி அளித்துள்ளது வணிகர் வங்கியர் ஒழுக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டும். அவர் நான் நடத்தை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதை அவரது வாடிக்கைக்காரரிடம் தெரிவிக்க வேண்டும் பேரளவு தரத்துடன் தமது பணியை நிறைவேற்ற வேண்டும். அவர் சுறுசுறுப்பாகப் பணியாற்ற வேண்டும். நியாயமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது அவர் வாடிக்கைக்காரர் சம்பந்தமான இரகசியத் தகவல்களை வெளியிடக்கூடாது தகவல்களை திரித்துக் கூறக்கூடாது. அவர் முதலீட்டாளர்களுக்கு உண்மையான மற்றும் போதுமான தகவலை அளிக்க வேண்டும். அரசு மற்றும் செபியால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள். வழிகாட்டிச் சரத்துக்கள் மற்றும் தீர்மானங்களைப் பின்பற்ற வேண்டும்.

### ஒழுங்குமுறைகளும் சான்றிதழ்களும் (Regulations and Certificates)

வணிகர் வங்கியர் பின்வரும் ஆவணங்களை நிர்வகிக்க வேண்டும்

கணக்குப் புத்தகங்கள், பதிவுகள் மற்றும் ஆவணங்கள், இருப்புநிலைக் குறிப்பின் நகல், தணிக்கை அறிக்கையின் நகல் மற்றும் நிதி நிலையில் ஓர் அறிக்கை அவர் எங்கு தமது கணக்குகள். பதிவுகள் மற்றும் ஆவணங்களை நிர்வகித்து வருகிறார் என்பதையும் செபிக்கு அறிவிக்க வேண்டும்.

கேட்டுக் கொண்டுள்ளபடி, வணிகர் வங்கியர் முந்தைய 5 கணக்கு ஆண்டு களின் இருப்புநிலைக் குறிப்பு, இலாப நட்டக் கணக்கு மற்றும் அது போன்ற ஆவணங்களின் நகல்களை ஆண்டுதோறும் செபிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

தமது அரையாண்டு பணி முடிவுகளை வணிகர் வங்கியர் செபிக்கும் சமர்ப்பிக்க வேண்டும் புத்தகங்கள், பதிவுகள் மற்றும் ஆவணங்கள் போன்றவை 5 ஆண்டுகளுக்கு பாதுகாத்து வைக்கப்பட வேண்டும். தணிக்கை அறிக்கையின் மீது இரண்டு மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளியீட்டுக் கம்பெனியுடன், வணிகர் வங்கியர் வெளியீடு தொடர்பான அவர்களது பரஸ்பர உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் குறிப்பாக தெரியப்படுத்தல்கள், ஒதுக்கீடு மற்றும் திருப்பியளித்தல் தொடர்பாக ஒரு உடன்பாடு ஏற்பத்திக் கொள்ள வேண்டும்.

**தலைமை மேலாளானி கடமைகள் (Duties of Lead Manager)**

தலைமை மேலாளர் மிகவும் ஊக்கமுடன் செயலாற்ற வேண்டும். வெளியீடு தொடர்பான அவரது பொறுப்புக்களைப் பற்றி அறிந்து கொள்ளாமல், எந்த வெளியீட்டையும் நிர்வகிக்க உடன்படக் கூடாது. தமது பொறுப்புக்கள் தொடர்பான ஒரு அறிக்கையையும் இவர் செபிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

மொத்த ஒப்புறுதிப் பொறுப்பில் 5% அல்லது ரூ2.5 இலட்சங்கள் இரண்டில் எது குறைவோ அத்தொகைக்குரிய ஒப்புறுதிப் பொறுப்பையே இவர் ஏற்க வேண்டும்.

தகவலறிக்கையில் உள்ளடக்கம் மீதான சரிபார்ப்பு தொடர்பாக மதிப்புரிமை பற்றாணை சான்றிதழ் (Due Diligence Certificate) ஒன்றை இவர் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அதில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும். இச்சான்றிதழை இவர் வெளியீடு தொடங்குவதற்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக அளித்துவிடவேண்டும்

**தலைமை மேலாளரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

**(Documents to be Submitted by the Lead Manager)**

தலைமை மேலாளர் பின்வரும் ஆவணங்களை செபிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

1. வெளியீடு தொடர்பான தகவல்கள், வரைவு தகவலறிக்கை அல்லது

   முனைவுக் கடிதம்.

2. பங்குதாரர்கள் உள்ளிட்ட முதலீட்டாளர்களுக்கு சுற்றுக்கு விடப்பட

   வேண்டிய ஏதேனும் தகவல்

3. தகவலறிக்கை அல்லது முனைவுக் கடிதத்துடன் தொடர்புடைய ஏதேனும்

   ஆவணங்கள்

இவ்வனைத்துப் பேப்பா்களும் வரைவு தகவல் அறிக்கை அல்லது முனைவு கடிதம் கம்பெனிகளின் பதிவாளா் அல்லது வட்டாரப் பங்கு மாற்றகத்தில் பதிவு செய்யப்படுவதற்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக சமா்ப்பிக்கப்பட வேண்டும். செபியால் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களை தலைமை மேலாளா் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏதேனும் வெளியீட்டில் ஈடுகளின் ஒதுக்கீடு, அல்லது திருப்பியளித்தலில் பொறுப்பேற்றுள்ள தலைமை மேலாளா், பங்களிப்போா் பங்குச் சான்றிதழ் அல்லது கூடுதல் விண்ணப்பத்தொகை பெறும் வரை அவ்வெளியீட்டுடனான அவரது தொடா்பை தொடா்ந்து வைத்துக் கொள்ள வேண்டும்

இறுதியாக, செபி விரும்பும் பொழுதெல்லாம் வணிகா் வங்கியா் வெளியீட்டு மேலாண்மை தொடா்பான தமது பொறுப்புக்கள், அளிக்கப்பட்ட சான்றிதழில் தரப்பட்டுள்ள தகவல்களில் உள்ள ஏதேனும் மாற்றம். அவா்கள் நிா்வகித்த வெளியீடுகளை மேற்கொண்ட கம்பெனிகளின் பெயா்கள், மூலதனத்தின் போதுமான தன்மையை மீறிய நிலை, வெளியீட்டின் மேலாளா்கள், ஒப்புறுதியா், ஆலோசகா்கள் அல்லது அறிவுரையாளா்கள் என்ற நிலையில் இவா்களது நடவடிக்கைகள் போன்றவற்றை செபிக்கு தெரியப்படுத்த வேண்டும்.

## 1.7 இந்திய நிதிநிலை முறை

## Indian Financial System

நிதிநிலை முறையில் பலவகையிலான நிறுவனங்கள், சந்தைகள், கருவிகள் மற்றும் பணிகள் அடங்கியுள்ளன. இது சேமிப்புகள் முதலீடுகளாக மாற்றம் பெறுவதற்குத் தேவையான முதன்மை வழிவகைகளை அளிக்கிறது. இது வள ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதில் பெரும் பங்காற்றுகிறது. இதன் ஆற்றல்மிக்க இயக்கமானது நவீனப் பொருளாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாத ஓா் பணியாக உள்ளது.

“ முறை” என்ற சொல் இங்கு பொருளாதாரத்தில் உள்ள ஒன்றோடு ஒன்று தொடா்புடைய அல்லது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட நிறுவனங்கள், முகவா்கள், நடைமுறைகள், சந்தைகள் நடவடிக்கைகள், கோரிக்கைகள் மற்றும் பொறுப்புக்களின் சிக்கலான ஒரு தொகுதியைக் குறிக்கிறது எனலாம். நிதிநிலை முறையானது பணம், கடன் மற்றும் நிதியுடன் தொடா்புடையதாக உள்ளது. இம்மூன்று சொற்களும் ஒன்று மற்றொன்றிலிருந்து ஏதேனும் ஒரு விதத்தில் மாறுபட்டு இருப்பினும் இவை ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடா்புடையனவாகவே உள்ளன. பணம் என்பது உடனடி செலுத்தல் வழியை குறிக்கிறது. வட்டியுடன் சோ்த்து திருப்பி அளிக்கப்படும் பணமே கடனாகும். இது பொருளாதார அலகின் ஒரு கடனைக் குறிக்கின்றது. ஆகவே, நிதியானது மாநில, மத்திய அரசுகள், வணிக நிறுவனங்கள் அல்லது தனிநபரின் சொந்த நிதி, கடன் போன்ற பணம் சாா்ந்த ஆதாரங்களைக் குறிக்கின்றது எனலாம்.

## 1.8 இந்திய நிதிநிலை முறையின் கட்டமைப்பு

## Structure of the Indian Financial System

கடந்த 50 ஆண்டுகளில் இந்திய நிதிநிலை முறை பல மாற்றங்களைக் கண்டுள்ளது எனலாம். குறிப்பாக நிதிநிலை முறையானது. கடந்த பத்து ஆண்டுகளில் மிக அதிகளவில் மாறியுள்ளதாக நாம் கூறலாம். முதலீடு செய்யும் பொதுமக்களின் மாறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சந்தையில் பல புதிய முதலீட்டுக் கருவிகளும் திட்டங்களும் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன. இந்திய நிதிநிலை முறையின் கட்டமைப்பை வரைபடம் 1 விவரிக்கிறது. வரைபடம் 1-ல் தரப்பட்டுள்ள இந்திய நிதிநிலை முறையின் முக்கியமான அங்கங்கள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன.

# இந்திய நிதிநிலை முறை
# INDIAN FINANCIAL SYSTEM



## 1. நிதி நிறுவனங்கள்

## Financial Institutions

சேமிப்புகளின் சேகரிப்பாளர்களாகவும் வைப்புதாரர்களாகவும் கடனைப் பெறுபவர்களாகவும் இயங்கும் வணிக அமைப்புகளே நிதி நிறுவனங்களாகும். இவை சமூகத்திற்குப் பல்வேறு நிதிச் சேவைகளையும் அளிக்கின்றன. இச்சேவைகள். இச்சேவைகள் இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. அவையாவன:

1. வங்கியியல் நிறுவனங்கள், மற்றும்
2. வங்கியல்லாத நிறுவனங்கள்.

வங்கியியல் நிறுவனங்கள் சில விஷயங்களில் வங்கியல்லாத நிறுவனங்களோடு ஒத்துப்போகின்றன. ஆயினும், இவை ஏனைய நிறுவனங்களிடம் இருந்து ஒரு விஷயத்தில் மாறுபடுகின்றன. அது, இவையும் பொளாதாரத்தின் செலுத்தல் இயக்கத்தில் பங்கேற்கின்றன என்பதே ஆகும். அதாவது, இவை கடன் அல்லது வைப்புகளை உருவாக்குகின்றன. இவையும் பணமே ஆகும். வங்கிகள் ரொக்கக் காப்பு வீதம் (Cash Reserve Ratio i.e, C.R.R.); சட்டமுறைசார்ந்த ரொக்கத் தன்மை வீதம் (Statutory Liquiditiy Rotio i.e.S.L.R) போன்ற சட்டம்சார்ந்த காப்புத் தேவைகளுக்குக் கட்டுப்பட்டு அவைகளுக்கு எதிராக கோரிக்கைகளை எழுப்புவதன் மூலம் கடன் அளிக்கலாம். ஆனால் ஏனைய நிறுவனங்களால், சேமிப்பாளர்களால் அளிக்கப்படும் வள ஆதாரங்களில் இருந்து மட்டுமே கடன் அளிக்க முடியும். வங்கிகள் கடனை உருவாக்குவன, ஆனால் ஏனைய நிறுவனங்கள் கடனை அளிப்பன என்று கூறுவதிலிருந்து இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டை நாம் விவரிக்கலாம்.

இந்தியாவின் வங்கியியல் முறையில் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியனவும், வங்கியல்லாத நிறுவனங்களில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்தியப் பொறுப்புரிமை கழகம், இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி, இந்தியத் தொழில் நிதிக் கழகம், இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம், பொதுக் காப்பீட்டுக் கழகம் போன்றனவும் அடங்குகின்றன.

## 2. நிதிச் சந்தைகள்

## Financial Markets

நிதிச் சந்தைகள், பணச் சந்தைகள் மற்றும் மூலதனச் சந்தைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு சந்தைகளுமே, உற்பத்தியாளர்களுக்கு வள ஆதாரங்களை மாற்றி அளிக்கும் பணியையே செய்கின்றன. ஆகவே அவை இரண்டிற்கும் இடையில் இன்றியமையாத வேறுபாடு ஏதுமில்லை. இவற்றிற்கு இடையிலான ஒரே வேறுபாடானது, இச்சந்தைகளில் வெளியிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் முதிர்வுக்

காலத்தில் உள்ள மாறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பணச் சந்தையானது குறுகிய காலக் கோரிக்கைகளைக் கையாளுகின்றது. இங்கு ஒரு ஆண்டு அல்லது அதற்குக் குறைவான கால கட்டத்தை முதிர்வுக் காலமாகக் கொண்டிருக்கும் சொத்துக்கள் கையாளப்படுகின்றன. ஆனால் மூலதனச் சந்தைகளோ நீண்டகால கோரிக்கைகளைக் கையாளுகின்றன. அதாவது ஒரு ஆண்டுக்கு மேற்பட்ட முதிர்வுக் காலத்தை உடைய சொத்துக்களை மூலதனச் சந்தைகள் கையாளுகின்றன. குறிப்பிட்ட ஒரு பங்கேற்பாளரை இந்த இரண்டு சந்தைகளுள் ஏதேனும் ஒன்றினுள் சோ்ப்பது எப்பொழுதும் சாத்தியம் இல்லை. உதாரணமாக, வணிக வங்கிகள் இந்த இரண்டு சந்தைகளுக்குள்ளும் சோ்க்கப்படக் கூடிய ஒரு பங்கேற்பாளரே ஆகும். கருவூல உண்டியல் சந்தை, அழைப்புப் பணச் சந்தை மற்றும் வணிக உண்டியல் சந்தை போன்றன பணச் சந்தையின் உதாரணங்களாகும். ஆனால் பங்குச் சந்தையும் அரசுப் பத்திரங்களின் சந்தையும் பணச் சந்தையின் உதாரணங்களாக விளங்குகின்றன.

பல்வேறு நோக்கங்களையும் மனதில் கொண்டு, நிதிச் சந்தைகள் பின்வரும் வகைப்பாடுகளாக பாகுபடுத்தப்படலாம்.

1. நன்கமைக்கப்பட்ட மற்றும் நன்கமைக்கப்படாத நிதிச் சந்தைகள்,
2. முறைசாா்ந்த மற்றும் முறைசாரா நிதிச் சந்தைகள்,
3. அலுவல்சாா்ந்த மற்றும் இணையான நிதிச் சந்தைகள், மற்றும்
4. உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு நிதிச் சந்தைகள்.

நிதிச் சந்தைகள் சில சமயங்களில், முதல்நிலை (நேரடி) சந்தை மற்றும் இரண்டாம் நிலை (மறைமுக) சந்தை எனவும் பகுக்கப்படலாம்.

முதல் நிலைச் சந்தை புதிய ஈடுகள் அல்லது புதிய நிதி நிலைக் கோரிக்கைகளைக் கையாளுகின்றன. ஆகவே, இவை புதிய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகின்றன. மாறாக, இரண்டாம் நிலைச் சந்தைகள், ஏற்கனவே வெளியிடப்பட்ட
ஈடுகள் அல்லது நிலுவைகளைக் கையாளுகின்றன. ஆகவே, இவை பழைய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகின்றன. முதல் நிலைச் சந்தைகள், சேமிப்புகளைச் சேகரித்து புதிய அல்லது கூடுதல் முதலை நேரடியாக வணிக நிறுவனங்களுக்கு அளிக்கின்றன. இரண்டாம் நிலைச் சந்தைகள், கூடுதல் முதலுக்கான அளிப்பை நேரடியாகச் செய்வதில்லை. ஆயினும் அவை முதல் நிலைச் சந்தையில் வெளியிடப்பட்ட ஈடுகளுக்கு எளிதில் ரொக்கமாகும் தன்மையை மறைமுகமாக அளிக்கின்றன. பங்குச் சந்தைகளில், முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை ஆகிய இரண்டு பகுதிகளும் அடங்குகின்றன.

### 3. நிதிக் கருவிகள்

### Financial Instruments

நிதிக் கருவிகள் தொடா்பான நடவடிக்கைகள் நிதிச் சந்தைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இது நிதிநிலை முறையின் இன்றியமையாத ஒரு

பகுதி ஆகும். நிதிக் கருவிகள் இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவையாவன: 1. பணச் சந்தைக் கருவிகள் (Money Market Instruments), மற்றும் 2. மூலதனச் சந்தைக் கருவிகள் (Capital Market Instruments).

1. பணச் சந்தைக் கருவிகள் (Money Market Instruments): இதில் அழைப்புப் பணம், கருவூல உண்டியல்கள், வைப்புகளின் சான்றிதழ், வணிகத் தாள்கள் மற்றும் வணிக உண்டியல்கள் போன்றன அடங்குகின்றன. பணச் சந்தை குறுகிய கால பணத்தின் ஒரு மையமாதலால், இக்கருவிகள் குறுகிய காலத்திற்கே பழக்கத்தில் விடப்படுகின்றன.

2. மூலதனச் சந்தைக் கருவிகள் (Capital Market Instruments): மூலதனச் சந்தைக் கருவிகளுள் அடங்கும் பல்வேறு கருவிகளாவன: சாதாரணப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் மற்றும் பங்குப் பத்திரங்கள், கூப்பன்கள், ஸ்வாப் (Awaps), விருப்பத் தேர்வுகள் போன்ற உருவாக்கப்பட்ட கருவிகள் போன்றனவாகும். மூலதனச் சந்தை நீண்டகால நிதிகளுக்கான சந்தையாகும். ஆகவே வழக்கமாக இக்கருவிகள் நீண்டதொரு காலத்திற்கே புழக்கத்திற்கு விடப்படுகின்றன. நாம் ஏற்கனவே கூறியுள்ளது போலவே, மூலதனச் சந்தையில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவையாவன:

1. முதல் நிலைச் சந்தை, மற்றும்
2. இரண்டாம் நிலைச் சந்தை

நிதிக் கருவிகள், முதல் நிலை ஈடுகள், மற்றும் இரண்டாம் நிலை ஈடுகள் என வகைப்படுத்தப்படுகின்றன. முதல் நிலை ஈடுகள், சாதாரணப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களின் வடிவில் இறுதி சேமிப்பாளர்களுக்கு நேரடியாக முதலீட்டாளர்களால் வெளியிடப்படுகின்றன. ஆனால் இரண்டாம் நிலை ஈடுகள், வங்கிச் சான்றிதழ்கள், அலகுகள், காப்பீட்டுக் கொள்கைகள் போன்ற வடிவில் இடைநிலை நபர்களால் இறுதி சேமிப்பாளர்களுக்கு வெளியிடப்படுகின்றன.

நிதிக் கருவிகள் அவற்றின் முதலீட்டு இயல்புகளைப் பொறுத்து ஒன்று மற்றொன்றிலிருந்து மாறுபட்டே அமைகின்றன. ஆனால் உண்மையில் அவை ஒவ்வொன்றும் ஒன்றோடு ஒன்று சார்ந்தும் தொடர்புடையதாகவுமே உள்ளன. நிதிச் சொத்துக்களின் முதலீட்டு இயல்புகளுள் பின்வருவன மிகவும் இன்றியமையாதன ஆகும். 1. ரொக்கத் தன்மை, 2. சந்தையிடுகைத் தன்மை, 3. மாற்றத் தன்மை, 4. நடவடிக்கைச் செலவுகள், 5. அபாயம், 6. முதிர்வுக் காலம், 7. வரிஅந்தஸ்து, 8. விருப்பத் தேர்வுகள் - திரும்ப அழைத்தல் அல்லது திரும்பக் கொள்முதல் செய்தல் போன்ற தேர்வுகள், 9. விலை ஏற்ற இறக்கங்கள், மற்றும் 10. மீள் வருகை வீதம்.

### 4. நிதிச் சேவைகள்

### Financial Services

இந்தியாவில், நிதிச் சேவைகளின் அளிப்பில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு உள்ளன. நிதிச் சேவைகளானது. முதலீட்டாளர்களுக்கு அவர்களது முதலீட்டு நோக்கம் நிறைவேறக் கூடிய வகையிலும் அதே நேரத்தில் கழக நிறுவனங்களுக்கு அவற்றின் இயக்கத்திற்கு ஏற்ற நிதி கிடைக்கும் வகையிலும் முதலீட்டாளர்களை வழி நடத்தும் தன்மை பெற்றதாக அமைந்துள்ளன. தற்பொழுது, கழக ஈடுகளில் முதலீடு செய்வது மிகவும் சிக்கலான ஒரு பணியாகி விட்டது. புதிய வெளியீடுகளின் பல்வேறு கட்டங்களிலும், தான் நிறைவேற்ற வேண்டிய சட்டத் தேவைகளின் காரணமாக கழக நிறுவனங்களும் பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இந்த அனைத்துக் காரணிகளும் நிதிச் சேவைகளை சுற்றிப் பணியாற்றி வரும் பல்வேறு நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு வழிவகுத்துள்ளன என்று நாம் கூறினால் அது மிகையாகாது. இந்தியாவில் கிடைக்கும் பல்வேறு நிதிச் சேவைகளாவன: வணிக வங்கிகள், பரஸ்பர நிதிகள், ஈடுகடன் தகுதிநிலைத் தரமிடல், பட்டியல் பணிகள், வாடகைக் கொள்முதல் நிதியிடல், வீட்டு வசதி நிதியிடல், துணிகர முதலீடு, ஏட்டுக் கடன் தரகு வணிகம், உண்டியல்களைக் கழிவு செய்தல் போன்றனவாகும். இப்பணிகளின் விரிவான ஓர் ஆய்வு வர இருக்கின்ற அத்தியாயங்களில் செய்யப்படவுள்ளது.

## 1.9 இந்தியாவில் நிதிநிலை முறையின் மேம்பாடு

## Development of Financial System in India

இந்திய நிதிநிலை முறைபானது நமது நாடு சுதந்திரம் அடைந்த பின்பு அதிசயிக்கத்தக்க வகையில் வளர்ச்சியுற்றுள்ளதை நாம் பின்கண்டவற்றிலிருந்து அறியலாம்:

1. பலரகத்திலான பணிகளைப் புரியும் நோக்குடன் நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.
2. வணிக வங்கிகளின் வலையமைவு விரிவாக்கம் பெற்றுள்ளது.
3. மேம்பாட்டு நிதி நிறுவனங்களின் இயக்கங்கள் வளர்ச்சியுற்றும் மேம்பட்டும் உள்ளன.
4. சேமிப்பை சேகரிக்கும் நோக்குடன் பல்வேறு திட்டங்களும் கருவிகளும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.
5. மூலதனச் சந்தைகளின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பகுதிகள் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சியுற்றுள்ளன.

### நிதி மேம்பாட்டு அளவைகள்

### Financial Development Measures

பொதுவாக, ஒரு நாட்டின் நிதி மேம்பாட்டை மதிப்பிட பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன:

1. **நிதி விகிதம் (Finance Ratio (FR)):** நிதிவிகிதமானது தேசிய வருமானத்துடனான முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கோரிக்கைகளின் மொத்த வெளியீட்டின் தொடா்பை அளவிடுகிறது. இது நிதி மேம்பாடு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு இடையிலான உறவுமுறையை வெளிப்படுத்துகிறது. இவ்விகிதம் பின்வரும் சூத்திரத்தின் உதவியால் கணக்கிடப்படுகின்றது:

$$\frac{\text{மொத்த நிதிக் கோரிக்கைகள்}}{\text{தேசிய வருமானம்}}$$

2. **நிதி இடைத் தொடா்புகள் விகிதம் (Financil Inter – relations Rotio (FIR)) :** இது நிதிச் சொத்துக்கள் மற்றும் இயற்பியல் சொத்துக்களுக்கு இடையிலான விகிதமாகும். இது நிதிமுறை மற்றும் முதலீட்டு நிதியிடலுக்கு இடையிலான உறவுமுறையைக் காண்பிக்கிறது. இவ்விகிதம் பின்வரும் சூத்திரத்தின் உதவி கொண்டு கணக்கிடப்படுகின்றது:

$$\frac{\text{மொத்த நிதிசாா்ந்த கோரிக்கைகள்}}{\text{நிகர இயற்பியல் மூலதன உருவாக்கம்}}$$

3. **புதிய வெளியீட்டு விகிதம் (New Issue Ratio (NIR)):** இது நிதியற்ற துறை எந்த அளவிற்கு நேரடியாக முதலீட்டிற்கு நிதியிடுகிறது என்பதை வெளிக் காட்டுகிறது. இவ்விகிதத்தைக் கணக்கிடும் சூத்திரம் பின்வருமாறு:

$$\frac{\text{முதல்நிலை வெளியீடுகள் (நிதியற்ற துறைகளில் உருவாக்கப்பட்ட கோரிக்கைகள்)}}{\text{நிகர இயற்பியல் மூலதன உருவாக்கம்}}$$

4. இடையீடான விகிதம் (Intermediation Ratio (IR)): இது இரண்டாம் நிலை வெளியீடுகளுக்கும் முதல் நிலை வெளியீடுகளுக்கும் இடையிலான விகிதம் ஆகும். இது நிதி நிறுவனங்கள் மேற்கொள்ளும் நிதிசாா்ந்த நடவடிக்கைகளின் வீதங்களை அளவிடும் ஒரு அளவையாகும். இவ்விகிதம் பின்வருமாறு அமைகின்றது.

$$\frac{\text{நிதி நிறுவனங்களின் வெளியீடுகள்}}{\text{பொருளாதாரத்தில் உள்ள மொத்த நிதி வெளியீடுகள்}}$$

இந்திய நிதிநிலை முறையில் ஏற்பட்டுள்ள கணிசமான வளா்ச்சியின் காரணமாக கடந்த 50 ஆண்டுகளில் நிதி மேம்பாட்டு அளவைகளும் கணிசமான அளவில் முன்னேற்றமடைந்துள்ளது என்றே நாம் சொல்லலாம். இதை நாம் பின்கண்ட அட்டவணையின் உதியால் உணரலாம்.

| | 1952 ரூ. கோடிகளில் | 1994 ரூ. கோடிகளில் |
|---|---|---|
| நிதி விகிதம் (மூ) | 0.007 | 0.5 |
| நிதி இடைத் தொடா்கள் விகிதம் | 0.08 | 2.7 |
| புதிய வெளியீட்டு | 0.17 | 1.4 |

| | | |
|---|---|---|
| விகிதம் | | |
| இடையீடான விகிதம் | - | 0.8 |

சுருங்கக் கூறின், இந்திய நிதிநிலை முறையானது பரந்தும், விரிந்தும், முதிா்ந்தும் வருகிறது எனலாம்.

## 1.10 இந்திய நிதிநிலை முறையின் போக்குகள்

## Trends in Indian Financial Ststem

இந்திய நிதிநிலை முறையில் நிலவிவரும் முக்கியமான போக்குகள் பின்வருமாறு:

1. வணிக வங்கிகளுக்குப் பொருந்தக் கூடிய சட்டமுறை ரொக்க விகிதம் (SLR) குறைந்துள்ளது.
2. சந்தை நிா்ணயிக்கும் வட்டி வீதங்கள் அதிகரித்துள்ளன: நிா்வகிக்கப்படும் வட்டி வீதங்கள் குறைந்துள்ளன.
3. நிதி நிறுவனங்கள் தங்களுக்கு வேண்டிய தொகையைப் பெற மூலதனச் சந்தையையே பெரிதும் நம்புகின்றனவேயன்றி சட்டமுறைசாா்ந்த ரொக்க விகித (SLR) கடன் பெறுதலை அல்ல.
4. நிதி சந்தைகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்த கூா்மதி உடைய மேற்பாா்வை மற்றும் ஒழுங்குமுறையை பின்பற்றுகிறது.
5. இந்திய நிதிநிலை முறையை உலக நிதிநிலை முறையுடன் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்றிணைக்கிறது.
6. புதிய நிதிக் கருவிகள் அறிமுகம் செய்துள்ளது.
7. புதிய நிதிக் சேவைகளை அறிமுகம் செய்துள்ளது.
8. புதிய நிதி நிறுவனங்களை அறிமுகம் செய்துள்ளது.
9. பல்வேறு ஒழுங்குமுறைச் சட்டங்களை அமுலாக்கியுள்ளது.

## 1.11தற்போதைய இந்திய நிதிநிலை முறையின் நிலை

## Indian Financial System at Present

கடந்த 50 ஆண்டுகளில் இந்திய நிதிநிலை முறையானது அதன் அளவு, பரவலாக்கம், நவீனமயம், சிக்கலான தன்மை போன்ற பல கூறுகளில் பிரம்மாண்டமான வளா்ச்சியைக் கண்டுள்ளது என்று நாம் கூறினால் மிகையானது. பண அளிப்பு; வங்கி வைப்புகள் மற்றும் கடன், முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை வெளியீடுகள் போன்றனவும் பிரம்மாண்டமாய் அதிகரித்துள்ளன. அவ்வித வளா்ச்சிக்குப் பொறுப்புடைய முதன்மைக் காரணியானது, தொடா்ச்சியான மற்றும் அதிக வீதத்திலான பண வீக்கமே ஆகும். வங்கி வைப்புகளுடைய தொகையின் அதிகரிப்பும் இதற்கு மற்றொரு காரணமாகக் கருதப்படுகிறது.

தவிரவும், நிதி நிறுவனங்கள், கருவிகள் மற்றும் சேவைகளின் கண்டுபிடிப்பும் அவற்றின் வளா்ச்சியும் இந்திய நிதிநிலை முறையை வளா்ச்சியுறச் செய்துள்ளன. கடந்த 50 ஆண்டுகளில் இந்தியா அனைத்து

வகையான நிதிசார்ந்த கண்டுபிடிப்புகளையும் கண்டு விட்டது. புதிய நிதி நிறுவனங்கள், சந்தைகள், கருவிகள், பணிகள், தொழில்நுட்பம், அமைப்பு போன்றவற்றின் அறிமுகமும் நிதிசார்ந்த கண்டுபிடிப்புகளின் அங்கமே ஆகும். 1950 முதல் பெரும்பாலும் அனைத்துத் துறைகளிலும் புதிய நிறுவனங்கள் பேரளவில் நுழைந்துள்ளன. அதன் விளைவு, இன்று நம்மிடம் மிகவும் பரந்துபட்ட நிதி நிறுவனங்கள் உருவாகி உள்ளன. அதைப் போலவே, புதிய நிதிக் கருவிகளும் பேரளவில் இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன் விளைவு, நம்மிடம் இப்பொழுது நிதிக்கோரிக்கைகளின் பரந்துபட்ட பட்டியல் உள்ளது. மேலும் நிதி நிறுவனங்களின் கணிசமான மறு அமைப்பு, உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல், ஒழுங்கு முறையின் தானியக்கமயம் (Automation), கணிப்பொறிமயம், உடைமையில் மாற்றம், தொகுப்பு, இணைப்பு ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே இந்தியாவில் ஒரு உண்மையான நிதிசார்ந்த புரட்சி ஏற்பட்டுள்ளது என்றே நாம் சொல்லலாம்.

## 1.12 தொகுத்தறிவோம்

வியாபார வங்கி எல்லாவிதமான அரசின் கொள்கைகளை பயன்படுத்தி சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் முன்னேற்றம் அடையச்செய்கிறது. மேலும் நிதி சேவைகள் பயன்படுத்தி இந்திய வியாபார வங்கிகளை வளர்ச்சி அடையச் செய்கிறது என்பதை இந்த பாடப்பகுதியிலிருந்து நாம் இந்த பாடப்பகுதியில் அறிந்து கொண்டோம்.

## 1.13 கலைச் சொற்கள்

- வியாபாரம்
- வங்கிகள்
- நிதி
- சேவைகள்
- வைப்புத்தொகைகள்

## 1.14 வினாக்கள்

1. வியாபர வங்கியின் பணிகள் பற்றி விவரி
2. நிதி சேவைகளின் பயன்கள் பற்றி எழுது
3. இந்தியாவில் வியாபார வங்கி வளர்ச்சியை பற்றி எழுதுக.
4. வியாபார வங்கியின் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி எழுதுக.
5. வியாபார வங்கியின் நெறிமுறைகள் பற்றி எழுதுக.

## 1.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India

2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.

3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.

4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi.

NOTES

# அலகு – 2 வெளியீட்டு மேலாண்மை

**Issue Management**

2.1 அறிமுகம்
2.2 வெளியீட்டிற்கு முந்தைய மேலாண்மை
2.3 வெளியீட்டிற்கு பிந்தைய மேலாண்மை
2.4 வெளியீட்டு மேலாண்மையில் வணிகர் வங்கியரின் பங்கு
2.5 தலைமை மேலாளர்களின் பொறுப்புக்கள்
2.6 வணிகர் வங்கிகளின் சேவைகள்
2.7 தொகுத்தறிவோம்
2.8 கலைச்சொற்கள்
2.9 வினாக்கள்
2.10 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 2.1 அறிமுகம்

வெளியீட்டு மேலாண்மை என்பது சாதாரணப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் அல்லது பத்திரங்கள் போன்றவற்றை பொது மக்களின் முன்பு வைப்பதைக் குறிக்கிறது.வணிகர் வங்கியரானவர், நிதியை நாடுவோரிடையில் இடைநிலையராக செயல்பட்டு நிதிமாற்றம் செய்கின்றார்.

வெளியீட்டுப் பணி இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தப்படலாம் அவை :1.வெளியீட்டிற்கு முந்தைய மேலாண்மை (Pre-Issue Management),மற்றும் 2.வெளியீட்டிற்குப் பிந்தைய மேலாண்மை (Post-IssueManagement) ஆகியனவாகும். இந்த இரு சட்டங்களிலும், பல்வேறு சட்டச் சடங்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் மற்றும் வெளியீட்டுடன் தொடர்புடைய பல பணிகள் ஒருங்கிணைக்கப்படவும் வேண்டும்

## 2.2 வெளியீட்டிற்கு முந்தைய மேலாண்மை

## Pre-issue Management

வெளியீட்டிற்கு முந்தைய மேலாண்மையானது மூன்று தலைப்புகளின் கீழ்
விவாதிக்கப்படலாம்.அவை பின்வருமாறு:

1. தகவலறிக்கை மூலம் வெளியீடு, விற்பனைக்கு முன்வைப்பு மற்றும் தனியார் முன்வைப்பு (Issue through prospectus, offer for sale and private placement)

2. சந்தையிடுகை மற்றும் ஒப்புறுதியளித்தல்(Marketing and Underwriting)

3. வெளியீடுகளின் விலை நிர்ணயம்(Pricing of Issues).

**1. தகவலறிக்கை மூலம் வெளியீடு போன்றன**

**Public Issue through prospectus etc.,**

பங்குகள் பின்வரும் முறைகளுள் ஏதேனம் ஒன்றின் கீழ் விற்கப்படலாம்

1. தகவலறிக்கை மூலம் வெளியிடுதல் (Issue through Prospectus): பொது வெளியீட்டின் மிகப் பரவலான முறை தகவலறிக்கை மூலம் பங்கு வெளியிடுதலாகும். 1991-92 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ரூ5750.8 கோடிகள் மதிப்புள்ள புதிய மூலதன வெளியீடுகளுள், ரூ1903.7 கோடிகள் மதிப்புள்ள புதிய மூலதன வெளியீடுகள் தகவலறிக்கை மூலம் செய்யப்பட்டுள்ளன.

2. விற்பனைக்கு முன்வைப்பு (Offer for Sale): விற்பனைக்கான முன் வைப்புகளானவை இடைநிலை வெளியீட்டகம் (Issue House) அல்லது பங்குத்தரகர்களின் நிறுவனம் போன்றவற்றின் மூலம் செய்யப்படுகின்றன. பொதுவாக இம்முறையில் கம்பெனியானது முகமதிப்பை விடக் குறைவான ஒரு விலைக்கே ஒட்டு மொத்தப் பங்குகள் அல்லது கடன் பத்திரங்களை விற்கின்றது.

3. ஈடுகளின் நேரடி விற்பனை (Direct Sale of Securities): முதலீட்டாளர்களுக்கு கம்பெனி நேரடியாக ஈடுகளை விற்பது, தனியார் முன்வைப்பு என அழைக்கப்படுகின்றது. இம்முதலீட்டாளர்களுள், இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம். இந்தியப் பொறுப்புரிமைக் கழகம், இந்தியப் பொதுக் காப்பீட்டுக் கழகம், மாநில நிதிக் கழகம் போன்றன அடங்குகின்றன.

பொது வெளியீடு ஒன்று கொண்டு வரப்படும் நிலையில், வணிகர் வங்கியர்கள் வெளயீட்டுடன் தொடர்புடைய பல்வேறு அரசு மற்றும் பொது அமைப்புகள், அலுவல் சார்ந்த அமைப்புகள் மற்றும் தனியார் முகவாண்மைகள் ஆகியவற்றுடன் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும். அவர்கள் கம்பெனிச் சட்டம், செபி போன்றவற்றிற்குத் தேவைப்படும் தகவல்களைத் தகவலறிக்கையில் தந்து அவற்றை மதிப்பிற்குரிய வழக்குரைஞர் மூலம் தணிக்கை செய்யப்பெறுதல் வேண்டும். பங்குகளை வெளியிடும் கம்பெனியிடம் இருந்து வல்லுநர்கள், சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள், வங்கியர், வெளியீட்டின் வங்கியர், தரகர்கள் மற்றும் ஒப்புறுதியரின் ஒப்புதல் நகல்களைப் பெற்று அவற்றை தகவலறிக்கையுடன் சேர்த்து கம்பெனிப் பதிவாளரிடம் பதிவு செய்தல் வேண்டும். தகவலறிக்கையுடன் தயாரான உடன், அது தணிக்கை செய்யப்படுவதற்காக செபிக்கு அனுப்பப்பட வேண்டும் செபியில் தணிக்கை செய்யப்பட்ட பிறகே தகவலறிக்கையானது கம்பெனிப் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டும்.

பங்கு மாற்றகத்தின் உறுப்பினர்கள், வெளியீட்டின் தரகர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர். இவர்கள் கம்பெனி தொடர்பான

NOTES

தகவல்களை வாடிக்கைக் காரர்களுக்கு அஞ்சலில் அனுப்புகின்றனர். வெளியீட்டைப் பரவலாக விளம்பரம் செய்கின்றனர்

முதன்மை முகவர்கள, வணிகர் வங்கியருக்கு பொது வெளியீட்டில் வெற்றிக்கு என தேவையான நுட்பங்களை வடிவமைப்பதில் உதவி புரிகின்றனர். வணிகர் வங்கியருக்கும் பங்கு மாற்றகத்திற்கும் இடையில் இடைநிலையராகப் பணிபுரிகின்றனர். இவர்கள் பங்குத் தரகர்களுக்கு மத்தியில் வெளியீட்டிற்கு ஆதரவைத் தருமாறு பிரச்சாரம் செய்கின்றனர். சில சமயங்களில் இவர்கள் தகவலறிக்கை விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய விளம்பரத் தகவல்களை ஓரிடத்தில் இருந்து பலருக்கும் அனுப்புவதற்கம் முயற்சியை மேற்கொள்கின்றனர்.

வெளியீட்டின் வங்கியர்கள் விண்ணப்பங்களை ஏற்று அவற்றைப் பதிவாளரிடம் அனுப்புகின்றனர்

வணிகர் வங்கியர், வெளியீட்டிற்குரிய தரகர்கள், முதன்மை முகவர் மற்றும் வெளியீட்டு வங்கியர் ஆகியோரை நியமனம் செய்கின்றனர்.

**2. சந்தையிடுகை மற்றும் ஒப்புறுதியளித்தல்**

**Marketing and Underwriting**

வெளியீட்டிற்கு முந்தைய மேலாண்மையின் இரண்டாவது கட்டமானது சந்தையிடுகை மற்றும் ஒப்புறுதியளித்தலாகும். இப்பணிகள், தகவலறிக்கை ஆனது செபிக்கு அனுப்பி வைக்கப்பட்ட பிறகுதான் மேற்கொள்ளப்படுகின்றன. வணிகர் வங்கியர் இக்கட்டத்தில், வெளியீட்டின் திறப்பு மற்றும் மூடல் தேதி, தகவலறிக்கையின் பதிவு விளம்பர முகாம்களை நிறுவுதல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளை முடிவு செய்வதற்கும், தகவலறிக்கையில் கையெழுத்திட்டு அங்கீகரிப்பதற்கு என அவைக் கூட்டத்திற்குரிய தேதியை நிர்ணயிக்கவும், உரிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கும் என கம்பெனி பிரதிநிதிகள் மற்றும் விளம்பர முகவர்களுடனான கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கின்றார்.

வணிகர் வங்கியர், அச்சிடப்பட வேண்டிய நகல்களின் எண்ணிக்கையை முடிவு செய்கிறார். அறிக்கையில் தரப்பட்டுள்ள விஷயம் துல்லியமாக உள்ளதா என சரிபார்க்கிறார். மற்றும் பங்கு மாற்றகத்தால் குறிப்பிடப்படட தர அளவுகளை ஒத்ததாக தகவலறிக்கை மற்றும் விண்ணப்பப் படிவத்தின் அளவு உள்ளதா எனப்பார்க்கிறார். வெளியீடு தொடங்கப்படுவதற்கு 21 நாட்களுக்கு முன்பு பங்கு மாற்றகத்திற்கும் வெளியீட்டின் தரகர்கள், தரகர்களின் கிளைகள் மற்றும் ஒப்புறுதியர்களுக்கும் தகவல்கள் அளிக்கப்பட்டுவிட்டன என்பதையும் இவர்கள் உறுதி செய்கின்றனர்.

செபியானது, பொது வெளியீடுகள் கட்டாயம் ஒப்புறுதி பெறப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறது. குறை பங்கெடுப்பின் பொழுது ஈடுகள் ஒப்புறுதியரால் எடுத்துக் கொள்ளப்படும் என்ற உறுதியை அளிப்பதற்காகவே ஈடுகள் வெளியீடானது ஒப்புறுதி செய்யப்படுகின்றன. ஒப்புறுதி ஏற்பாடானது பங்கு மாற்றகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஒப்புறுதி தொடர்பான விவரங்கள் தகவலறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்.

**3. வெளியீட்டின் விலை நிர்ணயம்**

**Pricing of Issues**

செபியின் வழிகாட்டிச் சரத்துக்கள், 1992 ஆனது வெளியீட்டின் தடையற்ற விலை நிர்ணயத்திற்கு என மூலதனச் சந்தையின் கதவுகளைத் திறந்து விட்டுள்ளது வெளியீட்டின் விலை நிர்ணயமானது வணிகர் வங்கியர்களின் கலந்தாய்வுடன் கம்பெனிகளாலேயே செய்யப்படுகின்றது. ஆகவே, வெளியீடுகளின் விலை நிர்ணயமானது வெளியீட்டிற்கு முந்தைய மேலாண்மையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

ஆயினும், அனைத்துக் கம்பெனிகளும் தமது வெளியீடுகளின் விலையை தாமே தடையேதுமின்றி நிர்ணயித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை பின்வரும் வகைகளைச் சேர்ந்த கம்பெனிகள் மட்டுமே தடையேதுமின்றி தமது பங்குகளுக்கான விலையைத் தாமே நிர்ணயம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றன

1. பட்டியலிடப்பட்டு ஏற்கனவே இயங்கி வரும் கம்பெனி
2. 5 வருட காலம் நன்முறையில் வளர்ச்சியுற்று ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் கம்பெனியால் நிறுவப்பட்ட புதிய ஒரு கம்பெனி
3. ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் குறுகிய அமைப்புக் கம்பெனி (Closely Held company).
4. ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் பட்டியலிடப்படாத கம்பெனி இது தொடர்ச்சியாக இலாபம் பெற்று வளர்ந்து வரும் கம்பெனியாக (2 ½ ஆண்டு காலகட்ட வளர்ச்சி) இருத்தல் வேண்டும். முனைமம் ஆனது, சந்தை விலை, இலாபம் ஈட்டும் திறன் மற்றும் நிகர சொத்து மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் எடுத்த பின்னரே நிர்ணயிக்கப்படுகிறது விலையினை நியாயப்படுத்தும் அறிக்கையானது தகவலறிக்கையில் தரப்பட வேண்டும்.

## 2.3 வெளியீட்டிற்குப் பிந்தைய மேலாண்மை

## Post – Issue Management

விணணப்பப் படிவங்களைச் சேகரித்தல், தொகை பெறப்பட்டதற்கான அறிக்கைகளை வங்கியரிடமிருந்து பெறுதல், விண்ணப்பங்களைத் தேர்ந்தெடுத்தல் ஒதுக்கீட்டு நடைமுறையை முடிவு செய்தல், ஒதுக்கீட்டுக் கடிதங்கள், பங்குச்சான்றிதழ்கள் மற்றும் மீட்பு ஆணைகள் போன்றவற்றை அஞ்சலில் அனுப்பி வைத்தல் போன்ற நடவடிக்கைகள் வெளியீட்டின் பிந்தைய மேலாண்மையில் அடங்குகின்றன

வெளியீட்டின் பதிவாளர்கள வெளியீட்டிற்குப் பிந்தைய மேலாண்மையில் மிகப்பெரிய பங்காற்றுகின்றனர். அவர்கள், விண்ணப்பங்களைப் பெற்று அவற்றைப் சரிபார்த்தபின் பங்கு மாற்றகத்திற்கு

ஒதுக்கீட்டிற்கான அடிப்படையையும் சமா்ப்பிக்கின்றனா். ஒதுக்கீட்டு அடிப்படையானது பங்கு மாற்றகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பங்குகள் அதன்படி கம்பெனியின் இயக்குநா் அவையால் ஒதுக்கீடும் செய்யப்பட்ட பிறகு, தணிக்கையாளா் / கமபெனிச் செயலாளரானவா், ஒதுக்கீடானது மாற்றகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அடிப்படையில் கம்பெனியால் ஒதுக்கிடப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து சான்றளிக்க வேண்டும். பதிவாளா்கள், விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, வெளியீடு முடிந்த 70 நாட்களுக்குள் ஒதுக்கீடு / மீடபு ஆணைகள் அனுப்பப்பட்டுவிட்டன என்பதை உறுதி செய்து கொள்தல் வேண்டும். வணிகா் வங்கியா் பொதுவாக மேற்கண்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் கம்பெனிக்கு உதவுகின்றனா்.

## 2.4 வெளியீட்டு மேலாண்மையில் வணிகா் வங்கியரின் பங்கு

## Role of Merchant Banker in Issue Management

பிரிவு II ஐக் சாா்ந்த வணிகா் வங்கியா்கள் மட்டுமே வெளியீட்டின் தலைமை மேலாளராகப் பணிபுரிய முடியும். வெளியீட்டினுடைய அளவின் அடிப்படையில் வெளியீடு ஒன்றிற்குத் தேவைப்படும் தலைமை வங்கியிரின் எண்ணிக்கையை செபி தெளிவுபடுத்தியுள்ளது அதன் விபரம் கீழே அட்டவணை3.2ல் தரப்பட்டு உள்ளது.

| வரிசை எண் | வெளியீட்டின் அளவு (ரூ.கோடியில்) | தலைமை மேலாளரின் குறைந்தபட்ச எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 50 வரை | 2 |
| 2 | 50 - 100 | 3 |
| 3 | 100 - 200 | 4 |
| 4 | 200 - 400 | 5 |
| 5 | 400 - க்கு மேல் | நிலைக்கு ஏற்ப செபியால் குறிப்பிடப்படும் எண்ணிக்கை |

தலைமை மேலாளரின் குறைந்தபட்ச எண்ணிக்கை

(MINIMUM NUMBER OF LEAD MANAGER)

தலைமை மேலாளரானவா், ஆலோசனை சொல்லக் கூடிய வகையிலும் சந்தையிடுகை செய்பவராகவும் ஒப்புறுதியளிக்கும் வகையிலும் ஆற்றல்களைப் பெற்றிருத்தல் வேண்டும். அவா்களது பொறுப்பானது வாடிக்கைக்காரருடைய நிதிக் தேவையினை மதிப்பிடுவதில் இருந்து தொடங்கி அதனை நிறைவேற்றும் வரை நீடிக்கிறது தொடக்கப் பணிகளை நிறைவேற்றிய பிறகு, வணிகா் வங்கியா் பங்களிப்புகளின் வசூலிப்பை தொடா்ந்து கண்காணிக்கிறாா். மற்றும் பங்களிப்பினை முடிப்பதற்கு என பதிவாளருடன் ஒருங்கிணைந்து பணிபுரிகின்றாா். அதன் பிறகு வணிகா் வங்கியரானவா், பங்குகளை ஒதுக்கிடும் விதம், பட்டியலிடலின் அங்கீரங்கள், முதலீட்டாளா்களுக்கு பங்குப் பத்திரங்களை அனுப்பி வைத்தல், மிகைப் பங்கெடுப்பை திரும்ப அனுப்புதல், வங்கிக்

கணக்குகளை சரிக்கட்டல், மற்றும் செபியுடைய மற்றும் ஏனைய சட்டக் கடமைகளை நிறைவேற்றுதல் போன்ற பல விஷயங்கள் தொடர்பான பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றுகிறார். தலைமை மேலாளர் என்ற நிலையில் வணிகர் வங்கியர்கள் பின்வரும் பணிகளைச் செய்கின்றனர்.

1. வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களால் திட்ட அறிக்கை மதிப்பிடப்படுவதற்கு உரிய ஏற்பாட்டைச்செய்தல்.
2. கம்பெனியின் அளவு மற்றும் தொழிலின் தன்மைக்கு ஏற்ப கடனுக்கும். சொந்த முதலுக்கும் இடையிலான வீதம் அமைந்துள்ளதா என்பது மீதான கருத்தைக் கூறுதல்.
3. தடையற்ற விலை நிர்ணயத்தின் பொழுது, கம்பெனியுடன் கலந்து ஆலோசித்து விதிக்கப்பட வேண்டிய முனைமத்தின் தொகையை நிர்ணயித்தல்.
4. வங்கியர்கள், ஒப்புறுதியர், பதிவாளர், தரகர்கள், அச்சிடுவோர், விளம்பரசாதனம் மற்றும் விளம்பர முகவர்களின் பெயர்களை முடிவு செய்தல்.
5. ஒப்புறுதியர், பத்திரிக்கையாளர், தரகர் போன்றோருடன் தொடர்பு கொள்தல்.
6. பங்களிப்புப் பட்டியல் திறக்கப்படும் நாளையும் மூடப்படும் நாளினையும் நிர்ணயித்தல்.
7. வெளியீட்டின் பதிவாளர் மூலம் நாட்டின் பல்
8. ஒதுக்கீட்டு அடிப்படை மீது பங்கு மாற்றகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்பு பங்குகளின் ஒதுக்கீட்டுக்கு ஏற்பாடு செய்தல். வேறு பகுதிகளிலிருந்தும் வசூலிப்பு தொடர்பான அறிக்கையைப் பெறுதல்.

## 2.5 தலைமை மேலாளர்களின் பொறுப்புக்கள்

## Responsibilities of Lead Managers

செபி (வணிகர் வங்கியர்) ஒழுங்குமுறைகள், 1992 –ன் படி வணிகர் வங்கியர் ஆனவர், வெளியீடு தொடர்பான அவரது பொறுப்புக்கள் தெளிவாக வரையறுக்கப்படாத நிலையில் அவர் எந்த வெளியீட்டையும் நிர்வகிக்க உடன்பட வேண்டியது இல்லை. அவ்விதமாக அவரது பொறுப்பை வரையறுக்கும் பட்டியலானது பங்கெடுப்பிற்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்பு அவரிடம் அளிக்கப்பட்டு இருந்தல் வேண்டும். ஒருவேளை, ஒன்றிற்கும் மேற்பட்ட தலைமை மேலாளர்கள் இருப்பின், அவர்கள் அனைவரின் பொறுப்புக்களும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

## 2.6 வணிகர் வங்கிகளின் சேவைகள்

## Services of Mwrchant Banks

பொதுவாக, வணிகர் வங்கிகள் பின்வரும் சேவைகளைப் புரிகின்றன.

**1. முதலீட்டுக்கு முந்தைய ஆய்வுகளை நடத்துதல்**

**Conduct Pre – Investment Banks**

வணிகர் வங்கிகள் முதலீட்டுக்கு முந்தைய ஆய்வுகளை நடத்துகின்றன. இந்த ஆய்வுகள், வாடிக்கைக்காரர்களுக்கு ஆர்வமுடைய பகுதிகளில் நிதித் தேவைகளை அறியும் வகையில் அமைகின்றன.

**2. திட்ட நிதியிடலுக்கு என கூட்டுத் திட்டங்களைத் தீட்டுதல்**

**Wprlomg out paclage for Project Funding**

இவை திட்டங்களுக்கு நிதியிடுவதற்கு என வரிவான ஒரு கூட்டுத் திட்டத்தைத் தீட்டுவதற்கு உதவுகின்றன. இவை, அவைகளது வாடிக்கைக்காரர்கள், தொழில் நுட்பக் கலந்தாய்வுாந்கள், நிதியளிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய உறவு கொண்டு இயங்குகின்றன. இவை, முழுமையான நிதிசார்ந்த ஆவணத் தொகுதிகளைத் தயாரித்து சமர்ப்பிக்கின்றன. இவை பல்வேறு நிதி ஆதாரங்களுக்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்கின்றன. இவை ஏற்பாடு செய்யப்பட்ட நிதிக்குத் தேவையான சட்ட ஆவணங்களின் தயாரிப்பிற்கும் உதவுகின்றன.

**3. நிதிசார்ந்த கட்டமைப்பு மற்றும் ஆட்சிக்குழுவை அமைத்தல்**

**Financial Structuring and Syndication**

இவை, இத்திட்டங்களின் நிதிசார்ந்த கட்டமைப்பை அமைத்தல் மற்றும் நிதிக்குரிய ஆட்சிக்குழுவின் நிர்மானம் ஆகியவற்றிற்கும் உதவுகின்றன.

**4. குத்தகை நிதியிடல் போன்றவற்றிக்கு ஏற்பாடு செய்தல்**

**Arrangement of Lease Financing etc**

சில பேரளவு வங்கியர்கள் குத்தகை நிதியிடல், வாங்குதல் மற்றும் ஒன்றிணைப்புகள் போன்றவற்றின் ஏற்பாட்டிலும் ஈடுபடுகின்றனர்.

**5. கலந்தாய்வுப் பணியை அளித்தல்**

**Provide Counselling Services**

வணிகர் வங்கிகள், மூலதனம் மற்றும் மூலதனக் கட்டமைப்பு, எழுப்பப்பட வேண்டிய மூலதனத்தின் விசை, வெளியீட்டின் கூறுகளையும் நிபந்தனைகளையும் தயாரித்தல், ஒப்புறுதியளித்தல், தகவலறிக்கை தயாரித்தல் போன்றவற்றின் மீது ஆலோசனைகளை அளிக்கின்றன. இவை நிதிசார்ந்த நிதிசாராத என அனைத்துப் பணிகளையும் ஆற்றுகின்றன.

**6. திட்டக் கோப்புகள் போன்றவற்றைத் தயாரித்தல்**

**Prepare Project Files etc.**

வணிகர் வங்கிகள், திட்டக்கோப்புகள், பல்வேறு நிதி நிறுவனங்களிடம் இருந்து பருவக் கடன்களை தோற்றுவிப்பாளர்களுக்கு என பெறுவதற்குரிய கடன் விண்ணப்பங்கள், புதிய திட்டங்களுக்கு என வணிக வங்கிகளிடம் இருந்து நடப்பு மூலதனத்தைப் பெறுவதற்கான

விண்ணப்பங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் பணியினை மேற்கொள்கின்றன. வெளிநாட்டிலுள்ள திட்டங்களுக்கான நிதியைப் பெறவும் வணிகர் வங்கிகள் ஏற்பாடு செய்கின்றன.

**7. தோற்றுவிப்பாளர்களுக்கு வழிகாட்டுதல்**

**Guide Promoters**

விதிகள், ஒழுங்குமுறைகள், மூலதனப் பொருட்களின் இறக்குமதி சார்ந்த சட்டச் சடங்குகளை நிறைவேற்றி துறைமுகத்தை விட்டு வெளியே கொண்டு வருதல் போன்ற விஷயங்களில் தோற்றுவிப்பாளர்களுக்கு வணிகர் வங்கிகள் வழிகாட்டுகின்றன.

**8. பொது நிதியை எழுப்ப உதவுதல்**

**Help in Raising Public Finance**

பொது நிதி என்ற விதத்தில் கம்பெனியானது நிதியை எழுப்ப வணிகர் வங்கியர் உதவுகின்றனர். இந்நிலையில், வணிகர் வங்கிகள் வழிகாட்டுதல்களை மட்டும் செய்யாமல் பொது வைப்புகளைத் திரட்டுவதற்கு என தரகர்கள் போலவும் பணியாற்றுகின்றன.

**9. அரசு ஈடுகளில் முதலீடு செய்ய ஆலோசனை அளித்தல்**

**Advise on Investment in Government Securities**

பல்வேறு சட்டங்களின் கீழ் தமது முதலீடு தொடர்பாக நாம் நிறைவேற்ற வேண்டிய சட்டத் தேவைகளை நிறைவேற்ற இவை, பொறுப்பாண்மைக் கழகங்கள், தர்ம ஸ்தாபனங்கள், கம்பெனிகள் போன்றவற்றிற்கு ஆலோசனைகளை அளிக்கின்றன. வணிகர் வங்கிகள் ஈடுகளின் வாங்கல், விற்றல் மற்றும் தனிநபருடைய முதலீட்டுப் பட்டியலின் மேலாண்மை போன்றவற்றிலும் ஈடுபடுகின்றன.

**10. அடக்கத் தணிக்கை**

**Cost Audit**

வணிக வங்கிகள், இணைப்புகள், வாங்குதல் மற்றும் மறு அமைப்பு போன்றவற்றின் மீது கலந்தாய்வுகளையும் ஆலோசனைச் சேவைகளையும் அளிக்கின்றன.

**11. வெளியீட்டு மேலாண்மை**

**Issue Management**

பொது வெளியீடு மேலாண்மையே வணிகர் வங்கியர் ஆற்றும் பழமையான பணியாக உள்ளது. இத்தலைப்பின் கீழ் வணிகர் வங்கிகள் ஆற்றும் பணிகளாவன:

1. சந்தை நிலைமைக்கு ஏற்ப பொது வெளியீடு ஒன்றின் காலம் மற்றும் அளவை முடிவு செய்கிறது.
2. வெளியீட்டினை செய்வதற்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்கிறது.
3. ஒப்புறுதிப் பணிகளை ஆற்றுகிறது.
4. வங்கியர், தரகர் மற்றும் வெளியீட்டகங்ளை நியமனம் செய்கிறது.

*NOTES*

5. வெளியீட்டை நிர்வகிக்கிறது.
6. தரகர், பட்டியல் மேலாளர், நிதிசார்ந்த செய்தித்தாள்கள் போன்றவற்றிக்கு இடையில் இடைநிலையராக செயல்படுகிறது.
7. வரைவு (Draft) தகவலறிக்கை மற்றும் ஏனைய ஆவணங்களைத் தயாரிக்கிறது.
8. விண்ணப்பத்தின் சேகரிப்பிற்கு நாடு முழுவதும் பரவலான ஒரு வலையமைவை அளிக்கிறது.
9. விளம்பர மற்றும் பெருக்கத் தகவல்களை அளிக்கிறது.

**12. நடப்பு மூலதனத்தை அளித்தல்**

**Provision of Working Capital**

வணிகர் வங்கியர் வங்கியியல் முறையின் ஒரு பகுதியாக இருப்பதால், அது புதிய திட்டங்களுக்குத் தேவையான நடப்பு மூலதனத்திற்கும் ஏற்பாடு செய்கிறது.

**13. அயல்நாட்டு நாணயக் கடன்கள்**

**Foreign Currency Loans**

வணிகர் வங்கியர் வங்கியியல் பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதிக் கடன்களை ஏற்பாடு செய்கிறது. யூரோ டாலர் கடன்கள், இந்தியத் தொழில் நிதிக் கழகக் கடன்கள் போன்றவற்றிற்கும் ஏற்பாடு செய்கிறது.

**14. குடியிருப்பற்றவர்களின் பட்டியல் மேலாண்மை**

**Portfolio Management for Non-residents**

குடியிருப்பற்ற ஒவ்வொரு இந்தியருக்கும் ஏற்ற முதலீட்டைக் கண்டுபிடிக்க வணிக வங்கியர் உதவுகின்றனர். இதில் அடங்கும் பணிகள் பின்வருமாறு.

1. ஈடுகளின் வாங்கல் மற்றும் விற்றல் மீது வழிகாட்டுதல்.
2. அவ்வித நடவடிக்கைகளைக் கையாளுதல்.
3. சந்தை நிலைமைகள் மீது ஆலோசனைகளைச் சொல்தல்.
4. ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
5. ஆதாரங்களை வசூலித்தல்.
6. தேவையான அனுமதியைப் பெற ஏதுவாக குடியிருப்பற்றவருக்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கும் இடையில் ஒரு இணைப்பாக செயல்படுதல்.

**15. சந்தையிடுக்கை**

**Marketing**

வணிகர் வங்கியர் இப்பணியை தமது நன்மைக்காவும் மேற்கொண்டு தனக்காக வணிகத்தை உருவாக்கவுமே செய்கிறார்.

## 2.7 தொகுத்தறிவோம்

வெளியீட்டு மேலாண்மையில் செயல்பாடுகளை வைத்துதான் ஒரு வியாபார வங்கி முன்னேற்றம் அடைகிறது என்பதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும் மேலும் அதனுடைய இரண்டு வகையான வெளியீட்டு

முறைகள் முக்கியமானது என்பதை இந்த பாடப்பகுதியலிருந்து நாம் தெரிந்து கொண்டோம்.

## 2.8 கலைச் சொற்கள்

- தகவலறிக்கை
- விற்பனை
- உரிமை வெளிபாடு
- முன் வெளியீடு
- வியாபார வங்கி

## 2.9 வினாக்கள்

1. முன் வெளியீட்டு மேலாண்மை பற்றி எழுதுக.
2. பின் வெளியீட்டு மேலாண்மை பற்றி எழுதுக.
3. முதன்மை மேலாளருடைய பொறுப்புகள் பற்றி எழுதுக.
4. வியாபார வங்கியரின் தகுதிகள் பற்றி எழுதுக.
5. வெளியீட்டு மேலாண்மையின் பணிகள் பற்றி எழுதுக.

## 2.10 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India

2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.

3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.

4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 3 ஒப்புறுதி
# UNDERWRITING

3.1 அறிமுகம்
3.2 ஒப்புறுதி செய்தலின் நன்மைகள்
3.3 ஒப்புறுதிகழவு
3.4 துணை ஒப்புறுதியர்கள்
3.5 ஒப்புறுதி ஒப்பந்தம்
3.6 ஒப்புறுதி நடைமுறை
3.7 ஒப்புறுதி தொடர்பான கம்பெனிச் சட்டச்சரத்துக்கள்
3.8 கூட்டவை ஒப்புறுதி
3.9 இந்தியாவில் ஒப்புறுதி முகவாண்மைகள்
3.10 தொகுத்தறிவோம்
3.11 கலைச்சொற்கள்
3.12 வினாக்கள்
3.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 3.1 அறிமுகம்

ஒப்புறுதி என்ற சொல் பங்குகள், கடன் பத்திரங்கள் போன்றவற்றின் மூலம் கம்பெனி தமக்கு வேண்டிய நிதியைத் திரட்டும் பொழுது, பொதுவாக உபயோகப் படுத்தப்படும் மிக நன்கறிந்த ஓர் சொல்லாகும். ஒப்புக்கொண்ட எண்ணிக்கையில் ஆன பங்குகள், கடன் பத்திரங்களை விலைக்கு வாங்கிக் கொள்வதாக உத்தரவாதம் அளித்தலே ஒப்புறுதி ஆகும். பொதுமக்கள் வாங்காத பங்குகளை எல்லாம் வாங்கும் நபர்கள் ஒப்புறுதியர் (Underwriter) என அழைக்கப்படுகின்றனர்

### ஒப்புறுதியின் பொருளும் இலக்கணமும்

### (Meaning & Definition of Underwriting )

கம்பெனிச் சட்டத்தில் ஒப்புறுதிக்குத் தரப்பட்ட இலக்கணம் பின்வருமாறு பொதுமக்கள் அல்லது பிற நபர்கள் வாங்காத பங்குகளை தாம் எடுத்துக் கொள்வதாக ஒரு நபர் ஒத்துக்கொள்தலே ஒப்புறுதி என்ற சொல்லின் பொருள் ஆகும். ஒப்புறுதியர்கள் பங்குகளை வாங்கச் சொல்லி அழைக்கப்பட்டாலும் அல்லது அழைக்கப்படாவிட்டாலும். இவ்வித ஒப்பந்தத்திற்கான ஈடு தரகு என்ற விதத்தில் அமைகின்றது''

ஒரு கம்பெனியால் வெளியிடப்பட்ட பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களின் விற்பனைக்கு உறுதி அளித்தலே ஒப்புறுதி எனவும் அவ்வாறு உறுதி அளிப்பவரே ஒப்புறுதியர் எனவும் நமக்கு மேற்கண்ட விவாதத்தில் இருந்து தெளிவாகத் தெரிகின்றது.

## 3.2 ஒப்புறுதி செய்தலின் நன்மைகள் (Advantages of Underwriting)

1. ஒப்புறுதி செய்யப்பட்ட ஈடுகளின் விற்பனை, உறுதி செய்யப்படுகின்றது. ஏனெனில், அந்த ஈடுகளை பொதுமக்கள் வாங்காவிடினும் ஒப்புறுதியர் வாங்கி விடுவர். எனவே, நிறுவனம் எவ்விதத் தயக்கமுமின்றி தமது நடவடிக்கைகளில் ஈடுபடலாம். மேலும், இத ஆபத்துக்களுக்கு எதிரா ஓர் காப்பீடு போன்றும் செயல்படுகின்றது.
2. ஒப்புறுதி செய்யப்பட்ட புதிய வெளியீடுகளால் பொதுமக்கள் ஆதரவை சுலபமாகப் பெறமுடிகின்றது. பொதுமக்கள் ஒப்புறுதி செய்யப்பட்ட வெளியீடுகளின் ஈடுகளில் நம்பிக்கையோடு முதலீடு செய்கின்றனர்.
3. ஒப்புறுதியர்கள் தாங்கள் ஒப்புறுதி கொடுத்த வெளியீடு தொடர்பான விளம்பரங்களைத் தந்து மக்களை அப்பங்குகளை வாங்கத் தூண்டுகின்றனர். மேலும் இவர்களுக்கு நாடு முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுடன் தொடர்பு உண்டு இதனால், இவர்களால் ஈடுகளை எளிதில் விற்பனை செய்ய முடிகின்றது.

ஒப்புறுதியால் மேற்கூறப்பட்ட நன்மைகள் கிடைக்கின்றன.

## 3.3 ஒப்புறுதிக் கழிவு (Underwriting Commission)

ஒப்புறுதிக் கழிவு தொடர்பான சட்டச் சரத்துக்கள், கம்பெனிச் சட்டத்தின் பிரிவு 76 –ல் தரப்பட்டுள்ளன. இப்பிரிவின்படி, பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் ஒப்புறுதிக் கழிவு அளிக்கப்பட முடியும்.

1. ஒப்புறுதிக் கழிவு செயல்முறை விதிகளால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே அளிக்கப்படமுடியும்.
2. அளிப்பதாக ஒத்துக்கொள்ளப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட கழிவு பின்வருவனவற்றை மிகாமல் இருத்தல் வேண்டும்.
    a) பங்குகளாக இருந்தால், பங்குகள் வெளியிடப்பட்ட விலை அல்லது செயல்முறை விதிகளால் அங்கீகரிக்கப்பட்ட தொகை அல்லது விலை ஆகியவற்றில் எது குறைவோ அதில் 5 சதவிகிதம், மற்றும்
    b) கடன் பத்திரங்களாக இருந்தால் கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்ட விலை அல்லது செயல்முறை விதிகளால் அங்கீகரிக்கப்பட்ட தொகை அல்லது விலை இவை இரண்டில் எது குறைவோ அதில் 2½ சதவிகிதம்.
3. அளிக்கப்பட்ட அல்லது அளிப்பதாக ஒத்துக்கொள்ளப்பட்ட கழிவு தகவலறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்.

## 3.4 துணை ஒப்புறுதியர்கள் (Sub-underwriters)

ஒப்புறுதியர்களுடன் கூட பல ஒப்புறுதியர்கள், அவர்களுக்குக் கீழ் பணிபுரிவர். இவர்களே துணை ஒப்புறுதியர்கள் ஆவர். இவர்கள் எந்த ஒப்புறுதியர்களின் கீழ் பணிபுரிகின்றனரோ அவர்களுக்கே பொறுப்பாளி ஆவர். பொதுவாக, இவர்களுக்கு கம்பெனியுடன் எந்தவிதமான ஒப்பந்தமும் இருக்காது. இவர்களால் பெறப்பட்ட தொகைக்கு (Subcriptions) ஒப்புறுதியர்கள் 'ஒட்டு மொத்தக் கழிவு' என்ற பெயரிலான குறைந்தளவிலான கழிவை இவர்களுக்குத் தருகின்றனர்.

## 3.5 ஒப்புறுதி ஒப்பந்தம் (Underwriting Agreement)

ஒப்புறுதியானது ஒப்புறுதியருக்கும் கம்பெனிக்குமிடையிலான ஒப்பந்தத்தின் மூலமே ஒப்புறுதியாரல் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வொப்பந்தம் கீழ்க்கண்ட விதங்களில் செய்யப்படலாம்.

1. **கலப்பற்ற ஒப்புறுதி (Pure Underwriting):** இவ்வித ஒப்பந்தத்தின் கீழ், ஒப்புறுதியர்கள், பொதுமக்களுக்காக முன்வைக்கப்பட்ட பங்குகள் முழுவதுமாக அவர்களால் வாங்கப்படவில்லை எனில் குறிப்பிட்ட ஓர் வரையறை வரையிலான பங்குகளை மட்டும் தாம் வாங்கிக் கொள்வதற்கு ஒப்புக் கொள்கிறார்கள். எனவே, ஒப்புறுதியர்கள் கம்பெனியால் வெளியிடப்பட்ட பங்குகளில் 20,000 பங்குகளுக்கு மட்டும் ஒப்புறுதி அளித்திருந்தபோது, அவற்றுள் 18,000 பங்குகள் மட்டுமே பொதுமக்களால் வாங்குவதாக ஒத்துக்கொள்ளப் பட்டிருப்பின் மீதியுள்ள 2,000 (20,000-18,000) பங்குகளை மட்டும் இவர் வாங்கிக் கொள்வார்.

2. **உறுதியான ஒப்புறுதி (Firm Underwriting):** இவ்வொப்பந்தத்தின் கீழ் ஒப்புறுதியர்கள் குறிப்பிட்ட அளவிலான பங்குகளை தாம் மொத்தமாக வாங்கிக் கொள்வதாக ஒப்புக் கொள்கின்றனர். எனவே, இவ்விதமான ஒப்புறுதியில் பங்குகள் மிகை பங்கெடுப்பானாலும் (முளநச ளுரடிளஉசனிவழைெ) சரி இல்லையென்றாலும் சரி குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையிலான பங்குகள் ஒப்புறுதியர்களுக்கு கட்டாயம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என ஒப்புறுதியர்கள். வரையறுத்து ஒப்புக்கொள்கின்றனர். இவ்வித ஒப்பந்தத்தில் வெளியீடு மிகை பங்கெடுப்பைப் பெற்றாலும் கூட பொதுமக்களை விடுத்து ஒதுக்கீட்டில் கம்பெனி ஒப்புறுதியர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றது.

உதாரணமாக, ஒரு கம்பெனி 40,000 பங்குகளை வெளியிடுகின்றுத என வைத்துக் கொள்வோம். அவற்றுள் 10,000 பங்குகளை உறுதியான ஒப்புறுதி மூலம் ஒப்புறுதியர்கள் ஒப்புறுதி அளித்து விட்டனர் என்றால், பொதுமகக்களிடம் இருந்து 50,000 பங்குகளுக்கு விண்ணப்பம் வந்தாலும் கூட கம்பெனி தான் வெளியிட்ட 40,000 பங்குகளில் 10,000 பங்குகளை ஒப்புறுதியர்களுக்கு அளித்து விட்டு மீதமுள்ள 30,000 (40,000-10,000) பங்குகளை மட்டுமே பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யும்.

## 3.6 ஒப்புறுதி நடைமுறை (Procedure for Underwriting)

பொதுமக்களுக்கு ஒப்புறுதியா் பங்குகள் அல்லது கடன் பத்திரங்களின் விண்ணப்ப படிவங்களை அளிக்கின்றனா். இவ்வித விண்ணப்ப படிவங்களில் அவா்களுடைய பெயரின் முத்திரை பதிக்கப் பெற்றிருக்கும். இவ்விண்ணப்பங்களே "குறிப்பிடப்ட்ட விண்ணப்பங்கள்" (Markerd Applications) எனப்படுகின்றன. ஒரு வெளியீட முழுவதற்கும் ஒரே ஒருவா் மட்டும் ஒப்புறுதியராகப் பணியாற்றினால் அவ்வித வெளியீட்டிற்கான விண்ணப்பத்தில் அவரின் முத்திரைகள் தேவையில்லை. இவ்விதமாகக் குறிப்பிடுதலானது எத்தனை பங்குகள் ஒவ்வொரு ஒப்புறுதியரின் மூலமாகவும் விண்ணப்பிக்கப் படுகின்றன என்பதைக் கம்பெனி எளிதில் கண்டுபிடிக்க உதவி செய்கிறது.

## 3.7 ஒப்புறுதி தொடா்பான கம்பெனிச் சட்டச் சரத்துக்கள் (Provisions in the Companies Act with regard to underwriting)

1. கம்பெனிச் சட்டப் பிரிவு 11 (ii) –ன் படி, ஒப்புறுதியா்களின் பெயா்கள் தகவலறிக்கையில் குறிப்பிடப்படவேண்டும். ஒப்புறுதியா்களிடம் தங்களின் பொறுப்பை நிறைவேற்று மளவிற்கான வன ஆதாரங்கள் உள்ளன. என்பது தொடா்பான தங்களின் எண்ணத்தை இயக்குநா்களும் தகவலறிக்கையின் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

2. ஒவ்வொரு ஒப்புறுதி ஒப்பந்தத்தின் சுருக்கமான விளக்கம் சட்டப்படி சமா்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையின் (Statutory Report) தரப்பட வேண்டும். எந்தவொரு ஒப்பந்தமாவது முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை எனில், எந்த அளவு வரை அவை மேற்கொள்ளப்படவில்லை மற்றும் அதற்குரிய காரணங்களும் குறிப்பிடப்பட வேண்டும். மேலும், எந்தவொரு இயக்குநா், மேலாளா் அல்லது அவா்களோடு தொடா்பு உடையவா்களுக்கு ஏதேனும் தரகு கொடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது கொடுக்க வேண்டியிருந்தாலோ அது பற்றிய விபரமும் சட்டப்படி சமா்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையில் தரப்பட வேண்டும்.

3. ஒப்புறுதி ஒப்பந்தம் தொடா்பான பொறுப்பை நிா்ணயித்தல் சம்பந்தமான கம்பெனிச் சட்டச் சரத்து பின்வருமாறு

முழு வெளியீடும் ஒரே ஒரு ஒப்புறுதியரால் ஒப்புறுதியளிக்கப் பட்டிருப்பின், பொதுமக்களால் வாங்கப்படாத பங்குகள் அனைத்தையும் ஒப்புறுகியா் வாங்கிக்கொள்ள வேண்டும். இவ்வித சமயங்களில் ஒப்புறுதியரின் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது குறிப்பிடப்படாத கம்பெனியால் நேராகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எனப் பிரித்துப் பாா்க்கப்பட வேண்டியதில்லை. ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்புறுதியா்கள் இருப்பின் அங்கு குறிப்பிடப்படாத கம்பெனியால் நேரடியாகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எந்த அடிப்படையில்

அவர்களுக்கிடையே பிரித்தளிப்பது என்பதை நிர்ணயிப்பது கடினமான ஓர் செயலாகும். ஆயினும், இவற்றை கீழ்க்கண்ட இரு விதங்களில் செய்யலாம்.

1. அவர்களால் ஒப்புறுதியளிக்கப்பட்ட மொத்த மூலதனத்தின் விகிதாசாரத்தில் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களை ஒதுக்கீடு செய்யலாம். அல்லது

2. அவர்களின் மொத்த ஒப்புறுதியளிக்கப்பட்ட மூலதனத்திலிருந்து அவர்கள் மூலம் பெறப்பட்ட, குறியிடப்பட்ட விண்ணப்பங்களின் மதிப்பைக் கழித்து விட்டு வரும் தொகையின் விகிதாசாரத்தின் அடிப்படையில், குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் ஒதுக்கீடு செய்யப்படலாம்

## 3.8 கூட்டவை ஒப்புறுதி (Syndicate Underwriting)

கழகம் ஒன்றின் ஈடுகளை வாங்கும் நோக்கோடு முதலீட்டு வங்கியர்கள் அமைக்கும் ஒரு குழுவே கூட்டவை எனப்படுகிறது. பேரளவு தொகையை ஒரு வங்கியரால் முதலிட முடியாத சூழ்நிலையில் இவ்வித ஏற்பாடு செய்து கொள்ளப்படுகிறது. இவ்வித கூட்டு நிதியிடுதல் இடர்களைப் பரவலாக்கவும் உதவுகிறது. வங்கியர் கூட்டவையின் மேலாளராகப் பணியாற்றி ஏனைய பங்கேற்பாளர்களின் சார்பில் கழகத்துடன் பேச்சு வார்த்தை மேற்கொள்வார். கூட்டவையின் உறுப்பினர்கள் கழகத்திற்குத் தேவைப்படும் பொழுது (ஈடுகளின் விற்பனைக்கு முன்பு கூட) பணம் அளிப்பதாக உறுதி அளிக்கின்றனர். ஈடுகளை வாங்குதல் மற்றும் வைத்திருத்தல் போன்றவற்றிற்கான இழப்பீடு காப்பீட்டுப் பிரீமியம் என்ற தன்மையில் அளிக்கப்படுகிறது. கூட்டவைக்கும் கழகத்திற்கும் இடையிலான உடன்பாடு இரண்டு விதங்களில் அமையலாம். அவற்றுள் ஒன்று " மேம்பட்ட முயற்சி" (Best Effor) பொறுப்பு ஆகும். மற்றொன்று முற்றிலும் "உறுதியான" பொறுப்பு ஆகும். " மேம்பட்ட முயற்சி" பொறுப்பின் கீழ், உறுப்பினர்கள் அதாவது பங்கேற்பாளர்கள் உரிய கட்டணம் பெற்றுக் கொண்டு வெறும் விற்பனை முகவர்களாக பணியாற்றுகின்றனர். இதில் இவர்கள் விற்பனையாகாத ஈடுகளுக்கு எந்த வித இடர்களையும் ஏற்பதில்லை. ஆனால் "உறுதியான" பொறுப்பு ஒப்புறுதிக்கு உடனொத்ததாயுள்ளது. பெரும்பாலான உடன்பாடுகள் "உறுதியான" பொறுப்பைக் கொண்டே விளங்குகின்றன. ஆகவே கொள்முதல் கூட்டவையும் ஒரு ஒப்புறுதிக் கூட்டவையே ஆகும். பொதுவாக ஈடுகள் கூட்டவையால் வாங்கி பகிர்ந்தளிக்கபடும். பொழுது. அதில் இரண்டு வகையான உடன்பாடுகள் இருக்கும். அவை 1. கம்பெனி மற்றும் கொள்முதல் செய்யும் முதலீட்டு வங்கியர்கள் ஆகியோர்களுக்கு இடையிலான உடன்பாடு, மற்றும் 2. ஒப்புறுதியர்களுக்கு இடையிலான உடன்பாடு. இவற்றுள் முதல் உடன்பாட்டில், ஒப்புறுதியர்களின் பெயர்கள், அவர்கள் வாங்க உடன்பட்ட பங்குகளின் எண்ணிக்கை, கழகத்தால் பெறப்பட வேண்டிய பணம் ஒப்புறுதியர்களின் மேலாளர்களுடைய பெயர்கள்

போன்றன குறிப்பிடப்பட்டிருக்கும் கழகம் உடன்பாட்டில் கீழ் தங்களின் கடமையை நிறைவேற்றுவதற்கு ஆகும். அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளை செலுத்த உடன்படும்.

ஒப்புறுதி கூட்டவை குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு அமைக்கப்படும். அதன் கால இறுதியில் ஈடுகள் விற்கப்படவில்லை எனில், இரண்டு மாற்று வழிகள் உள்ளன. அவை. 1. கூடுதல் காலத்திற்கு நீட்டிக்கப்படும் அல்லது 2. கலைக்கப்படும். கலைப்பின் பொழுது, விற்கப்படாத ஈடுகள் அவரவர்களின் பங்கேற்பிற்கு ஏற்ப கூட்டவையின் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். அதற்கான தொகை ரொக்கமாக செலுத்தப்படும்.

**கூட்டவை ஒப்புறுதியின் நன்மைகள்**

**(Advantage of Syndicate Underwriting)**

கூட்டவை ஒப்புறுதியின் நன்மைகளை நாம் கீழ்க்கண்ட மூன்று தலைப்புகளின் கீழ் காணலாம்.

**1. கழகத்திற்கு (To the Corporation):** கூட்டவை ஒப்புறுதியனால் கழகம் பெறும் நன்மைகளாக நாம் கீழ்க்கண்ட வற்றைக் காணலாம்

1. கழகம் ஒன்றின் ஈடுகள் கூட்டவை அடிப்படையில் முதலீட்டு வங்கியரால் சந்தையிடப்படும் பொழுது, முதலீட்டாளர்களுக்கு முதலீட்டின் பாதுகாப்பு மீதும் பெருமளவு நம்பிக்கை ஏற்படுகிறது. ஆகவே ஈடுகளை வெளியிடும் கழகத்திற்கு வேண்டிய நிதி எளிதில் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது.
2. கம்பெனி தமது ஈடுகளின் இறுதி விற்பனைக்கென காத்திராமல், கூட்டவை உறுப்பினர்கள் அளித்த நிதியுதவியின் மூலம் தமது இயக்கங்களைத் தொடங்கி விடலாம்.
3. கழக ஈடுகளை பரவலாகப் பகிர்ந்தளிக்க கூட்டவை உதவுகிறது.
4. வெளியிட வேண்டிய ஈடுகளின் வகை மற்றும் தொகை, சந்தையில் முன்வைக்க வேண்டிய காலம் போன்றன தொடர்பான வி'யங்களில் தேவையான ஆலோசனைகளை கழகத்திற்கு கூட்டவையின் மேலாளர் அளிக்கின்றார்.
5. கழகத்துடனான கூட்டவை மேலாளரின் உறவு, ஒரு நண்பர், தத்துவஞானி மற்றும் வழிகாட்டி என்ற விதத்தில் உள்ளது. அவர் பங்குச்சந்தையை கூர்ந்து கவனித்து அன்றாடம் சந்தையில் ஏற்படும் அபிவிருத்திகளைச் கண்டுணர்ந்து கழக ஈடுகளுக்கான சந்தையை நிர்வகிக்கிறார்.

**2. பொதுமக்களுக்கு (To the Public):** கூட்டவை ஒப்புறுதியால் பொது மக்கள் பெறும் நன்மைகளாவன பின்வருமாறு.

1. தகவலறிக்கையில் உள்ள தவறான அறிக்கைகளுக்கு ஒப்புறுதியரே பொறுப்பேற்க வேண்டும். ஆகவே, தங்களது பெயர்களை தகவல் அறிக்கையில் வெளியிட அனுமதிக்கும் பொழுது இவர்கள் நியாயமான அளவு கவனம் செலுத்துவது அவசியம்.

2. பங்குச் சந்தையில் இவர்களுக்கு நல்ல அனுபவமும் நெருங்கிய தொடர்பும் இருப்பதால், பல்வேறு வெளியீடுகளும் உரிய காலங்களில் வெளியிடப்பட்டு தனிநபர் மற்றும் நிறுவன முதலீட்டாளர்களின் சேமிப்பு பெறப்படுகின்றது.

**3. முதலீட்டாளர்களுக்கு (To the Investors):** கூட்டவை ஒப்புறுதியினால் முதலீட்டாளர் பெறும் நன்மைகள் பின்வருமாறு:

1. சிறிய முதலீட்டாளர்களால், ஈடுகளை வாங்கும் முன்பு விரிவான புலனாய்வை மேற்கொள்ள முடியாது. இவ்வித சிறப்புப் பணி முதலீட்டின் பாதுகாப்பிற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். இப்பணியை இங்கு முதலீட்டு வங்கியர் மேற்கொள்கின்றனர்.
2. ஒப்புறுதி அளிக்கப்பட்ட ஈடுகளின் முதலீட்டாளர்கள், கூட்டவை மேலாளரிடம் கழகத்தின் நிதி அலுவல்களின் மீது தீவிர மேற்பார்வையை நிர்வகிக்கும் பணியை ஆரம்பக் கட்டங்களில் ஒப்படைக்கலாம்.

## 3.9 இந்தியாவில் ஒப்புறுதி முகவாண்மைகள் (Underwriting Agencies in India)

இந்தியாவில் பணிபுரியும் பல்வேறு ஒப்புறுதி முகவாண்மைகளாக நாம் கீழ்க்கண்டவற்றைக் காணலாம்.

**1. முதலீட்டுக் கம்பெனிகள் மற்றும் தரகர்கள் (Investment Companies and Brokers):** கடந்த காலத்தில் மேலாண்மை முகவர்கள் பல முதலீட்டுக் கம்பெனிகளையும் முதலீட்டு பொறுப்பாண்மைக் கழகங்களையும் அமைத்தனர். இவை ஒப்புறுதி நிறுவனங்கள் என்ற தன்மையில் தன்மையில் அல்லாது மேலாண்மை முகவாண்மை என்ற தன்மையில் அல்லாது மேலாண்மை முகவாண்மை என்ற தன்மையிலேயே இயங்கின டாட்டாவும் இத்தொழிலில் இறங்கியது. இது இந்திய முதலீட்டுக் கழகம் லிட். என்ற ஒரு அமைப்பை 1937 ஆம் ஆண்டில் தொடங்கியது. இக்கழகம் வெளியீடு மற்றும் ஒப்புறுதி வணிகத்தை மேற்கொண்டது. பின் 1956 –ல் ஆயுள் காப்பீட்டுத் தொழில் நாட்டுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நிறுவனம் ஓரியண்டல் அரசு ஈட்டு ஆயுள் காப்பீட்டுக் கம்பெனியுடன் இணைந்தது.

சில முக்கியமான பங்குத் தரகர் நிறுவனங்களும் தொழில் வெளியீடுகளின் ஒப்புறுதிப் பணியைக் கையாளுகின்றன. வழக்கமாக, இப்பேரளவு நிறுவனங்கள் தமது தரகுத் தொழிலோடு கூட ஒப்புறுதிப் பணியையும் மேற்கொள்கின்றன.

**2. ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation):** பேரளவு எண்ணிக்கையிலான ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகள் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் என்ற ஒரு பேரளவு நிறுவனத்துடன் இணைந்தன. இதனால், ஒப்புறுதி இயக்கங்களின் வாய்ப்பு அதிகரித்தது. தாமே

நிரந்தரமாக முதலீடு செய்து தன்வசம் வைத்திருக்க விரும்பும் ஈடுகளின் வெளியீடுகளுக்கு மட்டுமே இது ஒப்புறுதி அளிப்பது என்ற ஒரு கொள்கையைக் கொண்டுள்ளது. இது கடன் பத்திரங்கள் மற்றும் முன்னுரிமைப் பங்குகள் ஆகியவற்றின் வெளியீடுகளுக்கு ஒப்புறுதி அளிப்பதற்கு என இந்தியக் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் மற்றும் தொழில் நிதிக் கழகம் ஆகியவற்றுடன் பங்கேற்கிறது.

**3. இந்தியத் தொழில் நிதிக் கழகம் லிட் (Industrial Finance Corporation of India Ltd):** 1948 ஆம் ஆண்டில், இந்தியத் தொழில் நிதிக் கழகம் தொடங்கப்படும் பொழுது, அது ஒப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில், இது இதன் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாக சேர்க்கப்பட்டு உள்ளது. ஆனால், அப்பொழுது பணச் சந்தை மற்றும் பங்கு மாற்றகங்களில் நிலவி வந்த நிலைமை காரணமாக அது ஒப்புறுதிப் பணியில் ஈடுபடவில்லை. ஆயினும் தற்பொழுது இது இப்பணியில் அக்கறை காட்டத் தொடங்கியிருக்கிறது.

**4. இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் லிட் (Industrial Credit and Investment Corporation of India Ltd):** ஒப்புறுதி இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகத்தினுடைய இயக்கங்களில் மிக முக்கியமான அங்கமாக விளங்குகிறது. இது இந்தியாவில் முக்கியமான ஒப்புறுதி நிறுவனமாக உருவாகியுள்ளது. இது இந்தியத் தொழில் நிதித் கழகம், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கி, வணிக வங்கிகள், மற்றும் பங்குத் தரகர்கள் போன்ற பல்வேறு நிதி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுகின்றது.

## 3.10 தொகுத்தறிவோம்

இந்தப் பாடப் பகுதியில் ஒப்புறுதியாளர்கள் மற்றும் முகவர்கள் பற்றி தெரிந்து கொள்கிறோம் மேலும் அவர்களுடைய பணிகள், நன்மைகள் மற்றும் வெளியீட்டு மேலாண்மைகள் பற்றியும் விற்பனைக்கு முன்வைத்தல் மற்றும் உரிமை வெளியீடு பற்றியும் இந்த பாடப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது.

## 3.11 கலைச் சொற்கள்

- ஒப்புறுதி பணி
- முகவர்கள்
- வெளியீடு
- மேலாண்மை
- வங்கிகள்

## 3.12 வினாக்கள்

1. ஒப்புறுதியின் நன்மைகள் பற்றி எழுதுக.
2. ஒப்புறுதியாளர்களின் வகைகள் பற்றி விவரி

3. வெளியீட்டு முறைகள் பற்றி எழுதுக.
4. பொது முன்வைத்தல் மற்றும் முன்வைத்தல் விற்பனைக்கு உள்ள வேறுபாடுகளை விவரி.
5. வெளியீட்டு முறையின் விதிமுறைகளை எழுதுக.

## 3.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India
2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.
3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.
4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi

# அலகு – 4 மூலதனத்தை உயர்த்துவது
# RAISING CAPITAL

4.1 அறிமுகம்
4.2 சர்வதேச சந்தைகளில் இருந்து மூலதனத்தை உயர்த்துவது.
4.3 வெளிநாட்டு பத்திரங்களின் மாறுபட்ட வகைகள்
4.4 மதிப்பீடு – அமெரிக்க வைப்புத் தொகை ரசீதுகள்.
4.5 மதிப்பீடு – உலகளாவிய வைப்புத் தொகை ரசீதுகள்.
4.6 மதிப்பீடு – வெளிநாட்டு நாணய மாற்றத்தக்க பத்திரம்(குஊஊடீ)
4.7 மதிப்பீடு – வெளிநாட்டு நாணய பரிமாற்றம் செய்யக்கூடிய பத்திரங்கள
4.8 தொகுத்தறிவோம்
4.9 கலைச் சொற்கள்
4.10 வினாக்கள்
4.11 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 4.1 அறிமுகம்

நிறுவனங்கள் பெரும்பாலும் வெளிநாட்டு நிதி அல்லது மூலதன நிதிநிலை திரட்ட வேண்டும். புதிய வணிகங்கள் அல்லது இருப்பிடங்களுக்கு தங்கள் வணிகங்களை படுத்தவும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்யவும் அல்லது போட்டியைத் தடுக்க, மேலும் தற்போதைய வணிகத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் இலாபங்களை நிறுவனங்கள் பயன்படுத்துவதை நோக்கமாக கொண்டாலும் வெளிப்புறகடன் வழங்குநரிகள் அல்லது முதலீட்டாளர்களைத் தேடுவது பெரும்பாலும் சாதகமானது. பல்வேறு தொழிற்துறை பிரிவுகளில் உள்ள உலகின் ஆயிரக் கணக்கான நிறுவனங்களிடையே உள்ள வேறுபாடுகள் அனைத்து நிறுவனங்களுக்கும் கிடைக்கும் ஒரு சில நிதி ஆதாரங்கள் மட்டுமே.

## 4.2 சர்வதேச சந்தைகளிலிருந்து மூலதனத்தை உயர்த்துவது

**1. தக்க வருவாய் :**

தக்க வருவாய் நிறுவனங்கள் ஒரு பொருளை விற்பனை செய்வதன் மூலம் அல்லது லாபத்தை ஈட்டுவதற்கு உள்ளன. உற்பத்தி செய்வதற்கு செலவாகும்,எந்த ஒரு நிறுவனத்திற்கும் இது மிக அடிப்படையான நிதி ஆதாரமாகும். மேலும் அதிக பணத்தை கொண்டு வரும் முறையாகும், மேலும் இது தக்க வருவாய் என்று அழைக்கப்படுகின்றது. இந்த நிதிகள் பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை செலுத்துதல் அல்லது பங்கு திரும்ப வாங்குதல் வடிவத்தில் வெகுமதி அளிக்க பயன்படுத்தலாம். ஆனால் திட்டங்களில் முதலீடு செய்வதற்கும், வணிகத்தை வணிப்பதற்கும் பயன்படுத்த படுகின்றன

**2. கடன் மூலதனம்**

கடன் மூலதனம் தனிநபர்களைப் போலவே நிறுவனங்களும் பணத்தை வாங்கலாம். இது வங்கிக் கடன்கள் மூலம் தனிப்பட்ட முறையில் செய்யப்படலாம். அல்லது கடன் பிரச்சினை மூலம் பகிரங்கமாக செய்ய முடியும். இந்த கடன் சிக்கங்கள் கார்ப்பரேட் பத்திரங்கள் என்ற அழைக்கப்படுகின்றன. இது ஏராளமான முதலீட்டாளர்களை நிறுவனத்திற்கு கடன் வழங்குநர்களாக மாற்ற அனுமதிக்கிறது. பெருகி வரம் பணத்தின் குறைபாடு கடன் வழங்குபவர் வட்டி செலுத்தவோ அல்லது அசல் திருப்பிச் செலுத்தவோ தவறினால் இயல்பு நிலை அல்லது திவால் நிலை ஏற்படலாம்.

ஆனால் கடனுக்கு செலுத்தப்படும் வட்டி பொதுவாக வரி விலக்கு மற்றும் மூலதனத்தின் பிற ஆதாரங்களைவிட குறைவாக செலவாகும்.

**3. சமபங்கு மூலதனம்**

ஒரு நிறுவனம் பங்குகளின் வடிவத்தில் முதலீட்டாளர்களுக்கு பங்குகளின் வடிவத்தில் ஒரு பகுதியைவிற்று பணத்தை உருவாக்க முடியும். இது பங்கு நிதி என அழைக்கபடுகின்றது. இதன் நன்மை என்னவென்றால் முதலீட்டாளர்களுக்கு பத்திரதாரர்கள் செய்வது போன்ற வட்டி செலுத்துவதில் தேவையில்லை. குறைபாடு என்னவென்றால், மேலும் இலாபங்கள் அனைத்து பங்குதாரர்களிடையேயும் பிரிக்கபடுகின்றன. மேலும் பங்குகளின் பங்குதாரர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. அதாவது ஒரு நிறுவனம் அதிக பங்குகளை விற்கும் போது அதன் சில உரிமையாளர் கட்டுப்பாட்டை இழக்கிறது அல்லது நிர்த்துப் போகச் செய்கிறது.

## 4.3 வெளிநாட்டு பத்திரங்களின் மாறுபட்ட வகைகள்

வெளிநாட்டு பத்திரங்களின் மாறுபட்ட வகைகள்

வெளிநாட்டு நுசெழ

பத்திரங்கள் யூரோ        மாற்றக்கூடிய ஜிரோ        சமபங்கு வாரங்கள்

பொதுவாக யூரோ

மாற்றக்கூடிய யூரோ        பத்திரங்கள் யூரோ        கொண்ட பத்திரங்கள்

பத்திரங்கள்

பத்திரங்கள் அவை பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

**யூரோ மாற்றக்கூடிய பத்திரங்கள்**

ஒரு மாற்றதக்க பத்திரம் என்பது ஒரு கடன் கருவியாகும், இது அவர் வைத்திருப்பவருக்கு பத்திரத்தை பொதுவாக நிறுவனத்தின் பங்கு பங்குகளாக மாற்றுவதற்கான ஒரு விருப்பத்தை வழங்குகிறது. பொதுவாக,

மாற்றத்தின் போது, பங்குகளின் விலை பிரீமியம் பணத்தை உள்ளடக்கியது, இருப்பினும் பத்திரங்கள் நிலையான சதவீத வட்டியைக் கொண்டுள்ளன இப்போது பத்திரங்களில் இரண்டு விருப்பங்கள் இருக்கலாம். நிச்சியமாக, வழங்குபவர் நிறுவனம் மிகவும் விரும்புகிறது.

அவை

1) அழைப்பு விருப்பங்கள் ( அல்லது) வழங்குபவரின் விருப்பம்

2) விருப்பங்களை வைக்கவும்

1) அழைப்பு விருப்பங்கள்

அழைப்பு விருப்பங்கள் பத்திரத்தின் விதிமுறைகள் அத்தகைய அழைப்பு விதியைக் கொண்டிருத்தால், அதன் முதிர்வு தேதிக்கு முன்னர் பத்திரங்களை மீட்பதற்கான அழைப்பை வழங்குபவர் நிறுவனத்திற்கு உண்டு, ஆனால் வழங்குபவரின் பங்கு விலை பெரும்பாலும் அதிகரித்துள்ளது. என்று கண்டறியப்பட்டால், நிறுவனம் அத்தகைய விருப்பத்தை பயன்படுத்த முடியும். நடைமுறையில், இது முதலீட்டாளர்களை தங்கள் பத்திரங்களை சம பங்குகளாக மாற்ற தூண்டுகிறது

2) விருப்பங்களை வைக்கவும்

இது பத்திரங்களை வைத்திருப்பவருக்கு தனது பத்திரங்களை வழங்குபவர் நிறுவனத்தறிகு முன் கூட்டியே நிர்ணயக்கப்பட்ட விகிகத விலையில் விற்க உரிமையை வழங்குகிறது. (எ.கா) கட்டணம், யூரோ – மாற்றக்கூடிய பத்திரங்களின் விஷயத்தில் அமெரிக்க டாலர்களில் பத்திரங்களின் வட்டி அளவுடன் செய்யப்படவேண்டும். 1994 இன் பிற்பகுதியில் இருந்து, இந்திய நிறுவனங்கள் தங்கள் ஆர்வத்தை புனுசுள க்கு பதிலாக யூரரா-மாற்றக் கூடிய பத்திரங்களில் அதிகம் காண்கிறேன்.

**யூரோ – மாற்றக் கூடிய ஜீரோ:**

இந்த பத்திரங்களும் மாற்றதக்க பிணைப்புகளுக்க ஒத்தவை. பத்திரங்களக்கு வட்டி செலுத்தப்படுவதில்லை. அதே நேரத்தில் பத்திரங்களை மாற்றுவது முன்பே நிர்ணயிக்கபட்ட விலையில் சந்தைப் படுத்துவதில் செய்யப்படுகின்றது. பொதுவாக முதிர்வு காலம் 5 ஆண்டுகளுக்கு எடுக்கப்படுகிறது.

சமபங்கு வாரள்டுகளுடன் யூரோ பத்திரங்கள்

இந்த பத்திரங்களில் கூப்பன் வீதம் ∴ விலைகள் உள்ளன. அவை சந்தை வீதம் ∴ விலையில் தீர்மாணிக்கு படுகின்றன. தூயபத்திரங்கள் தள்ளுபடியில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது. ஒரு நிலையான வருமான நிதியை உருவாக்க விரும்பும் முதலீட்டாளரின் இந்த போனலை தங்கள் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்

பொது யூரோ –பத்திரங்கள்

பத்திரங்கள் கடன் கருவிகள் என்று ஏற்கனவே விளக்கபட்டுள்ளது. எனவே ஒரு எளிய யூரோ-பாண்ட ஒரு கடன் கருவியாகும். தனது

முதலீடுகளைச் சேர்க்கும்.∵அதிகரிக்கம் நோக்கத்திற்காக தனது முதலீட்டை முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர் அதை விரும்பவில்லை.

## 4.4 மதிப்பீடு -அமெரிக்கன் வைப்பு ரசீது: (ADR)

அமெரிக்கன் வைப்பு ரசீது என்பது ஒரு அமெரிக்க வங்கி வழங்கிய சான்றளிக்கப்பட்ட பேச்சுவார்த்தை கருவியாகும். அமெரிக்க நிதிச் சந்தைகளில் வர்த்தகம் செய்யக்கூடிய வெளிநாட்டு நிறுவனத்தின் பங்குகளின் எண்ணிக்கை பரிந்துரைக்கிறது. அமெரிக்க வைப்புத்தொகை ரசீதுகள் அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு ஒரு வெளிநர்டு நிறுவனத்தின் பங்குகளில் வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றன அமெரிக்கன் வைப்பு ரசீது இல்லாத போது ஒரு அமெரிக்க முதலீட்டாளர் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குகளில் வர்த்தகம் செய்வது மிகவும் கடினம், ஏனெனில் அவை பல விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை பின்பற்ற வேண்டியிருந்தது. அமெரிக்க முதலீட்டளர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய கஷ்டங்களை தணிக்க ஒழுங்கு முறை அமைப்பு பத்திர பரிவர்த்தனை ஆணையம் அமெரிக்கன் வைப்பு ரசீது என்ற கருத்தை அறிமுகப்படுத்தியது. இது ஒரு அமெரிக்க முதலீட்டாளருக்கு வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குகளில் வர்த்தகம் செய்வதை எளிதாக்கியது. அமெரிக்க வைப்புத் தொகை ரசீது கட்டணப் அமெரிக்கன் வைப்பு ரசீது தொகை மற்றும் அதன் நேரத்தை பொறுத்து ஒரு பங்கிற்கு ஒரு சதவீதம் முதல் மூன்று காசுகள் வரை மாறுபடும்.

அமெரிக்க வைப்பத் தொகை ரசீத்துக்கு

எடுத்துகாட்டு

வோர்க்ஸ்வாகன், ஒரு ஜெர்மன் நிறுவனம் நியுயார்க் பங்குச் சந்தைகள் வர்த்தகம் செய்கிறது. அமெரிக்காவில் முதலீட்டாளர் பங்குச்சந்தை மூலம் ஜெர்மன் நிறுவனத்தில் எளிதாக முதலீடு செய்யலாம். தேவையான சட்டங்களை பின்பற்றிய பின்னர் வோக்ஸ்வாகன் அமெரிக்க பங்குச்சந்தையில் பட்டியலிடப்படுகின்றது. மறுபுறம் வோக்ஸ்வாகனின் பங்குகள் அமெரிக்காவைத் தவிர மற்ற நாடுகளின் பங்குச் சந்தைகளில் பட்டியலிடம் பட்டிருந்தால் அது உலகளாயை வைப்புத் தொகை ரசீதுஇ அமெரிக்கா வைப்புத் தொகை ரசீது செயல்முறை என்று அழைக்கபடுகின்றது. ஏற்கனவே அதன் உள்;ர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது உள்நாட்டு நிறுவனம், அதன் பங்குகளை மொத்தமாக மாற்றுகிறது. அமெரிக்க வங்கி தன்னை அமெரிக்க பரிமாற்றத்தில் பட்டியலிட வேண்டும் வழங்கிய வங்கி நிறுவனத்தின் பங்குகளை ரள வங்கி ஏற்றுகொன்றது வங்கி அதன் பாதுகாப்பில் பங்குகளை வைத்திருக்கிறது மற்றும் பரிமாற்றத்தின் மூலம் ஆர்வமுள்ள முதலீட்டாளர் வருகிற சான்றிதழ்களை வழங்கிறது.

முதலீட்டாளர்கள் அமெரிக்கன் வைப்பு ரசீது ன் விலையை ரள டாலர்களில் ஏலம் எடுக்கும் செயல்முறை மூலம் நிர்ணயித்தனர் முக்கிய ரள பங்குச் சந்தை வர்த்தகத்திற்கான வங்கி சான்றிதழ்களை பட்டியலிட்ட பின்னரே முதலீட்டாளர்களால் அமெரிக்கன் வைப்பு ரசீது பங்குகளை வாங்குவது மற்றும் விற்பது சாத்தியமாகும்.

ருளு பங்குச்சந்தை பத்திர பரிவர்த்தனை ஆணையத்தால் கட்டுப்படுத்தபடுகின்றது. இது வெளிநாட்டு நிறுவனத்தால் இணங்க வேண்டிய தேவையான இணக்கங்களை சரிபார்க்கிறது.

அமெரிக்கன் வைப்புத் தொகை ரசீது நன்மைகள் (அமெரிக்கன் வைப்பு ரசீது)

அமெரிக்க முதலீட்டாளர் வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்யலாம். இதனால் அவருக்கு அதிக வருமானம் கிடைக்கும்

வெளிநாடுகளில் அமைந்துள்ள நிறுவனங்கள் அமெரிக்க பங்கு சந்தையில் பதிவு செய்யப்படலாம். அதன் பங்குகள் இரண்டு வெவ்வொறு நாடுகளில் வர்த்தங்க செய்யப்படுகின்றன

நாணய ஏற்ற இறக்கத்தின் பயனைப் பெறலாம்.

அமெரிக்கன் வைப்பு ரசீது ல் முதலீடு செய்வதற்கு எந்த தடையும் இல்லாததால் வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்ய இது ஒரு சுலபமான வழியாகும்.

அமெரிக்கன் வைப்பு ரசீது வரி கணக்கீடுகளை எளிதாக்குகிறது

அமெரிக்கன் வைப்பு ரசீது ல் வெளிநாட்டு நிறுவனத்தின் பங்குகளால் வர்த்தகம் செய்வது அமெரிக்க அதிகார வரம்பிற்கு உட்பட்ட வரிக்கு வழிவகுக்கும். ஆனால் நிறுவனத்தின சொந்த நாட்டில் அல்ல அமெரிக்கன் வைப்பு ரசீது ல் வெளிநாட்டு நிறுவனகளின் பங்குகளில் விலை பொதுவாக மலிவானது எனவே இது முதலீட்டாளருக்கு நன்மையை நிருபிக்கிறது.

அமெரிக்க வைப்புத் தொகை ரசீது குறைபாடுகள் (தீமைகள்) அமெரிக்கன் வைப்பு ரசீது

அமெரிக்கன் வைப்பு ரசீது – ல் பரிவர்த்தனைகள் அமெரிக்க டாலர்களில் நடந்தாலும், அவை அந்நிய செலவாணி ஏற்ற இறக்கத்துடன் தொடர்புடைய ஆபத்துக்கு ஆளாகின்றன.

வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான விருப்பங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே தங்களை அமெரிக்கன் வைப்பு ரசீது மூலம் பதிவு செய்ய வேண்டிய அவசியத்தை உணர்கின்றன.

முதலீடு செய்ய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு கிடைக்ககூடிய தேர்வை இது கட்டுப்படுத்துகின்றது.

நல்ல வருமானத்தை ஈட்டுவதற்கு முதலீட்டாளர் நீண்ட காலத்திற்கு பங்குகளை வைத்திருக்க வேண்டியிருப்பதால் அமெரிக்கன் வைப்பு

ரசீது தேர்ந்தெடுக்கும் நிறுவனங்களில் முதலீடு பெரும்பாலும் திரவமற்ற தாகிவிடும்.

அமெரிக்கன் வைப்பு ரசீது ன் முழு செயல்முறைக்கான கட்டணங்கள் பெரும்பாலும் மூதலீட்டாளர்களுக்கு
வெளிநாட்டு நிறுவனங்களால் மாற்றப்படுகின்றன. இனைக்கத்தின் எந்தவொரு மற்றும் பத்திரபரிவர்த்தினை ஆணையத்தின் கடுமையான நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.

அமெரிக்கன் வைப்பு ரசீது அமொரிக்க முதலீட்டாளர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குகளில் வர்த்தகம் செய்யும் திறனை வழங்குகிறது. அமெரிக்காவின் உள்நாட்டு முதலீட்டாளர்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குகளில் வர்த்தம் செய்வதை அமெரிக்கன் வைப்பு ரசீது எளிதாகவும் வசதியாகவும் செய்கிறது. அமெரிக்கன் வைப்பு ரசீது முதலீட்டாளர்களுக்கு அமெரிக்காவில் இல்லாத நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம் தங்கள் இலாகவை பல்வகைப்படுத்த ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இது இறுதியில் வளர்ந்து வரும் சந்தைகளில் அமைந்துள்ள நிறுவனங்களில் முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்ய வழிவகுக்கிறது.

## 4.5 மதிப்பீடு- உலகளாயை வைப்புத் தொகை ரசீது

உலகளாவிய வைப்புத் தொகை ரசீது ஒரு வைப்புத் தொகை ரசீதுக்கான பொதுவனான பெயர்,அங்கு ஒரு சான்றிதழ் வழங்கிய வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குகளை வாங்கும் வைப்புத் தொகை, அந்த பங்குகளின் ஆதரவுடன் உள்ளூர் பரிமாற்றத்தில் பாதுகாப்பை உருவாக்குகிறது.

உலகளாவிய வைப்புத் தொகை பெறுதலின் வரையறை: உலகளாவிய வைப்புத் தொகை ரசீது என்பது உள்நாட்டு நாட்டில் அமைந்துள்ள ஒரு நிறுவனம் அதன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் அல்லது மாற்றத்தக்க பத்திரங்களை உள்நாட்டு நாட்டிற்கு வெளியே வெளியிடும். ஒரு கருவியாகும். உலகளாயை வைப்புத் தொகை ரசீது
-ல் ஒரு வெளிநாட்டு வைப்புத் தொகை வங்கி அதாவது, ஒரு நிறுவனத்தின் உள்நாட்டு எல்லைக்கு வெளியே வங்கி நிறுவனத்தின் பங்குகளை உள்நாட்டு எல்லைக்கு வெளியே வசிப்பவர்குளக்கு வெளியிடுகிறது. இத்தகைய பங்குகள் வைப்புத் தொகை ரசீது அல்லது வெளிநாடுகளால் உருவாக்கப்பட்ட சான்றிதழ் வடிவத்தில் உள்ளன.

**உலகளாவிய வைப்புத் தொகை ரசீது.**

உலகளாவிய பங்குச் சந்தைகளை தட்டுவதற்கான மிகவும் பிரபலமான் வழகளில் ஒன்றாகும். ஒரு நிறுவனம் ஒரு வெளிநாட்டில் பங்குகளை வெளியிடுவதன் மூலம் வெளிநாட்டு நாணய நிதியே திரட்ட முடியும்.

உலகளாவிய வைப்புத் தொகை ரசீது எடுத்துக்காட்டு: அமெரிக்காவை தளமாக்க கொண்ட ஒரு நிறுவனம், அதன் பங்குகளை ஜெர்மன் பங்குச் சந்தையில் பட்டியலிட தயாராக உலகளாயை வைப்புத் தொகை ரசீது உதவியுடன் செய்ய முடியும்.

அமெரிக்காவை தளமாக கொண்ட நிறுவனம் வங்கியுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்ததிற்கும். அவரின் நிறுவனத்தின் உள்நாட்டு பாதுகாவலரடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்ற பின்னர். ஜெர்மனியை தளமாகக் கொண்ட குடியிருப்பாளர்களுக்கு பங்குகளை வெளியிடுவார்கள். இரு நாடுகளிலும் சட்டத்தை பின்பற்றிய பின்னர் பங்குகள் வழங்கப்படுகின்றன.

**உலகளாவிய வைப்புத்தொகை ரசீது மெக்கானில்:**

உலகளாயை வைப்புத் தொகை ரசீது வெளியிடும் நோக்கத்திற்காக வெளிநாட்டு வைப்புத் தொகை வங்கியுடன் ஒரு ஒப்பந்த்தில் நுழைகிறது. வெளிநாட்டு வைப்புத் தொகை வங்கி பின்னர் அத்தகைய நிறுவனத்தின் உள்நாட்டு பாதுகாவலருடன் ஒரு காவலர் ஒப்பந்தத்தில் நுழைகிறது.

உள்நாட்டு பாதுகாவலர் நிறுவனத்தின் பங்குகளை வைத்திருக்கிறார்.

உள்நாட்டு பாதுகாலரின் அறிவுறுத்திலின் பேரில் வெளிநாட்டில் வைப்புத்தொகை வங்கி வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பங்குகளை வெளியிடுகிறது.

முழு செயல்முறையும் கடுமையான வழிகாட்டுதல்களின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

உலகளாயை வைப்புத் தொகை ரசீது வழக்கமாக ருள டாலர்களில் உலகளாயை வைப்புத் தொகை ரசீது ன் நன்மைகளில் குறிப்பிடப்படுகிறது.

**உலகளாவிய வைப்புத்தொகை ரசீதுகளின் நன்மைகள் பின்வருமாறு.**

உலகளாயை வைப்புத் தொகை ரசீது வெளிநாட்டு மூலதன சந்தைகளுக்கு அனுகலை வழங்குகிறது.

ஒரு நிறுவனம் ஒரு வெளிநாட்டு பங்குச் சந்தையில் அல்லது கவுண்டரில் பதிவு செய்யப்படலாம் மற்றும் அதன் பங்குகளை ஒன்றுக்கு மேற்படட நாணயங்களில் வர்த்தக செய்யலாம்.

உலகளாயை வைப்புத் தொகை ரசீது நிறுவனத்தின் உலகளாவிய இருப்பை விரிவு படுத்துகிறது. இது உள்நோக்கி கவனத்தையும் பெற உதவுகிறது.

உலகளாயை வைப்புத் தொகை ரசீது இயற்கையில் திரவமானது ஏனெனில் அவை ஒழுங்குபடுத்தக் கூடிய தேவை மற்றும் விநியோகத்தை அடிப்ப படையாக கொண்டவை.

சர்வதேச சந்தையில் பட்டியலிடுகையில் உள்நாட்டு சந்தையில பங்குகளிள் மதிப்பீடு.

உலகளாயை வைப்புத் தொகை ரசீது சுதந்திரமாக மாற்ற முடியும்.

வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் உலகளாயை வைப்புத் தொகை ரசீது யை வழங்கும் நிறுவனத்தின் பங்குகளை தங்கள் நாட்டில் வாங்க முடியும். அவர்கள் வெளிநாட்டு நிறுவனத்தின் பங்குகளை வாங்க தடை விதிக்க பட்டிருந்தாலும் கூட உலகளாயை வைப்புத் தொகை ரசீது நிறுவனத்தின் பங்குதாரர்களின் தரத்தை அதிகரிக்கிறது.

உலகளாயை வைப்புத் தொகை ரசீது ஒரு முதலீட்டாளரிர் வரிகளை சேமிக்கிறது.

ஒரு முதலீட்டாளர் வெளிநாட்டு நிறுவனத்தின் பங்குகளை வாங்கினால் வரி செலுத்த வேண்டியிருக்கும்.

தீமைகள்:

அதேசமயம் உலகளாயை வைப்புத் தொகை ரசீது ல் எந்தவொரு ஒழுங்கு முறையும் மீறுவது நிறுவனத்திற்கு எதிரான கடுமையான விளைவுகளுக்கு வழிவகுக்கும்

உள்நாட்டு நாணயத்தின் ஈவுத் தொகை செலுத்தப்படுகிறது. இது நிலையற்ற தன்மைக்கு உட்பட்டது.

அந்நிய செலவாணி சந்தை உலகளாயை வைப்புத் தொகை ரசீது ல் அதிக அளவு முதலீடு செய்யும் திறன் காரணமாக உயர் நிகர மதிப்புடைய தனிநபர் முதலீட்டாளர்களுக்கு இது பெரும்பாலும் நன்மை பயக்கும்

உலகளாயை வைப்புத் தொகை ரசீது நிதி விலையுயர் நிதி ஆதாரங்களில் ஒன்றாகும்.

**சிறப்பியல்புகள்:**

1. இது ஒரு பாதுகாப்பற்ற பாதுகாப்பு
2. இது பங்குகளின் எண்ணிக்கையாக மாற்றபடலாம்.
3. வட்டி மற்றும் மீட்பின் விலை வெளிநாட்டு நிறுவனத்தில் பொதுவானது.
4. இது பட்டியலிடப்பட்டு பங்குச் சந்தை பயன்பாட்டில் விகிதம் செய்யப்படுகிறது.

**பயன்பாடு:**

உதாணரமாக ஒரு இந்திய நிறுவனம் வெளியிட்டுள்ளது. அமெரிக்க சந்தையில் உள்ள அமெரிக்கன் வைப்பு ரசீது இதை ஐரோப்பா போன்ற பிற வளர்ந்த மற்றும் முன்னேறிய நாடுகளுக்கும் விரிவு படுத்த விரும்புகிறது. பின்னர் அவர்கள் இந்த அமெரிக்கன் வைப்பு ரசீது ஐரோப்பாவின் பொதுமக்களுக்கு விற்கலாம். அதற்கு உலகளாயை வைப்புத் தொகை ரசீது என்று பெயரிடப்படும். உலகளாயை வைப்புத் தொகை ரசீது ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் வழங்கப்படலாம் மற்றும் எந்தவொரு சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயத்திலும் குறிப்பிடலாம்.

இப்போது இன்றைய உலகில் மிக முக்கியமான நிதி ஆதாரங்களில் ஒன்றாகும். உலக மயமாக்கலுடன் ஒவ்வொரு நிறுவனமும் தனது சிறகுகளை விரிவுபடுத்த தயாராக உள்ளன. அத்தகைய நிறுவனங்கள் சா்வதேச சந்தைகளை அடைவதற்கும், உலகளாயை வைப்புத் தொகை ரசீது சாத்தியமாகிறது. உலகளாயை வைப்புத் தொகை ரசீது வளா்ந்து வரும் சந்தைகளில் உள்ள நிறுவனங்களுக்கு விரைவான வளா்ச்சி மற்றும் மேம்பாடுகளான வாய்ப்புகளை வழங்குகிறது.

## 4.6 மதிப்பீடு- வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம்: (FCCB)

நாணயத்தில் வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம ஒரு சிறப்பு வகை பத்திரம் ஆகும். வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம க்கள் குறிப்பாக பலவற்றிக்கு அதிக முக்கியத்துவத்தை கொண்டுள்ளன. உலகில் பல்வேறு நாணயங்களுடன் அவா்கள் தொடா்ந்து கையாண்டு வருகிறாா்கள்.

வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம ன் விசித்திரமான தோற்றங்களைப் பாா்ப்போம்.

அவை முதலீட்டாளா்களுக்கு ஒரு கவா்ச்சியான முதலீட்டு விருப்பமாக அமைகின்றன.

மாற்றதக்க பத்திரத்தின் அனைத்து சாதனைகளையும வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம தக்க வைத்து கொள்கின்றன. எனவே வழங்குநா்கள் மற்றும் முதலீட்டாளா்கள் இருவருக்கும் கவா்ச்சிகரமானதாக இருக்கும்.

வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம மற்றொரு கவா்ச்சிகரமான அம்சம் என்னவென்றால் இவை சமபங்கு இணைக்கபட்ட கடன் பத்திரங்கள், அவை பத்திரத்தை சமமான உரிமையை அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு ஒரு வைப்புத் தொனை ரசீதுலை வழங்குகின்றன.

கடன் திரட்டும் கருவி வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம நிறுவனம் அவற்றை வழங்கும் நிலுவை தாரா் பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும். இந்த முதலீட்டு விருப்பத்தை விரிவாக்கப் புரிந்து கொள்ள வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம –ன் தகுதிகள் மற்றும் குறைபாடுகளைப் பாா்ப்போம்.

**வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம நன்மைகள்:**

வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம ன் முன்னேற்றங்கள் முதலீட்டு விருப்பங்களுக்கான புதிய சந்தைகளை தட்டுவதன் மூலம் வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம கள் பொதுவாக வட்டி விகிதங்கள் சொந்த நாட்டை விட குறைவாக இருக்கும்.

இந்த பத்திரங்கள் பத்திரதாரருக்கு ஒரு நன்மையுடன் விடுவதால், இந்த பத்திரங்களில் கூப்பன் கொடுப்பனவுகள் குறைவாக இருக்கும்.

கடன் வாங்குவதற்கான செலவை குறைக்க இது உதவுகிறது.

மூலதன செலவை குறைக்கலாம். எனவே, நிறுவனத்தின் நீர்த்தல் குறைவாக உள்ளது.

**வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம குறைபாடுகள்:**

வெளிநாட்டு நாணயத்தில் வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம வழியாக நிதிக்கடன் வாங்கும் நிறுவனங்கள் பத்திரத்தின் முதிர்ச்சியின் அடிப்படையில் வெளிநாட்டு நாணயத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். முதிர்ச்சியடைந்த நாளில் நிலவும் மாற்றுவீதம், வளர்ந்து வரும் நாளில் நிலவும் வீதத்துடன் ஒப்பிடும் போது கனிசமாக நகர்ந்தால், நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படலாம். ஒரு நிலையற்ற சூழ்நிலையில் பரிமாற்ற வீதம் வட்டி விகிதத்தில் சேமிப்பதை விட திருப்பிச் செலுத்துவதில் பண பரிமாற்றம் அதிகமாக இருக்கலாம்.

வீட்டு நாணயம் வட்டி விகிதத்திற்கு அப்பால் குறைந்துவிட்டால் செலவு சேமிப்பு நோக்கம் முற்றுமாக அகற்றபடலாம்.

பங்கு விலைகள் பாராட்டபடாமல் அதற்கு பதிலாக தேய்மானம் அடைந்தால், பங்குதாரர்கள் பத்திரங்களை சமமாக மாற்றுவதை தவிர்க்கலாம் மற்றும் பணத்தை வழங்குபவர் திருப்பிச் செலுத்த வேண்டியதாகும். எனவே நிறுவனம் ஒரு மோசமான கட்டத்தை கடந்து சென்றால் பங்குகள் சரியாக செயல்படாது.

எனவே வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம வைத்திருப்பவர்கள் பங்குகளாக மாற்றப்படக்கூடாது.

அத்தகைய சூழ்நிலையில் ஏற்கனவே பதற்றமடைந்த நிறுவனம் பத்திரதாரர்களுக்கு கூடுதல் வட்டி மற்றும் அசல் திருப்பிச் செலுத்தலை எதிர்கொள்ள கூடும்.

எனவே காலை சந்தை சூழ்நிலையில் ஒரு வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம பொருத்தமானதாக இருக்கலாம் மற்றும் கரடி சந்தை கட்டங்களால் பாதிக்கபடலாம்.

அந்நிய சந்தையில் வெளிநாட்டு நாணயத்தில் பத்திரங்களை வெளியிருந்து எப்போதுமே அந்த அந்த வெளிநாடு நாட்டின் சட்ட அரசியல் மற்றும் பொருளாதார அபாயத்திற்கு ஆளாகக் கூடும்.

முடிவு:

வெளிநாட்டு நாணயம் மாற்றத்தக்க பத்திரம் இந்த நாட்களில் நடைமுறையில் உள்ளது. உலகில் பல்வேறு பொருளாதாரங்களுகக்கிடையேயான வட்டி விதை வேறுபாட்டிற்கும் இந்த பாதை வழியாக பணம் திரட்டுவதற்கான குறைந்த விதிமுறைகளுக்கும் வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம அழைப்பு விருப்பத்துடன் வழங்கப்படலாம்

## 4.7 மதிப்பீடு- வெளிநாட்டு நாணய மதிப்பீட்டின் விரிவாக்கப் பத்திரங்கள்

வெளிநாட்டு நாணய மதிப்பீட்டின் விரிவாக்கப் பத்திரங்கள் குறைந்தது இரண்டு நிறுவனங்களை உள்ளடக்கியது. பத்திரங்கள்

பொதுவாக பெற்றோர் நிறுவனத்தின், பங்குகள் இயக்க நிறுவனத்தின் மத்திய நிதியமைச்சர் 2007-ம் ஆண்டு தனது பட்ஜெட் உரையில் வெளிநாட்டு நாணய பரிமாற்றம் செய்யக்கூடிய பத்திரங்களை (வெளிநாட்டு நாணய மதிப்பீட்டின் விரிவாக்கப் பத்திரங்கள -கள்) அறிமுகப்படுத்த முன்மொழிந்தார். இந்த அறிவிப்பின் இணங்க, ரிசர்வ வங்கி ஆரம்பத்தில் வழிகாட்டுதல்களை வெளியிட்டது. வெளிநாட்டு நாணய பரிமாற்றம் செய்யக்கூடிய பத்திரங்கள் திட்டம், 2008 வெளியீடு என்பது ஒரு திட்டத்தின் வடிவில் பத்திரங்கள் அதன் பிறகு, செப்டம்பர் 2009 முதல் வெளிநாட்டு பரிவர்த்தனை மேலாண்மை ஒழுங்குமுறைகளை திருத்தங்கள் மூலம் பிப்ரவரி 2009-ல் இந்த திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்த விதிமுறைகளின் கீழ், வெளிநாட்டு நாணய மதிப்பீட்டின் விரிவாக்கப் பத்திரங்கள வழங்குவதற்கு ரிசர்வ் வங்கியின் முன் ஒப்புதல் தேவைப்படும், வெளிநாட்டு நாணய பரிமாற்றம் செய்யக்கூடிய பத்திரங்கள் (வெளிநாட்டு நாணய மதிப்பீட்டின் விரிவாக்கப் பத்திரங்கள) நிதி அமைச்சகம், பொருளாதார விவகாரங்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பத்திரத் திட்டம் 2008-ல் கட்டுப்படுத்தப்படுகின்றன

## 4.8 தொகுத்தறிவோம்:

இந்தப் பாடப் பகுதியில் மூலதனத்தை கூட்டுதல் மற்றும் மூலதனத்தை பெருக்கும் முறைகள் அதன் பயன்கள் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றியும் அதனுடைய மதிப்பீட்டுகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

## 4.9 கலைச்சொற்கள்:

- ❖ மூலதனம்
- ❖ பன்னாட்டு சந்தைகள்
- ❖ சந்தைகள்
- ❖ சேமிப்பு முறைகள்
- ❖ அன்னியநாடு

## 4.10 வினாக்கள்

1. வெளிநாட்டு பத்திரங்களின் மாறுபட்ட வகைகள் பற்றி எழுதுக.
2. வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம நன்மைகள் பற்றி எழுதுக.
3. அந்நிய மூலதனம் பற்றி எழுதுக.
4. அமெரிக்கா சேமிப்பு பற்றி எழுதுக.
5. மதிப்பீடு- வெளிநாட்டு நாணயம் மாற்றக்கூடிய பத்திரம செய்க.

## 4.11 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. 1. Dr. Natarajan K, 2009, “Financial Markets and Services”, Himalaya Publishing House Pvt. Ltd., India

2. 2. Dr. Guruswamy S, 2009 “Financial Service”, Tata Mc Graw-hill Education, New Delhi.
3. 3. Prasanna Chandra, 2011 “ Financial Management Theory and Practice”, Tata Mc Graw-hill Education, New Delhi.
4. 4. Khan M Y and Jain P K, 2008, “ Financial Management Text, Problems and Cases”. Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 5 நிதிச் சேவைகள்
# Financial Services

5.1 அறிமுகம்
5.2 நிதிச் சேவைகளின் தற்போதைய நிலைமை
5.3 நிதிச் சேவைகளின் முக்கியத்துவம்
5.4 நிதிச் சேவைகளின் வகைகள்
5.5 நிதிச் சேவைகளும் பொருளாதார சுற்றுச் சுழலும்
5.6 நிதிச் சேவைகள் துறையின் பங்கேற்பாளர்கள்
5.7 தொகுத்தறிவோம்
5.8 கலைச்சொற்கள்
5.9 வினாக்கள்
5.10 பரிந்துரைக்கப்பட்ட நூல்

## 5.1 அறிமுகம்
## Introduction

கடந்த 25 வருடகங்களில் மூலதனச் சந்தை அதிவேக வளர்ச்சியைக் கண்டு உள்ளது. மூலதனச் சந்தை நடவடிக்கைகளின் எண்ணிக்கையும் பல மடங்கு பெருகியுள்ளது. தற்பொழுது பொதுமக்கள் மிக அதிகளவில் மூலதனச் சந்தைக் கருவிகளில் தங்களது சேமிப்பை முதலீடு செய்ய ஆரம்பித்துள்ளனர். மூலதனச் சந்தையில் பங்குகளாக மாற்றித்தரத் தக்க கடன் பத்திரங்கள் போன்ற நவீனக் கருவிகள் தோன்றி மக்களின் கவனத்தைக் கவர்ந்து வருகின்றன. பணச் சந்தையும் சமீபகாலத்தில் நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது. இங்கும் வணிகத் தாள்கள், வைப்புச் சான்றிதழ்கள் போன்ற நவீன பணச் சந்தைக் கருவிகள் தோன்றியுள்ளன. கழிவு மற்றும் நிதி வாணிக நிலையம் தோன்றியுள்ளது. இதன் மூலம் பணச் சந்தை, வணிக நிறுவனங்களுக்கு வேண்டிய நடைமுறை மூலதனத் தேவையை பூர்த்தி செய்ய விழைகின்றது. மூலதனச் சந்தைக் கருவிகள் நிறுவனங்களின் நீண்டகால நிதித் தேவையை நிறைவேற்றுகின்றன. சமீபகாலத்தில் அதிக எண்ணிக்கையிலான பேரளவு நிறுவனங்களின் தோற்றுவிப்பும் அவற்றின் வளர்ச்சியும் நாம் கண்கூடாகக் கண்ட ஒன்றேயாகும். அவைகள் பேரளவு வெளியீடுகளிலும் (Mega Issues) இறங்குகின்றன. அவற்றிற்கான மக்களின் வரவேற்பும் மிக உற்சாகமானதாகவே உள்ளது. மேலும், கழக நிறுவனங்களின் நிதித் தேவை குறுகிய காலம் முதல் நீண்டகாலம் வரையினதாக உள்ளது. பொதுமக்களின் முதலீட்டு நோக்கமும் முற்றிலும் இடர் அற்றவையிலிருந்து இடரை ஏற்பது வரையினதாக மாறுபட்டு அமைகின்றது. இது அவரருடைய குடும்ப சூழ்நிலை, சேமிப்பின் அளவு, வயது தொழில் வருமானம் போன்றவற்றிற்கேற்ப மாறுபாடுகின்றது. எனவே, அவரவரின் முதலீட்டு நோக்கத்திற்கேற்ப அவரவர் பணத்தை கழக ஈடுகளில் முதலீடு செய்ய

வணிகர் வங்கியர்கய் (Merchant Bannkers), பரஸ்பர நிதிகள் (Mutual Funds), கடன் தகுதிநிலை மதிப்பீட்டுத் தரமிடும் முகவாண்மைகள் (Credit Rating Agencies), பட்டியல் பணிகள் (Portfolio Swevice) போன்றன உதவி செய்கின்றன.

இவை தவிர, பல வணிக அமைப்புகளும் நிறுவனங்களும் வேண்டிய நிதித் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பல திட்டங்களைக் கொண்டுள்ளன. அவை குத்தகையிடல் (Leasing), வாடகைக் கொள்முதல் நிதியிடல் (Hire Purchase Financing), வீட்டு வசதி நிதி (House Finance), துணிகர முதலீட்டு நிறுவனங்கள் (Venture Cajpital Companies), ஏட்டுக்கடன் தரகு வணிகம் (Factoring), உண்டியல்களைக் கழிவு செய்தல் (Discounting of Bills) போன்றவைகளாகும்.

இச்சேவைகளுடன் கூட தொடர்பு படுத்தப்பட்ட சந்தை முறை (Interconnected Market System) என்ற புதிய ஒரு முறையும் தொடங்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பல்வேறு பங்கு மாற்றகங்களையும், அவைகளின் நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்து, அவற்றிடையே தொடர்பை உருவாக்குவதற்கான முயங்சிகள் எடுக்கப்படும்.

இம்முன்னுரையுடன், இப்பொழுது நாம், நிதிச் சேவைகளின் பொருள் முக்கியத்துவம், பொருளாதார சுற்றுச்சூழல், வகைகள் மற்றும் அவற்றில் ஈடுபடும் நபர்களைப் பற்றி விவாதிப்போம்.

**நிதிச் சேவைகளின் பொருள்**

**Meaning of Financial Services**

“நிதிச் சேவைகள்” என்ற சொற்றொடர் பொதுவாக நிதித் தன்மையுடைய அனைத்து நடவடிக்கைகளையும் குறிக்கின்றது என்று நாம் கூறலாம். இச்சேவைகள் சேமிப்பை சேகரிக்கும் மற்றும் அதனை ஒதுக்கீடு செய்யும் நோக்குடன் ஆற்றப்படுகின்றன. அதாவது, இவை சேமிப்பை முதலீடாக மாற்றும் நடைமுறையில் நிறைவேற்றப்படுகின்றன.

இவை நிதி இடையீடு (Financial Intermediation) எனவும் அழைக்கப்படுகின்றன. ஏனெனில், இதில் பேரளவு எண்ணிக்கையிலான சேமிப்பாளர்களிடம் இருந்து நிதியை சேகரித்தாலும், அவ்வாறு சேகரித்த நிதியை நிதித்தேவையுள்ள நபர்களுக்குப் பிரித்தலும் ஆகிய வேலைகள் உள்ளடங்கியுள்ளன. ஆகவே, நிதித் சேவைகளின் துறையானது, நாட்டின் பொருளாதார மற்றும் தொழில் மேம்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாத ஒரு துறையாகக் கருதப்படுகின்றது.



## 5.2 நிதிச் சேவைகளின் தற்போதைய நிலைமை

## Present Scenario of Finanacial Services

1990 – லிருந்து இந்திய நிதிச் சேவைகளின் துறையானது அதன் அனைத்து அம்சங்களிலும் முழுமையான ஒரு மாற்றத்தைக் கண்டுள்ளது எனலாம். 1980 – களில் இந்திய நிதிச் சேவைகள் துறையானது, வணிக வங்கிகளாலும், ஏனைய நிதி நிறுவனங்களினாலும் ஆதிக்கம் செலுத்தப்பெற்று வந்தது. இவையே இந்தியாவில் தொழிலின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்தன. அக்கால கட்டத்தில், மூலதனச் சந்தை இரண்டாம் நிலையை வகித்து வந்தது. வட்டி வீதம், பண வீதம் போன்றவற்றின் மீது கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நிதிக் கருவிகளும் போதுமான வகைகளிலும் தேவையான அளவிலும் கிடைக்கவில்லை. அந்நிய முதலீடும், சாதாரணப் பங்குமுதலில் அந்நியர்களின் முதலீடும், பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டன.

ஆயினும், பொருளாதாரத் தாராளமயமாக்கல், இந்திய நிதிச் சேவைகள் துறையில் முழுமையான ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தது. உண்மையில் சொல்லப்போனால், பொருளாதாரத் தாராளமயமாக்கலுக்குப் பிறகு ஒட்டு மொத்த நிதித்துறையே பெருத்த மாற்றத்திற்கு உட்பட்டுவிட்டது என்று நாம் சொல்லலாம். அதன் விளைவு தற்காலத்தில், பல புதிய பொருட்களும் சேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணமே உள்ளன. ஆகவே, தற்போதைய நிலைமையானது, நிதிசார்ந்த கண்டுபிடிப்புகளையும் நிதிசார்ந்த புதிதுபுனையும் தன்மையையும் கொண்டு விளங்குகின்றது எனலாம்.

## 5.3 நிதிச் சேவைகளின் முக்கியத்துவம்

## Importance of Financial Services

நிதிச் சேவைகளின் துறையானது, முதலீட்டாளர்களுக்கும் கழக நிறுவனங்களுக்கும் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகிறது. இது நிதியை அளிப்பவர்களுக்கும் நிதியை நாடி வருபவர்களுக்கும் இடையில் ஒரு இணைப்பாக விளங்குகிறது. இது தங்களின் நோக்கங்களுக்கு ஏற்ப தங்களது பணத்தை முதலீட செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு வழிகாட்டுகிறது. தவிரவும்,இது முதலீட்டை ஏதுவாக்கும் வகையில் பல்வேறு வாய்ப்புகளையும் அளிக்கிறது. அதேசயத்தில் இது, நிறுவனங்களும் தங்களின் நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் நிதியைப் பெறவும் வகைசெய்கிறது. தற்காலங்களில் நிதியைப் பெறுதல் மிகவும் சிக்கலான ஒரு செயலாகவே உள்ளது. மூலதனச் சந்தையில் ஆரோக்கியமான ஒரு வளர்ச்சியைப் பெறும் வகையில் அது பல சட்டங்களால் ஒழுங்குபடுத்தப் படுகின்றது. இது வெற்றிவாய்ப்பு மிக்க முதலீட்டு வாய்ப்புகளைத் தேர்வுசெய்ய முதலீட்டாளர்களுக்கு உதவும் பொருட்டு பல்வேறு நிதிச் சேவைகளை அபிவிருத்தி செய்யுமாறு கட்டாயப்படுத்தியது. ஆகவே, நிதிச் சேவைகளின் துறையானது, முதலீடு செய்யும் பொதுமக்கள் மற்றும் கழக நிறுவனங்கள் ஆகிய இரு சாராருக்கும், அவர்களின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் வளரத்தொடங்கி உள்ளது.

நிதிச் சேவைகளின் முக்கியத்துவமானது பின்வரும் வரிசையில் ஆய்வு செய்யப்படலாம்.

**1. பொருளாதாரத்தை மேம்படுத்துகிறது**

**Develops the Economy**

நிதிச் சேவைகளின் துறையானது முதலீட்டாளர்களுக்கும் கழகத் துறைகளுக்கும் இடையில் இடைநிலை நபராக பணியாற்றுகிறது. இது முதலீட்டிற்குப் பணத்தைக் கொண்டிருக்கும் பொதுமக்களையும் தங்களின் நடவடிக்கைகளுக்கு என நிதித் தேவையுள்ள கழக நபர்களையும் இணைக்கிறது. ஆகவே, இது பொது மக்களின் கைகளில் இருந்து நிதியைப் பெற்று தொழல் துறைக்கு அனுப்புகிறது. இதனால் தொழில் துறையின் வளர்ச்சிக்கு மட்டும் அல்லாமல் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் இது நிதி அளிக்கிறது எனலாம்.

**2. சிறந்த ஈடுகளை முதலீட்டாளர் தேர்ந்தெடுக்க வகை செய்கிறது**

**Enables Investor to Select Sound Scrips**

இது சிறந்த ஈடுகளில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களுக்கு வழிகாட்டுகிறது. முதலீடு செய்வதற்கு என கம்பெனியின் வெளியீட்டினைத் தேர்ந்தெடுப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு தெழில், சந்தை, பொருள், மேலாண்மை போன்றவை தொடர்பான அறிவு அவசியம். கழக முதலீட்டில் தேர்ந்த அறிவைப்பெற நீண்ட நாள் ஆகும். ஏனெனில் முதலீட்டு மேலாண்மை மிகவும் சிக்கலான ஒரு துறை ஆகும். குறிப்பாக, முதல் முறையாக சந்தையில் நுழையும் வணிக நிறுவனத்தைப் பொறுத்த மட்டில், அபாயமற்ற முதலீட்டு வாய்ப்புகளைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கடினம். மேற்கண்ட அனைத்துக் காரணிகளும் நிதிச் சேவைகள் துறையின் பேரளவு வளர்ச்சியை ஊக்குவித்தன எனலாம்.

**3. மூலதனச் சந்தையின் ஆரேக்கியமான வளர்ச்சிக்கு வகை செய்கிறது**

**Enable Healthy Growth of Capital Market**

நிதிச் சேவைகள் துறையானது. சிறந்த ஈடுகளைத் தேர்ந்தெடுப்பதில் முதலீட்டாளர்களுக்கு உதவுகிறது. அதன் மூலம் இது ஆரோக்கியமற்ற மூலதனச் சந்தையின் வளர்ச்சியைத் தவிர்க்கிறது. இது, கழக நிறுவனங்கள் பங்குதாரர்களுக்கு உண்மையுடனும் நேர்மையுடனும் இல்லையெனில் அவை சந்தையில் நீடித்து நிற்க முடியாது என்று எச்சரிக்கிறது. இது நிதிச் சந்தையை எச்சரிக்கையுடனும் கூர்மையாகவும் கவனித்து, முதலீட்டாளர்களுக்கு சரியான வழியைக்காட்டுகிறது. ஆகவே, இது நிதிச் சந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது எனலாம்.

**4. வேலை வாய்ப்பை அளிக்கிறது**

**Provides Employment Opportunity**

நிதிச் சேவைகளின் துறையானது அதிவேகமாகவும் பேரளவிலும் வளர்ச்சியைக் கண்டு வருகிறது. நிதிச் சேவைகள் துறையின்

கண்டுபிடிப்புகள் மிகவும் பொதுவானதாகவும் பயிற்சி பெறாத மக்களுக்கு இத்துறையில் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பைப் பெறும் வகையிலும் ஊக்குவிக்கின்றன.

**5. நாட்டின் ஒட்டுமொத்த மேம்பாட்டினை உறுதிசெய்கிறது.**

**Ensures Overall Development of the Nation**

நிதிச் சேவைகள் துறையின் வளர்ச்சி மற்றும் இத்துறையில் செய்யப்பட்ட கண்டுபிடிப்புகள், நாட்டின் ஒட்டுமொத்த மேம்பாட்டினை உறுதி செய்கிறது. இது சேமிப்பை சேகரிக்கிறது மற்றும் தேவையான நபர்களுக்கு நிதிகளை ஒதுக்கீடு செய்கிறது. இதுவே நம் நாட்டின் தற்போதைய தேவையாக இருக்கிறது. சரியான ஈடுகளில் சரியான நேரத்தில் சரியான அளவில் செய்யப்படும் முதலீடு நமது நாட்டின் பொருளாதாரத்தை நிச்சயம் மேம்படுத்தும்.

## 5.4 நிதிச் சேவைகளின் வகைகள்

## Types of Financial Services

நம் நாட்டில் பொதுவாக மேற்கொள்ளப்படும் பல்வேறு நிதிச் சேவைகளாவன

1. வணிகர் வங்கியில் (Merchant Banking)
2. பரஸ்பர நிதிகள் (Mutual Funds)
3. ஈடு கடன் தகுதிநிலை மதிப்பீட்டுத் தரமிடல் (Credit Rating)
4. பட்டியல் மேலாண்மைச் சேவைகள் (Portfolio Services)
5. குத்தகையிடல் (Leasing)
6. வாடகைக் கொள்முதல் (Hire Purchase Financing)
7. வீட்டு வசதி நிதி (House Finance)
8. துணிகர முதலீட்டுக் கம்பெனிகள் (Venture Capital Companies)
9. ஏட்டுக்கடன் தரகு வணிகம் (Factoring)
10. உண்டியல்களைக் கழிவு செய்தல் (Discounting of Bills)
11. இணைக்கப்பட்ட சந்தை முறை (Inter-connected Market system)

மேற்கண்ட ஒவ்வொரு நிதிச் சேவையையும் பற்றி இப்பொழுது நாம் சுருக்கமாக விவாதிக்கலாம்

**1. வணிகர் வங்கியியல்**

**Merchant Banking**

வணிகர் வங்கியியல் பிரிவு இந்தியாவில் முதல் முதலில் 1969 ஆம் ஆண்டில் கிரைண்ட்லேய்ஸ் வங்கி (Grindlays Bank) ஆல் தொடங்கி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்திய மாநில வங்கி,இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் மற்றும் ஏனைய அயல்நாட்டு வங்கிகள் 1974 ஆம் ஆண்டில் வணிகர் வங்கியியல் பிரிவுகளைத்

திறந்தன. 1974 மற்றும் 1985-களுக்கு இடைப்பட்ட காலத்தில், இப்பிரிவுகள் வெளியீட்டு மேலாண்மையில் பேரளவில் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன. 1980களில் இந்தியாவில் வணிகர் வங்கியியலின் அதிவேக வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், பொது முதலீட்டாளர்கள் மூலதனச் சந்தையில் சீரான வளர்ச்சியைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்ததே ஆகும். இதனால் பல கம்பெனிகள் தமது நீண்டகால நிதித் தேவைகளுக்கு மூலதனச் சந்தையை அணுகத் தொடங்கின அது முதல், நிதிக்கலந்தாய்வு நிறுவனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் அபிவிருத்தி அடையத் தொடங்கின இவை வெளியீட்டு மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதை சிக்கலானதாக ஆக்கின. இதனால் கம்பெனிகள் இந்நடவடிக்கைகளை திறமையுடனும் சட்டபூர்வமாகவும் மேற்கொள்ள ஏதுவாக வணிகர் வங்கிகளின் உதவியை நாடின. இவை தங்களின் வணிகர் வங்கியர்களுடன் சேர்ந்து செயல்பட்டன. இதனால் அபாயம் பரவலாக்கப்பட்டது.

இந்தியாவில், பொதுவாக பின்வரும் முகவாண்மைகள் வணிகர் வங்கியர்களாக செயல்படுகின்றன.

1. இந்திய மாநில வங்கியின் மூலதனச் சந்தை லிட்
2. கேன் வங்கியின் நிதிச் சேவைகள் லிட்.
3. பஞ்சாப் தேசிய வங்கியின் மூலதனச் சேவைகள் லிட்
4. பாங்க் ஆ.ஃ.ப் இந்தியாவின் நிதி லிட், மற்றும்
5. இந்தியன் வங்கியின் வணிகர் வங்கியியில் சேவைகள் லிட்

மேற்கண்ட நிறுவனங்களுடன் கூட, நூற்றுக்கணக்கான பங்கு மாற்றகத்தின் டீலர்களும் பங்குத் தரகர்களும் பட்டயப் பணக் கணக்கர்களும் வணிகர் வங்கியர்களாக செயல்படுகின்றனர். சமீபகாலத்தில், இந்தியாவில் அந்நிய நிறுவனம் சார்ந்த முதலீட்டாளர்களும் கூட வணிகர் வங்கியர்களாக செயல்படுகின்றனர்

பொதுவாக வணிகர் வங்கியரானவர் பின்வரும் நிதிச் சேவைகளைப் புரிகிறார்

1. பொது வெளியீடு மேலாண்மை
2. பட்டியல் மேலாண்மை
3. மூலதன மறுகட்டமைப்புப் பணிகள்
4. கடன் வணிக மன்றக் கூட்டு (Syndication)
5. துணிகர முதலீடு
6. குத்தகை நிதியிடல்
7. கழகக் கலந்தாய்வு மற்றும் திட்டக் கலந்தாய்வு

### 2. பரஸ்பர நிதிகள்

### Mutual Funds

பரஸ்பர நிதிகள் என்பன, உறுப்பினர்களின் பரஸ்பர பயனுக்கென வணிகத்துறை/ கழகத்துறையின் சொத்துகள் மீது அல்லது நிதிக் கருவிகளின் மீது முதலீடு செய்யும் பொதுமக்களின் பொறுப்பாண்மைகள் ஆகும். நிதியானது இவற்றின் உறுப்பினர்களிடமிருக்கும் நிதியைச் சேகரித்து அதனை பல்வேறு நிதிச்சொத்துகளிலும் முதலீடு செய்கிறது. நிதியானது பல்வேறு ஈடுகளிலும் பல்வேறு அளவுகளில் முதலீடு செய்யப்படுவதால் அபாயம் குறைக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான வருமானமும் முதலின் மதிப்புயர்வும் அதிகபட்சம் ஆக்கப்படுகின்றது. இவர்கள், வல்லுநர்களின் தேர்ந்த அறிவின் காரணமாக ஈடுகளின் வெற்றிவாய்ப்பு மிக்க தேர்ந்தெடுப்பு, அளவுகளில் சிக்கனம், ஆகிய பயன்களைப் பெறுகின்றனர். இப்பயன்களும் தனிப்பட்ட நபர்களால் தனிப்பட்ட முறையில் பெற முடியாது. ஆகவே, பட்டியல் மேலாண்மைக்கு என பங்களிக்கும் நபர்களுக்கு பரஸ்பர பயன் மற்றும் இத்துறையில் வல்லுநராக உள்ள நபர்களில் மூலம் முதலீடுகளின் மேலாண்மை போன்ற கருத்துக்களை உடையதே பரஸ்பர நிதயாகும்.

இந்தியாவில் நீண்டகாலமாக இயங்கி வரும் ஒரே பரஸ்பர நிதி இந்தியப் பொறுப்புரிமைக் கழகமாகும். இது ஒரு கால வரையற்ற பரஸ்பர நிதியாகும். இதன் அலகுகள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் விற்கப்படலாம் மற்றும் கொள்முதல் செய்யப்படலாம். இது பொதுத்துறையில் இயங்கிவரும் ஒரு நிறுவனமாகும். இது ஒரு காலத்தில் சர்வாதிகார நிலையை வகித்தது என்று நாம் சொல்லலாம். இதற்கென சிறப்பான வரிப் பயன்களும் உள்ளன. இதன் முழு வருமானமும் முற்றிலும் வருமான வரியிலிருந்து விலக்குப் பெறுகின்றது.

1983 ஆம் ஆண்டில், வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்ட பிறகு, அது இந்திய ரிசர்வ் வங்கிக்கு, குத்தகையிடல், பரஸ்பர நிதி போன்ற பல வங்கியியல் சாராத வணிகங்களையும் வங்கிகளை மேற்கொள்ள அனுமதிக்கும் வகையில் அதிகாரம் அளித்தது. இச்சட்டத்தின் பிரிவு 6 –ன் கீழ் பல தனியார் துறை வங்கிகள் தங்களின் சொந்த பரஸ்பர நிதிகளை அமைத்தன. அவற்றுள் முக்கியமானவை இந்திய மாநில வங்கி, கனரா வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி போன்றனவாகும். இந்நிதிகள், இந்திய பொறுப்பாண்மைகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றன. ஆனால், இந்திய பொறுப்புரிமைக் கழகம் அதன் சொந்த சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

**3. கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடல்**

## Credit Rating

வாய்ப்புவளமிக்க கடன் பெறக் கூடிய ஒரு நபரின் திறன், கடன் பதிவுகள், நேர்மை, நாணயம் போன்றவற்றை மதிப்பிடும் ஒரு செயலே கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடல் எனப்படுகிறது. இவ்வித மதிப்பீட்டுத் தரமிடலானது கம்பெனிகள், தனிநபர்கள் மற்றும் நாடுகளுக்குக்

கூட மேற்கொள்ளப்படுகின்றது. கம்பெனிகளின் கடன் கருவிகளைப் பொறுத்தமட்டில், இவ்வித மதிப்பீட்டுத் தரமிடலானது அளவு சார்ந்த மற்றும் தகுதி சார்ந்த அளவைகளின் உதவி கொண்டு செய்யப்படுகின்றது. கருவிகளானது கடன் பத்திரமாகவோ, நிரந்த வைப்பாகவோ, அல்லது வணிகவியல் சார்ந்த காகிதமாகவோ இருக்கலாம். தகுதி நிலைத் தரமிடுதலானது தரமிடும் அன்றுள்ள, வட்டி முதல் இரண்டையும் உரிய நேரத்தில் பெறுவதற்கான பாதுகாப்பு மீதான தரமிடும் முகவாண்மையின் கருத்தைக் காண்பிக்கிறது. இக்கருத்தானது, வெளியிடுபவரின் கடனை திரும்ப செலுத்துவதற்கான தகுதி மற்றும் விருப்பத்தின் மதிப்பீட்டிமைப் பொறுத்து அமைகின்றது. இது வணிகம், மேலாண்மை, ஒழுங்குமுறை சார்ந்த சுற்றுச்சூழல் போட்டி மற்றும் நிதிநிலைமை ஆகிய முக்கியமான காரணங்களின் ஆய்வைக் கொண்டுள்ளது. உயர்ந்தளவு கடன் தர வரிசையானது வட்டிச் செலவினைக் குறைத்து மக்களின் வரவேற்பையும் பெற கடன் ஈடுகளுக்கு உதவுகிறது. இந்தியாவில் பணியாற்றும் தரவரிசை முகவாண்மைகளாவன: இந்திய ஈடு கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடல் மற்றும் தகவல் பணிகள் லிட் (CRISIL), இந்திய முதலீட்டுத் தகவல் மற்றும் கடன் தகுதிநிலை மதிப்பீட்டுத் தரமிடல் முகவாண்மை லிட், கடன் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி லிட் (CARE) ஆகியனவாகும்.

சமீபகாலத்தில், இந்தியாவில் வங்கிகளின் நிரந்தர வைப்புகள், கட்டமைக்கப்பட்ட கடன் பொறுப்புக்கள் மற்றும் பிணையம் பெற்ற கடன் போன்றனவும் கூட மதிப்பீட்டுத் தரமிடலுக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும், நில அபிவிருத்தியாளர்கள் மற்றும் LPG bottlers போன்றவர்களுளும் கூட இப்பொழுது செயல் நிறைவேற்றத் தர வரிசைப் பெறுகின்றனர். இவ்விதத் தரமிடல், விரைவில் சிட்ஃபண்ட், பரஸ்பர நிதி போன்றவற்றிற்கும் விரிவாக்கம் செய்யப்படும் என எதிர் பார்க்கப்படகின்றது. தவிரவும், எந்தக் கடன் வெளியீட்டுடனும் தொடர்பு இல்லாமல் பொதுவாகக் கூட கம்பெனி ஒன்று அதனுடைய பொதுவான கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடலைப் பெறலாம். இதற்கு இந்தியாவில் வசதி உள்ளது.

கடன் தகுதிநிலை மதிப்பீட்டுத் தரமிடல் தனிநபர்களுக்கும் செய்யப்படுகின்றது. இவ்விதமான தகவலானது நுகர்வோர் கடன் நிறுவனங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

### 4. பட்டியல் சேவைகள்

### Portfolio Services

நிதிச் சேவைகளின் பரப்பிற்குள் கொண்டு வரப்படாத மற்றொரு புதிய சேவை, பட்டியல் சேவையாகும். இது தனிநபரது முதலீட்டுப் பட்டியலின் மேலாண்மையைக் குறிக்கிறது. பட்டியல் என்பது ஒரு சேகரமான வார்த்தை ஆகும். இது தனிநபர் ஒருவர் அல்லது நபர்களின் குழு அல்லது ஒரு பரஸ்பர நிதி கொண்டு உள்ள பல்வேறு ஈடுகளைக் குறிக்கிறது. பட்டியலில் அதிக அபாயத்தில் பேரளவு இலாபத்தை ஈட்டக்

கூடிய திறன் பெற்ற ஈடுகள் இருப்பின், அதற்கு இபாயம் ஏற்படாத பட்சத்தில் அதிகமான இலாப வாய்ப்பு இருக்கும். ஆனால், பேரளவு அபாயத்தின் காரணமாக சிலசமயங்களில் இது அதிக நஷ்டத்திற்கும் வழி வகுக்கலாம். மாறாக, பட்டியலில் குறைந்த இலாபம் மற்றும் குறைந்த அபாயம் என்ற கூட்டிலான ஈடுகள் இருப்பின், அபாயமானது குறைவாகவே இருக்கும். பேரளவு இலாபம் ஈட்டுவதற்கான வாய்ப்பும் அதிகமாக இருக்காது. மேலும், முதலீடானது பல்வேறு தொழில்சார்ந்த பணிகளை மேற்கொள்ளும் பல கம்பெனிகளில் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படும் பட்சத்தில், ஒரு கம்பெனியில் ஏற்படும் நஷ்டம் மற்றொரு கம்பெனியில் ஏற்படும் இலாத்தால் சரிக்கட்டப்பட முடியும். ஆகவே, நாம் வெளியிடும் கம்பெனி, அதன் வணிக நடவடிக்கை, ஈடுகளின் இயல்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஈடுகள் தேர்ந்து எடுக்கப்படுதலை பட்டியல் மேலாண்மை என அழைக்கலாம். இந்தியாவில் வைஸ்யா வங்கி, மாநில நிதிக் கழகங்களின் வங்கியியல் மையங்கள் போன்றன இப்பணிகளை ஆற்றுகின்றன. தவிரவும், தனியார் முதலீட்டு ஆலோகர்கள் கூட தனியார் முதலீட்டாளர்களின் பட்டியலை நிர்வகிக்கின்றனர்.

**5.குத்தகையிடல்**

## Leasing

குத்தகை (Lease) என்பது ஒரு ஒப்பந்தம் சார்ந்த ஏற்பாடாகும். இதன் மூலம் குறிப்பிட்ட கால கட்டத்திற்கு சொத்து ஒன்றினைப் பயன்படுத்தும் உரிமையை நபர் ஒருவரோ அல்லது நிறுவனம் ஒன்றோ பெற்று, அதற்கு கைமாறாக சீரான இடைவெளிகளில் வாடகை செலுத்துவதாக உடன்படுகின்றனர். இம்முறையே குத்தகையிடலாகும். குத்தகையிடல் ஆனது நிதி ஆதாரங்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடாக உள்ளது. இதற்கு கீழ்க்கண்ட நன்மைகள் உள்ளன.

1. 100 சதவிகித நிதி கிடைக்கிறது,
2. குத்தகைத் தொகை மீது வரிக் கழிவு உண்டு,
3. செலுத்தல் அட்டவணையைப் பொறுத்து வரி திரும்பப் பெறுதல் விரைவாக செய்யப்பட வாய்ப்புள்ளது,
4. செலுத்தலின் கூறுகள் நெகிழ்வானவை,
5. கடன் பெறும் திறன் பாதிப்படைவதில்லை, மற்றும்
6. கால விரயம் குறைவு: சில செலவுகள் தவிர்க்கப்படுகின்றன.

குத்தகையிடலின் குறைபாடுகள் பின்வருமாறு:

1. இதற்கு ஆகும் செலவு அதிகம்
2. குத்தகைக்குச் சொத்தைப் பெறும் நபருக்கு அவரது வணிகம் நஷ்டத்தில் இயங்குவதன் காரணமாக சொத்தைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள இயலாத நிலை ஏற்பட வாய்ப்புண்டு.

குத்தகையிடல் ஏற்பாடுகளில் பல்வேறு வகைகள் உள்ளன. இவை வரைபடம் 2.1-ல் தரப்பட்டுள்ளன. இவற்றின் விரிவான விளக்கம் அத்தியாயம் 10 –ல் தரப்பட்டுள்ளது.




**6. வாடகைக் கொள்முதல் நிதியிடல்**

## Hire Purchase Financing

வாடகைக் கொள்முதலும் கூட ஒரு வகைக் கடனே ஆகும். இம்முறையில், குறிப்பிட்ட ஓர் தொகையை வைப்பாகப் பெற்றுக் கொண்டு, மீதமுள்ள தொகையை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குறிப்பிட்ட தவணைகளில் செலுத்துவதற்கான ஒப்பந்தத்துடன பொருட்கள் அவற்றை வாங்கியவருக்கும் அளிக்கப்படுகின்றன. வாடகைக் காலம் முடியும் தறுவாயில், தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பிறகு சட்டப்படியான சொத்துரிமை, வாடகைக்குப் பொருள் பெற்றவருக்கு மாற்றித் தரப்படுகிறது. குறிப்பிடப்பட்ட கால கெடுவிற்கு முன்னரே தொகை முழுவதும் அளிக்கப்பட்டுவிட்டால் அளிக்க வேண்டிய தொகையில் குறிப்பிட்ட ஓர் சதவிகிதம் தள்ளுபடியும் தரப்படுகின்றது.

வாடகைக் கொள்முதலும் சட்டம் 1972 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச் சட்டம் வாடகை நடவடிக்கையில் ஈடுபடும் நிதி அளிப்பவர் மற்றும் பெறுவர் ஆகிய தரப்பினரின் பலதரப்பட்ட உரிமைகள் மற்றும் சட்டப் பொறுப்புகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் சட்டக் சரத்துக்களைக் கொண்டுள்ளது.

இச்சட்ட விதிகளுக்கு ஏற்ப வாடகைக் கொள்முதல் விற்பனை நடத்தப்படவேண்டும். இம்முறையில், பொருட்கள் நுகர்வோரிடம் ஒப்பந்தம் முடிந்த உடனேயே வழங்கப்பட்டுவிடுகின்றன. இம்முறையில் விற்பனைப் பொருளின் உடைமை உரிமை மாற்றப்படுவதில்லை. பொருளின் உடைமை (Possession) மட்டுமே நுகர்வோருக்கு மாற்றப்படுகின்றது. அதாவது, பொருள்

மட்டுமே நுகர்வோரிடமும் வழங்கப்படுகின்றது. நுகர்வோர் கடைசித் தவணை வரையிலும் தவணை பாக்கியை ஒழுங்காகச் செலுத்தி முடித்த பின்னர் பொருளின் மீதான உடைமை உரிமையானது சட்டப்படி அவருக்கு மாற்றிக் கொடுக்கப்படும் இடையில் தவணை பாக்கிகளைச் சரிவரச் செலுத்தாமற் போனால் வாடிக்கையாளரிடம் உள்ள பொருளைத் திரும்பவும் கைப்பற்றிக் கொள்ள (Repossession) நிதியாளருக்கு உரிமை உண்டு. வாடிக்கையாளர் அன்றைய தேதி வரையில் செலுத்தியுள்ள தவணைத் தொகையானது அப்பொருளைப் பயன்படுத்தியதற்கான வாடகையாகக் கருதப்படும்.

**7. வீட்டு வசதி நிதி**

## House Finance

சமீபகாலத்தில், பல்வேறு தனியார் வீட்டு வசதி நிதிக் கம்பெனிகள் அமைக்கப்பட்டுள்ளன தேசிய நிதி வசதி வங்கி (National Housing Bank) என்ற வங்கி இந்திய அரசால் சமீபகாலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவே இவ்வித அமைப்புக்களின் தலைமை அமைப்பாகச் செயல்படுகின்றது. இது சுமார் பத்து வீட்டு வசதி நிதிக் கம்பெனிகளை தம்மிடமிருந்து மறுநிதி வசதி பெறத்தகுதியுள்ளவைகளாக அங்கீகரித்துள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சிக் கழகம் (HUDCO), வீட்டு வசதி வளர்ச்சி நிதிக் கழகம் (HDFC) ஆகியவை வீட்டு வசதிக்காக நிதியளிக்கும் துறையில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு இருக்கக் கூடிய கழகங்களாகும்.

**8. துணிகர முதலீட்டு நிறுவனங்கள்**

## Venture Capital Companies

மூலதனச் சந்தையில் துணிகர முதலீட்டு நிதியானது ஓர் புதிய வகையான நிதியாகும். தொழில் நுணுக்கம் அறிந்த தொழில் முனைவோரிடம் தொழில் திறமையும் அனுபவமும் உள்ளன. வளம்பெறக் கூடிய (Viable) புதிய திட்டங்களைத் தீட்டவும். பின் அதன்படி தொழிலைத் தொடங்கவும் தேவையான திறமையும் இவர்களிடம் உள்ளது. ஆனால், இவர்களுள் பெரும்பாலானவர்களிடம் தொழில் ஆரம்பிப்பதற்குத் தேவையான தோற்றுவிப்பாளர். மூலதனம் (15%-20%) இருப்பது இல்லை. அதாவது தொழில் திட்டத்தை தோற்றுவிக்கத் தேவையான முதலீடு இவர்களிடம் இருப்பதில்லை. இதுவே துணிகர மூலதனம் எனப்படுகின்றது.

துணிகர முதலீடு அளிப்பதல் இடர்கள் அதிகம் உள்ளன. ஆனால், திட்டம் வளம் பெறக்கூடியதாக இருந்தால், பெறக்கூடிய மீள்வருகை வீதத்தின் வாய்ப்பு வளம் நிச்சயம் கணிசமானதாக இருக்கும்.

**9. ஏட்டுக்கடன் தரகு வணிகம்**

## Factoring

ஏட்டுக்கடன் தரகு வணிகம் என்பது உரிமைப் பேராள் (Factor) என்ற சிறப்பு நிதி முகவாண்மையிடம் உண்டியல்களை விற்பதன் மூலம் நிதியைப் பெறும் ஒரு ஏற்பாடாகும். ஏட்டுக்கடன் தரகு வணிக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிலையில், நிறுவனம் ஒன்று தமது பொருளைப் பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு விற்கும் முன்பு உரிமைப் பேராளின் முன் அனுமதியைப் பெறுதல் வேண்டும். பொதுவாக, உரிமைப் பேராள் இடாப்பு மதிப்பில் 80% வரை தமது வடிக்கைக்காரருக்கு நிதி அளிக்கிறார். இந்நிதியானது வழங்கப்பட்ட பொருட்கள் தொடர்பான இடாப்பின் நகல் பெறப்பட்டவுடன் அளிக்கப்படுகிறது. மீதமுள்ள தொகையானது நிறுவனத்திற்கு வாடிக்கையாளர் அளிக்க வேண்டிய தொகையை அளித்தவுடன் அளிக்கப்படுகிறது. உண்டியல்கள் தொடர்பான விவரங்கள் அளிக்கப்பட்டவுடன், உரிமைப் பேராளானவர், வாடிக்கையாளர்களை அணுகிதொகையை உரிய நேரத்தில் வசூலிப்பதற்குரிய முயற்சிகளை எடுக்கலாம். உரிமைப் பேராளானவர் கம்பெனியில் வாடிக்கையாளர்களிடம் இருந்து நிலுவைத் தொகையை வசூலிப்பதில் உள்ள அபாயத்தையும் பொறுப்பையும் ஏற்கிறார்.

உரிமைப் பேராள் இவரது சேவைக்கென வசூலிக்கும் தொகையில் இரண்டு அடிப்படைப்பகுதிகள் உள்ளன. அவை: 1. வட்டி அல்லது கட்டணம், மற்றும் 2. சேவைக்கட்டணம் ஆகியனவாகும். வட்டி வீதமானது பணத்திற்கு அகும் அடக்கம் மற்றும் காரணிகளுக்கு இடையிலான போட்டி ஆகியவையையே நம்பி உள்ளது. சேவைக் கட்டணமானது. அபாயத்தை ஏற்றல், உண்டியல்களைப் பெற்று வசூலித்தல், கணக்கு வைப்பை நிர்வகித்தல் ஆகியவற்றிற்காக செலுத்தப்படுகின்றது. ஆகவே, ஏட்டுக்கடன் தரகு வணிகமானது, கடன், கடன் வசூலிப்பு மற்றும் விற்பனை ஏட்டின் நிர்வாகம் ஆகிய அனைத்தும் சேர்ந்த ஒரு கலவை ஆகும். இதனால் பேரளவில் கடன் விற்பனையில் ஈடுபடும் கம்பெனிகளுக்கு ரொக்க ஓட்டம் தொடர்ச்சியாக ஏற்படுகின்றது. ஆனால் இது மிகவும் செலவு அதிகம் பிடிக்கின்ற ஒரு ஏற்பாடாகும்.

**10. உண்டியல்களைக் கழிவு செய்தல்**

**Discounting of Bills of Exchange**

பிணையம் எதுவும் பெறாமல் வங்கியர் வழங்கும் கடன்களுள் உண்டியல்களைக் கழிவு செய்து பணம் தருதலும் ஒரு முக்கியமான கடன் வடிவமாகும். மாற்றுமுறை உண்டியல்களுக்கு (Bills of Exchange) அவற்றின் கெடுநாளுக்கு முன்னரே பணம் வழங்கி அதன் மீதான உரிமையை வங்கியர் பெற்றுக் கொள்வதே கழிவு செய்தல் எனப்படும்.

மாற்றுமுறை உண்டியல் மீது பணம் பெற உரிமை படைத்தவர் (அதை எழுதியவர் அல்லது புறக் குறிப்பிட்டு மாற்றித் தரப்பெற்றவர்) அதன் மீதான உரிமையைப் புறக் குறிப்பிட்டு (Endorsement) வங்கியருக்கு மாற்றித்தர வேண்டும். இதனை முன் பணம் வழங்குதல் (Advances) என்று

சில அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறு கழிவு செய்து பணம் தருவதற்காக ஒரு சிறிய தொகையை வங்கியர் கமிஷன் அல்லது தள்ளுபடியாகப் பெறுகிறார். மேலும், இந்த உண்டியலுக்கு அதை ஏற்றவர் (Acceptor) பணம் வழங்க மறுத்துவிட்டால், கழிவு செய்து பணம் பெற்றவர் அந்த உண்டியல் தொகையோடு அது சம்பந்தமாக ஏற்பட்ட எல்லாச் செலவுகளையும். வங்கியரிடம் திரும்பிச் செலுத்த வேண்டும்.

**கழிவு செய்து தருவதால் ஏற்படும் நன்மைகள்**

## Merits of Discounting of Bills

உண்டியல்களைக் கழிவு செய்து பணம் வழங்குவதால் வணிகர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன. கடன் கொடுக்காமல் வியாபாரம் செய்ய இயலாது என்ற நிலை இன்று உள்ளது. ஆனால் உற்பத்தி செய்தவர் முதல் போட்டு உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. உற்பத்தியான பொருள்களைக் கடனுக்கு அனுப்பியே விற்பனை செய்ய வேண்டிய கட்டாயமும் உள்ளது. மொத்த விற்பனையாளர்களும் சில்லறை விற்பனையாளர்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அப்பொருட்களை விற்றுப் பணம் அனுப்பும் வரையிலும் உற்பத்தியாளரால் காத்திருக்க இயலாது. அதே நேரத்தில் விற்பனையாளர்களும் உடனடியாகப் பணம் அனுப்பவும் இயலாது. இவ்விருவரையும் பணச் சிக்கலில் இருந்து விடுவிப்பதே உண்டியல்களைக் கழிவு செய்து பணம் தருவதாகும். இதனால் உற்பத்தி செய்தவருக்கு உடனடியாகப் பணம் கிடைக்கின்றது. விற்பனையாளரும் குறிப்பிட்ட நாளுக்குப் பிறகே பணம் செலுத்த வேண்டி உள்ளதால் உடனடியாகப் பணம் கிடைக்கின்றது. விற்பனையாளரும் குறிப்பிட்ட நாளுக்குப் பிறகே பணம் செலுத்த வேண்டி உள்ளதால் உடனடியாகப் பணம் செலுத்தத் தேவையில்லை. மேலும், வங்கியரும் இதனால் சில நன்மைகளை அடைகின்றனர். இவற்றுள் சில பின்வருமாறு

1. திரும்பிப் பெறும் தேதி நிச்சயமாகின்றது (Certainty of Payment on Due Date): உண்டியல்களில் அதற்குப் பணம் செலுத்த வேண்டிய தேதி குறிப்பிடப்பட்டு இருக்கும் பெரும்பாலும், நாணயமான வணிகர்கள் எவரும் அத்தேதியில் பணம் கட்டி விடுவர். அவ்வாறு அவர்கள் பணம் கட்டத் தவறினாலும் உடனடியாக அதைக் கழிவு செய்து பணம் பெற்ற வாடிக்கையாளர் பணம் கட்டி விடுவார். எனவே இக்கடன் என்று திரும்பிச் செலுத்தப்படும். என்று நிச்சயமாக வங்கியருக்குத் தெரியும். இதனால் தம்மிடம் முடங்கியுள்ள பணத்தை இலாபகரமாக முதலீடு செய்வதற்கும், தமது பொறுப்புக்களைத் தீர்க்க வேண்டிய தேதிகளை அதற்கு ஏற்றாற்போல் வகுத்துக் கொள்ளவும் இயலும்.

2. ரொக்கமாகும் தன்மை (Liquidity): மாற்று முறை உண்டியல்கள் எளிதில் ரொக்கமாகும் தன்மையுள்ள சொத்துக்களாகக் கருதப்படுகின்றன. உண்டியல்களுக்குப் பணம் பெறுவதற்கான கெடுநாளுக்கு முன்பே பணம்

தேவைப்பட்டால், அந்த உண்டியல்களை மறு கழிவு செய்து (Re-discounting) பணம் பெறவும் வழி உள்ளது. இதனால் வங்கியர் தம்மிடம் பெரும் தொகையை இருப்பாக வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அத்தொகையை இலாபகரமாகவும் முதலீடு செய்ய இயலும்.

3. மதிப்பு மாறுவதில்லை (Freedom from Fluctuation in Prices) : உண்டியலின் மதிப்பு நிலையாக இருக்கும். பங்கு மாற்றகப் பிணையங்கள், மற்ற சொத்துக்கள் போல இவற்றின் சந்தை மதிப்பு மாறுதலுக்கு உள்ளாவதில்லை அரசாங்கம் பணப் புழக்கத்தில் விதிக்கும் கட்டுப்பாடுக்ள, கடன் கொள்கையில் செய்யும் மாற்றங்களுக்கு ஏற்பச் சில நேரங்களில் சிலவகை உண்டியல்களின் மதிப்பில் சிறு மாறுதல் ஏற்படுவது இயற்கையேயானாலும். அதனால் பெரும் விலை வீழ்ச்சி அல்லது பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடாது.

4. விரைவான அதிக வருவாய் (Quick and Higher Yield): மற்ற வகைக் கடன்களுக்கு வசூலிக்கப்படும் வட்டியை விடக் கழிவுத் தொகை அதிகமாகவே வசூலிக்கப்படுகின்றது. மேலும், அவற்றின் வட்டி குறிப்பிட்ட காலம் முடிந்த பிறகே வசூலிக்கப்படுகின்றது. ஆனால் உண்டியல்களைக் கழிவு செய்து பணம் வழங்கும் போது கழிவுத் தொகை போக மீதி உள்ள தொகையே வழங்கப்படுகின்றது. இந்நாளில் வணிக வங்கிகளுக்கு கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதி உண்டியல்களைக் கழிவு செய்து பணம் தருவதால் கிடைக்கும் வருமானமே ஆகும்.

5. குறுகிய காலக் கடன்கள் (Short-term Advances): உண்டியல்கள் பெரும்பாலும் மிகக் குறுகிய காலத்திற்குள் திரும்பிச் செலுத்த வேண்டியவையாகவே இருக்கும் 15 நாட்கள் முதல் 3 மாதம் வரையிலும் உள்ள உண்டியல்களே அதிகம் வழங்கப்படுகின்றன. எனவே,மிகக் குறுகிய காலத்திற்குப் பெறப்படும் வைப்புத்தொகைகளையே உண்டியல்களைக் கழிவு செய்து பணம் தரப் பயன்படுத்த இயலும் இதனால் பண முடக்கம் தவிர்க்கப்படுவதுடன் இலாபகரமாகவும் முதலீடு செய்ய இயலும்

உண்டியல்களைக் கழிவு செய்து பணம் வழங்குவது வங்கியர் வழங்கும் கடன்களுள் மிக முக்கியமான ஒன்று. ஆயினும் நம் நாட்டில் இவ்வகைக் கடன்கள் பெருமளவில் வழங்கப்படுவதில்லை. எம். எல். டேனன் தமது “ இந்தியாவில் வங்கிச் சட்டமும் நடைமுறையும்” என்ற நூலில் பின்வரும் காரணங்களைக் குறிப்பிடுகின்றார்

1. மறு கழிவு செய்து கொள்ளும் வசதிகள் இங்கு பெருகவில்லை

2. பெரும்பாலானவர்கள் ரொக்கக் கடன் அல்லது அதிகப்பற்று வசதியையே விரும்புகின்றனர்.

3. முத்திரைக் கட்டண விகிதம் அதிகமான உள்ளது.

4. பொதுப் பண்டகக் காப்பகங்கள் ( Public Warehose) பெருமளவில் வளர்ச்சியடைவில்லை

5. வங்கியின் கிளை அலுவலகங்களும் குறைவாகவே உள்ளன.

6. உண்டியல் எழுதுவதில் பின்பற்றப்படும் பழக்கங்கள், நடைமுறைகள் ஒரே மாதிரியாக

இல்லாமல் பலவாறாக மாறுபடுகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு முறை

பின்பற்றப்படுகின்றது.

**11. இணைக்கப்பட்ட சந்தை முறை**

**Interconnected Market System**

இம்முறையில் வட்டாரப் பங்கு மாற்றகங்கள் சில ஒன்றிணைக்கப் படுகின்றன். இதன் நோக்கமானது. பங்குகளுக்க அதிகளவு ரொக்கமாகும் தன்மையை அளித்தலும் தரகர் சமூகத்திற்கு ஏதுவாக வியாபார மற்றும் தீர்வு சுழற்சியை பலப்படுத்துதலுமே ஆகும்.

இப்பொதுக் கருத்தை உருவாக்கிய பெருமை இந்தியப் பங்கு மாற்றகங்களின் கூட்டிணைப்பையே சாரும். இம்முறை ஒன்றிணைக்கப்பட்ட பங்கு மாற்றகங்களின் சேவைகள் கழகம் (Integrated Stock Exchanges Services Corporation) என அழைக்கப்படுகின்றது.

## 5.5 நிதிச் சேவைகளும் பொருளாதார சுற்றுக் சூழலும்

## Financial Serices and Economic Environment

நிதிச் சேவைகளின் வளர்ச்சியும் மேம்பாடும் நாட்டில் நிலவும் பொருளாதாரச் சுற்றுச்சூழலையே பெரிதும் சார்ந்துள்ளன எனலாம். பொருளாதாரச் சுற்றுச் சூழலில் மூன்று முக்கியக் காரணிகள் உள்ளன. அவையாவன.

1. நிதிச் சேவைகளின் வளர்ச்சியும் மேம்பாடும் நாட்டில் நிலவும் பொருளாதாரச் சுற்றுச்சூழலையே பெரிதும் சார்ந்துள்ளன எனலாம். பொருளாதாரச் சுற்றுச் சூழலில் மூன்று முக்கியக் காரணிகள் உள்ளன. அவையாவன.

1. பொருளாதார முறைகள் (Economic Systems)
2. பொருளாதாரக் கொள்கைகள் (Economic Polices), மற்றும்
3. பொருளாதார நிலைமைகள் (Economic Conditions)

இச்சுற்றுச்சூழலின் பாதிப்பு மிகவும் நேரடியானதாகவும் மற்ற காரணிகளை விட நிச்சயமானதாகவும் உள்ளது. இம்மூன்று கூறுகளும் தனித்தனியாகவும் ஒன்றாகவும் ஆய்வு செய்யப்படவேண்டும்.

**1. பொருளாதார முறைகள்**

**Economic Systems**

தனியார் துறையின் பரப்பானது நாடு ஒன்றின் பொருளாதார முறையையே பெரிதும் சார்ந்துள்ளது. பொருளாதார முறை மூன்று பரந்த வகைப்பாடுகளாகப் பகுக்கப்படலாம். அவையாவன.

1. தடையற்ற வாணிபப் பொருளாதாரம் அல்லது முதலாளித்துவப் பொருளாதாரம்

2. மையம் சார்ந்த திட்டமிடப்பட்ட பொருளாதாரம் அல்லது கம்யூனிசப் பொருளாதாரம் அல்லது

சோஷலிசம், மற்றும்

3. கலப்புப் பொருளாதாரம்

முதலாளித்துவப் பொருளாதாரம் ஒரு கோடியிலும் கம்யூனிசப் பொருளாதாரம் மற்றொரு கோடியிலும் அமைந்துள்ளன. இந்த இரண்டு கோடிகளுக்கும் இடையில் உள்ள சூழலே கலப்புப் பொருளாதாரமாகும். கலப்புப் பொருளாதார முறையிலும் பரந்து பட்ட மாற்றங்கள் உள்ளன. கலப்புப்பொருளாதாரமானது பொதுத்துறை மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டும் ஒன்றிணைந்த செயல்படும் ஒரு சூழலாகும். நம்முடைய பொருளாதாரம் ஒரு கலப்புப் பொருளாதாரமே ஆகும். நமக்கு தெளிவான ஒரு தொழில் கொள்கை உள்ளது. குறிப்பிட்ட சில தொழில்கள் பொதுத்துறைக்கு என்றே தனிப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளன. இத்துறையில் தனியார் துறைகள் இயங்க அனுமதிக்கப்படுவதில்லை. அதைப் போலாவே, குறிப்பிட்ட தொழில்கள் குறிப்பாக சிறு தொழில் துறைக்கு என ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வணிக வரிசைகளுக்குள் பேரளவு நிறுவனங்களும் ஏகாதிபத்திய நிறுவனங்களும் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. தொழிலைத் தொடங்கும் தொழில் அதிபர்கள், நமது நாட்டின் தொழில் கொள்கைபற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும். தொழில் நிறுவனங்களின் அளவானது தொழில் கொள்கையின் ஷரத்துக்களின் படி அமைதல் வேண்டும்.

## 2. பொருளாதாரக் கொள்கைகள்

## Economic Policies

வணிக நிறுவனங்கள் மீது அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு மிக முக்கியமான முடிவு சார்ந்த பாதிப்புள்ளது. வணிக நிறுவனத்தின் வாழ்வு, அந்நிறுவனமானது, அரசுக்கொள்கைகளுக்கு எவ்விதமாக மறுமொழி அளிக்கிறது. மற்றும் எப்படி எதிர்ச்செயலாற்றுகிறது. என்பதைப் பொறுத்தே உள்ளது.

நமது நாட்டில், தொழில்கள் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை 1. முன்னுரிமைத்துறை, மற்றும் 2. முன்னுரிமையற்ற துறை ஆகியனவாகும். முன்னுரிமைத் துறைக்கு பல்வேறு ஊக்குவிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அரசின் ஆதரவும் நிதிநிறுவனங்களின் ஆதரவும் பேரளவில் அளிக்கப்படுகின்றது. இவ்வித ஊக்குவிப்புகள் முன்னுரிமையற்ற துறைக்கு மறுக்கப்படுகின்றன. ஆகவே, தொழில்முனைவோர் முன்னுரிமைத் துறையை நாடுவதற்குத் தூண்டப்படுவது இயற்கையே ஆகும். அதைப் போலவே, பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களும் தொழில் நிறுவனங்களும் பல்வேறு பயன்களையும் பெறலாம். முன்னுரிமைத் துறைத் தொழில் ஒன்று பின்தங்கிய பகுதியில் அமைக்கப்படும் எனில், அதனால் முன்னுரிமைத்

துறைக்குக் கிடைக்கும் பயன்களையும் ஒருங்கே பெறமுடியும். மேலும், வளர்ச்சியுற்ற பகுதிகளில் குறிப்பாக மாநகராட்சி நகரங்களின் குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்குள் அமைக்கப்படும் நிறவனங்கள் பல்வேறு கஷ்டங்களுக்கும் குறைபாடுகளுக்கும் உட்படுத்தப்படுகின்றன. வங்கிகள் கூட இவ்வகை நிறுவனங்களுக்கு கடன் அளிப்பதிலிருந்து தடுக்கப்படுகின்றன. புதிய நிறுவனம் ஒன்றினை உருவாக்கும்பொழுது தொழில் முனைவோரானவர் மேற்கண்ட அனைத்துக் காரணிகளையும் மனதில் கொள்ள வேண்டியது அவசியம்.

### 3. பொருளாதார நிலைமைகள்

### Economic Conditions

தனிப்பட்ட நிறுவனம் ஒன்றின் வளர்ச்சிக்குரிய வாய்ப்பினைப் பாதிக்கும் மற்றொரு முதன்மையான பொதுவான பொருளாதாரக் காரணியாக, நாட்டினுடையை பொருளாதாரத்தினுடைய ஆரோக்கியத்தின் ஒட்டுமொத்த நிலையும் அதன் அளவுமே விளங்குகிறது. எனலாம். நாட்டினுடைய பொருளாதாரத்தின் ஆரோக்கியம் அல்லது நிலைமை என்ற இக்காரணியானது. மேம்பாட்டின் நிலை பொருளாதார வள ஆதாரங்கள், வருமான நிலை, சொத்து மற்றும் வருமானத்தின் பகிர்ந்தளிப்பு போன்ற பல கூறுகளைக் கருத்தில் கொள்வதைக் குறிக்கிறது.

வளர்ச்சியுற்ற நாடுகளில், தனிநபர் வருமானம் மிகவும் உயர்ந்தளவினதாகவும் சந்தையின் அளவு பேரளவினதாகவும் இருக்கும் சந்தையின் அளவு பேரளவினதாக இருக்கும் பொழுது. அங்கு உற்பத்தியும் பேரளவினதாகவே இருக்கும் ஆனால், நவீன பொருளியல் வல்லுநர்களின் கருத்து யாதெனில், வளர்ச்சியுற்ற தங்களின் தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிட்ட துறைகள் ஏறத்தாழ முழுமையான வளர்ச்சியை (Saturation) அடைந்துவிட்டதாகையால், அவைகள் வெற்றி வாய்ப்பு மிக்க முதலீடுகளுக்கு ஏற்றவை அல்ல என்பதாகும். மாறாக, அவர்கள் வளர்ந்து வரும் நாடுகளில் முதலீடும் வருமானத்தின் நிலைகளும் சீராகவும் நிலையாகவும் அதிவேகமாகவும் வளர்ந்து வருகின்றதாகையால் அங்கு வணிக வாய்ப்பு வளங்கள் பிரகாசமாக உள்ளன என்றும் அதனால் அங்கு கூடுதல் முதலீடுகள் ஊக்குவிக்கப் படும் வகையில் உள்ளன என்றும் கருதுகின்றனர்.

இதுவரை நாம் ஒரு நாட்டிற்குள் மட்டும் உள்ள பொருளாதார சுற்றுச் சூழலைப் பற்றி மட்டும் ஆய்வு செய்தோம். இரஷ்யா, சீனா போன்ற மூடப்பட்ட பொருளாதார சுற்றுச் சூழலைப் பற்றி மட்டும் ஆய்வு செய்தோம். இரஷ்யா, சீனா போன்ற மூடப்பட்ட பொருளாதாரங்களை உடைய நாடுகள் கூட, தற்பொழுது தங்களின் கதவுகளைத் திறந்து விட்டுள்ளன. ஆகையால்

அவைகளும் இப்பொழுது வெளியுலக பாதிப்புகளுக்கு உட்பட்டு வருகின்றன. பல்வேறு வணிக நிறுவனங்களின் நடவடிக்கைகளானது தாம் வணிக உறவு கொண்டுள்ள பல்வேறு நாடுகளிலும் ஏற்படும் பண வீக்க உயர்வு போன்ற பல்வேறு பன்னாட்டுக் காரணிகளால் பாதிப்பு அடைகின்றன. அதைப்போலவே, பல்வேறு நாடுகளாலும் ஏற்படுத்தப்படும் வாணிபத் தடைகள் (சுங்கம் உள்ளிட்டது), உள்நாட்டு தொழில் நிறுவனங்களையும் அவற்றின் ஏற்றுமதி முயற்சிகளையும் பாதிக்கின்றன.

இன்று வளர்ச்சியுற்ற நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளில் முதலீடு செய்வதற்கு என சிறந்த முதலீட்டு வாய்ப்புகளைத் தேடி விழைகின்றன. பல்வேறு பன்னாட்டுக் கழகங்கள் அமைக்கப்பட்டும் வருகின்றன. உள்நாட்டு நிறுவனங்களின் செயல் மீது அவைகளின் பாதிப்பும் இன்றிமையாததாக உள்ளது. இப்பொழுது நமது நாட்டில் அயல்நாட்டு முதலீடு தடையேமின்றி அனுமதிக்கப்படுகின்றது. குறிப்பாக, திரு. இராஜீவ் காந்தி 1984 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு மத்திய அரசானது, நவீனமயமான மற்றும் உகந்த தொழில்நுட்பம் மற்றும் தனித்துவம் போன்றவற்றை வளர்ச்சியுற்ற நாடுகளிடமிருந்து பெறுவதற்கு என சிவப்பு கம்பளம் ஒன்றை விரித்து வரவேற்றது. ஒரு அறிக்கையின் படி 1987 ஆம் ஆண்டு ஜீன் மாதத்தில் மட்டும் ஏறத்தாழ 73 அயல்நாட்டுக் கூட்டிணைப்புகள் நமது அரசால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. அவற்றுள், 20கூட்டு இணைப்புகள் ஃபிரான்சு நாட்டுடனும், 18 ஐக்கிய நாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பின்னர் தொடர்ந்து வந்த வாஜ்பாய் அரசம் தற்பொழுது ஆட்சி புரியும் மண்மோகன்சிங் அரசும் கூட நமது நாட்டிற்குள் அந்நிய முதலீட்டை அதிகரிப்பதில் ஆர்வம் காட்டி வருவதை நமது அந்நிய மூலதன வரத்தின் அளவைக் கொண்டும் நமது நாட்டில் பின்பற்றப்படும் உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் கொள்கைகளின் மூலமும் நம்மால் உணர முடியும். ஆகவே இன்றளவும் அந்நிய மூலதனத்திற்கு ஆதரவு காட்டும் போக்கே தொடர்கிறது எனலாம். மேலும், இன்றைய அரசு நுகர்வோர் தொழில்களுக்கு உரிமம் வழங்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறது. மூலதனப் பொருட்களை உருவாக்கும் தொழல்களுக்கான ஆர்வம், நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலுக்கு உள்ள ஆர்வத்தைவிட குறைவானதாகவே காணப்படுகிறது எனலாம். இந்நடைமுறை எங்கு கொண்டு விடும் என்பது தெரியவில்லை.

## 5.6 நிதிச் சேவைகள் துறையின் பங்கேற்பாளர்கள்

## Players in Financial Swefvices Sector

நிதிச் சேவைகள் துறையில் பங்கேற்பவர்களை, அந்நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**1. மூன்று பங்கேற்பாளர்கள்**

**Three Players**

இதில் அடங்கும் நபர்கள் பின்வருமாறு: 1.நிதியை நாடுவோர் (Fund Seeker), 2.நிதி நிறுவனங்கள் (Financial Institutions), மற்றும் 3. நிதிசேமிப்பாளர் (Fund Saver).

**2. இரண்டு பங்கேற்பாளர்கள்**

**Two Players**

இதில் அடங்கும் நபர்கள் பின்வருமாறு: 1. நிதியை நாடுவோர் (Fund Seeker), மற்றும் 2. நிதி நிறுவனங்கள் (Financial Institutions).

இவ்வகைப்பாடுகளை விவரிக்கும் வரைபடங்கள் வரைபடம் 2.1 மற்றும் 2.2 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

**1. மூன்று பங்கேற்பாளர்கள் மாதிரி**

**Three Players Model**

இங்கு ஒவ்வொரு நடவடிக்கையிலும் மூன்று நபர்கள் பங்கேற்பர். அவர்கள் 1. நிதியை நாடுவோர், 2. நிதி நிறுவனங்கள், மற்றும் 3. நிதியை சேமிப்போர் ஆகியோர்களாவர்.




நிதி ஓட்டத்தைக் குறிக்கிறது

மூன்று பங்கேற்பாளர் மாதிரி

(THREE PLAYERS MODEL)

இவர்களுள் நிதி நிறுவனங்கள் இடைநிலையர் போல செயல்பட்டு நிதி நாடுவோரையும் நிதியை சேமிப்போரையும் இணைக்கின்றன. பரஸ்பர நிதிகள், வீட்டு வசதி நிதி, உண்டியல்களைக் கழிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்புகள் இதன் கீழ் வருகின்றன. இம்மாதிரியில், வங்கிகள், காப்பீட்டுக் கம்பெனிகள், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் போன்றன முதலீட்டாளர்களிடம் இருந்து நிதியைச் சேகரித்து நிதியை நாடி வரும் நபர்களுக்கு அளிக்கின்றன இதனை விளக்கும் வரைபடம், வரைபடம் 2.1-ல் தரப்பட்டுள்ளது.

**2. இரண்டு பங்கேற்பாளர்கள் மாதிரி**

**Two Players Model**

இம்மாதிரியல், நிதி நடவடிக்கைகளில் இரண்டு பங்கேற்பாளர்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். அவர்கள் 1. நிதி நிறுவனங்கள், மற்றும் 2. நிதி நாடுவோர் ஆகியோராவர். ஏனெனில், இங்கு நிதிநிறுவனங்களே நிதியை நாடுவோருக்க வேண்டிய நிதியை அளிக்க முன்வருகின்றன. ஆகவே, இவை வரிசையிலிருந்து நிதி சேமிப்பானரைத் தவிர்த்துவிட்டு, நிதி நாடுவோரிடம் நேரடியான தொடர்பை நிர்வகிக்கின்றன. இம்மாதிரியை விவரிக்கும் வரைபடம் 2.2-ல் தரப்பட்டுள்ளது




வரைபடம் 2.2 - இரண்டு பங்கேற்பாளர்கள் மாதிரி

(TWO PLAYERS MODEL)

நிதி அளிப்பதோடு மட்டுமல்லாமல் நிதிச் சேவைகள் துறையானது வேறு பல சேவைகளையும் புரிகின்றது என்பது நமக்கு மேற்கண்ட விவாதத்தில் இருந்து தெளிவாகிறது.

## 5.7 தொகுத்தறிவோம்

இந்தப்பாடப் பகுதியில் நிதி சேவைகள் என்பது வியாபார வங்கியின் முக்கியமானது ஒன்று. மேலும் அதனுடைய பணிகள், வகைகள் மற்றும் முக்கியத்துவம், ஆன்லைன் வர்த்தகம் செயல்பாடுகள் மற்றும் நீக்கல் பற்றி தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

## 5.8 கலைச் சொற்கள்

- ❖ நிதி
- ❖ சேவைகள்
- ❖ முக்கியத்துவம்
- ❖ ஆன்லைன் வர்த்தகம்
- ❖ நீக்கல்

## 5.9 வினாக்கள்

1. நிதி சேவையின் வகைகளை விவரி.
2. இந்தியாவில் நிதி சேவை எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளக்கும்.
3. நிதி சேவையின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
4. ஆன்லைன் வர்த்தகம் பற்றி எழுதுக.
5. மின்னனு வர்த்தகம் பற்றி எழுதுக.

## 5.10 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, “Financial Markets and Services”, Himalaya Publishing House Pvt. Ltd., India

2. Dr. Guruswamy S, 2009 “Financial Service”, Tata Mc Graw-hill Education, New Delhi.

3. Prasanna Chandra, 2011 “ Financial Management Theory and Practice”, Tata Mc Graw-hill Education, New Delhi.

4. Khan M Y and Jain P K, 2008, “ Financial Management Text, Problems and Cases”. Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 6 ஈடுகள் களஞ்சியம் அமைப்பு

# SECURITIES DEPOSITORY SYSTEM

6.1 அறிமுகம்

6.2 களஞ்சியத்தின் தேவை

6.3 இந்திய தேசியப் பங்கு மாற்றகம்லிட்

6.4 தேசியப் பங்கு மாற்றகத்தின் நோக்கங்கள்

6.5 உறுப்பினர் நிலை

6.6 வியாபார உறுப்பினர் நிலைக்கான தகுதி அளவைகள்

6.7 இந்தியப் பங்குக் கோவைகள் பற்றுதல் கழகம் லிட்

6.8 இந்தியப் பங்குக் கோவைகள் பற்றுதல் கழகத்தின் பணிகள்

6.9 தேசிய ஈடுகள் களஞ்சியம் லிட்

6.10 களஞ்சியத்தின் நன்மைகள்

6.11 களஞ்சியப்பங்கேற்பாளர்கள்

6.12 தொகுத்தறிவோம்

6.13 கலைச்சொற்கள்

6.14 வினாக்கள்

6.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 6.1 அறிமுகம்

இந்திய ஈடுகள் களஞ்சியம் லிமிட்டெட் என்ற இந்த அமைப்பு இந்திய தேசிய பங்கு மாற்றகம் லிட். இந்தியப் பொறுப்புரிமைக் கழகம் மற்றும் இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி ஆகியவற்றால் தோற்றுவிக்கப்பட்டது. இது தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம், சாதாரணப் பங்கு மற்றும் கடன் சந்தையில், வணிகம் செய்யப்படும் கோவைகளுக்கு மின்னணுக்களஞ்சிய வசதியை (Electronic Depository Facility) அளிப்பதாகும்.

ஈடுகளில்லாத வணிகத்தையும் தீர்வையும் மேற்கொள்ளும் நோக்கோடு இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் நிறுவனம் இதுவேயாகம்.இது 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் தேதி அன்று ஈடுகள் மாற்றகச் சபையில் பதிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்டது. இங்கு ஈடுகளில்லாமல் தீர்வுகள் மேற்கொள்ளப்படுவதால், சான்றிதழ்களை அளித்து தீர்வுகள் மேற்கொள்ளப்படும் பொழுது சாதாரணமாக ஏற்படும் பிரச்சகைளான, கவனக்குறைவாக கையாளுவதால் பங்குச் சான்றிதழ்கள் கிழிந்து போதல், தொலைந்து போதல், போன்றவைகளை இது தவிர்க்கிறது சான்றிதழ்களில் மோசடி நடப்பதும் தவிர்க்கப்படுகிறது. வணிகத் தீர்வுகளும் மிக விரைவாக மேற்கொள்ளப் படுகின்றன்.

## 6.2 களஞ்சியத்தின் தேவை (Need for a Depository)

இங்கு பங்குதாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, களஞ்சியப் பங்கேற்பாளர்களின் (Depository Participants) மூலமாக இவர்களின் ஈடுகள் மின்னணு வடிவத்தில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. களஞ்சியப் பங்கேற்பாளர் என்பவர் களஞ்சியத்தின் சார்பில் பங்கு மாற்றகங்களுக்கு வெளியேயும் உள்ளேயும் பங்குகளின் வணிகத்தில் ஈடுபடும் ஓர் பிரதிநிதி (முகவர்) ஆவார். இந்திய கோப்புகள் பொறுப்புக் கழகம் லிட்., சிட்டி வங்கியின் பாதுகாப்புச் சேவைகள் போன்றவை இதில் பங்கேற்பாளாராகப் பணியாற்றுபவர்களுள் சிலராகும் களஞ்சியத்தை நாம் ஈடுகளின் வங்கி என்று கூறலாம். இதிலிருந்து சேவைகளைப் பெற விரும்பும் முதலீட்டாளர்கள், களஞ்சியப் பங்கேற்பாளரின் மூலம் களஞ்சியத்தில் ஓர் கணக்கைத் துவக்க வேண்டும். களஞ்சியம், தம் பொறுப்பில் பாதுகாப்பாக இடப்பட்ட ஈடுகளின் உரிமையை சட்டபூர்வமாக மாற்றித் தரவல்லதாகும். இதன் முதன்மை நோக்கம் ஈடுகளின் உடைமை, வணிகம் மற்றும் மாற்றம் தொடர்பான காகிதப் பணியை பெருமளவு குறைப்பதே ஆகும்

## 6.3 இந்திய தேசியப் பங்கு மாற்றகம் லிட்.

## National Stock Exchange of India Limited (NSEIL)

இந்திய தேசியப் பங்கு மாற்றகம் லிட், மும்பையில், தனது பங்கு மாற்றக இயக்கங்களை 3-11-94 – ல் தொடங்கியது. நடுநிலைக் கம்பெனிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். பங்கு மாற்றகங்களின் அப்போதைய முறை திருப்திகரமாக இல்லாமலும், முதலீட்டாளர்களின் தேவை அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்மாற்றகம் ஹைபவர்டு பேர்வானி குழுவின் பரிந்துரைகளின்படி அமைக்கப்பட்டது. கடன் சந்தை அதாவது கடன் பத்திரங்களின் சந்தை முற்றிலும் ஒதுக்கப்பட்டும், சந்தைகளில் ஊகவாணிபமும் மோசடியும் அதிகரித்த வண்ணமுமே இருந்தால், இவ்வித மாற்றகத்தை அமைக்க இக்குழு பரிந்துரைந்து. இது புது மும்பையில் புதிய தேசியப் பங்கு மாற்றகத்தையும், புது மும்பை பங்கு மாற்றக நடவடிக்கைகளின் அடிப்படையில் தேசியப் பங்கு முறையையும் அமைக்க பரிந்துரைத்தது.

புது சந்தை முறை மூன்று சக்கர அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதில் உள்ள கட்டமைப்புகளாவன:

1. மும்பை, டெல்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் அகமதாபாத்தில் உள்ள 5 முக்கியமான மாற்றகங்களைக் கொண்ட தலைமை பங்கு மாற்றகங்கள்.
2. நாட்டிலுள்ள ஏனைய மாற்றகங்களைக் கொண்ட வட்டாரப் பங்கு மாற்றகங்கள்.
3. தலைமை அல்லது வட்டாரப் பங்கு மாற்றகம் ஒன்றால் அளிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் கூடுதல் வியாபாரத் தளங்கள்.

## 6.4 தேசியப் பங்கு மாற்றகத்தின் நோக்கங்கள்

## Objectives of NSEIL

தேசியப் பங்கு மாற்றகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

1. சாதாரணப் பங்குகள், கடன் பத்திரங்கள் மற்றும் இரண்டும் கலந்த கலப்பின வகை, ஈடுகள் ஆகியவற்றிற்கு நாடு தழுவிய ஓர் வியாபார வசதியை அமைத்தல்.
2. உகந்த ஓர் தகவல் தொடர்பு வலையமைவின் (Communication Network) மூலம் நாட்டிலுள்ள அனைத்து முதலீட்டாளர்களுக்கும் சரிசமமான அணுகுமுறையை (Access) உறுதி செய்தல்.
3. மின்னணு வியாபார முறையைப் பயன்படுத்தி முதலீட்டாளர்களுக்கு ஓர் நியாயமான, ஆற்றல்மிக்க மற்றும் வெளிப்படையான ஈடுகளின் சந்தையை அளித்தல்.
4. குறுகிய தீர்வை சுழற்சிகள் ( Shorter Settlement Cycles) மற்றும் புத்தகப் பதிவுத் தீர்வை முறை போன்றவற்றை எளிதாக்குதல்.
5. ஈடுகள் சந்தைகளின் தற்போதைய பன்னாடுசார்ந்த தர அளவுகளைப் பூர்த்தி செய்தல்.

தேசியப் பங்கு மாற்றகத்தில், கணிப்பொறியின் மூலம் முற்றிலும் தானாக இயங்கும் வியாபார முறை பின்பற்றப்படுவதால், நாடு முழுவதிலும் எந்த மூலையில் இருந்து வேண்டுமானாலும் உறுப்பினர்கள், ஒருவர் மற்றவருடன் எளிதாகவும் ஆற்றலோடும் ஒரே சமயத்தில் வணிகத்தில் ஈடுபட முடிகிறது.

இயக்குநர் அவை ஒன்று இம்மாற்றகத்தை நிர்வகித்து வருகிறது. அதிகாரிகள் குழுவின் அவையானது சந்தை இயக்கங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்கின்றது. இக்குழுவில், வணிக ஊறுப்பினர்கள், பொது மற்றும் மேலாண்மை துறையின் உறுப்பினர்கள் பிரதிநிதிகளாக இருப்பர். மேலும், சிறந்த சந்தை நடைமுறைகள், தீர்வை நடைமுறைகள், அபாயத்தை தடுத்து நிறுத்தும் முறை போன்ற பகுதிகளில் தேவையான ஆலோசனைகளை வழங்கும் வகையில் இம் மாற்றகம் பல்வேறு குழுக்களை இயக்கி வருகிறது. இக்குழுவில் தொழலதிபர்கள், வியாபார உறுப்பினர்கள், அலுவல்சார்ந்த தொழிலதிபர்கள் மற்றும் மாற்றகத்தின் பணியாளர்கள் போன்றோர் தலைமை வகிப்பார்கள். மாற்றகத்தின் அன்றாட நிர்வாக மேலாண்மை இயக்குநர் வசம் உள்ளது. இதற்கென இவருக்கு உதவி புரிய அலுவல்சார்ந்த பணியாளர்களின் குழு ஒன்று இயங்கி வருகிறது.

## 6.5 உறுப்பினர் நிலை

## Membership

இம்மாற்றகத்தில் உறுப்பினராக விரும்பும் நபர் இரண்டு கட்ட நடைமுறையை சந்திக்க வேண்டும். அதாவது மாற்றகம் நடத்தும் தேர்வு

ஒன்றை எழுதி அதில் தெரிவு செய்யப்பட்டு நேரடிப் பேட்டிக்கு அழைக்கப்பட்டு அதிலும் தேர்வு செய்யப்படுபவரே இதில் உறுப்பினராக முடியும். இவர்கள் பல்வேறு தொழில்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவமிக்க நபர்களைக் கொண்ட ஓர் குழுவினால் பேட்டி காணப்படுவர். இக்குழுவானது இம்மாற்றகத்தின் உறுப்பினராகச் செயல்படும் ஆற்றல் விண்ணப்பித்துள்ள நபருக்கு உள்ளதா எனச் சோதித்துப் பார்க்கும். இது மொத்தக் கடன் சந்தைப் பகுதி (Wholesale Debt Market Segment) மற்றும் மூலதனச் சந்தைப் பகுதிக்கென உறுப்பினர்களை தனித்தனியே தேர்ந்தெடுத்து அனுமதிக்கிறது.

## 6.6 வியாபார உறுப்பினர் நிலைக்கான தகுதி அளவைகள்

## Eligibiligy Criterial for Trading Membership

**1. மொத்தக் கடன் சந்தைப் பகுதியில் உறுப்பினராகத் தேவையான தகுதி அளவைகள் தொடர்பான சிறப்பியல்புகள் பின்வருமாறு:**

1. கூட்டுரு கம்பெனிகள், துணை வங்கிகள் போன்ற நிறுவனங்கள் போன்றவையே இதில் உறுப்பினராக முடியும்.
2. இதில் முழு நேர இயக்குநர்களாகப் பணிபுரிய வேண்டுமெனில், அவர்களுக்கு வங்கியியல் அல்லது நிதிசார்ந்த சேவைகள் அல்லது கருவூலம் (Treasury) தொடர்பான ஏதேனும் நடவடிக்கையில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரரிடம் குறைந்தபட்சம் ரூ.2 கோடி நிகர மதிப்பு இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் முற்றிலும் ஈடுகளின் தொழிலிலேயே ஈடுபட்டிருத்தல் வேண்டும். இவர் ஏதேனும் நிதி அடிப்டையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் கூடாது.

**2. மூலதனச் சந்தைப் பகுதியில் உறுப்பினர் ஆவதற்குரிய தகுதி அளவைகள் பின்வருமாறு:**

1. தனிநபர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனம், கூட்டுரு, கம்பெனிகள் மற்றும் ஈடுகள் ஒப்பந்த (ஒழுங்குமுறை) சட்டம், 1957 ஆல் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் நபர் மட்டுமே இதில் உறுப்பினராக முடியும்.
2. விண்ணப்பதாரர் முற்றிலும் ஈடுகளின் தொழிலிலேயே ஈடுபட்டிருத்தல் வேண்டும். இவர் ஏதேனும் நிதி அடிப்படையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் கூடாது.
3. பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நிகர மதிப்புத் தேவைகள் பின்வருமாறு:
4. 1. விண்ணப்பதாரர் கழகமாக இருந்தால், குறைந்தபட்சம் 2 இயக்குநர்கள்.

   2. விண்ணப்பதாரர் கூட்டு வணிக நிறுவனமாக இருந்தால், குறைந்த பட்சம் இரண்டு பாகஸ்தாகள், மற்றும்

3. விண்ணப்பதாரர் தனிநபர் அல்லது தனி ஆள் வணிக நிறுவனமாக இருந்தால், தனிநபர் ஒருவர் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

1. இவர்கள் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
2. தரகர், துணைத் தரகர், அங்கீகாரம் பெற்ற உதவியாளர் போன்ற ஏதேனும் நிலையில் ஈடுகளைக் கையாளுதலில் 2 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

கழக விண்ணப்பதாரர் என்ற நிலையில், அதன் இரண்டு முன் அனுபவம் வாய்ந்த இயக்குநரிடம் அக்கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் குறைந்த பட்சம் 5 சதவீதமாவது இருத்தல் வேண்டும்.

தற்பொழுது மொத்த கடன் சந்தைப் பகுதியில் மொத்தம் 113 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் கழக உறுப்பினர்களாக உள்ளனர். மாற்றகத்தின் உறுப்பினர்களுள் ஏறத்தாழ 86% உறுப்பினர்கள் கழக உறுப்பினர்களாகவும் மீதமுள்ளவர்கள் தனிநபர்களாகவும், நிறுவனங்களாகவும் உள்ளனர்.

**மூன்றாவது சந்தை**

**Third Market**

மூன்றாவது சந்தை இந்திய உடனடி மாற்றத்துடன் பல விதத்தில் பொருந்தி உள்ளது. இவற்றிற்கு இடையில் ஒரே ஒரு வேறுபாடு உள்ளது எனலாம். அது என்னவென்றால், மூன்றாவது சந்தையில், வணிகமானது மாற்றகத்திற்கு வெளியில் இடப்பட்ட ஈடுகளில் மட்டுமே நடக்கிறது என்பதேயாகும். ஆகவே, இது பட்டியலிடப்பட்ட ஈடுகளுக்கான உடனடி வணிகமாகும். மூன்றாவது சந்தையில், விலைகள் பேரம் பேசப்படுகின்றன. வணிகர்களுக்கு ஒரு சந்தையை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பும் இருக்காது.

ஆகவே, முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலைச் சந்தைகளில் ஈடுகளை மிதக்கவிடுவதன் முதன்மை நோக்கமானது புதிய நிறுவனம் ஒன்றை அமைக்க அல்லது பழைய நிறுவனம் ஒன்றை விரிவாக்க என பணத்தைப் பெற விரும்பும் தொழில் முனைவோருக்கு சேமிப்பாளர்களிடம் இருந்து வள ஆதாரங்களின் மாற்றத்தை எளிதாக்குதலாகும்.

## 6.7 இந்தியப் பங்குக் கோவைகள் பற்றுதல் கழகம் லிட்.

## Stock Holding Corporation of India Ltd.(SHCIL)

இந்தியாவில், பங்குக் கோவைகள் மற்றும் மூலதனச் சந்தைகளின் ஆற்றலை அதிகப்படுத்தும் நோக்கோடு சமீபகாலத்தில் அமைக்கப்பட்ட பல்வேறு முக்கியமான நிறுவனங்களுள் இந்திய பங்குக் கோவைகள் பற்றுதல் கழகம் லிமிட்டெட்டும் (SHCIL) ஒன்றாகும். நிதி நிறுவனங்களுக்கு இடையிலும், நிதி நிறுவனங்களுக்கும் அவற்றின் முதலீட்டாளர்களுக்கும் இடையிலும், பங்கு மாற்றகங்களின்

உறுப்பினா்களுக்கு இடையிலும் விரைவில் பங்குகளை மாற்றி அளிப்பதே இந்நிறுவனம் அமைக்கப்பட்டதன் முதன்மை நோக்கமாகும். பின்னா் இதன் பணிகள் வங்கிகள், பரஸ்பர நிதிகள் போன்றவற்றிற்கும் நீட்டிக்கப்பட்டன. தற்பொழுது இது நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றின் ஈடுகளைக் கையாளுகின்றது.

**அமைப்புசாா்ந்த கட்டமைப்பு**

**Organisational Structure**

இந்திய பங்குக் கோவைகள் பற்றுதல் கழகம் லிட் 1987 ஆம் ஆண்டு அக்டோபா் மாதம் இந்தியத் தொழில் வளா்ச்சி வங்கி (IDBI), இந்தியத் தொழில் நிதிக் கழகம் (IFCI), இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (ICICI), ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC), பொதுக் காப்பீட்டுக் கழகம் (GIC), இந்தியப் பொறுப்புரிமைக் கழகம் (ருவுஐ) மற்றும் இந்தியத் தொழில் மறுகட்டமைப்பு வங்கி (Industrial Reconstruction Bank of India) போன்ற ஏழு அனைத்திந்திய நிதி நிறுவனங்களால் அமைக்கப்பட்டது. இதற்கு இந்த ஏழு நிதி நிறுவனங்களால் தொடக்கத்தில் அளிக்கப்பட்ட மூலதனம் ரூ.7 கோடிகளாகும். இது நிா்வாக அவையால் (Board) நிரிவகிக்கப்படுகிறது. இதன் அன்றாட மேலாண்மை நடவடிக்கைகளின் பொறுப்பை முழுநேரத் தலைவா் (President) ஒருவா் ஏற்கிறாா். இதன் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ளது. மேலும், பங்கு மாற்றகம் இயங்கி வரும் முக்கியமான நகரங்களிலும் இது இதன் கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இது முக்கியப் பங்கு மாற்றகங்களின் உறுப்பினராகவும் விளங்குகிறது. இது வணிக நோக்கிலேயே இயங்கி வருகிறது. ஆகவே, இத இதுனு் பல்வேறு பணிகளுக்கும் நியாயமான கட்டணங்களை வசூலித்துப் பெறுகிறது.

## 6.8 இந்தியப் பங்குக் கோவைகள் பற்றுதல் கழகத்தின் பணிகள்

## Functions of SHCIL

இக்கழகம் தம்மைத் தோற்றுவித்த நிறுவனங்களின் ஈடுகளைத் தம் பொறுப்பில் வைத்து வருகிறது. இப்பங்குகளை ஒருவா் மற்றொருவரிடம் மாற்றி அக்கும் பொழுது இது பழையபடி பங்குகளை தம் பொறுப்பிலேயே வைத்துக் கொண்டு, மாற்றப்பட்ட ஈடுகள் தொடா்பான உரிய இரசீதுகளை மட்டுமே எழுதி அளிக்கின்றது. சுருங்கக் கூறின், இறுதியாக. இது ஈடுகளின் வங்கி போலவே செயல்படுகிறது. இதன் மூலம் இது தேவையற்ற காகிதப் பணிகளையும் தவிா்க்கிறது. தற்பொழுது உள்ள மாற்ற முறையின் கீழ், பங்குகளை மாற்றம் செய்வதற்கு கணிசமான காலதாமதம் ஆகின்றது. அக்காலதாமதம் இம்முறையில் தவிா்க்கப்படுகிறது. இது இதனை

தோற்றுவித்த ஏழு நிதி நிறுவனங்களுக்கும் பல்வேறு பணிகளையும் ஆற்றி வருகின்றது. இவற்றள் அடங்குவன

1. தீர்வகச் சேவைகள் (Clearing Services) : இது முக்கியமான பங்கு மாற்றகங்களின் தீர்வங்களில் ஓர் உறுப்பினராக உள்ளது. இது பங்கு மாற்றகத்தில் தீர்விற்குப் பின்னர், நிறுவனங்களின் சார்வில் ஈடுகளைப் பெற்றுக் கொள்ளவும் வழங்கவும் செய்கிறது. இது ஈடுகளைத் தமது பொறுப்பில் வைத்துக் கொண்டு மாற்று முறை ஆவணங்களை பங்குத் துறைகளுக்கு அனுப்புகிறது. இது ஈடுகள் நேரத்தொடு காலதாமதம் ஏதுமின்றி நிதி நிறுவனங்களின் பெயர்களுக்கு மாற்றப்படுவதை உறுதி செய்கிறது.

2. பொறுப்புச் சேவைகள் (Depository Services):இது தம்மிடமுள்ள ஈடுகளுக்கு பொறுப்பாளர் போல இயங்கி பொறுப்பாளர் என்ற நிலையில் பல்வேறு சேவைகளையும் ஆற்றுகின்றது. பங்காதாய ஆணைகளையும். வட்டிக் காசோலைகளையும் சேகரித்தல், பங்குகளை சேர்த்தல் அல்லது பிரித்தலுக்கு தேவையான உதவிகளைச் செய்தல், கடன் பத்திரங்கள் மற்றும் இதர கருவிகளுக்கு உள்ள இலவசப் பங்குகள், உரிமை வெளியீடுகள் மற்றும் அது போன்ற பிறசலுகைகளைப் பெறுதல் போன்ற சேவைகள் இதில் அடங்கும்.

3. ஆதாரச் சேவைகள் (Support Services): இது நிறுவனங்களுக்குக் கிடைக்கவேண்டியவ வட்டி/பங்காதாயங்களைத் தொடர்ந்து கண்காணித்து அவை கம்பெனிகளிடம் இருந்து பெறப்பட்டு காலதாமதம் ஏதுமின்றி வங்கியில் உரிய நிறுவனங்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு விட்டனவா என்பதைப் பார்த்து உறுதி செய்ய வேண்டிய ஏற்பாடுகளைக் செய்கிறது.

4. மேலாண்மைத் தகவல் முறை (management Information System): இந்நிறுவனம், தம்மைத் தோற்றுவித்த நிதி நிறுவனங்களுக்கு வணிகக் கண்காணிப்பு முறை, பாதுகாப்பு, கம்பெனிக்கு நிலுவையாக உள்ள வட்டி, பங்காதாயம் தொடர்பான விபரங்கள் மற்றும் மீட்பு /மாற்றம் / உரிமைகள் தொடர்பான தகவல்கள் போன்ற பல மேலாண்மை தகவல்களையும் அளிக்கிறது.

5. அபிவிருத்திச் சேவைகள் (Developmental Services): இதில், இது தமது சேவைகளை பூகோள அடிப்படையில் பரவலாக்குதல்/புதிய வாடிக்கைக்காரர் களுக்கு தமது சேவைகளை நீடித்தல், மற்றும் சந்தைத் தகவலை ஆய்வு செய்தல் மற்றும் பரப்புதல் போன்ற சேவைகளை ஆற்றுகின்றது. இவற்றை இது தமது நடவடிக்கைகளை முற்றிலும் தானியங்கி அடிப்படையில் கையாளுவதன் மூலம் திறமையாக ஆற்றுகின்றது.

## 6.9 தேசிய ஈடுகள் களஞ்சியம் லிட்

## National Securities Depository Limited (NSDL)

இந்திய ஈடுகள் களஞ்சியம் லிமிட்டெட் என்ற இந்த அமைப்பு இந்திய தேசிய பங்கு மாற்றகம் லிட், இந்தியா பொறுப்புரிமைக் கழகம் மற்றும் இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி ஆகியவற்றால் தோற்றுவிக்கப்பட்டது. இது தோற்றுவிக்கப் பட்டதன் நோக்கம், சாதாரணப் பங்கு மற்றும் கடன் சந்தையில், வணிகம் செய்யப்படும் கோவைகளுக்கு மினனணுக்களஞ்சிய வசதியை (Electronic Depository Facility) அளிப்பதாகும்.

ஈடுகளில்லாத வணிகத்தையும் தீர்வையும் மேற்கொள்ளும் நோக்கோடு இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் நிறுவனம் இதுவேயாகும். இது 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் தேதி அன்று செபியில் பதிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்டது. இங்கு ஈடுகளில்லாமல் தீர்வுகள் மேற்கொள்ளப்படுவதால், சான்றிதழ்களை அளித்து தீர்வுகள் மேற்கொள்ளப்படும் பொழுது சாதாரணமாக ஏற்படும் பிரச்சனைகளான கவனக்குறைவாக கையாளுவதால், பங்குச் சான்றிதழ்கள் கிழிந்து போதல், தொலைந்து போதல் போன்றவைகளை இது தவிர்க்கிறது. சான்றிதழ்களில் மோசடி நடப்பதும் தவிர்க்கப்படுகிறது. வணிகத் தீர்வுகளும் மிக விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன.

இங்கு பங்குதாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க களஞ்சியப் பங்கேற்பாளர்களின் (Depository Participants) மூலமாக இவர்களின் ஈடுகள் மின்னணு வடிவத்தில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. களஞ்சியப் பங்கேற்பாளர் என்பவர் கள ஞ்சியத்தின் சார்பில் பங்கு மாற்றகங்களுக்கு வெளியேயும் உள்ளேயும் பங்குகளின் வணிகத்தில் ஈடுபடும் ஓர் பிரதிநிதி (முகவர்) ஆவார். இந்திய அலகுகள் பொறுப்புக் கழகம் லிட், சிட்டி வங்கியின் பாதுகாப்புச் சேவைகள் போன்றவை இதில் பங்கேற்பாளராகப் பணியாற்றுபவர்களுள் சிலராகும். களஞ்சியத்தை நாம் ஈடுகளின் வங்கி என்று கூறலாம். இதிலிருந்து சேவைகளைப் பெற விரும்பும் முதலீட்டாளர்கள், களஞ்சியப் பங்கேற்பாளரின் மூலம் களஞ்சியத்தில் ஓர் கணக்கைத் துவக்க வேண்டும். களஞ்சியம், தம் பொறுப்பில் பாதுகாப்பாக இடப்பட்ட ஈடுகளின் உரிமையை சட்டபூர்வமாக மாற்றித் தரவல்லதாகும். இதன் முதன்மை நோக்கம் ஈடுகளின் உடைமை, வணிகம் மற்றும் மாற்றம் தொடர்பான காகிதப் பணியை பெருமளவு குறைப்பதே ஆகும்.

களஞ்சியத்தால் முன் வைக்கப்பட்ட வசதிகள்:

1. களஞ்சியத்தின் பொறுப்பில் ஈடுகளை ஒப்படைத்தல் மற்றும் அவ்வாறு ஒப்படைத்த ஈடுகளை வேண்டும் பொழுது திரும்பும் பெற்றுக் கொள்தல் (Dematerialisation and Rematerialisation).

2. முதலீட்டாளரின் பங்குகளை மின்னணு முறையில் நிர்வகித்தல்.
3. மாற்றகங்களில் வணிகம் செய்யப்படும் ஈடுகளின் தீர்வுகளை செயல்படுத்துதல்.
4. பங்கு மாற்றகங்களில் செய்யப்படாத தீர்வுகளை மேற்கொள்தல்.

## 6.10 களஞ்சியத்தின் நன்மைகள்

## Advantages of the Depository

களஞ்சியத்தின் பொறுப்பில் தம்முடைய ஈடுகளை ஒப்படைக்கும் முதலீட்டாளர்கள், பங்குச் சான்றிதழ்கள் தொலைந்து போய்விடுமோ, நெருப்பில் எரிந்து விடுமோ என்றெல்லாம் எண்ணிக் கவலைப்பட வேண்டாம்

களஞ்சியப் பங்கேற்பாளர்களிடம் கணக்கு ஒன்றைத் துவக்குவது. வங்கிக் கணக்கு ஒன்றைத் துவக்குவதை ஒத்ததாகவே காணப்படுகின்றத. முதலீட்டாளர்கள்,தேசிய ஈடுகள் களஞ்சியம் லிமிடெட்டிலிருந்து களஞ்சியப் பங்கேற்பாளர்களின் பட்டியல் ஒன்றைக் கேட்டுப் பெறலாம். பின் அவற்றுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, கணக்கைத் துவக்கிக்கொள்ளலாம். இதில் கணக்கைக் துவக்கிய முதலீட்டாளர்களுக்கு, அவர்களில் களஞ்சியப் பங்கேற்பாளர் ஓர் செல்லேட்டை அளிப்பார். தமது பொறுப்பிலுள்ள முதலீட்டாளருடைய பங்குகளின் பட்டியலையும் இவர் அவ்வப்பொழுது அனுப்பி வைப்பார். தேவையெனில், பங்குதாரர்கள் அதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தியும் தமது பங்குகளின் பட்டியலைக் கேட்டும் பெற அனுமதிக்கப்பட்டு உள்ளார்கள்

பங்குதாரர்கள் தம் பொறுப்பில் விடும் பங்குகளுக்கு குறைந்தபட்ச இருப்பு (Minimum Balance) என எதையும் பங்கேற்பாளர்கள் குறிப்பிடுவதில்லை. உண்மையில் சொல்லப்போனால், பங்குதாரர்களின் கணக்கிருப்பு பூஜ்யமாக இருந்தால் கூட, அதுவும் அனுமதிக்கப்படுகிறது. ஆயினும், களஞ்சியப் பங்கேற்பாளர்கள் விரும்பினால் இதற்கென ஓர் குறைந்தபட்ச இருப்பையும் நிர்ணயித்து, அதிலிருந்து குறையும்பொழுது அதற்கொரு கட்டணத்தையும் விதிக்கலாம்.

## 6.11 களஞ்சியப் பங்கேற்பாளர்கள்

## Dispository Participants

இவர்கள் தரகர்களை ஒத்தவர்களாவர். இவர்கள் களஞ்சிய முறையின் பிரதிநிதியாவர். இவர்கள் பங்குத் தரகர்களைப் போன்று பங்கு மாற்றகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் தமது வாடிக்கையாளர்களின் சார்பில் ஈடுகளின் வணிகத்தில் ஈடுபடுகின்றனர். இவர்கள் ஈடுகளின் கணக்கிருப்புகளை நிர்வகித்து, அதன் உரிமையாளர்களிடம் கணக்கிருப்பின் நிலையை அவ்வப்பொழுது அறிவிப்பார்கள். செபியின் வழிகாட்டிச் சரத்துக்களின்படி நிதி நிறுவனங்கள், வங்கிகள்,

பாதுகாவலர்கள் (Custodians), பங்குத் தரகர்கள் போன்றோர் இதில் பங்கேற்பாளர்களாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் கணக்கைத் துவக்க, முதலீட்டாளர்களுக்கு எந்தக் கட்டுப்பாடோ அல்லது வரையறைகளோ விதிக்கப்படவில்லை. வங்கியில் சேமிப்புக் கணக்கு அல்லது நடப்புக் கணக்கு ஒன்றைத் திறப்பது போல, ஒருவர் விரும்பினால் ஒன்றுக்கு மேற்பட்ட பங்கேற்பாளரிடம் வேண்டுமானாலும் தமது கணக்கைத் திறந்து கொள்ளலாம்.

தேசிய ஈடுகள் களஞ்சியம் லிமிட்டெட்டின் முதல் பங்கேற்பாளர்களுள், இந்திய பங்குக் கோவைகள் பற்றுதல் கழகம் லிட், (SHCIL), உலகப் பொறுப்பு உரிமை வங்கி (Global Trust Bank), சிட்டி வங்கியின் பாதுகாப்புச் சேவைகள் (City Bank Custodial Services), இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI), இந்திய மாநில வங்கி (SBI), ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி (Standard Chartered Bank) போன்றன குறிப்பிடத்தக்கனவாகும்.

## 6.12 தொகுத்தறிவோம்

இந்தியாவில் சேமிப்பு முறைகள் செயல்படுவதால் பன்னாட்டு சந்தையில் நிதிநிலைமை நன்றாக செயல்பட்டு வருகிறது. இந்த பாடப்பகுதியில் வியாபார சேமிப்பு இந்தியாவின் சேமிப்பு முறைகள் விதிமுறைகள் 1996 நன்மைகள் மற்றும் தீமைகள் தேதிய பத்திரங்கள் சேமிப்பு கம்பெனி மற்றும் மத்திய சேமிப்பு சேவை வரையறுக்கப்பட்ட கம்பெனி பற்றியும் இந்த பாடப்பகுதி விவரிக்கப்பட்டுள்ளது.

## 6.13 கலைச் சொற்கள்

- சேமிப்பு
- முறைகள்
- பங்களிப்புளார்
- நன்மைகள்
- கம்பெனிகள்

## 6.14 வினாக்கள்

1. இந்திய சேமிப்பு முறைகள் பற்றி எழுதுக.
2. இந்திய சேமிப்பு பணிகள் பற்றி எழுதுக.
3. இந்திய ஈடுகள் மாற்றகச் சபை (SEBI) ஒழுங்காற்றுக்சட்டம் 1996 பற்றி எழுதுக.
4. இந்திய சேமிப்பு முறையின் நன்மைகள் பற்றி எழுதுக.
5. தேசிய பத்திரங்கள் சேமிப்பு கம்பெனி பற்றி எழுதுக.

## 6.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India
2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.
3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.
4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 7 பரஸ்பர நிதிகள்

# MUTUAL FUNDS

7.1 அறிமுகம்
7.2 பரஸ்பர நிதிகளின் நோக்கம்
7.3 பரஸ்பர நிதிகளின் தோற்றமும், திட்டங்களும்
7.4 பரஸ்பர நிதிகளின் வகைகள்
7.5 பரஸ்பர நிதிகளின் நன்மைகள்
7.6 பரஸ்பர நிதிகளை ஒழுங்குபடுத்துதல் - செபியின் வழிகாட்டிச் சரத்துக்கள்
7.7 பரஸ்பர நிதித் திட்டங்களுக்கான வரிப் பயன்கள்
7.8 பரஸ்பர நிதியின் அமைப்புசார்ந்த கட்டமைப்பு
7.9 பரஸ்பர நிதிகளின் தற்போதைய நிலை
7.10 பரஸ்பர நிதிகளின் குறைபாடுகள்
7.11 தொகுத்தறிவோம்
7.12 கலைச் சொற்கள்
7.13 வினாக்கள்
7.14 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 7.1 அறிமுகம்

### Introduction

சிறிய முதலீட்டாளர்கள் மற்றும் புதிதாக முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கு மூலதனச் சந்தை நடவடிக்கைகளைப் பற்றிய தெளிவான அறிவு இருப்பதில்லை. அவற்றை நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்வதற்கு வேண்டிய அளவு, கால அவகாசமும் அவர்களுக்கு இருக்காது. மேலும். இவர்கள் சிறிய அளவுவே முதலீடு செய்வார்கள் என்பதால் பங்குத் தரகர்களும் இவர்களை வரவேற்பதில்லை. மூலதனக் கருவிகளில் முதலீடு செய்ய விரும்புபவர்கள், அவற்றில் முதலீடு செய்யும்பொழுது, எந்த ஈட்டில் முதலீடு செய்யலாம். எப்பொழுது முதலீடு செய்யலாம். எந்தத் தரகர் மூலம் வாங்கலாம். என்பதை எல்லாம் முடிவு செய்ய வேண்டும் இவ்வாறு முடிவு செய்து முதலீடு செய்தபின் அந்த ஈட்டின் கம்பெனித் தகவல்களை அதாவது இலவச வெளியீடு. உரிமை வெளியீடு போன்ற அறிவிப்புகள் இவ்வித ஈடுகள் தொடர்பாக கம்பெனியால் செய்யப்பட்டுள்ளனவா, பங்காதாய வீதம் அறிவிக்கப்பட்டுவிட்டதா மற்றும் உறுப்பினர் பதிவேட்டை மூடுதல் தொடர்பான அறிவிப்பு எதுவும் கம்பெனியால் செய்யப்பட்டுள்ளதா என்பதை முதலீட்டாளர் கூர்ந்து கவனித்து வரவேண்டும். விலை ஏற்ற இறக்கங்களை அறிந்து கொள்வதற்காக, அந்த ஈடுகளின் சந்தையையும் கவனமாகப் பார்த்து வரவேண்டும். இவற்றை எல்லாம் மேற்கொள்வது என்பது சிறிய மற்றும் புதிய முதலீட்டாளர்களுக்கு மிகவும் சிக்கலான செயலாகும். இதன் விளைவு, இவர்கள் இரண்டாம் நிலைச் சந்தையை விட்டு விலகி நிற்கு வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. ஆனால், பரஸ்பர நிதிகளின் அறிமுகம் தற்பொழுது இந்நிலையை முற்றிலும் மாற்றிவிட்டது. ஏனெனில், நல்ல ஈடுகளைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்தல் பின் அவற்றின் சந்தை மற்றும் கம்பெனி நிலவரங்களைப் பார்த்தல் போன்ற பணிகள் அனைத்தும் பரஸ்பர

நிதிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இம்முன்னுரையோடு இப்போது நாம் பரஸ்பர நிதிகின் பொருள், நோக்கம், உருவாக்கம், திட்டங்கள், வகைகள், நன்மைகள் பணிகள் போன்றவற்றைப் பற்றிக் காணலாம்.

**பரஸ்பர நிதிகளின் பொருள்**

**Meaning of Mutual Funds**

பல முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட நிதிகளை கூட்டாக நிர்வகிக்கும் நிறுவனங்களே பரஸ்பர நிதிகள் என அழைக்கப்படுகின்றன. இவ்விதமாக பல முதலீட்டாளர்களிடம் இருந்து சிறிய அளவுகளில் பெறப்பட்ட நிதிகளை ஒன்று திரட்டி இந்நிறுவனங்கள் பலதரப்பட்ட கழக ஈடுகளில் முதலீடு செய்கின்றன. இவைகளும், சேமிப்புகளையும் முதலீட்டு வாய்ப்புகளையும் ஒன்றிணைக்கும் சங்கிலி போலவே செயல்படுகின்றன. இவை, முதலீட்டாளர்களின் பலதரப்பட்ட தேவைகளான மூலதனத்திற்குப் பாதுகாப்பு உறுதியான மீள்வருகை, எளிதில் பணமாக்கும் தன்மை மற்றும் மூலதன மதிப்புயர்வு போன்றவற்றை அடைய முதலீட்டாளர்களுக்கு உதவுகின்றன. அகராதி இதற்கு ‘‘யூனிட் டிரஸ்ட்’’ அதாவது ‘‘ அலகுப்பொறுப்பு’’ என்று பொருள் தருகின்றது இவ்விதமான பொறுப்பை (வுசரளவ) அமைப்பதன் நோக்கம் இந்நிதிகளில் முதலீடு செய்ததனால் பெறப்பட்ட இலாபங்களை இந்நிதியில் முதலீட்டாளர்களுக்கு பிரித்து அளித்தலை உறுதி செய்தலே ஆகும்.

## 7.2 பரஸ்பர நிதிகளின் நோக்கம்

## Objectives of Mutual Funds

மூலதனச் சந்தையின் சீரான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் முதலீட்டாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு ஆகிய இரண்டுமே பரஸ்பர நிதிகளின் இரட்டை நோக்கங்களாக உள்ளன. பரஸ்பர நிதிகள் சிறு முதலீட்டாளர்களுக்கு தங்களது ஈடுகளை (ருவைை) விற்று அதில் கிடைக்கும் தொகைகளை ஒன்று சேர்த்து அவற்றை மூலதனச் சந்தையில் வணிகம் செய்யப்படும், மற்றும் வெளியிடப்படும் பங்குகள், பத்திரங்கள் போன்றவற்றை வாங்கப் பயன்படுத்துகின்றன. இந்நிதிகளால் ஈட்டப்பட்ட இலாபத்தில் பெரும்பகுதி பங்காதாயம் என்ற விதத்தில் இதன் முதலீட்டாளர்களுக்கே பிரித்தளிக்கப்டுகின்றது. சிறிய ஓர்பகுதியே, செயல்முறைச் செலவுகள், நிர்வாகச் செலவுகள் போன்றவற்றிற்காகச் செலவிடப்படுகின்றது. நடைமுறையில் பெரும்பாலான பரஸ்பர நிதித் திட்டங்கள் 12மூ க்குக் குறையாத ஓர் விகிதத்தைப் பங்காதாயமாக அளிப்பதை உறுதி செய்துள்ளன. இது உண்மையிலேயே நியாயமான மற்றும் சிறந்த ஓர் விளைபயனே (லுநைடன) ஆகும்.

## 7.3 பரஸ்பர நிதிகளின் தோற்றமும், திட்டங்களும்

## Origin & Schemes of Mutual Funds

1984 ஆம் ஆண்டில் முதல் முதலில் யூனிட் டிரஸ்ட் ஆ.்.ப் இந்திய முதல் பரஸ்பர நிதியை அமைத்தது. இது அமைத்த முதல் திட்டத்தின் பெயர் ‘‘மாஸ்டர் ே'ர’’ ஆகும். இத்திட்டத்தின் மூலம் இது 47 இலட்சம் முதலீட்டாளர்களிடம் இருந்து ரூ10,000 கோடியை நிதியாகப் பெற்றது. 1989 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் முதலீட்டாளர்களுக்கு இது 18மூ பங்காதாயம் அளித்து மேலும், இரண்டுக்கு ஒன்று (2:1) என்ற விகிதாசாரத்தில் ரூ2 பிரீமியத்தில் உரிமை வெளியீட்டையும் செய்தது.

பாரத ஸ்டேட் வங்கி (ளுவயவந டீயமெ ழக ஐனெயை) தமது முதல் பரஸ்பர நிதியை (மேக்னம்) 1987 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் அமைத்தது. இது ஓர் வரையறை செய்யப்பட்ட பரஸ்பர நிதி வகை (ஊடழளந நுனெ ஆரவரயட குரனெ)ஆகும். இதன் மதிப்பு ரூ.100 கோடிகளாகும்.

கனரா வங்கி ‘‘கேன்ே'ர’’, ‘‘கேன்குரோத்’’ என்ற இரண்டு பரஸ்பர நிதிகளை அறிமுகம் செய்துள்ளது. ‘‘தன் ே'ர’’ 1988 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இது அபார வெற்றியை அடைந்தது. ஒரு வருடத்திற்கு இது இரண்டிற்கு ஐந்து (2:5) என்ற விகிதத்தில் இலவச வெளியீட்டையும் செய்தது.

இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமும் ‘‘தன்ஸ்ரீ’’, ‘‘தன்ரக்'ா’’ மற்றும் ‘‘தன்விருத்தி’’ என்ற மூன்று திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. இவைகளும் நல்ல மீள்வருகையை முதலீட்டாளர்களுக்கு அளித்து வருகின்றன. இந்தியன் வங்கி ‘‘ இந்தபாங்க்’’ என்ற திட்டத்தையும், பாங்க் ஆப் இந்தியா ‘‘டீழுஐ பரஸ்பர நிதி’’ என்ற திட்டத்தையும் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளன. இவை தவிர தற்பொழுது பல தனியார் துறை பரஸ்பர நிதித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு நன்முறையில் இயங்கி வருகின்றன. தற்போதைய புள்ளி விபரப்படி, செபியின் பதிவு செய்யப்பட்டுள்ள பரஸ்பர நிதிகளின் எண்ணிக்கை 35 ஆக உள்ளது.

## 7.4 பரஸ்பர நிதிகளின் வகைகள்

## Types of Mutual Funds

பரஸ்பர நிதிகளை இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம் அவையாவன

**1. பரஸ்பர நிதிகளின் செயல்முறை மற்றும் நிறைவேற்றத்தின் அடிப்படை**

**On the Basis of Operation and Exection**

பரஸ்பர நிதிகளின் செயல்முறை, நிறைவேற்றம் ஆகியவற்றின் அடிப்படையில், பரஸ்பர நிதிகளைக் கீழ்க்கண்டவாறு இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. வரையறை செய்யப்பட்ட நிதிகள் (ஊடழளந நுனெ குரனௌ ): வரையறை செய்யப்பட்ட நிதியில் ஒரு குறிப்பிட்ட பரஸ்பர நிதித் திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட வேண்டிய நிதியின் அளவு (ஊழசிரள ளுணைந) முன்னரே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றது. மேலும். பங்கு ஒப்புதல்

பட்டியல் திறப்பு மற்றும் மூடுதல் போன்றவைகளும் கூட முதலீடு செய்யும் பொதுமக்களுக்கு முன்னதாகவே தெளிவாக அறிவிக்கப்பட்டு விடுகின்றன. எனவே, இதில் வரையறை செய்யப்பட்ட, நிலையான, அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் உள்ளது. இதன் அளவு பின்னா் உரிமை வெளியீட்டின் மூலம் அதிகரிக்கப்படலாம். இவ்வித நிதிகளின அலகுகள் பங்கு மாற்றங்களில் பட்டியலிடப்படுவதால், இவற்றை எளிதில் வாங்கவும் விற்கவும் முடிகின்றது. இவ்வித நிதிக்கு உதாரணங்களாவன ருவுஐ இன் மாஸ்டா் ஷோ், கனரா வங்கியின் கேன்ஷோ், கேன்ஸ்டாக், டுஐஊ இன் தன்ஸ்ரீ போன்றவை ஆகும். 3.3.2002 அன்றுள்ளபடி, செபியில் பதிவு செய்யப்பட்ட மொத்த வரையறை செய்யப்பட்ட நிதித் திட்டங்களின் எண்ணிக்கை 110 ஆக உள்ளது.

2. வரையறை செய்யப்படாத நிதிகள் (ழுிநெ நுனெ குரனௌ): இவ்வித நிதியில், சேகரிக்கப்பட வேண்டிய நிதியின் அளவு (ஊழசிரள ளுணைந) முன்னரே நிர்ணயிக்கப்படுவதில்லை. மேலும், இதன் பங்கு ஒப்புதல் பட்டியல் என்றும் திறந்தே இருக்கும். அதாவது, இவ்வித நிதிகளில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்தான் முதலீடு செய்யப்பட முடியும் என்ற வரையறை இல்லை. இந்நிதியின் மூலம் பெறப்பட வேண்டிய மொத்த நிதிக்கும் எந்த வரையறையும் இல்லை. எனவே தான் இது வரையறை செய்யப்படாத நிதி என அழைக்கப்படுகின்றது. இவற்றின் பங்குகள் அல்லது அலகுகள் அவ்வப்பொழுது அறிவிக்கப்படும் மறுகொள்முதல் வீதத்தின்படி மறுகொள்முதல் செய்யப்படுகின்றன. இவ்வித நிதியின் உதாரணங்களாவன ருவுஐ இன் யூனிட் ஸ்கீம் 1964, சில்டரன் குரோத் ∴பண்டு கனரா வங்கியின் கேன்கில்ட் மற்றும் கேன்கிகோ போன்றனவாகும். 31.3.2002 அன்றுள்ளபடி, செபியில் பதிவு செய்யப்பட்ட மொத்த வரையறை செய்யப்படாத நிதித் திட்டங்களின் எண்ணிக்கை 307 ஆக உள்ளது.

**ஐஐ. முதலீட்டாளா்களின் முதலீட்டு நோக்கங்களின் அடிப்படை**

**On the Basis of Investment Objectives of Investors**

முதலீட்டாளா்களின் முதலீட்டு நோக்கங்களின் அடிப்படையில் பரஸ்பர நிதிகளைக் கீழ்க்கண்டவாறு 5 வகைகளாகப் பாகுபாடு செய்யலாம்.

1. பங்கு நிதிகள் (ளுாயசந குரனௌ): பங்கு நிதிகள் பொதுவாக பங்குகளிலேயே முதலீடு செய்யப்படுகின்றன. இவை நிலையான வருமானத்தைத் தரும் ஈடுகள், பத்திரங்கள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுவதில்லை. இவை கீழ்க்கண்டவாறு நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. 31.03.2002 அன்று உள்ளபடி, செபயில் பதிவு செய்யப்பட்ட மொத்த பங்கு நிதித் திட்டங்களில் எண்ணிக்கை 63 ஆக உள்ளது.

1) அதிவேக வளர்ச்சி நிதிகள் (யுபபசநளளைந புசழறவா குரனௌ) : இவை தமது மூலதன ஆதாயத்தை பெருக்கும் பொருட்டு அதிக இடர்களை ஏற்கவும் தயாராக உள்ளன. இதற்கு நடப்பு வருமானம்

என்ற நோக்கமே இல்லை. இவை விலை எற்ற இறக்கம் அதிகம் உள்ள ஈடுகளிலேயே தமது நிதியை முதலீடு செய்கின்றன.

2) வளர்ச்சி நிதிகள் (புசழறவா குரனௌ): இவை மேறசொன்ன நிதி அளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு இடரை ஏற்கக் தயாராகவே உள்ளன. இதன் அடிப்படை நோக்கம் சீரான நீண்டகால மூலதன மதிப்புயர்வைப் பெறுதல் ஆகும். நல்ல மூலதனக் கட்டமைப்புள்ள கம்பெனிகளில் மட்டுமே இவை தங்களின் நிதியை முதலீடு செய்கின்றன. 31.3.2002 அன்றுள்ளபடி செபியில் பதிவு செய்யப்பட்ட மொத்த வளர்ச்சி நிதித் திட்டங்களின் எண்ணிக்கை 178 ஆக உள்ளது.

3) நடப்பு வருமான நிதிகள் (ஊரசசநவெ ஐஉெழஅந குரனௌ) : இங்கு நிதிகள் நடப்பு வருமானம் அதிகமாகப் பெற வாய்ப்பு வழியுள்ள ஈடுகளில் மட்டுமே முதலீடு செய்யப்படுகின்றன. இதன் நோக்கம் அதிக நடப்பு வருமானம் பெறுதலே ஆகும். இவ்வித நிதிகள், நிலையான வருமானத்தைக் கொண்ட முதலீடுகளின் பட்டியலை (ீழசவகழடழை) கொண்டதாகவே இருக்கின்றன 31.3.2002 அன்றுள்ளபடி செபியில் பதிவு செய்யப்பட்ட மொத்த நடப்பு வருமான நிதிக் திட்டங்களில் எண்ணிக்கை 205 ஆக உள்ளது.

4) வளர்ச்சி மற்றும் வருமான நிதிகள் (புசழறவா யனெ ஐஉெழஅந குரனௌ) இவை வளர்ச்சி நிதிகள் மற்றும் நடப்பு வருமான நிதிகள் ஆகிய இரு வகை நிதிகளில் நன்மைகளையும் இணைக்கின்றன. இவை நிலையான பங்காதாயம் மற்றும் மூலதன மதிப்புயர்வு ஆகிய இரண்டும் கிடைக்கும் வண்ணம் தமது பட்டியலை நிர்வகிக்கின்றன.

2. இரட்டை நோக்க நிதிகள் (னுரயட ீரசிழளந குரனௌ) : இவ்வகை நிதிகள் நடப்பு வருமானம் மற்றும் மூலதன மதிப்புயர்வு போன்ற இரண்டு நோக்கங்களையும் கொண்டதாக விளங்குகின்றன. இவற்றின் பங்குகள் மூலதனப் பங்குகள் வருமானப் பங்குகள் என்ற இரு விதங்களில் வெளியிடப்படுகின்றன. வருமானப்பங்குகளில் முதலீடு செய்பவருக்கு நிதியின் நிகர முதலீட்டு வருமானம் மட்டும் பிரித்து அளிக்கப்படும். மூலதனப் பங்கை வாங்கியவருக்கு. நிதியின் மூலதன மதிப்புயர்வு கிடைக்கும். இவர்கள் எந்தவிதப் பங்காதாயத்தையும் பெறமாட்டார்கள் இம்முறையில் பங்குதாரர்களுக்கும் குறைந்தபட்சப் பங்காதாயம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது.

3. சரிக்கட்டப்பட்ட நிதிகள்(டீயடயஉெநன குரனௌ) இங்கு, நிதிகள் நிலையான வருமானம் தரும் ஈடுகள் மற்றும் பங்களில் முதலீடு செய்யப்படுகின்றன இது முதலீட்டு இடர்களைக் குறைக்கின்றது. ஆயினும் இதில் ஆதாயத்தின் கிடைக்கும் தன்மையும் ஒரளவிற்கு உண்டு. எனவே, இது நீண்டகால வளர்ச்சி வாய்ப்பை முழுவதுமாகத் தியாகம் செய்யாமல் இடர்களை முடிந்தவரை குறைப்பதனால் கிடைக்கும் நன்மைகளையும் அடைய முயற்சி செய்கின்றது. 31.3.2002 அன்றுள்ளபடி, செபியில் பதிவு

செய்யப்பட்ட மொத்த சரிக்கட்டப்பட்ட நிதித் திட்டங்களின் எண்ணிக்கை 34 ஆக உள்ளது.

4. பணச்சந்தை நிதிகள் (ஆழநெல ஆயசமநவ குரனௌ): இந்நிதிகள் சாதாரணமாக அரச ஈடுகள் மற்றும் பிற வைப்புகளில் மட்டுமே முதலீடு செய்யப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் இந்நிதியில் முதலீடு செய்து அதிக ஆதாயத்தைப் பெறலாம். ஏனெனில் இவ்வித ஈடுகளில் பரஸ்பர நிதிகளின் மூலமின்றி தனிப்பட்ட முறையில் முதலீடு செய்ய வேண்டுமெனில் அது பேரளவு முதலீட்டாளர்களால் மட்டுமே முடியும். 31.3.2002 அன்றுள்ளபடி, செபியில் பதிவு செய்யப்பட்ட மொத்த பணச்சந்தை நிதித் திட்டங்களின் எண்ணிக்கை 30 ஆக உள்ளது.

5. தனித் தன்மையுடைய நிதிகள் (ளுநஉயைடளைநன குரனௌ) இவ்வித நிதிகள், தங்களின் முதலீடுகளை ஒரு சில தொழில்களுடன் வரையறை செய்து கொள்கின்றன. எனவே, அக்குறிப்பிட்ட சில தொழில்களின் ஈடுகளின் மட்டும் முதலீடு செய்ய விரும்புபவர்கள் இவ்வித நிதிகளில் தங்களின் சேமிப்பை முதலீடு செய்யலாம்.

எனவே வளர்ச்சி மற்றும் வருமானம், நடப்பு வருமானம் மட்டும். மாதவருமானம் மட்டும் எனப் பலவித நோக்கங்களுக்காக முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பலவிதமான திட்டங்கள் இதில் உள்ளன என்பது மேற்கண்ட விவாதத்தின் மூலம் நமக்குத் தெரிகின்றது. எனவே, அவரவர் விருப்பங்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப அவர்கள் தங்களுக்குகந்த திட்டங்களைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யலாம்.

மேற்கூறப்பட்டவை தவிர, பணச் சந்தை மற்றும் வெளிநாட்டிலிருந்து நிதியைப் பெறும் பரஸ்பர நிதிகள் போன்றவையும் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சில முக்கியமான பரஸ்பர நிதிகளாகும். இவற்றைப் பற்றிச் சுருக்கமாக நாம் கீழ்க்கண்டவாறு காணலாம்.

1. பணச் சந்தை பரஸ்பர நிதி (ஆழநெல ஆயசமநவ ஆரவரயட குரனெ): பணச்சந்தை பரஸ்பர நிதிகளை அமைப்பதற்கான வழிகாட்டிச் சரத்துக்களை அண்மையில் ரிசர்வ வங்கி வெளியிட்டுள்ளது. தற்பொழுது, பட்டியலில் சேர்க்கப்பட்ட வணிக வங்கிகளும் அவற்றின் துணை வங்கிகளும் மட்டுமே இத்துரையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளன. இவைகள் தாம் திரட்டிய நிதயை வைப்புச் சான்றிதழ்கள் வணிகத் தாள்கள், 182 நாள் கருவூல உண்டியல்கள் போன்ற குறுகியகால பணச்சந்தைக் கருவிகளில் மட்டுமே முதலீடு செய்யவும் பணச்சந்தையின் அழைப்பு மற்றும் குறுகிய கால அறிவிப்பிற்குக் கடனளிக்கவுமே அனுமதிக்கப் பட்டுள்ளன

2. வெளிநாட்டிலிருந்து நிதியைப் பெறும் பரஸ்பர நிதிகள் (முகக-ளாழசந ஆரவரயட குரனௌ) இவ்வித நிதிகள் தம்மால் பெறப்பட வேண்டியதாக நிர்ணயிக்கப்பட்ட நிதியின் அளவை வெளிநாட்டுப் பணத்திலேயே பெற்று அவற்றை முதலீட்டிற்காக இந்தியாவிற்க் கொண்டு

வருகின்றன. உதாரணம் ருவுஜ இன் ஆ.்.ப் ஷோர் .்.ப்ண்ட்ஸ், இந்தியா .்.பண்ட், இந்தியா குரோத் .்.ப்ண்ட்

## 7.5 பரஸ்பர நிதிகளின் நன்மைகள்

## Advantages of Mutual Funds

பரஸ்பர நிதிகளின் நன்மைகளை நாம் பின்வருமாறு காணலாம்.

1. பரஸ்பர நிதிகள் திறமையோடு மூலதனச் சந்தையின் நிலவரங்களை நன்கு ஆராய்ந்து செயல்பட்டு, பரவலாக்குதல், பேரளவு நடவடிக்கைகள் மற்றும் திறமைவாய்ந்த நிதி மேலாண்மை ஆகியவற்றினால் கிடைக்கும் அனைத்து நன்மைகளையும் முதலீட்டாளர்கள் பெற வழிவகை செய்கின்றன. எனவே, முதலீட்டாளர்களுக்கான இடர் பெருமளவு குறைக்கப்படுகின்றது.
2. பரஸ்பர நிதிகள் தங்களது முதலீட்டுப் பணியை அத்துறையின் நிபுணர்களைக் கொண்டே மேற்கொள்கின்றன. எனவே, அவர்கள் இந்நிதிகளை விஞ்ஞானபூர்வமாகவும் திறமையோடும் நிர்வகித்து முதலீட்டாளர்களுக்கு நல்ல இலாபத்தை ஈட்டித் தர உதவுகின்றனர். பரஸ்பர நிதிகள் நிபுணர்களைக் கொண்டு முதலீட்டுப் பணியில் ஈடுபடுவதால், ஈடுகளை வாங்குதல் அல்லது விற்றலில் உள்ள மன உளைச்சலின்றி முதலீட்டாளர்கள் நிம்மதியாக இருக்க முடிகின்றது.
3. பரஸ்பர நிதிகள் பங்காதாயங்களையும் மூலதன இலாபங்களையும் முதலீட்டாளர்களுக்கு அளிக்காமல் தமது அலகுகளிலேயே மறுமுதலீடு செய்து கொள்தல் போன்றவை இதன் உறுப்பினர்களுக்கு ஓர் வரப் பிரசாதம் போன்று செயல்படுகின்றன.
4. முதலீட்டாளர்களால் முதலீடு செய்யப்படும் பணம் நல்ல, அதிக அளவு மீள் வருகையைத் தரும் ஈடுகளில் முதலீடு செய்யப்படுகின்றது.
5. நிதியின் தொகை, ஈடுகளைத் தேர்ந்தெடுப்பதில் திறமை பெற்ற நிபுணர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈடுகளில் முதலீடு செய்யப்படுகின்றது. பாதுகாப்புத் தன்மை எளிதில் பணமாகும் தன்மை, இலாபத் தன்மை ஆகியவை உள்ள ஈடுகளை மட்டுமே இவைகள் விரும்பி ஏற்கின்றன. எனவே, இவைகளைத் தேவையான பொழுது எளிதில் விற்றுப் பணம் பெற முடியும்.
6. இந்நிதிகள் முதலீட்டாளர்களை ஈடுகளை கவனத்தோடு பாதுகாப்பதில் இருந்து விடுவித்து விடுகின்றன.

இவையே பரஸ்பர நிதிகளினால் அதன் முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளாகும்.

## 7.6 பரஸ்பர நிதிகளை ஒழுங்குபடுத்துதல் - செபியின் வழிகாட்டிச் சரத்துக்கள்

## Regulation of Muntual Funds – SEBI Guidelines

செபி (ளுநுடீஐ) அமைக்கப்படுவதற்கு முன்னதாக, பரஸ்பர நிதகளுள் சில (உதாரணமாக, ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும்

பொதுக்காப்பீட்டுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட பரஸ்பர நிதிகள்) ரிசர்வ் வங்கியாலும் மற்றும் சில நிதி அமைச்சகத்தின் முதலீட்டுப் பிரிவாலும் ஒழுங்குபடுத்தப்பட்டு வந்தன. பின்னர், 1992 —ல் செபி சட்ட அந்தஸ்து பெற்ற பின்பு, பணச் சந்தை பரஸ்பர நிதிகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து நிதியைப் பெறும் பரஸ்பர நிதிகள் நீங்கலான பிற அனைத்துப் பரஸ்பர நிதகளும் செபியின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டன. 1992 —ல் ஏற்பட்ட ளுநஉரசவைநைள ளுஉயஅ —ஐ தொடர்ந்து பல்வேறு வங்கிகளும் பரஸ்பர நிதிகளும் நிதிசார்ந்த முறைகேடகளில் இறங்கியதால், செபி தமது ஒழுங்குமுறைகளை மிகவும் கடுமையாக்கியது. அதன்பின் பரஸ்பர நிதிகளை ஒழுங்குபடுத்தும் முகமாக புதிய வழிகாட்டித் தத்துவங்களையும் அது உருவாக்கியது. அதன்படி பரஸ்பர நிதி ஒன்றை அமைக்க விரும்பும் நிறுவனம் செபியிலிருந்து அதற்குரிய அனுமதியை பெற்று உரிய உரிமம் பெற்ற பின்பே, அதைத் தொடங்க முடியும். இவ்விதி பொதுத் துறை தனியார் துறை மற்றும் கூட்டுத் துறை (துழைவெ ளுநஉவழச) ஆகிய அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும்.

சொத்து மேலாண்மைக் கம்பெனியானது பொறுப்பாண்மையர் அங்கீகரிக்காமல் எந்தத் திட்டத்தையும் தொடங்கக் கூடாது. மேலும் அதற்குரிய முனைவு ஆவணம் செபியில் பதிவு செய்யப்பட்டிருந்தல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு திட்டத்திற்கும் என பரஸ்பர நிதியானது பதிவுக் கட்டணங்களையும் செலுத்த வேண்டும். முனைவு ஆவணமானது முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு முடிவெடுக்க ஏதுவாக அனைத்து முக்கியமான தகவல்களையும் தர வேண்டும். வரையறையுடன் கூடிய திட்டங்கள் அவற்றின் முதிர்வு நாளன்று முழுமையாக மீட்கப்பட வேண்டும்.

பரஸ்பர நிதியானது குறைந்தபட்சப் பங்கெடுப்பைப் பெறாத நிலையில், சொத்து மேலாண்மைக் கம்பெனியானது விண்ணப்பத் தொகையை விண்ணப்பதாரர்களிடம் திருப்பி அளிக்கும் பொறுப்புடையதாக உள்ளது.

ஏற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்கான அலகுச் சான்றிதழ்களை சொத்து மேலாண்மைக் கம்பெனியானது தொடக்கப் பங்களிப்புப் பட்டியல் முடிவுற்ற நாளிலிருந்து 6 வாரத்திற்குள் அனுப்பிவிடுதல் வேண்டும்.

முனைவு ஆவணமும் விளம்பரமும் எந்தத் தவறான தகவலையும் தரக்கூடாது.

அலகுகள் விற்பனை செய்யப்படும் விலையும் அவை மறுகொள்முதல் செய்யப்படும் விலையும் முதலீட்டாளர்களுக்கு தெளிவாக அறிவிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

தவிரவும் சொத்து மேலாண்மைக் கம்பெனியானது ஒவ்வொரு திட்டத்திற்கும் உரிய கணக்குகளையும் பதிவுகளையும் ஆவணங்களையும் முறைப்படி நிர்வகிக்க வேண்டும். அனைத்துத் திட்டங்களுக்குமான நிதியாண்டும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியே முடிதல்

வேண்டும். ஒவ்வொரு பரஸ்பர நிதியின் ஆண்டுக் கணக்கின் அறிக்கைகளும் சொத்து மேலாண்மைக் கம்பெனியின் தணிக்கையாளருடன் தொடர்பற்ற தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

இவை தவிர இவற்றின் முதலீடுகள் மீதும் பல வரையறைகள் செபியால் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு:

1. ஒரு பரஸ்பர நிதித் திட்டம் அதன் நிகர சொத்து மதிப்பில் 15மூ -க்கு மேற்பட்டு ஏதேனும் ஒரு வெளியீட்டாளர் வெளியிடும் கடன் கருவியில் முதலீடு செய்யக் கூடாது. ஆயினும் பொறுப்பாண்மையர்களின் அவை சொத்து மேலாண்மைக் கம்பெனியின் அவை ஆகியவற்றின் முன் அனுமதியுடன் 20மூ வரை முதலீட செய்யலாம்.
2. ஒரு பரஸ்பர நிதித் திட்டம் அதன் நிகர சொத்து மதிப்பில் 10மூ -க்கு மேற்பட்டு ஏதேனும் தர மதிப்பீடு செய்யப்படாத தனி ஒரு வெளியீட்டாளரால் வெளியிடப்படும் கடன் கருவியில் முதலீடு செய்யக்கூடாது. மேலும் அந்தக் கருவியில் செய்யப்படும் மொத்த முதலீடு திட்டத்தின் நிகர சொத்து மதிப்பில் 25மூ ஐ மிகக் கூடாது.
3. எந்த ஒரு பரஸ்பர நிதியும் ஏதேனும் கம்பெனியின் வாக்குரிமை உள்ள மூலதனத்தின் 10மூ -க்கு மேற்பட்டு தமக்கு சொந்தமாகக் கொண்டிருத்தல் கூடாது.
4. எந்த ஒரு திட்டத்திற்கும் தொடக்க வெளியீட்டுச் செலவு அத்திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட தொகையின் 6மூ -க்கு மேல் போகக்கூடாது
5. இது குறுகிய விற்பனை அல்லது முன்னோக்கிய வாணிபம் அல்லது பட்லா நிதி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது
6. ஈடுகள் பரஸ்பர நிதியின் பெயரிலேயே வாங்கப்படவோ, மாற்றப்படவோ செய்யப்பட வேண்டும்.
7. இது பட்டியலிடப்படாத ஈட்டில் முதலீடு செய்யக் கூடாது. அதன் குழுக் கம்பெனி அல்லது தொடர்புடைய கம்பெனியிலும் முதலீடு செய்யக்கூடாது. தனிவைப்பு மூலம் மேற்கண்ட கம்பெனிகளால் வெளியிடப்படும் ஈடுகளிலும் முதலீடு செய்யக்கூடாது.
8. பரஸ்பர நிதியானது ஏதேனும் கம்பெனியின் சாதாரணப் பங்கு மூலதனத்தில் அதன் நிகர சொத்து மதிப்பிற்கு 10மூ -க்கு மேற்பட்டு முதலீடு செய்யக் கூடாது
9. இதுவே, வரையறையுடன் கூடிய திட்டமானால் 10மூ -க்கு மேற்பட்டும் வரையறையற்ற திட்டமானால் 5மூ -க்கு மேற்பட்டும் முதலீடு செய்யக்கூடாது.

## 7.7 பரஸ்பர நிதித் திட்டங்களுக்கான வரிப் பயன்கள்

## Tax Benefits to Mutual Fund Schemes

பரஸ்பர நிதித் திட்டங்களுக்குக் கிடைக்கக்கூடிய வரிப் பயன்கள் பின்வருமாறு

1. ஆதாரத்தில் வரிக் கழிப்பின்மை (ழே வுனுளு): நிதி ஒன்றால் அளிக்கப்படும் அல்லது வரவு வைக்கப்படும் ஏதேனும் வருமானம் அதன் ஆதாரத்திலேயே நிறுத்தி வைக்கப்படவோ அல்லது அதற்குரிய வரி கழிக்கப்படவோ செய்யப்படுவதில்லை (வருமான வரிச் சட்டப் பிரிவு 194மு ரூ 196யு)

2. சொத்த வரியின்மை (ழே றுநயடவா வுயஒ): சொத்து வரியின் பிரிவு 2-ன் கீழ் பரஸ்பர நிதியின் அலகுகள் சொத்துக்களாகக் கருதப்படுவதில்லை. ஆகவே, இவை சொத்து வரிப் பொறுப்பிற்கு உட்படமாட்டது.

3. அலகுகளிலிருந்து பெறும் வருமானம் விலக்குப் பெறுகிறது (ஐஉழஅந கசழஅ ருவைள நுஒநஅிவநன): பிரிவு 23 னு- ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரஸ்பர நிதிகள் திட்டத்திலிருந்து கிடைக்கும் ஏதேனும் வருமானம் வருமான வரிச்சட்டத்தின் பிரிவு 88-ன் கீழ் தள்ளுபடிக்குத் தகுதி பெறுகின்றன

வருமான வரிச் சட்டத்தின்படி பரஸ்பர நிதிகளின் அலகுகள் 12 மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலத்திற்கு வைத்துக் கொள்ளப்பட்டிருப்பின் அவை நீண்டகால மூலதனச் சொத்துக்களாகக் கருதப்படும் மூலதன ஆதாயங்களின் வீதம் ஆனது 10மூ (றுவைா ஐனெநஒயவழை஡) ஆகவே அல்லது 20மூ ஆகவோ (றுவைாழரவ ஐனெநஒயவழை஡) இருக்கிறது.

பரஸ்பர நிதிகள் பகிர்ந்தளிக்கும் வருமானமானது 10மூ வரிக்கு உட்பட்டதாகும். இதற்கு 20மூ மிகை வரியும் உண்டு ஆனால் வரையறையற்ற சாதாரணத்திட்டங்களின் வருமானம் மீது இவ்வரி விதிக்கப்படுவது இல்லை.

## 7.8 பரஸ்பர நிதியின் அமைப்புசார்ந்த கட்டமைப்பு

## Organisational Structure of Mutual Funds

பரஸ்பர நிதியானது கழகமாகவோ அல்லது ஒரு பொறுப்பாண்மையாகவோ அமைக்கப்படலாம். பொறுப்பாண்மை ஆனது இந்திய பொறுப்பாண்மைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றது மற்றும் தனிப்பட்ட சொத்து மேலாண்மைக் கம்பெனி (யுளளநவ ஆயயெபநஅநவெ ஊழஅியலெ (யுஆஊ))ஆல் இயக்கப்படுகின்றது. இது கழகமாக அமைக்கப்பட்டால் இது இந்தியக் கம்பெனிச்சட்டம், 1956-ன் கீழ் அமைக்கப்படும். இதன் அமைப்புமுறைச் சாசனம் மற்றும் செயல்முறை விதிகள் போன்றன செபியால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

பரஸ்பர நிதி ஒன்றின் இயக்கத்திற்கு உதவும் முதன்மைப் பங்கேற்பாளர்கள் பின்வருமாறு

1. பொறுப்பாண்மையர் அவை (டீழயசன ழக வுசரளவநநள)

2. சொத்து மேலாண்மைக் கம்பெனி (யுளளநவ ஆயயெபநஅநவெ ஊழஅியலெ)

3. பொறுப்பாளர் (ஊரளவழனயைெ)

4. முதலீட்டாளர்கள் (ஐளெநளவழசள)

இவை தவிர சில வெளிப்புற முகவாண்மைகளின் உதவியையும் பல நிதிகள் நாடுகின்றன. அவை பின்வருமாறு

5. பதிவாளர்கள் மற்றும் மாற்ற முகவர்கள் (சுநபளைவசயசள யனெ வுசயளெகநச யுபநவெள)

6. விளம்பரதாரர்கள் (யுனஎநசவளைநசள)

7. சட்ட ஆலோசகர்கள் (டுநபயட யுனஎளைழசள)

பரஸ்பர நிதிகளின் இயக்கத்திற்கு என இவர்கள் ஆற்றும் பணிகளை நாம் பின்வருமாறு காணலாம்

1. பொறுப்பாண்மையர் அவை (டீழயசன ழக வுசரளவநநள): பொறுப்பாண்மையரது அவை ஆனது. பரஸ்பர நிதியின் பொறுப்பாண்மைராக இயங்கும் கம்பெனி அல்லது வங்கி அல்லது நிறுவனத்தினால் அமைக்கப்படுகின்றது. இதுவே நிதி பெறுதல் மற்றும் நிதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் மீதான முடிவுகளையும் எடுக்கும் பொறுப்புடையதாகும். பொறுப்பாண்மையர் அவையில் குறைந்தபட்சம் 50மூ உறுப்பினர்களாவது தனிப்பட்ட வெளிப்புற நபர்களாக இருத்தல் அவசியம். இவர்களுக்கு நிறுவனத்துடனோ அல்லது அதன் துணை நிறுவனத்துடனோ எந்தத் தொடர்பும் இல்லாது இருத்தல் வேண்டும். பொறுப்பாண்மை அவையின் உறுப்பினர்களுடைய தகுதி உள்ளிட்ட முழு விபரமும் செபிக்கு அறிவிக்கப்பட வேண்டும். மேலாளர்கள் ஆனவா் வழிகாட்டிச்சரத்துக்களை நிறைவேற்றுகின்றனர் என்பதை உறுதி செய்து அவ்வப்பொழுது நிதியின் முதலீட்டாளர்களுக்கு அறிவிக்க வேண்டும். இதற்கென இவர்கள் பலதரப்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குத் தேவைப்படும் தகவல்களை சொத்து மேலாண்மைக் கம்பெனியிடம் இருந்து கேட்டுப் பெற இவர்களுக்கு உரிமை உள்ளது. இந்த அவை ஆனது ஒட்டு மொத்த மேலாண்மைச் சேவைகளையும் மேற்கொள்கிறது. இதற்கென இது மேலாண்மைக் கட்டணத்தை விதிக்கிறது.

2. சொத்து மேலாண்மைக் கம்பெனி (யுளளநவ ஆயயெபநஅநவெ ஊழஅியலெ) இக்கம்பெனி ஆனது, பரஸ்பர நிதிகளின் முதலீட்டு இயக்கங்கள் மற்றும் கொள்கைகளில் நிறைவேற்றத்திற்கு என அமைக்கப்படும் கம்பெனி ஆகும். செபியின் வழிகாட்டிச் சரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட அளவைகளின் அடிப்படையில் வணிகத்தை மேற்கொள்வதற்குரிய அங்கீகாரத்தை செபி இதற்கு அளிக்கிறது. இது பொறுப்புரிமைக் கழகம் ஒன்றின் பொறுப்பாண்மையராக செயலாற்ற அனுமதிக்கப்படுவதில்லை. இதனிடம் குறைந்தபட்சம் ரூ.5 கோடிகள் நிகர மதிப்பு இருத்தல் வேண்டும். இது பரஸ்பர நிதியன் இயக்கம் தொடர்பான ஒரு காலாண்டு அறிக்கையை பொறுப்பாண்மையர்களிடம் சமா்ப்பிக்க

வேண்டும். அதைப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பாண்மையர் 6 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு அறிக்கையை சமர்பிக்க வேண்டும். ஆண்டு அறிக்கையை நிதியின் முதலீட்டாளர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. பொறுப்பாளர் (ஊரளவழனயைெ) பரஸ்பர நிதியான பொறுப்பாளர் என்ற நிலையை கம்பெனி ஒன்று வகிக்கிறது. இது செபியில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அதாவது செபியில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கம்பெனி ஒன்றின் சேவையையே பரஸ்பர நிதிகள் தங்களின் பொறுப்பாளராக நியமித்துக் கொள்ள வேண்டும் இக்கம்பெனிச் சொத்து மேலா்ணமை கம்பெனியிடம் தொடர்பற்றதாக இருத்தல் வேண்டும்.

4. முதலீட்டாளர்கள் (ஐளெநவழசள) : இவர்கள் பரஸ்பர நிதியன் திட்டங்களில் முதலீடு செய்யும் பொதுமக்களாவர். இவர்களது பணத்தைக் கொண்டே பரஸ்பர நிதிகள் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகின்றன. பரஸ்பர நிதிகள்பெறும் இலாபம் இவர்களுக்குகே பிரித்தளிக்கப்படுகிறது. இவர்களுக்கு செபி ஒழுங்குமுறைகளில் கீழ் அலகுகளின் சான்றிதழ்களைப் பங்களிப்பு முடிந்த 6 வாரங்களுக்குள் பெறவும். திட்டத்தின் முதலீட்டு நோக்கம். கொள்கை நிதிநிலை பொது அலுவல் தொடர்பான தகவல்களைப் பெறவும் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள் பங்காதாயத்தைப் பெறவும், ஒழுங்குமுறைகளின் படி வாக்களிக்கவும் ( சொத்து மேலாண்மைக் கம்பெனியை மாற்ற திட்டங்களை மூட, திட்டத்தின் அடிப்படை முதலீட்டுக் கொள்கையை மாற்றுவதை அங்கீகரிக்க.ஃமறுக்க) உரிமை உண்டு.

5. பதிவாளர்களும் மாற்றமுகவர்களும் (சுநபளைவசயசள யனெ வுசயளௌகநச யுபநவௌ): பொதுவாக வதிவாளர்களும் மாற்றமுகவர்களும் முதலீட்டாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்றுப் பரிசீலிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். இவர்கள் பரஸ்பர நிதிகளின் அலகுகளுக்கு சான்றிதழ்களை வெளியிடுகின்றனர். இவர்கள் அலகுதாரர்களின் விரிவான ஒரு பதிலை நிர்வகிக்கின்றனர். இவர்கள் அலகுச் சான்றிதழ்களை மீட்டல், வாங்குதல், விற்றல், மாற்றுதல் போன்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கின்றனர்.

6. விளம்பர முகவர்கள் (யுனஎநசவளைநசள): விளம்பர முகவர்கள், நிதிக்குத் தேவையான விளம்பர சாதனச் சந்தையிடுகைத் திட்டத்தின் தயாரிப்பிற்கு உதவுகின்றனர். செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதற்குத் தேவையான இடத்தைப் பெறுதல், தொலைக்காட்சி மற்றும் ஏனைய விளம்பர சாதனங்களில் விளம்பரம் செய்யத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

7. சட்ட ஆலோசகர்கள் (டுநபயட யுனஎளைழசள): இயல்பாகவே, கம்பெனி ஒன்றே பரஸ்பர நிதியின் ஆலோசகராகப் பணியாற்றுகிறது. இது நிதிகளின் முதலீடுகளுக்குத் தேவையான ஆலோசனையை அளிக்கிறது. மேலும், இது சொத்து மேலாண்மைக் கம்பெனியின் சேவைகளின் மீதும் தேவையான ஆலோசனைகளை வழங்குகிறது.

பரஸ்பர நிதியின் அமைப்பை விளக்கும் வரைபடம் , வரைபடம் 14.1 –ல் தரப்பட்டுள்ளது.

## 7.9 பரஸ்பர நிதிகளின் தற்போதைய நிலை

## Present Status of Mutual Funds

பல்வேறு தனியார் துறை பரஸ்பர நிதிகள் அமைக்கப்பட்டு மூலதனச் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் அவை அவ்வளவு திருப்திகரமாக இயங்கவில்லை. பல்வேறு திட்டங்களின் சந்தை நிலை அதன் நிகரச் சொத்து மதிப்பை (நேவ யுளளநவ ஏயடரந) விடக் குறைவாக இருந்தது. நிகரச் சொத்து மதிப்பு பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

பரஸ்பர நிதிகளின் சட்டக் கட்டமைப்பும் அமைப்பும்
(டுநபயட ளுவசரஉவரசந யனெ ழுசபயளைெயவழைெ ழக ஆரவரயட குரனௌ)




| | | |
|---|---|---|
| அனைத்து முதலீடுகளின் சந்தை மதிப்பு (,) | சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் பெறப்பட வேண்டியவை (-) | பொறுப்புக்களும் நிலுவைச் செலவுகளும் |

ஸ்ரீ

நிலுவையாக உள்ள அலகுகள்

பெற்ற நிதியில் 6மூ -ஐ ஆரம்பத் தொடக்கச் செலவுகளுக்காகவும் 3மூ -ஐ ஆண்டுதோறும் செய்ய வேண்டிய செலவுகளுக்காகவும் பயன்படுத்த பரஸ்பர நிதிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவை தங்களது நிகர

வருமானத்தில் 90 மூ -ஐ அலகுதாரர்களுக்குப் பங்காதாயமாக வழங்க வேண்டும்.

பரஸ்பர நிதிகள் தற்பொழுது தம்மால் சேர்க்கப்பட்ட 100மூ நிதியை முற்றிலுமாகப் பணச் சந்தைக் கருவிகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆயினும், இதற்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அதாவது, இவை இவ்வாறு தமது 100மூ நிதியை பணச் சந்தைக் கருவிகளின் பங்கெடுப்பிலிருந்து 6 மாத காலம் முடிந்த பின்பே முதலீடு செய்ய முடியும்: அதைப்போலவே, அவை மீட்கப் படுவதற்கு 6 மாதத்திற்கு முன்பே அவை திரும்பப் பெறப்பட வேண்டும். இவ்விதிகள் அனைத்து செபியின் வழிகாட்டிச் சரத்துக்களில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

1996 –ன் தொடக்கத்தில் ஏறத்தாழ 52 பட்டியலிடப்பட்ட பரஸ்பர நிதித் திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஏறத்தாழ 10 நிதிகள் உதாரணமாக, மாஸ்டர் கெய்ன், மாஸ்டர் ேர், ளுடீஐ மேக்னம், போன்றன நன்முறையில் இயங்கின. இவைதவிர 22 வரையறை செய்யப்படாத நிதிகளும் இயங்கி வந்தன. அவ்வப்பொழுது புதிய நிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டும் முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டும் முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டு மறு கொள்முதல் முறையில் இயங்கியவை மீட்கப்பட்டவாறுமே உள்ளன. வரையறை செய்யப்பட்ட நிதிகள் கட்டாயமாக பங்கு மாற்றகங்களில் பட்டியலிடப்பட வேண்டும். 31.03.2002 அன்று நிலவரப்படி செபியில் பதிவு செய்யப்பட்ட மொத்த பரஸ்பர நிதித் திட்டங்களின் எண்ணிக்கை 417 ஆக உயர்ந்துள்ளது. இதிலிருந்து இதன் வளர்ச்சியையும் இதற்கு முதலீட்டாளர்களிடையில் உள்ள மகத்தான வரவேற்பையும் நம்மால் உணர முடிகின்றது.

பொதுவாக பரஸ்பர நிதியின் முகமதிப்பு ரூ.10 ஆகவும் சில சமயங்களில் ரூ.100 ஆகவும் அமைகின்றது. பட்டியலிடப்பட்டு வணிகம் செய்யப்படும் பரஸ்பர நிதிகளுக்கு சந்தை விலை இருக்கும். இது நிகரச் சொத்து மதிப்பிலிருந்து மாறுபட்டதாகும். பரஸ்பர நிதிகளின் அனைத்து உள்நாட்டுத் திட்டங்களின் மொத்த நிகர சொத்துக்களின் மதிப்பு 31.03.2002 அன்றுள்ளபடி ரூ.1,00,594 கோடிகளாகும்.

## 7.10 பரஸ்பர நிதிகளின் குறைபாடுகள்

### ஹுநஅநசவைள ழக ஆரவரயட குரனௌள

பரஸ்பர நிதிகளில் செய்யப்படும் முதலீடு பல்வேறு அபாயங்களைச் சந்திக்கின்றது. அவை பின்வருமாறு:

1. சந்தை இடர் (ஆயசமநவ சுளைம): சந்தை இடர் ஆனது மூலதனத்தின் இழப்பிற்கு வழிவகுக்கலாம். பல காரணங்களினால் பங்குகள், கடன் பத்திரங்களின் சந்தை விலை ஏற்ற, இறக்கத்திற்கு உள்ளாகிறது. சந்தை விலையில் நெகிழ்வு முற்றிலும் தவிர்க்க இயலாததாகும். ஆகவே, சந்தை இடரைக் குறைப்பதற்கு என முதலீட்டாயர்கள் அவர்களது பணத்தை ஒன்றிரண்டு பங்குகளின் மட்டும் இடாமல், பல்வேறு கருவிகளிலும் பகிர்ந்து பரவலாக இடவேண்டும் ஆகவே,

ஒரு ஈடு சந்தை நிலைமைகளில் மோசமாக பாதிப்படையும் நிலையில், மற்ற வகை குறைவாக பாதிப்படைந்திருக்கலாம். ஆகவேதான், பரஸ்பர நிதிகள் தங்களின் நிதியை பல கம்பெனிகளில் முதலீடு செய்வதன் மூலம் தமது திரட்டையை (சழவகழடழை) பரவலாக்கிக் கொள்கின்றன.

2. வட்டி வீத இடர் (ஐவெநசநளவ சுயவந சுளைம): நிலைத்த வருமானத்தை உடைய கடன் பத்திரங்கள், பத்திரங்கள் போன்ற ஈடுகளின் மதிப்பு ஆனது சந்தையில் நிலவும் வட்டி வீதத்தைப் பொறுத்து அமைகின்றது. வட்டி வீதம் உயர்ந்தால், ஈட்டின் மதிப்பு குறைகிறது. மாறாக வட்டி வீதம் அதிகரித்தால் ஈட்டின் மதிப்பு ஏறுகிறது. இவ்வித இடர் தவிர்க்க முடியாதது ஆகும்.

3. பணவீக்க இடர் (ஐகெடயவழைெ சுளைம): முதலீடுகள் மீதான மீள்வருகை ஆனது நுகர்வோர் விலைகளில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப விகிதாச்சார வீதப் படி மாறுவதில்லை. இவ்வித இடரே பணவீக்க இடர் எனப்படுகின்றது. அவ்வித இடரையும் தவிர்த்தல் இயலாது. ஆயினும் நிதியானது தமது நிதியின் ஒரு பகுதியை உயர்ந்தளவு மீள்வருகையைத் தரவல்ல சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் இவ்வித இடரைக் குறைக்க முயற்சிக்கலாம்.

4. வணிக இடர் (டீரளiநௌள சுளைம): வணிக இடரானது வணிகத்தின் நிதி சார்ந்த சிறந்த தன்மை, முறையான மேலாண்மை போன்றவற்றுடன் தொடர்பு உடையதாக உள்ளது. வணிகம் ஒன்று நிதிசார்ந்த சிறப்பு இன்றியோ, முறையற்று நிர்வாகம் செய்யப்படும் நிலையிலோ இருப்பின் தானாகவே, அதன் ஈடுகளின் விலை சந்தையில் சரியத் தொடங்கும். இவ்வகை இடர் பட்டியலைப் பரவலாக்குவதன் மூலம் ஓரளவுக்குத் தவிர்க்கப்பட முடியும்.

5. கடன் இடர் (ஊசநனவை சுளைம): சில சமயங்களில், பரஸ்பர நிதியானது அதன் வட்டியையோ அல்லது முதலையோ அளிக்கத் தவறலாம். அவ்வித அபாயம் ஆனது கடன் அபாயம் எனப்படுகிறது. இயல்பாகவே, இவ்வித இடர் ஆனது தவறான நிர்வாகம், நிறுவனக் கலைப்பு போன்ற காரணங்களினால் ஏற்படுகிறது. இவ்வகை இடரைத் தவிர்க்க, பரஸ்பர நிதிகள் நம்பத்தக்க கடன் வரிசைத் தரமிடல் அமைப்புகளிடம் இருந்து வரிசைத் தரத்தைப் பெற்ற கம்பெனிகளையே முதலீட்டிற்கு என தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

6. அரசியல் இடர் (ீழடவைiஉயட சுளைம): போர், அரசு மாற்றம் போன்ற காரணங்களினால் சந்தை விலையில் ஏற்படும் மாற்றமே அரசியல் இடர் என அழைக்கப்படுகிள்றது. இவ்வித இடர் தவிர்க்கப்பட முடியாதது ஆகும். ஆனால் பரவலாக்கல் ஓரளவிற்கு இதனைக் குறைக்க வழிவகுக்கும்.

7. ரொக்கமாக்கும் தன்மை இடர் (டுiஙரனைவைல சுளைம): ரொக்கமாக்கும் தன்மை இடர் ஆனது ஈடுகளின் சந்தையிடுகைத் தன்மையுடன் தொடர்புடையதாக உள்ளது. பரஸ்பர நிதிகளில் பல

திட்டங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் சந்தையை விட்டு வெளியில் வர அதற்கென்று ஒரு நேரத்தை நிர்ணயித்துக் கொள்கின்றன. ஆகவே, பரஸ்பர நிதிகள் தாம் நினைத்த நேரத்தில் சந்தைக்குள் நுழைந்து தாம் நினைத்த நேரத்தில் சந்தையை விட்டு வெளியே வர இயலாது. ஆகவே, இவ்வித இடரும் தவிர்க்க இயலாததாகவே உள்ளது எனலாம்.

8. நேர இடர் (வுைஅைபெ சுளைம): ஒவ்வொரு முதலீடும் செய்யப்பட வேண்டிய காலம் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தவறான காலத்தில் வாங்கி, விற்கப்படும் ஈடுகள் நிச்சயம் நட்டத்திற்கே வழிவகுக்கும். இது தவிர்க்கப்பட வேண்டும். இல்லையெனில், அதன் முதன்மை நோக்கமே தோல்வியுற்று விடும் வேண்டும். இல்லையெனில், அதன் முதன்மை நோக்கமே தோல்வியுற்று விடும் பரஸ்பர நிதியின் வல்லுநர்கள் சந்தை நிலைமையை நன்கு ஆய்வு செய்து ஈடுகளின் வாங்கல்∵விற்றலுக்குரிய சரியான காலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## 7.11 தொகுத்தறிவோம்

பரஸ்பர நிதி என்பது பலமூலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட நிதிகளை வைத்து நிர்வகிக்கும் நிறுவனங்களே பரஸ்பர நிதி என்று அழைக்கப்படுகிறது. மேலும் இந்தப்பாடப் பகுதியில் வகைகள் நன்மை மற்றும் தீமைகள் அமைப்பு முறைகள் விதிமுறைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டுருக்கிறது.

## 7.12 கலைச் சொற்கள்

- பரஸ்பரநிதி
- வகைகள்
- திட்டம்
- முதலீடு
- அமைப்பு

## 7.13 வினாக்கள்

1. பரஸ்பர நிதியின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
2. பரஸ்பர நிதியின் நன்மை மற்றும் தீமைகள் பற்றி விவரி.
3. பரஸ்பர நிதியின் சட்ட விதிமுறைகளை விளக்குக.
4. பரஸ்பர நிதியின் அமைப்பு முறைபற்றி எழுதுக.
5. பரஸ்பர நிதியின் வகைகள் பற்றி எழுதுக.

## 7.14 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India

2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.

3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.

4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 8 குத்தகை நிதியிடல்

# LEASE FINANCING

8.1 அறிமுகம்

8.2 குத்தகையிடலின் பொருள்

8.3 குத்தகை ஒன்றின் இயல்புகள்

8.4 நிதி ஆதாரம் என்ற நிலையில் குத்தகையிடுதல்

8.5 குத்தகை நடவடிக்கைகளின் கட்டங்கள்

8.6 குத்தகை நிதியிடுதலின் வடிவங்கள்

8.7 குத்தகையிடுதலின் நன்மைகள்

8.8 குத்தகையிடுதலின் தீமைகள்

8.9 இந்தியாவில் குத்தகையிடல்

8.10 தொகுத்தறிவோம்

8.11 கலைச்சொற்கள்

8.12 வினாக்கள்

8.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 8.1 அறிமுகம்

**Introduction**

குத்தகையிடல் என்பது ஒரு நிதிச் சேவையாகும். இதன் கீழ் நிறுவனம் ஒன்று சொத்து ஒன்றின் உடைமை உரிமையை (Ownership) பெறாமல் அதனைப் பயன்படுத்தும் உரிமையை மட்டும் பெறுகிறது. இந்த ஏற்பாட்டின் கீழ், நிறுவனம் ஒன்று சொத்து ஒன்றின் உடைமை உரிமையைப் பெறாமல் அதனைப் பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே இலாபம் பெறுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. எளிமையாகக் கூறவேண்டுமெனில், குத்தகை என்பது மற்றவருக்கு சொந்தமாக உள்ள சொத்து ஒன்றின் உபயோகமாகும்.

சட்டக் கூறுகளில் குத்தகை என்பது ஓர் ஒப்பந்தம் என இந்திய ஒப்பந்த சட்டம், 1872 கூறுகிறது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ், குத்தகை எடுப்பவர் (Lessee) வசமே சொத்து இருக்கிறது. அவரே சொத்தை பயன்படுத்தவும் செய்கிறார். அதேசமயத்தில், அச்சொத்தின் உடைமை உரிமையானது குத்தகை விடுபவர் (Lessor) வசம் இருக்கிறது. ஆகவே, குத்தகைக்கு விடுதல் என்பது குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு அவ்வப்பொழுது வாடகை (Rent) என்ற வடிவில் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையை அளித்து மற்றொரு நபரின் மூலதனச் சொத்தின் உடைமையையும் பயன்படுத்தும் உரிமையையும் ஒருநபர் பெறக் கூடிய ஒரு ஏற்பாடாகும். இங்கு அச்சொத்தின் சட்டப்படியான உரிமையாளராக குத்தகை விடுபவரே இருப்பார். பொதுவாக, குத்தகை எடுப்பவர் தொடக்க வைப்பாக ஏதேனும் தொகையை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படமாட்டார். ஆகவே, அவர் பயன்படுத்தும் சொத்தில் அவருக்கு

எந்த அக்கறையும் இருக்காது. குத்தகையிடல் முறையின் கீழ், ஒரு வணிக நிறுவனமானது எத்தனை வகையான சொத்தையும் பெறலாம். சொத்துக்களைப் பெறுவதற்கு என மொத்தமாக மூலதனத்தை இடவேண்டிய அவசியமுமில்லை.

வணிக நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், குத்தகையிடல் முடிவானது நிதிசார்ந்த ஒரு முடிவாக உள்ளதே தவிர அது ஒரு முதலீட்டு முடிவல்ல. சொத்து ஒன்றில முதலீடு செய்வது என நிறுவனம் ஒன்று முடிவு செய்து விட்ட நிலையில், அது அதனை வாங்குவதற்குரிய நிதியைப் பெறுவதற்கு உகந்த வழிவகைகளை முடிவு செய்ய விழைகிறது. அம்முடிவானது ஒன்று கடன்பெற்று சொத்தை வாங்குவதா அல்லது குத்தகைக்கு எடுப்பதா என்ற வகையில் அமைகிறது. சொத்தை பணத்தை அளித்து தமக்கே சொந்தமாக வாங்காமல், சொத்து ஒன்றின் உபயோகப்படுத்தும் உரிமையை மட்டும் வாங்கும் ஒரு நிறுவனத்தைப் பொறுத்த மட்டில், குத்தகையிடுதலானது ஒரு நடுத்தர நிதியாகவே அமைகிறது. தொடக்கத்தில் குத்தகைக்கு எடுக்கும் காலம் பொதுவாகவே, சொத்தின் முழு அடக்கத்தையும் மீட்க வகை செய்கிறது. ஆகவே, அதற்குப்பிறகு குத்தகை எடுத்தவர் குத்தகையை குறைந்த வாடகைக்குத் தொடராலம் அல்லது சொத்தை குத்தகைக்கு விட்டவரிடம் திருப்பி அளித்து விடலாம்.

## 8.2 குத்தகையிடலின் பொருள்

## Meaning of Leasing

கடந்த சில ஆண்டுகளாக, கழக நிறுவனங்களுக்கு நீண்டகால நிதியிடும் முக்கியமான ஒரு ஆதாரமாக குத்தகையிடல் தோன்றியுள்ளது எனலாம். குத்தகையிடுதல் என்பது ஒரு ஏற்பாடாகும். அதன் கீழ், ஒரு கம்பெனியானது சொத்துக்களின் உடைமை உரிமையைப் பெறலாம் அவற்றைப் பயன்படுத்தும் உரிமையை மட்டும் பெறுகிறது. அதாவது, ஒரு குத்தகை உடன்படிக்கையில் குத்தகைக்கு விடுபவரானவர் (அதாவது, சொத்தின் உரிமையாளர்) குறிப்பிட்ட ஒரு செலுத்தலை செய்துவிட்டு சொத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு குத்தகைக்கு எடுப்பவரை அனுமதிக்கின்றார். ஆனால் இவர் சொத்தின் உடைமை உரிமையை தன்வசமே தக்கவைத்துக் கொள்கிறார். ஆகவே, குத்தகை என்பது குத்தகைக்கு விடுபவர் மற்றும் குத்தகைக்கு எடுப்பவர் இடையிலான ஒரு உடன்படிக்கையாகும். குத்தகை உடன்படிக்கையில், குத்தகைக்கு விடப்படும் காலம், ரத்து செய்வதற்கான ஷரத்துக்கள், வாடகை செலுத்தல்கள், கூடுதல் வாடகை அல்லது கொள்முதல் விருப்பத் தேர்வுகள், நிர்வாக மற்றும் ஏனைய செலவுகளின் ஒதுக்கீடு மற்றும் உடன்படிக்கையின் ஏனைய இயல்புகள் போன்றன அடங்குகின்றன.

குத்தகையிடலானது உடைமை உரிமைக்கு ஒரு மாற்றாக அமைவதால், நிதியைப் பெறுவதற்கான ஒரு சிறப்பு வழிவகையாக அது

கருதப்படலாம். இக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது, குத்தகையிடல் ஒரு நிதிசார்ந்த முடிவே ஆகும். ஆனால், நிதியைத் தவிர்க்கும் ஒரு வழியாக இதை நாம் கருதிவிடக்கூடாது கம்பெனியானது சொத்தை தனக்கென சொந்தமாக வாங்கிக் கொள்ளாமல் கடனாகப் பெறுவதற்கு முடிவு செய்வதால் குத்தகையிடல் ஒரு நிதியிடலாகக் கருதப்படுகின்றது. இதன்படி குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட தொகைகள் செலுத்தப்பட வேண்டும். ஆகவே, குத்தகை என்பது கம்பெனியில் வெளியிடப் படும் ஏனைய நிதிக் கோரிக்கைகளுக்கு ஒரு மாற்றே (Analogous) ஆகும். இங்கு முக்கியமான ஒரு கேள்வி என்னவென்றால் நிதியிடலுக்கான ஏனைய மாற்று வழிகளுடன் ஒப்பிடும்பொழுது குத்தகைக்காகும். அடக்கம் எவ்வளவு ஆகும் என்பதேயாகும். இந்த அடக்கச் செலவைப் பொறுத்தே கம்பெனிகள் சொத்தை குத்தகையிடல் மூலம் பெறுவதா அல்லது சொந்தமாகவே வாங்கிக் கொள்வதா என்பதை முடிவு செய்தல் வேண்டும்.

இப்பொழுது நாம் குத்தகை என்ற சொல்லிற்கு அறிஞர்கள் மற்றும் நிறுவனங்களால் வகுக்கப்பட்ட இலக்கணங்களுள் சிலவற்றைக் கீழ்க்கண்டவாறு காணலாம்

**வணிகம் மற்றும் மேலாண்மையின் அகராதி வகுத்துள்ள இலக்கணம்**

**Definition Formulated by the Dictionary of Business and Management**

வணிகம் மற்றும் மேலாண்மையின் அகராதியானது குத்தகை என்ற சொல்லுக்கு பின்வருமாறு இலக்கணம் வரைகிறது.

“ வழக்கமாகவே செலுத்தலின் மறுபயனாக வாடகை என்ற வடிவில் நிலம், இடம், அமைப்பு அல்லது கருவியின் உபயோகம் அல்லது ஆக்கிரமிப்பினை (Occupancy) மாற்றித்தரும் ஒரு வகை ஒப்பந்தமே குத்தகையாகும்

**ஜேம்ஸ் சி.வேன் ஹார்னின் இலக்கணம்**

**Definition of James C.Van Horne**

ஜேம்ஸ் சி. வேன் ஹார்ன என்பவர் “ வாடகை செலுத்தலுக்கு மறுபயனாக, உடன்பட்ட ஒரு காலகட்டத்திற்கு சொத்தினைப் பயன்படுத்துவதற்கான பிரத்யேகமான உரிமையை சொத்தின் உரிமையாளர் (Lessor) மற்றொரு நபருக்கு (Lessee) அளிக்கும் ஒரு ஒப்பந்தமே குத்தகையாகும்.” என குத்தகை என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுக்கின்றார்.

**யு.கே.யின் கருவி குத்தகையளிக்கும் கழகத்தின் இலக்கணம்**

**Definition of Equipment Leasing Association of U.K.**

யு.கே.யின் கருவி குத்தகையளிக்கும் கழகமானது. “குத்தகைக்கு எடுப்பவரால் ஒரு தயாரிப்பாளர் அல்லது விற்பனையாளரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட ஒரு சொத்தின் வாடகைக்கென குத்தகைக்கு விடுபவர் மற்றும் குத்தகை எடுப்பவர் இடையிலான ஒரு

ஒப்பந்தமே குத்தகையாகும்” என குத்தகை என்ற சொல்லை வரையறுக்கிறது.

சுருங்கக் கூறின், குத்தகை ஒன்றில் இரண்டு நபர்கள் அடங்கியுள்ளனர். அவர்கள் பின்வருமாறு

1. குத்தகைக்கு விடுபவர் (Lessor),மற்றும்
2. குத்தகைக்கு எடுப்பவர் (Lessee)

குத்தகைக்கு விடுபவர் ஆனவர், ஒரு கம்பெனி, ஒரு கூட்டுறவு சங்கம், ஒரு கூட்டு வணிக நிறுவனம், அல்லது ஒரு தனிநபராக இருக்கலாம். குத்தகைக்கு எடுப்பவரும் ஒரு கம்பெனி, ஒரு கூட்டுறவுச் சங்கம், ஒரு கூட்டு வணிக நிறுவனம் அல்லது ஒரு தனிநபராகவோ அல்லது ஒரு மருத்துவ அல்லது வேறு ஏதேனும் தனிச்சிறப்பு பெற்ற நபராகவோ கூட இருக்கலாம்.

## 8.3 குத்தகை ஒன்றின் இயல்புகள்

## Features of a Lease

வாடகை செலுத்தலுக்கு மறுபயனாக சொத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான பிரத்யேகமான உரிமையை மற்றொரு நபருக்கு சொத்தின் உரிமையாளர் அளிக்கும் ஒரு ஒப்பந்தமே குத்தகையாகும் என்று நாம் முன்பே கூறினோம். கார். தொலைபேசி, வீடு போன்றவைகளின் குத்தகையை நம்முன் பெரும்பாலானோர் அறிந்திருப்போம். பொதுவாக குத்தகை செலுத்தல்கள் மாதந்தோறும் அல்லது காலாண்டுதோறும் செலுத்தப்படுகின்றன. பொதுவாக இச்செலுத்தல்கள் தொடக்கத்தில் செலுத்தப்படுகின்றன. தவிரவும் சொத்தை யார் நிர்வகிப்பது என்பதையும் குத்தகை ஒப்பந்தம் குறிப்பிடுகிறது. இது குத்தகை வகையினைப் பொறுத்து அமைகிறது.

குத்தகையானது ரத்து செய்யப்படக் கூடிய குத்தகை அல்லது ரத்து செய்யப்பட முடியாத குத்தகை என ஏதேனும் வகையினைச் சார்ந்ததாக இருக்கலாம். ரத்து செய்யப்படும் பொழுது சில சமயங்களில் அபராதம் கட்ட நேரிடலாம். அலுவலக இடத்திற்கான செயல்முறைக் குத்தகை ஒன்று சாதாரணமாக குறுகிய காலத்திற்கே மேற்கொள்ளப்படுகிறது. அது உரிய அறிவிப்பு செய்யப்பட்டு ரத்து செய்யப்படக் கூடியதாக இருக்கிறது. இவ்வகை குத்தகையின் காலம் சொத்தின் பொருளாதார வாழ்வை விடக் குறுகியதாக இருக்கிறது. செயல்முறைக் குத்தகையின் மற்ற உதாரணங்களுள். நகலக இயந்திரங்கள், குறிப்பிட்ட கணிப்பொறி கடினப்பொருள்கள், சொல் பதனப்படுத்திகள், மற்றும் வாகனங்களின் குத்தகை போன்றன. அடங்குகின்றன. சில செயல்முறைக் குத்தகைகள் ரத்து செய்யப்பட முடியாததாக இருக்கின்றன. உதாரணமாக, விமானம் 8 ஆண்டு குத்தகைக்கு எடுக்கப்படுகின்றது. ஆனால், நிதிக் குத்தகையானது நீண்டகாலத் தன்மையுடையதாகவும் ரத்து செய்யப்பட முடியாததாகவும் இருக்கிறது. இவ்வகைக் குத்தகையில் குத்தகைதாரர் குத்தகைக் காலம்

முடிவடையும் வரையில் வாடகை செலுத்தக் கடமைப்பட்டவராக இருக்கின்றார். இங்கு பொதுவாக, குத்தகைக் காலம் சொத்தின் ஆயுள் வரை செல்வதாகவே அமைகின்றது

இறுதியாக குத்தகை ஒப்பந்தமானது, குத்தகை முடிவுறும் சமயம் குத்தகைக்கு எடுப்பவருக்கு ஒரு வகையான தேர்வைக் குறிப்பிடுகிறது. அது குத்தகை முடிந்தவுடன் குத்தகையை புதுப்பித்தலாகவோ அல்லது சொத்தை வாங்கிக் கொள்வதாகவோ இருக்கலாம். இவரது தேர்வுகளுள் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றாத நிலையில்,குத்தகைக்கு விடுபவர் சொத்தை திரும்ப எடுத்துக் கொள்கிறார். அச்சொத்தின் எஞ்சிய மதிப்பினைப் பெறும் தகுதியையும் பெறுகின்றார். இந்த எஞ்சிய மதிப்பே குத்தகைக்கு எடுப்பவருக்கு குத்தகைக்கு ஆகும். அடக்கத்தை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாக அமைகிறது எனலாம். குறிப்பாக இது செயல்முறைக் குத்தகையில் உண்மையாக இருக்கிறது

## 8.4 நிதி ஆதாரம் என்ற நிலையில் குத்தகையிடுதல்

## Leasing as a Source of Finance

குத்தகைக்கு எடுப்பவருக்கு குத்தகையிடுதல் முக்கியமான ஒரு நிதி ஆதாரமாக விளங்குகின்றது எனலாம். பொதுவாகவே, குத்தகை நிதியளிக்கும் கம்பெனிகள் பின்வருவனவற்றிற்கு நிதி அளிக்கின்றன.

1. வணிகத்தினை நவீனமயமாக்குதல்
2. சரியீடு செய்யும் கருவியினை நிர்மாணித்தல்
3. கார்கள், இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள்
4. சுகசாதனப்பொருட்கள்
5. வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களால் நிதியிடப் பெறாத சொத்துகள்

## 8.5 குத்தகை நடவடிக்கைகளின் கட்டங்கள்

## Steps is Leasing Transactions

குத்தகை எடுப்பவருக்க தமது தொழிலுக்கு என ஏதேனும் இயந்திரம் அல்லது கருவி தேவைப்படும் பொழுது அதை குத்தகைக்கு எடுக்க விரும்பினால் அவர் பின்வரும் நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

1. முதலில் யாரிடமிருந்து அதாவது எந்த அளிப்பாளர் அல்லது தயாரிப்பாளரிடம் இருந்து தமக்கு வேண்டிய இயந்திரம் அல்லது கருவியை வாங்க வேண்டும் என்பதை அவர் நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது அவர் விலை, உத்தரவாதம், குத்தகைக் கட்டணங்கள், பராமரிப்பு போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
2. அவ்வாறு வாங்குவதற்கு என அளிப்பாளரைத் தேர்ந்தெடுத்தபின் அவரோடு இவர் ஓர் உடன்பாடு

ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த உடன்பாட்டில் பின்வரும் அம்சங்கள் இருத்தல் வேண்டும்.

1) குத்தகைக் காலத்தில் குத்தகை மீட்கப்பட முடியாது அதாவது மாற்றப்படமுடியாது (Irrevocable) என்பது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்
2) செலுத்த வேண்டிய வாடகைக் தொகை, வாடகை செலுத்தப்பட வேண்டிய நேரம் மற்றும் காலம் போன்றனவும் குறிப்பிடப்படடிருக்க வேண்டும்.
3) பராமரிப்பு, மராமத்து, வரி, காப்பீடு ஆகியவற்றிற்காகும் செலவு மற்றும் ஏனைய செலவுகள் தொடர்பான அம்சங்கள் தரப்பட்டு இருக்க வேண்டும்
4) பின்பற்றப்படப் போகின்ற குத்தகை வகை மற்றும் விருப்பத்தேர்வு முதலியனவும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

3. ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டவுடன், குத்தகைக்கு விடுபவர் குத்தகைக்கு எடுப்பவரிடம் உரிய சொத்தை வழங்கவார்.

## 8.6 குத்தகை நிதியிடுதலின் வடிவங்கள்

## Forms of Lease Financing

பரந்த நோக்கில் பார்த்தால் குத்தகை நிதியிடுதல் ஆறு மாறுபட்ட வடிவங்களாக பகுக்கப்படலாம் அவை பின்வருமாறு

### 1. விற்றுப்பின் மீண்டும் குத்தகைக்கு எடுத்தல்

### Sale and Lease Back Financing

இக்குத்தகை முறையில், குத்தகை எடுப்பவரால் முன்னரே கொள்முதல் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வரும் ஓர் சொத்தானது அதற்கரிய விலையை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு குத்தகை விடுபவருக்கு விற்கப்படுகின்றது. பின் அதே சொத்து குத்தகை விடுபவரிடம் இருந்து நிதிக் குத்தகை ஏற்பாட்டின் கீழ் அவரால் குத்தகைக்கு எடுக்கப்படுகின்றது. இவ்விதமான நிதியை எழுப்பும் முறை குத்தகை எடுப்பவரின் நடைமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றது. இம்முறையில், உடைமை உரிமை குத்தகை விடுபவரிடமே இருக்கும் குத்தகை எடுப்பவர் குத்தகைத் தொகையைக் கொடுத்துவிட்டு அச்சொத்தைப் பயன்படுத்திக் கொள்வார்.

இவ்வகை ஏற்பாட்டின் முதன்மை நன்மை என்னவென்றால், சொத்தை விற்று, பின் மீண்டும் குத்தகைக்கு எடுக்கும் கம்பெனி, அச்சொத்தினை விற்றுப் பெறும் தொகையை தன் வணிகத்தில் ஈடுபடுத்தலாம். அதே சமயத்தில் அச் சொத்தினையும் அதன் ஆயுள் வரை பயன்படுத்திக் கொள்ளாலம். இவ்வகை குத்தகையிடுதல்

பெரும்பாலும் வீடு, நிலம் போன்றவற்றின் மீது நிதியிடும் கம்பெனிகளாலேயே பின்பற்றப்படுகின்றது.

**2. நேரடிக் குத்தகையிடுதல்**

**Direct Leasing**

நேரடிக் குத்தகையின் கீழ், கம்பெனியானது முன்பு தனக்குத் சொந்தமாகக் கொண்டிராத சொத்தினைப் பயன்படுத்தும் உரிமையைப் பெறுகிறது. நேரடிக் குத்தகையிடுதலானது உற்பத்தியாளர் மூலமோ அல்லது நிதி நிறுவனங்கள் மூலமோ ஏற்பாடு செய்யப்படுகின்றது. குத்தகையிடும் கம்பெனிகள் அல்லது நிதி நிறுவனங்கள் இயந்திரம் போன்ற தமது வாடிக்கைக்காரர்களின் வணிகத்திற்குத் பயன்படும் சொத்துக்களை வாங்கும் வணிகத்தில் ஈடுபடுகிள்றன. குத்தகைக்கு அளிக்கும் நிறுவனம் சொத்தை சொந்தமாக்கிக் கொண்டவுடன், வழக்கமான கூறுகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஒரு நேரடிக் குத்தகை ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**3. செயல்முறைக் குத்தகையிடுதல்**

**Operating Leasing**

இக்குத்தகையில், உடைமை உரிமை (Ownership) குத்தகை விடுபவரிடமே இருக்கும். சொத்து அல்லது கருவி மட்டும் குறுகிய கால வாடகைக்கு குத்தகை எடுப்பவருக்குத் தரப்படும். இவ்விதக் குறுகிய கால செயல்முறைக் குத்தகை, மோட்டார் வாகனங்கள், கணிப்பொறிகள், கப்பல்கள் போன்றவற்றில் பரவலாகக் காணப்படுகின்றது. இவ்விதக் குத்தகையில் வழக்கொழிந்து போதல் (Obsolescence) மற்றும் தற்செயலாக நிகழக் கூடிய இடர்கள் போன்றவைகளை குத்தகை விடுபவரே ஏற்கின்றார். இவை குத்தகை எடுப்பவருக்கு மாற்றப்படுவதில்லை. குத்தகையோடு சம்பந்தமுடைய இருதரப்பினரில் எவர் வேண்டுமானாலும் தகுந்த அறிவிப்பபைச் செய்து விட்டு குத்தகையை முடிவுக்குக் கொண்டு வரலாம். பிறகு அச்சொத்தை குத்தகைக்கு எடுக்க விரும்பும் மற்றொரு குத்தகை எடுப்பவருக்கு குத்தகைக்கு விடலாம்.

இவ்விதக் குத்தகை முறையில், சொத்தை இயக்கவும் கையாளவும் கூடிய சிறப்பான தொழில்நுட்ப அறிவை உடைய குத்தகை விடுபவர்கள் இவை தொடர்பான விசேஷமான பணிகளையும் குத்தகை எடுப்பவருக்குச் செய்கின்றனர். சொத்து விரைவில் வழக்கொழிந்து போதல் போன்ற ஆபத்தை உடையதாகவும், இது சிறிது காலத்திற்கு மட்டுமே குத்தகை எடுப்பவருக்குத் தேவையாக இருப்பதாகவும் இருந்தால் மட்டுமே இவ்விதக் குத்தகை பொதுவாக விரும்பி ஏற்கப்படுகின்றது.



**4. சேவைக் குத்தகையிடுதல்**

**Service Leasing**

சேவைக் குத்தகையிடுதலானது கருவிகள் மற்றும் செயல்முறைகளுக்கு அனைத்து அன்றாட மராமத்து மற்றும் சரிபார்ப்புகளுக்கும் வகை செய்கிறது. பொதுவாக, இச்செலவுகளை குத்தகைக்கு விடுபவரே செய்கிறார். இவை குத்தகையில் நிர்வகிப்பதற்கான மற்றும் மராமத்துக்கான செலவுகளை குத்தகைக்கு எடுப்பவரே ஏற்கிறார்.

**5. நிதிக் குத்தகையிடுதல்**

**Financial Leasing**

நிதக் குத்தகையில் சொத்தின் உடைமையுரிமைக்கு தற்செயலாக நிகழ்கின்ற இடர்கள் மற்றும் வெகுமானம் போன்றவை குத்தகைக்கு விடுபவரால் குத்தகை எடுப்பவருக்கு மாற்றித் தரப்படுகின்றன. ஆனால் சொத்துரிமை மாற்றியளிக்கப் படுவதில்லை. இக்குத்தகை ஓர் நீண்டகாலக் குத்தகை ஆகும். இங்கு குத்தகை விடுபவர் நிதரியளிப்பவர் போன்று பணிபுரிவதால், இவர் சொத்துக்களை மராமத்து செய்தல், பராமரித்தல் போன்ற பணிகளைப் புரிவதில்லை. சட்டச் சொத்துரிமையானது குத்தகைக்கு விடுபவரால் தக்க வைத்துக் கொள்ளப்படுகிறது. குத்தகைக்கு விட்ட சொத்தை வாங்கச் செலுத்திய தொகை மற்றும் அதற்காகும் வட்டி போன்றவை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குத்தகை எடுப்பவரிடம் இருந்து பெறப்படும் குத்தகை வாடகைகளின் மூலம் திரும்பப் பெறப்படுகின்றன.

**நிதிக் குத்தகைக்கும் செயல்முறைக் குத்தகைக்கும் இடையேயான வேறுபாடுகள்**

## The Difference between the Financial Lease and Operating Leaste

| | நிதிக் குத்தகை (FINANCIAL LEASE) | செயல்முறைக் குத்தகை (OPERATING LEASE) |
|---|---|---|
| 1. | உடைமையுரிமையானது குத்தகையின் நிபந்தனை முடியும் தறுவாயில் மாற்றப்படுகின்றது. | உடைமையுரிமை மாற்றப்படுவதில்லை. |
| 2. | கொள்முதல் விருப்பத்தோடு குத்தகையிடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. | இவ்விதக் கொள்முதல் விருப்பம் இங்கே காணப்படுவதில்லை. |
| 3. | குத்தகையின் கால அளவு ஏற்ககுறைய கருவியின் ஆயுள்காலத்திற்கு இணையாக உள்ளது. | குத்தகையின் கால அளவு மிகக் குறைந்த அளவினதானதொரு கால அளவாகவே உள்ளது. |
| 4. | குத்தகை செலுத்தல்கள் பெரும்பாலும் கருவிகளின் அடக்க விலை மற்றும் அத்தொகையின் மீதான வட்டி ஆகியவைகளை முழுவதுமாக உள்ளடக்குபவைகளாக இருக்கும். | இங்கு அது அவசியமில்லை |

**6. ஆதாயமாகக்கப்பட்ட குத்தகையிடுதல்**

**Leveraged Leasing**

ஆதாயமாக்கப்பட்ட குத்தகையிடுதலில், குத்தகைக் காலத்தில் குத்தகைக்குச் சொத்தினைப் பெறுவர் குறிப்பிட்ட இடைவெளிகளில் செலுத்துவதாக உடன்பட்டு அதற்குப் பிரதிபலனாக அக்குறிப்பிட்ட காலத்திற்குச் சொத்திகைப் பயன்படுத்தும் தகுதியினைப் பெறுகிறார். குத்தகைக்கு விடுபவர் சொத்தின் உரிமையாளராக் இருக்கிறார். ஆனால், அச்சொத்தின் ஒரு பகுதியை மட்டும் சொந்தப் பணத்திலிருந்து செலுத்துகிறார், மற்றொரு பகுதிக்கு நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் பெறுகிறார். பொதுவாக, நிதி நிறுவனங்கள் சொத்தின் மீது அடமானம் மற்றும் குத்தகை மற்றும் குத்தகை செலுத்தல் ஒதுக்கீடுகள் மூலம் கடனளிக்கின்றன. ஆகவே, குத்தகைக்கு விடுபவர் ஒரே சமயத்தில் உரிமையாளராகவும் கடன் பெறுபவராகவும் இருக்கின்றார். இம்முறை நமது பிரசித்தி பெற்ற தவணை முறையைப் போலவே உள்ளது எனலாம்.

**7. விற்பனைக்கு உதவி செய்யும் குத்தகை**

**Sales – aid Lease**

குத்தகைக்கு விடுபவர் அல்லது குத்தகைக்கு விடும் கம்பெனி கருவியை விற்பவர் அல்லது உற்பத்தி செய்பவரிடம், குத்தகைக்கு விடுவதன் மூலம் அவருடைய பொருளின் சந்தையிடுகைக்கு உதவி புரிவதாக அவரோடு ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் ஏற்பாடே விற்பனைக்கு உதவி செய்யும் குத்தகை ஆகும். இவ்வித விற்பனைகளின் மீது, குத்தகைக்கு விடும் கம்பெனி, உற்பத்தியாளர்களிடமிருந்து குறிப்பிட்ட ஓர் சதவிகிதம் தரகைப் பெறுகின்றது.

## 8.7 குத்தகையிடுதலின் நன்மைகள்

## Merits of Leasing

1. குத்தகை எடுப்பவர் சொத்தின் விலையை மொத்தமாக அளிக்க வேண்டிய அவசியமில்லை. அதற்குப்பதிலாக குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கொடுப்பதன் மூலம் விலை மிக அதிகமான சொத்துக்களையும் கூட எளிதில் தம் உபயோகத்திற்காகப் பெறமுடியும்.
2. நெகிழ்ச்சித் தன்மை தான் குத்தகையிடுதலின் மிக முக்கியமான நன்மை ஆகும். குத்தகை எடுப்பவரின் தேவைகளுக்கு ஏற்ப குத்தகை ஏற்பாடுகளை குத்தகை விடும் கம்பெனி மாற்றியமைக்கிறது.
3. நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் மற்றும் பிற வசதிகளைப் பெறுதலுக்கு மாற்று ஏற்பாடாக குத்தகையிடுதல் அமைகின்றது. மேலும், வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்

பெறுவதில் உள்ளது போலல்லாமல் ஆவணமிடுதல் இங்கு குறைவாகவே உள்ளது.

4. செயல்முறைக் குத்தகையின் மூலம் வழக்கொழிந்து போதல் போன்ற இடர்களையும் தவிர்த்து விடலாம். ஏனெனில். இம்முறையில் வழக்கொழிந்து போதல் இடரானது குத்தகை விடுபவரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
5. குத்தகை எடுப்பவர் நகலகக் கருவி, கப்பல் கட்டுதல் போன்றவைகள் தொடர்பான பராமரிப்புப் பணிகளுக்கு குத்தகை விடுபவரை நம்பி இருப்பாரெனில் இவ்விதக் கருவிகளை குத்தகைக்கு எடுப்பது மிகவும் ஏற்றதாகும். ஏனெனில், குத்தகைக்கு விடுபவர் புரியும் பணிகளையும் ஏற்றுக் கொள்ளலாம். அதேநேரம் அக்கருவிகள் தொடர்பான இடர்களையும் சந்திக்க வேண்டிய அவசியமில்லை.
6. விற்ற பின் குத்தகைக்கு எடுத்தல் குத்தகை முறையின் மூலம் குத்தகை எடுக்கும் நிறுவனம் ஓரளவிற்கு தமது நடப்பு நிதித் தேவையையும் பூர்த்தி செய்து கொள்ளலாம்.
7. கடனுக்கு நிதியைப் பெற இயலாத சூழ்நிலைகளில் குத்தகைக்கு கருவிகளைப் பெறுதல் சிறந்த ஓர் வழியாக அமைகின்றது.

## 8.8 குத்தகையிடுதலின் தீமைகள்

## Demerits of Leasing

1. புதிய திட்டங்களை அமைத்தலில் குத்தகையிடலினால் அதிகப் பயன் எதுவும் இருக்காது. ஏனெனில், சொத்துக்களை வங்கியவுடன் அதன் குத்தகைகள் செலுத்தப்பட வேண்டியனவாகிவிடும்.
2. பொதுவாக, குத்தகையிடும் நிறுவனங்கள் சொத்துக்களை வங்கிக் கடனின் உதவியுடனேயே வாங்ககுகின்றன. குத்தகையிடும் நிறுவனம் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாவிட்டால், வங்கி அச்சொத்தை திருப்பி எடுத்துக் கொள்ளும். இது குத்தகை எடுப்பவரை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கி விடும்.
3. குத்தகை நிதியிடலில் வட்டி மிக அதிகமாக உள்ளது.
4. குத்தகைக் காலம் முடிந்த உடன் குத்தகைக்கு விடப்பட்ட சொத்து திரும்பவும் குத்தகை விடுபவருக்கே வந்து சேர்கின்றது. எனவே, அதன் எஞ்சிய மதிப்பில் (Residual Valur) எந்த ஒரு தொகையையும் குத்தகை எடுத்தவர் கேட்டுப் பெற இயலாது. அது முழுவதும குத்தகை விட்டவருக்கே சொந்தமாகி விடும்.

5. குத்தகைக்கு விடப்பட்ட சொத்து குத்தகை விடுபவரால் வாங்கப்பட்டதாகும். விற்றவரால் தரப்பட்ட சான்று உறுதிகள் சில நேரங்களில் குத்தகை பெற்றவருக்குக் கிடைக்காது.

## 8.9 இந்தியாவில் குத்தகையிடல்

## Leasing in India

இந்தியாவில் குத்தகையிடும் நிறுவனங்களின் வளர்ச்சி 1980 களில் தான் ஏற்பட்டது. 1984 –ல் குத்தகையிடும் நிறுவனங்களின் எண்ணிக்கை சுமார் 150 ஆக இருந்தது. இப்பொழுது அதன் எண்ணிக்கை சுமார் 1400 ஆக உயர்ந்து உள்ளது. குத்தகையிடும் நிறுவனங்கள் தன்னிச்சையாக செயல்படுவனவைகளாகவோ, உற்பத்திக் கம்பெனிகளின் துணைக் கம்பெனிகளாகவோ அல்லது மத்திய, மாநில நிதிக் கழகங்களின் துறையாகவோ இருக்கலாம்.

கருவிகளின் குத்தகையிடல் முதல் முதலில் இந்தியக் கடன் மற்றும் முதலீட்டுக் கழகத்தால் தான் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்பொழுது இக்கழகம், ஏற்றுமதி, விரிவாக்கம் போன்றவற்றிற்கும் குத்தகை நிதியளிக்கின்றது.

இந்தியாவில் நிதிக் குத்தகைகள்தான் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. செயல்முறைக் குத்தகைகளில் இடர் மிக அதிகளவினதாக இருப்பதால், இவை அவ்வளவாக பிரசித்தி பெறவில்லை. இந்தியாவில் குத்தகையிடுதல், நிதியைப் பெறும் வழிகளின் ஓர் மாற்று வகையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புதிய தொழில் கொள்கை, வணிக வங்கிகளை குத்தகையிடுதல் நடவடிக்கையில் ஈடுபட வைக்க உதவும் வகையில் வங்கிமுறை ஒழுங்காற்றுச் சட்டத்தில் செய்யப் பட்ட மாற்றம், இந்திய வருமான வரிசட்டப் பிரிவு 115 J –ன் கீழ் புத்தக இலாபங்களின் மீதான “குறைந்தபட்ட வரி” ஒழிப்பு, முதலீட்டுப் படியின் விலக்கம் போன்றவைகள் குத்தகையிடும் கம்பெனிகளின் அதிவேக வளர்ச்சிக்கு அடிகோலின் என நாம் சொல்லலாம்.

ஒப்பந்தம் சார்ந்த சட்டப் பொறுப்பைப் பொறுத்தவரை குத்தகையிடல் மிக அதிகளவிலான நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டுள்ளது. ஏனெனில் வேண்டிய பொழுது, இவ்வித ஒப்பந்தங்களின் இருதரப்பினரின் (அதாவது குத்தகை எடுப்பவர் மற்றும் குத்தகை விடுபவர்) ஒப்புதலுக்கு ஏற்ப ஒப்பந்தத்தின் சரத்துக்களை மாற்றி அமைத்துக் கொள்ளலாம். வழக்கொழிந்து போதல் போன்ற இடர்களிலிருந்து குத்தகை ஏற்பாடு குத்தகை எடுப்பவருக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கின்றது. குத்தகைத் தொகையானது வருவாய் செலவினமாகக் கருதப்பட்டு இலாப நட்டக் கணக்கில் எழுதப்படுகின்றது. எனவே, வரி செலுத்த வேண்டிய வருமானத் தொகையைக் கண்டுபிடிக்கும் முன்பு கழக்க அனுமதிக்கப்பட்ட தொகைகளுள் குத்தகைத் கண்டுபிடிக்கும் முன்பு கழிக்க அனுமதிக்கப்பட்ட தொகைகளுள் குத்தகைத் தொகையும் ஒன்றாகும். எனவே, குத்தகை

பெறுவரின் வரிச் சுமையைக் குறைக்க இது உதவுகிறது. இவ்விதக் காரணங்களினால், இத்துறை தற்பொழுது நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

## 8.10 தொகுத்தறிவோம்

குத்தகை என்பது தொழில் நிறுவனத்தின் நீண்ட கால நிதியிடலுக்குக் குத்தகையிடல் மிக முக்கியமான வழிமுறையாகும். மேலும் குத்தகையின் நன்மை மற்றும் தீமைகள் மற்றும் அதன் வகைகள் பற்றியும் இந்த பாடப்பகுதி விளக்குகிறது.

## 8.11 கலைச் சொற்கள்

- குத்தகை
- நன்மைகள்
- வகைகள்
- பாதுகாப்பு
- அனுமதி

## 8.12 வினாக்கள்

1. குத்தகையின் வகைகள் பற்றி விவரி.
2. நிதி குத்தகை மற்றும் செயல்முறை குத்தகைக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி விவரி.
3. குத்தகையின் நன்மைகள் பற்றி விவரி.
4. குத்தகை எடுப்பவரின் பணி பற்றி எழுதுக.
5. குத்தகையின் விதிமுறையை விளக்குக.

## 8.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, “Financial Markets and Services”, Himalaya Publishing House Pvt. Ltd., India
2. Dr. Guruswamy S, 2009 “Financial Service”, Tata Mc Graw-hill Education, New Delhi.
3. Prasanna Chandra, 2011 “ Financial Management Theory and Practice”, Tata Mc Graw-hill Education, New Delhi.
4. Khan M Y and Jain P K, 2008, “ Financial Management Text, Problems and Cases”. Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 9 வாடகைக் கொள்முதல்

**Hire Purchase**

9.1 அறிமுகம்
9.2 தவணைமுறைக்கடனின் வடிவங்கள்
9.3 வாடகைக் கொள்முதல் நிதியின் நன்மைகள்
9.4 வாடகைக் கொள்முதல் நிதியின் குறைபாடுகள்
9.5 குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல் ஒற்றுமை
9.6 குத்தகைக்கும் வாடகைக் கொள்முதலுக்கும் இடையிலான வேறுபாடுகள்
9.7 முடிவுரை
9.8 தொகுத்தறிவோம்
9.9 கலைச்சொற்கள்
9.10 வினாக்கள்
9.11 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 9.1 அறிமுகம்

வாடகைக் கொள்முதலும் கூட ஒரு வகைக் கடனே ஆகும். இம்முறையில், குறிப்பிட்ட ஓர் தொகையை வைப்பாகப் பெற்றுக் கொண்டு, மீதமுள்ள தொகையை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குறிப்பிட்ட தவணைகளில் செலுத்துவதற்கான ஒப்பந்தத்துடன பொருட்கள் அவற்றை வாங்கியவருக்கும் அளிக்கப்படுகின்றன. வாடகைக் காலம் முடியும் தறுவாயில், தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பிறகு சட்டப்படியான சொத்துரிமை, வாடகைக்குப் பொருள் பெற்றவருக்கு மாற்றித் தரப்படுகிறது. குறிப்பிடப்பட்ட கால கெடுவிற்கு முன்னரே தொகை முழுவதும் அளிக்கப்பட்டுவிட்டால் அளிக்க வேண்டிய தொகையில் குறிப்பிட்ட ஓர் சதவிகிதம் தள்ளுபடியும் தரப்படுகின்றது.

வாடகைக் கொள்முதலும் சட்டம் 1972 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச் சட்டம் வாடகை நடவடிக்கையில் ஈடுபடும் நிதி அளிப்பவர் மற்றும் பெறுவர் ஆகிய தரப்பினரின் பலதரப்பட்ட உரிமைகள் மற்றும் சட்டப் பொறுப்புகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் சட்டக் சரத்துக்களைக் கொண்டுள்ளது.

## 9.2 தவணை முறைக் கடன் ஆனது மூன்று வடிவங்களைக்

### 1. வாடகைக் கொள்முதல் கடன்

**Hire Purchase Credit**

வாடகைக் கொள்முதல் ஒப்பந்தமானது கடைசித் தவணை செலுத்தப்படும் பொழுது கொள்முதல் செய்து கொள்ளும் தேர்வுடன் கூடிய வாடகைக்கான ஒரு உடன்படிக்கை ஆகும். இவ்விதக் கடனானது கொள்முதல் விலையின் ஒரு பகுதி அல்லது முழுத்தொகையை தவணைகளில் செலுத்த உடன்படும் மற்றும் இறுதி செலுத்தல் வரை

உடைமை உரிமையை தக்க வைத்துக் கொள்ளும் விற்பனையாளர்களால் அளிக்கப்படுகிறது.

**2. நிபந்தனையுடன்கூடிய விற்பனை**

**Conditional Sale**

நிபந்தனையுடன் கூடிய ஒரு விற்பனையில், விற்பனையாளர் தனக்கு நிதியளிக்கும் நிதிக் கம்பெனிக்கு வட்டியுடன் முதல் தொகை முழுவதையும் திரும்ப செலுத்தும் வரையில் உரிமையை அளிக்காத,ஆனால் பொருட்களின் உடைமையை மட்டும் அளிக்கப் பெற்ற வாடிக்கையாளருடன் ஒரு விற்பனை உடன்படிக்கையில் ஈடுபடுகிறார். நிபந்தனையுடன் கூடிய விற்பனையும் வாடகைக் கொள்முதலைப் போன்றதே ஆயினும் இவை இரண்டிற்கும் இடையிலும் ஒரே ஒரு வேறுபாடு உள்ளது. அது என்னவென்றால் இங்கு முழுத்தொகையும் செலுத்தி முடிந்தவுடன் வாடிக்கையாளர் அப்பொருட்களை சட்டப்படி வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.

**3. கடன் விற்பனை**

**Credit Sale**

கடன் விற்பனையில், பொருட்களின் உடைமை உரிமை உடனடியாக வாங்கியவர்க்கு மாறிவிடுகிறது. ஆனால் அவர் தான் வாங்கிய பொருட்களுக்கான விலையை பின்னர் செலுத்த அனுமதிக்கப் படுகிறார்.

## 9.3 வாடகைக் கொள்முதல் நிதியின் நன்மைகள்

## Advantages of Hire Purchase Finance

வாடகைக் கொள்முதல் நிதியின் நன்மைகள் கீழக்கண்டவாறு மூன்று தலைப்புகளின் கீழ் விவாதிக்கப்படலாம்.

**1. வாடிக்கையாளர் பெறும் நன்மைகள்(Advantages to Customer)**

வாடகைக் கொள்முதல் நிதியில் வாடிக்கையாளர் பெறும் நன்மைகளாவன:

1. சொத்து ஒன்றை வாங்குவதற்கு என வெளியிலிருந்து நிதியைப் பெற மிகவும் வசதியான ஒரு முறையாக வாடகைக் கொள்முதல் நிதி கருதப்படுகின்றது.பொருட்களின் அளிப்பாளருக்கு நல்ல பிரசித்தி பெற்ற நிதிக் கம்பெனியுடன் தொடர்பு இருக்கும். ஆகவே, வாங்குபவர் சொத்து ஒன்றை வாங்க ஆர்வமாக இருக்கும் நிலையில், அதற்குரிய நிதியை அவர் பெற்று தருகிறார்.
2. வங்கியர் முன்பணம் தராத நிலையில் நிதியைப் பெற இது ஒரு மாற்று வழியாக அமைகிறது.

2. **பொருட்களின் விற்பனையாளர் பெறும் நன்மைகள்(Advantages to the Seller of Goods):**வாடகைக் கொள்முதல் நிதியில் பொருட்களின் விற்பனையாளர் பெறும் நன்மைகளாவன:

1. விற்பனையாளர் வாடகைக் கொள்முதல் நிதிக் கம்பெனியுடன் சிறந்த உறவை நிர்வகித்து வரும் நிலையில், இம்முறை, கடன் அட்டைகள் மற்றும் காசோலை அட்டைகளை விட அதிகளவில் அவரது விற்பனையை அதிகரிக்கவல்லதாகக் கருதப்படுகிறது.
2. வாடகைக் கொள்முதல் மூலம் விற்கப்பட்ட பொருட்களுக்கான செலுத்தல் உறுதி செய்யப்படுகிறது, விரைவிலும் உரித்த காலத்திலும் பெறப்படுகிறது.

**3. நிதிக் கம்பெனிகள் பெறும் நன்மைகள்(Advantages to Finance Companies):**

வாடகைக் கொள்முதல் நிதியில் நிதிக் கம்பெனிகள் பெறும் நன்மைகளாவன:

பொதுவாகவே, வங்கிக் கடன்கள், கடன் அட்டைகள் மற்றும் தனிநபர் கடன்கள் போன்றவற்றைவிட இவை விதிக்கும் வட்டி வீதம் அதிகமாக இருப்பதால், இவைகளால் இவைகளது மேற்செலவுகளைச் சரிக்கட்டி நியாயமான இலாபத்தையும் பெறமுடிகிறது.

## 9.4 வாடகைக் கொள்முதல் நிதியின் குறைபாடுகள் Disadvantages of Hire Purchase Finance

வாடகைக் கொள்முதல் நிதியின் குறைபாடுகளும் அதே மூன்று தலைப்புகளின் கீழ் ஆராயப்படலாம்:

**1. வாடகையாளருக்கான குறைபாடுகள்(Disadvantages toThe Customer):** வாடகைக் கொள்முதல் நிதியில் வாடிக்கையாளருக்கான குறைபாடுகளாவன:

1. வாடகைக் கொள்முதல் நிதியைப் பெற ஆகும் செலவு,வங்கி அதிகப்பற்று, கடன் அல்லது தனிநபர் கடன் ஆகியவற்றிற்காகும் செலவைவிட அதிகமாக இருக்கிறது.
2. தவணைத் தொகையைச் செலுத்த காலதாமதமாகும் பொழுது,வாடகைக் கொள்முதல் கம்பெனி அப்பொருட்களை திரும்ப எடுத்துக்கொண்டு விடும்.

**2 .பொருட்களின் விற்பனையாளருக்கான குறைபாடுகள்(Disadvantages to The Seller of Goods):**வாடகைக் கொள்முதல் நிதியில் பொருட்களின் விற்பனையாளருக்கான குறைபாடுகளாவன:

1. விற்பனையாளர் தனக்குச் சரிவராத நிதிக் கம்பெனியுடன் இணைக்கப்படலாம்.
2. விற்பனையாளர் நிதிக் கம்பெனியில் நிதிக்கு ஏற்பாடு செய்யாமல் தானே நிதியை வழங்கும் நிலையில் பின்வரும் பிரச்சனைகளைச் சந்திக்கிறார்.
    1. மோசமான கடன் கட்டுப்பாடு
    2. வராக் கடன்

3. உயர்ந்தளவு நிர்வாக மேற்செலவுகள்
4. மெதுவான ரொக்க ஓட்டம்

**3. நிதிக் கம்பெனிகளுக்குரிய குறைபாடுகள் (Disadvantages toFinance Companies):**வாடகைக் கொள்முதல் நிதியில் நிதிக் கம்பெனிகளுக்குரிய குறைபாடுகளாவன:

1. நிதிக் கம்பெனி பொதுவாக வாங்குபவர்களை சந்திப்பதில்லை. அது பொதுவாகவே விற்பனையாளரின் நேர்மை,திறமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிதி ஏற்பாட்டில் ஈடுபடுகிறது.
2. விற்பனையாளரின் மோசமான நடவடிக்கையால் நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## 9.5 குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல் - ஒற்றுமைகள்

## Lease and Hire Purchase – Similarities

குத்தகை என்பது ஒப்படைவின் (Bailment) ஒரு எளிமையான ஒப்பந்தமாகும். ஆனால், வாடகைக் கொள்முதலில் கூடுதலாக ஒரு கூறு உள்ளது. அது வாங்குவதற்கான தேர்வாகும். இவற்றிக்கு இடையிலான ஒற்றுமைகள் பின்வருமாறு:

1. இரண்டின் பொருளாதார உள்ளடக்கம் ஒன்றே ஆகும்.
2. இரண்டுமே ஒப்படைவின் நிகழ்வே ஆகும். ஆனால் வாடகைக் கொள்முதலில் விற்பனைக்குரிய கூறு ஒன்று கூடுதலாக உள்ளது.
3. இரண்டு நிலைகளிலுமே நிதியளிப்பவரே உரிமையாளராக இருக்கின்றார்.
4. இரண்டு நிலைகளிலுமே சொத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் உரிமைகள் ஒரே மாதிரியானவைகளாகவே உள்ளன.
5. இரண்டு நிலைகளிலுமே மோட்டார் வாகனங்களைப் பொறுத்தமட்டில் உபயோகப் படுத்துபவரெ உரிமையாளராகவும் கருதப்படுகிறார்.
6. ஆவணமிடுதல் இரண்டு நிலைகளிலும் ஒரே மாதிரியாகவே உள்ளது.
7. ஒப்படைவின் கூறுகள் இரண்டுக்கும் முழுவீச்சில் பொருந்துகின்றன.

## 9.6 குத்தகைக்கும் வாடகைக் கொள்முதலுக்கும் இடையிலான வேறுபாடு

## The Difference Between the Lease and Hire Purchase

| | குத்தகை (LEASE) | வாடகைக் கொள்முதல் (HIRE PURCHASE) |
|---|---|---|
| 1. | **உடைமை உரிமை (Ownership)** உடைமை உரிமை எப்பொழுதுமே நிதி அளிப்பவர் | இறுதியில் வாடகைக்கு கொள்முதல் செய்பவரின் விருப்பத்திற்கு ஏற்ப வாடகைக்கு கொள்முதல் செய்பவருக்கு |

| | | |
|---|---|---|
| | வசமே இருக்கிறது. | மாற்றித் தரப்படுகிறது. |
| 2. | **தேர்வு (Option)**<br>வாங்குதலுக்கான விருப்பத் தேர்வு இல்லை. | வாங்குதலுக்கான விருப்பத் தேர்வு உண்டு. |
| 3. | **சட்டப்படியான உடைமை உரிமை (Legal Ownership)**<br>சட்டப்படியான உடைமை உரிமை குத்தகைக்கு விடுபவர் வசம் இருக்கின்றது. | சட்டப்படியான உடைமை உரிமை நிதியை அளிப்பவர் வசம் இருக்கின்றது. |
| 4. | **தேய்மானம் (Depreciation)**<br>குத்தகைக்கு விடுபவருக்கு தேய்மானம் அனுமதிக்கப்படுகின்றது. | தேய்மானமானது வாடகைக்குப் பெறுவருக்கு அனுமதிக்கப்படுகின்றது. |
| 5. | **அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர் (Recognised Owner)**<br>இது குத்தகைக்கு விடுபவரை உரிமையாளராக அங்கீகரிக்கிறது. | இது வாடகைக்கு எடுப்பவரை உரிமையாளராக அங்கீகரிக்கிறது. |
| 6. | **வரி விலக்கு (Tax Exeption)**<br>குத்தகை வாடகையானது வாடகைக்கு விடுபவரின் வருமானமாகவும் வாடகைக்கு எடுப்பவரின் செலவாகவும் அனுமதிக்கப்படுகிறது. | தவணைகளின் வட்டிப் பகுதி மட்டுமே நிதி அளிப்பவரின் வருமானமாக வரிவிதிப்பிற்கு உள்ளாகிறது. அது வாடகைக்கு எடுப்பவரின் செலவாகக் கருதப்படுகிறது. |
| 7. | **கணக்குவைப்புக் கையாயுகை (Accounting Treatment)**<br>குத்தகைக்கு விடுபவரின் சொத்தாக கணக்கிடப்படுகிறது. | வாடகைக்க எடுப்பவரின் சொத்தாக கணக்கில் கொண்டு வரப்படுகிறது. |
| 8. | **விற்பனை வகை (Type of Sale)**<br>விற்பனை வரிச் சட்டங்களின்படி சிறப்பு விற்பனையாகக் கருதப்படுகிறது. | விற்பனை வரிச் சட்டங்கள் இவற்றை இயல்பான விற்பனையாகக் கருதுகிறது. |

## 9.7 முடிவுரை

## Conclusion

குத்தகையிடல் முடிவில், குத்தகைக்கு எடுப்பதா அல்லது சொந்தமாக வாங்குவதா என்பது தொடர்பான முடிவு அடங்கியுள்ளது. இதற்கு குத்தகைக்காகும் செலவு மற்றும் சொத்தை வாங்குவதற்கான நிதியைக் கடனாகப் பெற ஆகும் செலவு ஆகியவற்றினை ஒப்பீடு செய்வது அவசியமாகிறது. குத்தகையின் அடக்கம் கடன்பெறுதலின் அடக்கத்தைவிட அதிகமாக இருப்பின் கம்பெனி சொத்தை சொந்தமாக வாங்கிக் கொள்ள முடிவு செய்யும். மாறாக, கடன் பெறுதல் அடக்கம், குத்தகையின் அடக்கத்தைவிட அதிகமாக இருப்பின் குத்தகைக்கு எடுக்க முடிவு செய்யும். ஆகவே, குத்தகையிடுதல் முடிவானது மூலதன திட்டப்பட்டியல் தயாரிக்கும் பொழுது கூடவே செய்யப்பட வேண்டும்.

## 9.8 தொகுத்தறிவோம்

வாடகை கொள்முதல் முறை என்பது ஒரு உடன் பாட்டின் அடிப்படையில் செயல்படுகிறது. மேலும் வாடகை கொள்முதல் முறையின் நன்மை வகைகள் சிறப்புகள் பற்றி இந்தப்பாடப் பகுதி விவரிக்கப்பட்டு இருக்கிறது.

## 9.9 கலைச் சொற்கள்

- ❖ வாடகை
- ❖ நிதிநிலை
- ❖ மாற்றங்கள்
- ❖ குத்தகை
- ❖ செலுத்துதல்

## 9.10 வினாக்கள்

1. வாடகை கொள்முதல் முறையின் நன்மை பற்றி எழுதுக.
2. வாடகை கொள்முதல் முறையின் தீமைகள் பற்றி எழுதுக.
3. நிதியின் மாற்றத்தின் வகைகள் பற்றி எழுதுக.
4. குத்தகைக்கும் மற்றும் வாடகை கொள்முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
5. வாடகை கொள்முதல் முறையின் சிறப்அம்சங்கள் பற்றி எழுதுக.

## 9.11 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India
2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.
3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.
4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi.

NOTES

# அலகு – 10 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்

## MERGERS AND ACQUISITIONS

10.1 அறிமுகம்
10.2 இணைப்புபள் மற்றும் கையகப்படுத்துதலுக்கான காரணங்கள்
10.3 எந்த இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் சம்பந்தப்பட்ட நிலைகள்
10.4 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்களின் நன்மைகள்
10.5 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல ஒப்பந்தத்தில் பத்து படிகள்
10.6 சட்டபூர்வ நோக்கங்கள் மற்றும் கையகப்படுத்துதல்
10.7 இந்தியா இணைப்பை கையகப் படுத்துபவரின் மற்றும் நிறுவனங்களுக்கான கையகப்படுத்துதல்
10.8 இணைப்புகளின் வகைகள்
10.9 கையகப்படுத்துதறுக்கான மிக முக்கியமான காரணம்
10.10 சேர்க்கைகள் மற்றும் கையகப்படுத்துபவர்களின்முன்னேற்றங்கள்
10.11 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல தோல்விக்கான காரணங்கள்
10.12 தொகுத்தறிவோம்
10.13 கலைச் சொற்கள்
10.14 வினாக்கள்
10.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 10.1 அறிமுகம்

நிறுவனத்தின் கண்காணிப்பு சந்தையில் ஏதேனும் ஒன்று இருக்கும்போது இணைப்பு மற்றும் கையகப்படுத்தல் பயன்பாட்டை நிரூபிக்கிறது. ஒரு நீண்ட ஆனால் தேவைப்படும் செயல்முறை உள்ளது, அது மொர்பிங்கில் தேடுவது மட்டும்மல்லாமல், கடற்படை அல்லது சந்தைப் பங்கின் அதிகரிப்புக்கு முன்னா் செயல்பட வேண்டிய கம்பெனிகளிலும் நன்மைகள் உள்ளன. மற்றும் மற்ற திட்டங்கள் ஒன்றிணைக்க முடியம், இது இரண்டின் நிலையைப் பொறுத்தது நிறுவனம், ஊழியா்களுக்கான நன்மைகளின் அடிப்படையில் பல நிறுவனங்கள் இப்போது பல வணிக வளா்ச்சிக்காக இந்த செயல்முறையில் இறங்குகின்றன.

இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல்கள்

இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதலின் பொருள் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு என வரையறுக்கப்படுகின்றன. இரண்டு சொற்களை இணைப்பது இரண்டு நிறுவனங்களின் கலவையாகும். அதே சமயம் யுஊஞருஜளுஜவுஜமூ என்பத ஒரு நிறுவனத்தால் மற்றொன்று கையகப்படுத்தப்படுகிறது. கார்ப்பரேட் நிதி உலகின் முக்கிய அம்சங்களில் ஒன்று இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல ஆகும்.ஒரு தனிப்பட்ட

நிலைப்பட்டில் இருப்பதை ஒப்பிடும் போது இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல க்கு பின்னால் இருக்கும் காரணம் அதிக மதிப்பை உருவாக்குகிறது.

இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்

சொத்துக் களுக்கான பங்குகளை பரிமாறிக் கொள்வதன் மூலம்

பொதுவான பங்குகளை வாங்குவதன் மூலம்

சொத்தகளை வாங்குவதன் மூலம் நடைபெறலாம்

பங்குகளுக்கான பங்குளை பரிமாறிக் கொள்வதன் மூலம்

## 10.2 இணைப்புபள் மற்றும் கையகப்படுத்துதலுக்கான காரணங்கள்

- மூலதனத்தின் குறைந்த செலவுக்கான நிதி சினெர்ஜி
- நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்துதல்
- அதிக வளர்ச்சி
- தயாரிப்புகள் அல்லத சந்தைகளுக்கான அளவிலான பலவகைப்படுத்தல்
- பொருளாதார சந்தை பங்கு மற்றும் நிலையை அதிகரிக்க
- பரந்த சந்தை அனுகலை அளித்தல்
- மறுசீரமைப்பு மற்றம் தொழில் நுட்ப மாற்றம்
- வரி பிரிசீலமைகள்

## 10.3 எந்த இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல சம்பந்தப்பட்ட நிலைகள் :

கட்டம் 1. கையகப்படுத்துதலுக்கு முந்தைய ஆய்வு

இதில் இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல தேவை குறித்த சுய மதிப்பீடு அடங்கம், மதிப்பீட்டைக் கண்டறிதல் (இலக்கு மூலம் வளர்ச்சித் திட்டத்தை குறைந்து மதிப்பிட்டது)

கட்டம் 2. தேடலல் மற்றும் திரை இலக்குகள்

இதில் வேட்பாளர்களைத் தேடுவது அடங்கும். இந்த செயல்முறை முக்கியமாக ஒரு நல்ல மூலோபாயத்தை ஷஸீகேன் செய்வதே

கட்டம் 3. இலக்கை ஆராய்ந்து மதிப்பீடு செய்தல்

முதன்மை ஸ்கிரீனிங் மூலம் பயன்பாட்டை முடக்கு, குறிப்பிடப்பட்ட இலக்கு தொகுப்பின் விரிவான பகுப்பாய்வு

கட்டம் 4. பேச்சு வார்த்தையன் மூலம இலக்கை பெறுங்கள்

இலக்கு நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அடுத்த கட்டமாக பேச்சுவார்த்தை ஒன்றிணைப்பிற்கான ஒருமித்த கருத்துக்கு பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும். இது இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல ன் நீணட கால வேலைக்கான ஒப்பந்தத்திற்கு இரு நிறுவனங்களும் பரஸ்பரம் உடன்படுகின்றன.

கட்டம் 5: பிந்தைய இணைப்பு ஒருங்கிணைப்பு

NOTES

மேற்கூறிய அனைத்து நடவடிக்கைகளும் சரியான இடத்தில் வந்தால், பங்கேற்கும் இரு நிறுவனங்களும் ஒன்றிணைக்கும் ஒப்பந்தத்தின் முறையான அறிவிப்பு உள்ளது.

## 10.4 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதான் நன்மைகள்

தலைமுறையின் அதிக மதிப்பு

பொதுவாக இது இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல உடன் காணப்படுகிறது. நிறுவனத்தின் மதிப்பு உற்பதி அதிகரிக்கிறது. மேலும், பெற்றோர் நிறுவனத்தில் உள்ள மதிப்புடன் ஒப்பிடும் போது பங்குதாரரின் மதிப்பு அதிகரிக்கிறது

வரி ஆதாயங்களில் நன்மை

இணைப்பின் நன்மைகளில் ஒன்று சந்தை பங்கு மூலம வரி ஆதாயங்கள் மற்றும் வருவாய் மேம்பாடு ஆகும். கூட்டு நிறுவனங்கள் பொதுவாக இணைப்பிற்குப் பிறகு தனி நிறுவனங்களிலிருந்து அதிக மதிப்பை எதிர்பார்க்கின்றன.

தற்போதைய சூழ்நிலையை சமாளிக்க நல்லவழி

ஒரு நிறுவனம் பல்வேறு நிதி அல்லது வணிக சிக்கல்களால் பாதிக்கப்படுகிறதென்றால் இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல செய்ய சிறந்த வி'யம். ஒரு கையகப்டுத்தும் நிறுவனத்திற்கு சந்தையில் நல்ல வலுவான பிடிப்பு இருக்க வேண்டும், இது பலவீனமான நிறுவனத்தை செலவு குறைந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்கு வதில் ஈடுபடுகின்றது. இது இழப்பு மற்றும் கையகப்படுத்தும் நிறுவனத்திற்கு நன்மை பயக்கும் மற்றும் புதிய மூலோபாயத்தில் இறங்குகிறது.

செலவு திறன்

இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல –ன் கீழ் ஒரு நிறுவனம் பெறக்கூடிய முக்கிய நன்மை இதுவாகும். இது அளவிலான பொருளாதாரங்களை உருவாக்க உதவுகிறது. இது நல்ல செலவு செயல்திறன் முடிவை உருவாக்குகிறது. இரண்டு நிறுவனங்கள் ஒன்றிணைக்கும் போது, உற்பத்தி பெரிய அளவில் நடைபெறுகிறது. இதன் விளைவாக உற்பத்தியை அதிகரிக்கிறது. மற்றும் ஒரு தயாரிப்பு உற்பத்தியக்கான செலவு குறைகிறது.

இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல உடன் பிற நன்மைகளும் உள்ளன

- புதிய சந்தையில் நுழைய விரும்பும் ஒரு நிறுவனம்
- புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்த விரும்பும் போது
- செயல்பாட்டு செலவை குறைக்க
- போட்டித்தன்மையை பெற
- நிதி மேம்பாட்டைப் பெற

ள

## 10.5 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல செயல்முறைகளில் உள்ள் பத்து படிகள்

**1. ஒரு கையகப்படுத்த் மூலோபாயத்தை உருவாக்குதல்**

ஒரு நல்ல கையகப்படுத்தல் மூலோபாயத்தை உருவாக்குதல், இலக்கு நிறுவத்தை பெறுவதற்கு அவர்களின் வணிக நோக்கம் என்ன என்பது கையகப்படுத்துதளிருந்து அவர்கள் எதைப் பெறுவார்கள் என்று தெளிவான யோசனை வைத்திருப்பதைக்

**2. இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல தேடல் அளவுகோல்களை அமைத்தல்**

சாத்தியமான இலக்கு நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கான முக்கிய அளவு கோல்களைத் தீர்மானித்தல் (எ.கா இலாப வரம்புகள். புவியியல் இருப்பிடம் அல்லத வாடிக்கையாளர் தளம்)

**3. சாத்தியமான கையகப்படுத்தல் இலக்குகளைத் தேடுங்கள்**

வாங்குபவர் அவர்கள் அடையாளம் காணப்பட்ட தேடல் அளவுகோல்களைப் பார்க்க மற்றும் பின்னர் சாத்தியமான இலக்கு நிறுவனங்களை மதிப்பீடு செய்யுங்கள்

**4. கையகப்படுத்தல் திட்டத்தை தொடங்குங்கள்**

வாங்குபவர் அதன் தேடல் அளவுகோல்களை பூர்தி செய்யும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொள்கிறார். ஆராம்ப உரையாடல்களின் நோக்கம் கூடுதல் தகவல்களைப் பெறுவதும். இலக்கு நிறுவனம் ஒரு இணைப்பு அல்லத கையகப்படுத்துதலுக்கு எவ்வளவு வசதியானது. என்பதை காண்டதும் ஆகும்

**5. மதிப்பீட்டு பகுப்பாய்வு செய்யுங்கள்**

ஆரம்ப தொடர்பு மற்றும் உரையாடல்கள் சரியாக நடப்பதாக கருதி, வாங்குபவர் இலக்கு நிறுவனத்திடம் கணிசமான தகவல்களை வழங்குமாறு கேட்கிறார். (நடப்பு நிதி, முதலியன கையகப்படுத்துபவர் சொந்தமாக ஒரு வணிகமாகவும் பொருத்தமான கையகப்படுத்தல் இலக்காகவம் இலக்கை மேலும் மதிப்பீடு செய்ய உதவும்.

**6. பேச்சு வார்த்தைகள்**

இலக்கு நிறுவனத்தின் பல மதிப்பீட்டு மாதிரிகளை உருவாக்கிய பிறகு, அதை திர்மாணிக்க உதவும் ஒரு நியாயமான சலுகை

**7. இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல உரிய விடா முயற்சி**

சரியான விடமுயற்சி என்பது சலுகை ஏற்று கொள்ளப் பட்டவுடன் தொடங்கும் ஒரு முழுமையான செயல்முறையாகும். இலக்கு நிறுவனத்தின் செயல்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்தையும் -அதன் நிதி அளவீடுகள், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வடிக்கையாளர், மனித வளங்கள் போன்றவற்றின் விரிவான ஆய்த மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் இலக்கு நிறுவனத்தின் மதிப்பை உறுதிபடுத்த அல்லது திருத்த வேண்டும்

**8. கொள்முதல் மற்றும் விற்பனை ஒப்பந்தம்**

எந்தவொரு பெரிய சிக்கல்களும் அல்லத குறைவுகளும் இல்லாமல் சரியான விடாமுயற்சி முடிந்துவிட்டது என்று கருதினால் முன்னோக்கி விற்பனைக்கான இறுதி ஒப்பந்தத்தை நிறை வேற்றுகிறது. கொள்முதல் ஒப்பந்த்ததின் வகை குறித்து கட்சிகள் இறுதி முடிவை எடுக்கின்றன.

**9. கையகப் படுத்தறுக்கான நிதி உத்தி**

கையகப் படுத்துபவர் நிச்சியமான ஒப்பந்தத்திற்கான நிதி விருப்பங்களை முன்னர் ஆராய்ந்திருப்பார். ஆனால் விவரங்கள் கொள்முதல் மற்றும் விற்பனை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட பின்னர் நிதியதவி பொதுவாக ஒன்றிணைகிறது.

**10. கையகப்படுத்தில் நிறைவு மற்றும் ஒருங்கிணைப்பு**

கையகப் படுத்துதல் ஒப்பந்தம் முடிவுடைகிறது மேலும் இலக்கு மற்றும் கையகப்படுத்துவரின் நிர்வாக குழுக்கள் இரு நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் செயல்பாட்டில் ஒன்றிணைந்து செயல்படுகின்றன.

## 10.6 சட்டபூர்வ நோக்கங்கள் மற்றும் கையகப்படுத்துதல்

கையகப் படுத்துதல் செயல்முறையின் வெவ்வெறு கட்டங்களில் வெவ்வெறு சட்ட சிக்கல்கள் எழுத்கூறும் மற்றும் தனி மற்றும் தொடர்ச்சியான சிகிச்சை தேவைப்படுகின்றது. உரிய விட முயற்சியுடன் செயல் படுவது சரியான விடாமுயற்சி என்பது வாங்குதலுடன் தொடர்புடைய அனைத்து பொறுப்புகளையும் கண்டறியும் செயல் முறையாகும்

விற்பனையாளர்கள் கூறிய கூற்றுகள் சரியானவை என்பதை சரிபாாக்கும் செயல்முறையாகும். இந்த செயல்முறை முறையாக மேற்கொள்ளப் படுவதை உறுதி செய்வதற்காக நிறுவனங்களின் இயக்குநர்கள் தங்கள் பங்கதாரர்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

சட்ட நோக்கங்களுக்காக நீங்கள் உறுதி படுத்திக் கொள்ளுங்கள்:

இலக்கு வணிகத்திற்கு சொத்து, உபகாரணங்கள். அறிவுகள் சொத்து, பதிப்புரிமை மற்றும் காப்புரிமை போன்ற முக்கிய சொத்துகள் உள்ளன. என்பதற்கான ஆதாரத்தை பெறுங்கள் தற்போதய அல்லத நிலுவையில் உள்ள சட்ட வழக்குகள் அதன் ஊதியர்களுான வணிகத்தின் தற்போதைய மற்றும் சாத்தியமான எதிர்கால ஒப்பந்த கடமைகளில் உள்ளவிவரங்களைப் பார்கின்றன.

இவை ஒப்பந்தம் குறித்த ஒரு அளவிலான உத்தரவாதத்தையும், ஆறுதலையும் வழங்கும் விற்பனையாவை வணிகத்தில் வளந்த நம்பிக்கையின் அறிகுறிகளாகும்.

உத்தரவாதம்

விறபனையாளரிடமிருந்து எழுதப்பட்ட அறிக்கை, இது வணிகத்தை பற்றிய முக்கிய உண்மையை உறுதிப்படுத்துகிறது. வணிகத்தின் சொத்துகள், பத்தகம், கடனாளிகள் மற்றும் கடன் வழங்குநர்கள், ஊழியர்கள், சட்டஉரிமை கோரங்கள் மற்றும் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் ஆகியவற்றின் உங்களுக்கு உத்திர வாதங்கள் தேவைப்படலாம்

இழப்பீடு

சில சூழ்நிலைகளில் உங்களை முழுமையாக திருப்பிச் செலுத்துவதற்கான விற்பனையாளரிமிருந்து கூறுவாத (எ.கா) பதிவு செய்யப்படாத வரிக் கடன்களுக்கு நீங்கள் இழப்பீடு கோரலாம்.

உத்தரவாதங்கள் மற்றும் இழப்பீடுகளின் உள்ளடக்கம் மற்றும் போதுமான தன்மையை மதிப்பாய்வு செய்ய உங்கள் தொழில் முறை ஆலோசகர் உதவ முடியும்

எல்லை தாண்டிய இணைப்பு நிறுவனங்கள்

விதிமுறைகள் 2007 இங்கிலாந்து மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கிடையேயான தேவைகளை கோடிட்டு காட்டுகிறது.

உறுப்பினர்கள் அல்லது கடன் வழங்குவர்களின் கூட்டத்தை அழைக்கும் எந்ததொரு நீதிமன்ற உத்தரவின் நகலும் பூர்த்தி செய்யப்பட்ட எல்லை தாண்டிய இணைப்புகள் ஊடீ01 படிவம் இந்த ஆவணங்கள் உறுப்பினர்கள் முதல் கூட்டத்தில் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்பு பதிவாளருக்கு வழங்கபடவேண்டும். சம்மந்தப்பட்ட ஒவ்வொரு இங்கிலாந்து நிறுவனமும் இந்த உத்தரவின் நகலை ஏழு நாட்களுக்குள் கம்பெனிக்கு ஹ‘ஸ்க்கு வழங்க வேண்டும்.

இந்த உத்தரவு கிடைத்ததும், கம்பெனி ஹ‘ஸ் மற்றொரு ஐரோப்பிய பொருளாதார பகுதி(நுநுய) மாநிலத்தில் இருந்து சம்மந்தப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தின் பதிவிற்கும் உத்தரவின் அறிவிப்பை அனுப்புகிறது

எல்லை தாண்டிய இணைப்பற்றி சிந்திக்கும் போது தொடக்கத்திலிருந்தே பொருத்தமான தொழில் முறை ஆலோசனையைப் பெறுவதை உறுதி செய்க

## 10.7 இந்தியா இணைப்பை கையகப் படுத்துபவரின் மற்றும் நிறுவனங்களுக்கான கையகப்படுத்துதல்

இணைப்பு என்பது ஒரு பொருள், ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்க இரண்டு நிறுவனங்களின் கலவையாகும்.

ஒரு நிறுவனத்தை மற்றொரு நிறுவனத்தில் வாங்குவது, அதில் எந்த புதிய நிறுவனமும் உருவாகாது, இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் என்ற சொற்கள் ஒத்ததாக பயன் படுத்தபடலாம் என்றாலும், இரண்டு நிறுவனங்கள் ஒரு புதிய நிறுவனமாக முன்னோக்கிச் செல்லஒப்புக் கொள்ளும் போது கையகப்படுத்துதலில் மற்ற நிறுவனத்தின் மீது உரிமை பெறப்படும் போத ஒரு இணைப்பை நடைபெற்றது என்பதில் அவை வேறுடுகின்றன.

கையகப் படுத்துத் என்பது இலக்கு நிறுவன இணைப்புகளைப் பெறுவதற்கான ஒரு முயற்சியாகும்.

## 10.8 இணைப்புகளின் வகைகள்

வழங்குநர்களின் குறிக்கோள்களின் சுய விவரத்தின் அடிப்படையில், சேர்க்கைகள் செங்குத்து, கிடைமட்ட, வட்ட மற்றும் கூட்டாக

இருக்கக்கூடும். இத கீழே விவரிக்கப்பட்டுள்ள படி துல்லியமாக கீழே விவரிக்கபட்டுள்ளது

**1) செங்குத்து சேர்க்கை**

வேறொரு நிறுவனத்தை கையகப்படுத்து, அந்த நிறுவனத்துடன் அதன் இணைவை வழங்குவதற்காக சந்தை விற்பனை நிலையங்களை வனப்படுத்திக் கொள்ளுங்கள்

வேறுவிதமாக கூறினல் செங்குத்து சேர்கிகைகளில், ஒன்றிணைக்கும் பணி, ஒரு உற்பத்தியாளர் அதன் உற்பத்தியை இறுதி உற்பத்திக்கான இடைத்தரகராகப் பயன்படுத்துகிறார்.

**2) கிடைமட்ட சேர்க்கை**

தொழில் துறை செயல்முறையின் ஒரே கட்டத்தில் இருக்கும் இரண்டு போட்டியிடும் நிறுவனங்களின் இலக்கு நிறுவனத்தின் அதே தொழிலுக்கு சொந்தமானது.

எளிதான மற்றும் விருப்பங்களின் நகலெடுபை நீக்கு வதன் மூலமும், முதலீட்டை குறைத்தல், விளம்பர செலவினங்களை குறைத்தல். மற்றும் சிறந்த கட்டுப்பாட்டை கொண்டு செயல்படுவதன் மூலம் உற்பத்தியில் பெரிய தொடுத்திரை கொண்டு வர முடியும்

**3) சுற்றறிக்கை இணைப்பு**

தனித்துவமான தயாரிப்புகளை உருவாக்கும் நிறுவனங்கள், நகல் மற்றும் சந்தை விரிவாக்கத்தை ஊக்கு விப்பதன் மூலம் பொரளாதாரத்தை பெறுவதற்கான பொதுவான விநியோகப் மற்றும் திறன்களை பகிர்ந்து கொள்வதற்கானஒருங்கிணைப்பை நாடுகின்றன

இத்தகைய ஒருங்கிணைப்புகளின் முக்கிய நோக்கம் நிதி மேம்பாடு

**4) பெறு நிறுவனங்கள் இணைப்பு**

ஒட்டு மொத்த ஸ்திரத்தன்மையை மேம்படுத்துகிறது மற்றும் நிறுவனத்தின் மொத்த தயாரிப்புபள் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் கடன் திறன் ஆகியவற்றில் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் கடன் திறன் ஆகியவற்றில் சமநிலைலே உருவாக்குகிறது. இதனால் அவர்களை நிதி கட்டமைப்பை மீண்டும் ஒழுங்கயைத்தின் மூலம் சேவை செய்யமுடியும்.

## 10.9 கையகப்படுத்துதறுக்கான மிக முக்கியமான காரணம்:

இரண்டு நிறுவனங்களும் தனித்தனியாக இருப்பதை விட ஒன்றாக இணைந்த செயல்பட அனுமதிக்கின்றன. இது போன்ற நிறுவனங்களின் ஒருங்கிணைந்த திறனை, பொருளாதாரத்தை சுரண்டுவதற்கும், நிர்வாக நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதற்கும் மற்றும் பெரிய அளவிலான மூலதனத்தை திரட்டுவதற்கும். நிறுவனங்களின் ஒருங்கிணைந்த திறனைக் குறிக்கக் கூடும்.

ஒன்றிணைப்பு என்பது அவர்களின் செயல்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக, பெரும்பாலும் ஒருலாபகரமான நோக்கத்தை கொண்டது. வழக்கமாக இணைப்புகள் ஒரு மித்த கருத்தில் நிகழ்கின்றன. பரஸ்பரனே அமைப்பால் நிகழ்கிறது. நிறுவனங்கள் அல்லத வேறொன்றில் உள்வாங்கப்படுவதன் மூலம் அடையாளத்தை இழப்பது. இணைப்பு அல்லது வணிக கலவையின் அடிப்படை நோக்கம் கார்ப்பரேட் வணிகததின் விரைவான வளாச்சியை அடைவதே ஆகும்.

1. தயாரிப்பு மேம்பாடு மற்றும் போட்டி நிலை மூலம் விரைவான வளர்ச்சி ஏற்படலாம்

   விநியோகங்களை கொள்முதல் செய்தல்
2. உற்பத்தி வசதிகளை மறுசீரமைத்தல்
3. சந்தை விரிவாக்கம்
4. நிதி வலிமை: பணப்புழக்கத்தை மேம்படுத்துவதற்கும் பண விளத்தை நேரடியாக அனுகுவதற்கும்.
5. கிடைமட்ட, செங்குத்து, தயாரிப்பு விரிவாக்கம், சந்தை விரிவாக்கம் மூலம் நோக்கங்களை அடைவதற்கான இணைப்பை கையகப்படுத்தும நிறுவனம் கருதுகிறது.
6. விரும்பிய ஒருங்கிணைப்பு நிலை

   இணைத்தில் மற்றும் கையகப்படுத்துதல் ஆகியவை இரண்டு ஒருங்கிணைந்த வணிக நிறுவனங்களுக்கிடையில் விரும்பிய அளவிலான ஒருங்கிணைப்பைப் பெறுவதற்குத் தொடரப்படுகின்றன. அத்தகைய ஒருங்கிணைப்பு செயல்பாடு அல்லத நிதி சார்ந்தாக இருக்கலாம்..

## 10.10 சேர்க்கைகள் மற்றும் கையகப்படுத்துபவர்களின்முன்னேற்றங்கள்

கூட்டு நிறுவனங்களின் பங்கு தாரர்கள், மேலாளர்கள், மற்றும் விளம்பர தாரர்களின் ஆதரவுடன் இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் ஏற்படுகின்றன பங்குதாரர்களின் நிலைப்பாட்டில் இருந்த இணைப்பிற்கு உட்பட நிறுவனங்களில் பங்குதாரர்கள் செய்யும் முதலீடு மதிப்பை அதிகரிக்க வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்களிடமிருந்து இன்னொரு வருக்கு பங்குகளை விற்பனை செய்வது மற்றும் பங்குகளில் பங்குகளில் முதலீடு செய்வத அதிக மதிப்புகளுக்கு வழி வகுக்கும்.அதாவது மாற்று முதலீடுகளில் வாய்ப்பு ஆதாயங்கள் மற்றும் சாதனைகளிலிருந்து, அதாவது

(அ) ஏகபோக இலாபங்களை உணர்ந்த கொள்வதன் மூலம்

(ஆ) அளவீடுகளின் பொருளாதாரங்கள்

(இ) தயாரிப்பு வரியின் பில் வகைப்படுத்துதல்

(ஈ) மனித சொத்துகள் மற்றும் பிற வளங்களை கையகப்படுத்துதல்

சேர்க்கைகளில் சிறந்த முதலீட்டு வாய்ப்பு மேலாளர்களின் நிலைபாட்டில் இருந்து, நிறுவனத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதில்

*NOTES*

மேலாளர்கள் அக்கரை கொண்டுள்ளனர். ஒருங்கிணைந்த நிறுவனத்தில் புதிய நிர்வாகத்தின் கைகளில் இடப்பெயர்ச்சி குறித்த பயம் மற்றும் இணைப்பிலிருந்து தேய்மானம் ஏற்படுவதால் அவர்களிடமிருந்த ஆதரவு கடினமாகிறது

விளம்பர தாரரின் ஆதாயங்கள்

நிறுவன விளம்பரதாரர்களுக்கு தங்கள் நிறுவனத்தின் அளவை அதிகரிப்பதன் நன்மையையும் நிதி அமைப்பு மற்றும் வலிமையையும் இணைப்புபள் வழங்குகின்றன. அதிக செல்வத்தை பங்களிக்காமலும், கட்டுப்பாட்டை இழக்காமல் நெருக்கமாகவும். வைத்திருக்கும் மற்றும் தனியா வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை அவர்க் பொது நிறுவனமாக மாற்ற முடியும்.

பொதுமக்களுக்கு இணைப்பதன் தாக்கம் மற்றும் நன்மைகள்

அ) தயாரிப்பு நுகர்வோர் அல்லது சேவைகள்

ஆ) இணைப்பின் கீழ் உள்ள நிறுவனங்களின் தொழிலாளர்கள்

இ) பொது மக்கள் பொதுவாக பயனராகவோ அல்லது நுகர்வோராகவோ அல்லது இணைப்பு திட்டத்தின் கீழ் உள்ள நிறுவனங்களில் பணிபுரிபவர்களாகவோ இல்லாததால் பாதிக்கபடுகின்றனர். நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் 391.∴.394 பிரிவுகளின் கீழ் இணைப்புகள் தொடரப்படுகின்றன.

## 10.11 இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல தோல்விக்கான காரணங்கள்

மூலோபாய பொருத்தம்

நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் உத்திகளில் பரந்த வேறுபாடு மோசமாக நிர்வகிக்கபட்ட

ஒருங்கிணைப்பு

திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு இல்லாமல் ஒருங்கிணைப்பு பெரும்பாலும் மோசமாக நிர்வகிக்கபடுகிறது இது தோல்விக்கு வழி வகுக்கிறது

செயல் படுத்துதல் முழுமையற்ற விடாமுயற்சி

போதுமான உரிய விடாமுயற்சி இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல தோல்விக்குவழிவகுக்கும். ஏனெனில் இத மூலோபாயத்தின் முக்கிய அம்சமாகும்.

அதிகப்படியான நம்பிக்கை.

## 10.12 தொகுத்தறிவோம்

இலக்கு நிறுவனத்தை பற்றிய மிகுந்தை நம்பிக்கையான கணிப்புகள் மோசமான முடிவுகளுக்கும் இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல தோல்விக்கும் வழிவகுக்கிறது.

## 10.13 கலைச் சொற்கள்

1. இணைப்புகள்

2. கையகப்படுத்துதல்
3. நடைமுறை
4. ஆளுமை
5. கையகப்படுத்தல்

## 10.14 வினாக்கள்

1. இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதலின் நன்மைகள் யாவை?
2. இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல ஒப்பந்தத்தில் 10 படிகளை விளக்குங்கள்
3. இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதலன் சட்ட அம்சத்தை விளக்குங்கள்
4. இந்தியாவில் கையகப்படுத்தல் - இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல நிறுவனங்களுக்கு
விவாதிக்க – ஒரு டீழழடி ழச டீயுநே
5.இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதலின் நன்மைகள் யாவை?

## 10.15 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, “Financial Markets and Services”, Himalaya Publishing House Pvt. Ltd., India
2. Dr. Guruswamy S, 2009 “Financial Service”, Tata Mc Graw-hill Education, New Delhi.
3. Prasanna Chandra, 2011 “ Financial Management Theory and Practice”, Tata Mc Graw-hill Education, New Delhi.
4. Khan M Y and Jain P K, 2008, “ Financial Management Text, Problems and Cases”. Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 11 முதலீடுகளின் பட்டியல் மேலாண்மை

# PORTFOLIO MANAGEMENT

11.1 அறிமுகம்
11.2 முதலீடுகளின் பட்டியலுடைய பழைய மற்றும் புதிய பகுப்பாய்வு முறை
11.3 முதலீடுகளின் பட்டியல் மேலாண்மையின் நோக்கம்
11.4 முதலீடுகளின் பட்டியலின் பல்வேறு நிலை
11.5 முதலீடுகள் பட்டியலின் நவீனப் பகுப்பாய்வு
11.6 முதலீடுகளின் பட்டியல் மேலாண்மையின் அடிப்படைக் கூறுகள்
வட்டி மட்டும் சான்றிதழ்கள் இருந்தால், பத்திரமயமாக்கப்பட்ட சொத்துகளிலிருந்து சம்பாதித்த வட்டி வருமானத்திலிருந்து மட்டுமே முதலீட்டாளர்களுக்கு பணம் செலுத்தப்படுகிறது. பெயர் குறிப்பிடுவது போல், அசல் கடன் வாங்குபவர்களிலிருந்து அசல் திருப்பிச் செலுத்தவதிலிருந்து மட்டுமே பணம் செலுத்தப்படுகிறார்கள். அதிபரின் வி'யத்தில் மட்டுமே சான்றிதழ்கள் வட்டி வீத இயக்கங்கள் உடனடியாக பத்திரமதிப்புகளை பாதிக்கும் என்பதை ஊக வணிகர்கள் நன்கு அறிந்திருப்பதால், இந்த சான்றிதழ்கள் ஊக பரிவர்த்தனைகளை செயல்படுத்துகின்றன.

உதாரணமாக வட்டி விகிதங்கள் குறையும் போது முதன்மை மட்டுமே சான்றிதழ்கள் மதிப்பில் அதிகரிக்கும். ஏனேன்றால், தற்போதுள்ள கடன்களை திருப்பம் செலுத்துவதும், குறைந்த செலவில் புதிய கடன்களும் சாதாகமாகிறது. இது அதிக அளவில் பயனளிப்பதாகும்.

இதே போல் வட்டி விகிதங்கள் அதிகரிக்கும் போது, வட்டி மட்டுமே சான்றிதழ் வைத்திருப்பவர்கள் அதிக வட்டி கிடைக்கும் என்பதால் ஆதாயம் பெற நிற்கிறார்கள் முதலீட்டாளர்களின் மாறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்ய புதிய கருவிகளை அறிமுகப்படுத்த பத்திரமயமாக்கல் அதிக வாய்ப்பை வழங்குகிறது. இது முதலீடு செய்யும் பொதுமக்களுக்கும்.

பரஸ்பர நிதிகள் காப்பீட்டு நிறுவனங்கள் போன்ற நிதி இடைத்தரகர்களுக்கும் பலவிதமான முதலீட்டு கருவிகளை வழங்குகிறது.

பாதுகாப்பான சொத்துகள்

முன்பு கூறியது போல், அனைத்து சொத்துகளும் பத்திரமயமாக்கலுக்கு ஏற்றவை அல்ல உதாரணமாக, வர்த்தககடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் பொதுவாக பத்திரமயமாக்களுக்கு பொருத்தமானவை அல்ல

அதே சமயம் அவை ஒரு காரணிக்கு உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

எ.கா: விருப்பமான பங்கு சான்றிதழ்கள் பின்வரும் சொத்துகள் பொதவாக நிதி நிறுவனங்களால் பாதுகாக்கப்படுகிறது.

1) நிதி ரீதியா புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு கால கடன்கள்
2) அரசுதுறைகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து பெறத்தக்கவை
3) கிரெடிட் கார்டு பெறத்தக்கவை
4) வாகனக் கடன் போன்ற கொள்முதல் கடன் அமர்த்தவும்
5) குத்தளை நிதி
6) அடமானக் கடன்கள் போன்றவை

## 12.6 பாதுகாப்பின் நன்மைகள்

கடன் பத்திரமயமாக்கல் அனைத்து தரப்பினருக்கும் பல நன்மைகள் வழங்குமாறு சில முக்கியமானவை பின்வருமாறு

**1)கூடுதல் நிதி ஆதாரம்**

கடன் வழங்கும் நிறுவனம் மிகவும் பயனடைகிறது. ஏனெனில் இதில் கூடுதல் நிதி ஆதாரத்தை வழங்குகிறது, இல்லையெனில் பணமற்ற சொத்தை தயாராக பணப்புழக்கமாக மாற்றுகிறது.

இதனால் தோற்றுவிப்பவரின் பணப்புழக்கத்தில் உடனடி முன்னேற்றம் ஏற்படுவதால் பணப்பழக்கத்தின் ஆதாரமாக செயல்படுகிறது

**2) அதிக லாபம்**

நிதி நிறுவனங்களுக்கு நீண்ட காலத்திற்கு பதிலாக உடனடியாக நீண்ட மற்றும் நடுத்தரகால சொத்துகளிலிருந்து திரவப் பணம் பெற உதவுவதால் அதிக நிதி மறு சுழற்சிக்கு வழி வகுக்கிறது. இதனால் அதிக வணிக வருவாய் மற்றும் லாபத்திற்கு வழிவகுக்கும்.

மேலும் திரவப் பணத்தை உடனடியாக வழங்குவதன் மூலம் தற்போதுள்ள திறன்களை முழுமையாகப் பயன்படுத் பாதுகாப்பை பத்திரமயமாக்கல் வழங்குகிறது என்பதர் பொருளாதாரத்தின் அளவை அடைவதால் கூடுதல் வணிக வருவாயை விளைவிக்கிறது. இதனால் சேவை கட்டணம் வடிவில் கூடுதல் வருமானம் பெற முடியும்

**3) போதுமான மூலதன விகித்ததை மேம்படுத்துதல்**

பத்திரமயமாக்கல் நிதி நிறுவனங்களின் சொத்துகளின் அளவை குறைப்பதன் மூலம் மூலதன விகிதத்தை மேம்படுத்த உதவுகிறத இந்த

செயல்முறையானது, நிதி நிறுவனங்களால் விற்கப்படும் அல்லது ஸ்ரீஏ எனும் மற்றொரு நிறுவத்திற்கு மாற்றப்பட வேண்டிய சொத்துகளின் தொகுப்பை தேர்ந்தெடுப்பது அவசியம்.

சொத்துகள் மாற்றப்பட்டதும், அவை தோற்றுவித்தவரின் ஹாலன்ஸ் தாளில் இருந்து அகற்றப்படும் கடன் சொத்துகளை குறைந்த ஆபத்து எடையுள்ள சொத்துகளுடன் மாற்றுவதன் மூலமும் மூலதன விகிதம் மேம்படுத்தலாம்

**4) கடன் அபாயத்தை பரப்புதல்**

இந்த செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கு கடன் அபாயத்தை பரப்புவதற்கான பாதுகாப்பு வசதிகள், பத்திரமயமாக்கல் இல்லாத நிலையில், ஒரு குறிப்பிட்டநிதி பரிவர்த்தனையுடன் தொடர்புடைய முழு கடன் அபாயத்தை தோற்றுவிப்பவரே ஏற்க வேண்டும். இப்போது தோற்றுவிப்பவர் பாதுகாப்பு பத்திரமயமாக்கலில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினரிடையெ ஆபத்த காரணிகளைப் பனகப்படுத்த முடியும். ஆகவே நடுத்தர மற்றும் நீண்ட கால கடன்களில் வி'யத்தில் கடன் அபாயங்களை மேம்படுத்த உதவுவதால் இது இடர் மேலண்மைக்கான கருவியாக பயன்படுத்தப்படுகிறது.

**5) நிதியுதவியின் குறைந்த செலவு**

பணப்புழங்களை மேம்படுத்துதல் மற்றும் ஆபத்து காரணிகளின் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, பத்திரமயமாக்கல் அதன் மதிப்பீட்டை விட அதிகமான கடன் மதிப்பிடுகளில் பத்திரச்சந்தையை எளிதில் அணுக உதவுகிறது. குறைந்த கடன் மதிப்பீட்டை கொண்ட நிறுவனங்கள், பத்திரங்களில் அதிக கடன் மதிப்பீட்டின் காரணமாக குறைந்த வட்டி செலவில் சொத்த ஆதரவு பத்திரங்களை வழங்க முடிவதால் குறைந்த செலவில் நிதியைப் பெற உதவுகிறது.

மேலும், சொத்துகளின் தொகுப்பை தேர்வு செய்யும் அளவுகோல்கள் நிதிகளின் திறமையான செலவை உறுதி செய்கிறது தற்போதைய சூழலில், பத்திரமயமாக்கல் மலிவான நிதிக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்குகிறது.

**6)பல கருவிகளை வழங்குதல்**

முதலீட்டாளரின் பார்வையில், இது பல புதய முதலீட்டு கருவிகளை வழங்குகிறது, இதனால் முதலீடு செய்யும் பொதுமக்களின் மாறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்கின்றது

பரஸ்பர நிதிகள், காப்பீட்டு நிறுவனங்கள் ஓய்வூதிய நிதிகள் போன்ற பிற நிதி இடைத்தரகர்களுக்கான பலவகையான கருவிகளையும் இது வழங்குகிறது. இது அவர்களுக்கு பல தேர்வுகளை வழங்குகிறது.

**7) அதிக வருவாய் விகிதம்**

பாரம்பரியகடன் பத்திரங்களுடன் ஒப்பிடும் போது பத்திரமயமாக்கப்பட்ட பத்திரங்கள் சிறந்த பணப்புழக்கத்துடன் சிறந்த

வருவாய் விகிதத்தை வழங்கின்றன. இவை நல்ல கடன் மதிப்பீட்டு நிறுவனங்களால் மதிப்பிடப்டுகின்றன, எனவே மிகவும் கவாச்சிகரமானவை

இவை அதிக பாதுகாப்பை வழங்குவதோடு நல்ல வருமானம் அளிக்கின்றன

**8) செயலற்ற மூலதனத்தை தடுப்பது**

பத்திரமயமாக்கல் இல்லாதிருந்தால், மூலதன அடமானங்கள், கால கடன்கள் போன்ற பணமற்ற சொத்து வடிவில் செயலாற்று இருக்கும் என்பதால் தோற்றுவிப்பாளரி திவால் நிலை முதலீட்டாளர்களை பாதிக்காது இப்போது இந்த சொத்துகளுக்கு எதிராக வர்த்தகம் செய்யக்கூடிய மற்றும் மாற்றத்தக்க பத்திரங்களை வெளியிடுவதன் மூலமும். சொத்துகளை பணப்புழக்கமாக மாற்றுவதன் மூலமும் நிதிகளை மறுசுழற்சி செய்ய உதவுகிறது. எனவே இது மூலதன உருவாக்கத்திற்கு உத்வேகம் அளிக்கின்றது

**9)பாரம்பரிய கருவிகளை விட சிறந்தது**

பத்திரப்படுத்தப்பட்ட சொத்துகளின் ஆதரவுக்கு எதிராக முதலீட்டாளருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றது. அடிப்படை சொத்துகள் சான்றிதழ்களுக்கான பிணையமாக மட்டுமல்லாமல், முதலீட்டாளர்களுக்கு அசல் மற்றும் வட்டியை செலுத்த வருமானத்தை ஈட்ட பயன்படுத்தப்படுகிறது.

இது எந்தவொரு சேவை தேவைகளையும் ஏற்படுத்தாததால் அதிக செலவுகள் தேவையில்லை மியூச்சுவல் ∴பண்ட் யூனிட்டுகள் கூட இணை பததிரங்களின் ஆதரவுக்கு எதிராக வழங்கப்படுவதால் நல்லது, அதே சமயம் மியூச்சுவல் ∴ பண்ட் சான்றிதழ்களுக்க அத்தகைய ஆதரவு இல்லை எனவே முதலீட்டாளர்களுக்கு அதிக பாதுகாப்பை அளிப்பதோடு முதலீட்டாளரின் பார்வையில் வெளிப்படைத்தன்மை கொண்டது.

**10) பிற நன்மைகள்**

பாதுகாப்பு பத்திரமயமாக்கல், உண்மையான ஆவியால் மேற்கொள்ளப்பட்டால் திறனுடன் மூலதனத்தை பயன்படுத்துவதில் அதிக பொருளாதாரத்திற்கு வழி வகுக்கும் மற்றும் நிதி மற்றும் கடன் இரண்டிலம் செலவு செயல்திறன் ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளுக்கும் இது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

நீண்ட காலமாக கடன் வாங்குபவர்களுக்கும் இத நன்மை பயக்கும் தோற்று விப்பாளர்கள் இறுதி கடன் வாங்குபவர்களுக்கு நன்மைகளை வழங்குவதால் அவர்கள் மலிவான விலையில் நிதியைப் பெற முடியும் எனவே குறைந்த செலவு மற்றும் புதுமையான நிதி மூலமாகும்.என்பதில் சந்தேகம் இல்லை

## 12.7 இந்திய உள்ளடக்கத்தல் பாதுகாப்பு

பொதுவவாக, வாகன கடன்களின் பத்திரமயமாக்கல் இந்தியாவில் பிரபலமாக உள்ளது. இப்போது பத்திரமயமாக்கல் சந்தை பல சொத்து

வகுப்புகள், அதாவது வீட்டுக் கடன்கள், கார்ப்பரேட் கடன்கள், வணிக அடமான வரவுகள் திட்ட வரவுகள், சுங்கவரி வருவாய், தங்கள் கடன்கள் மற்றும் சமீபத்தில் நூண் நிதி கடன்கள் என பரவியுள்ளது

வங்கிகளின் வளர்ந்து வரும் சில்லறை கடன் இலாகா, இந்த கடன்களில் குறுகிய கால முதிர்ச்சி மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக முதலீட்டாளர்களுக்கு அடிப்படை சொத்துகளின் பரிச்சயம் காரணமாக சொத்த ஆதரவு பத்திரமயமாக்கல் (யுடீளு) நீண்ட முதிர்வு காலங்கள்.இரண்டாம் நிலை சந்தை பணப்புழக்கம் மற்றும் அடிப்படை கடனை முன்கூட்டியோ செலுத்துதல் ∴ மறு நிர்ணயம் செய்வதால் ஏற்படும் ஆபத்த ஆகியவற்றின் காரணமாக இந்தியாவில் மெதுவாக உள்ளது.

மிக சமீபத்தில் வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களின் பெரு நிறுவன கடன்களில் ஒற்றை கடன் விற்பனை (டுளுழு) பெறுகிறது இந்தியப் பத்திரமயமாக்கல் சந்தையில் வேகத்தை அதிகரிக்கும் நாணயத்தின் மறுபுறத்தில், பத்திரமயமாக்கலுக்கு எதிராக ஒற்றை கடன் அல்லது சில்லரை கடன் குளங்களை நேரடியாக ஒதுக்குவதும் இந்தியாவில் முக்கியத்துவம் பெறுகிறது ீவுஊளு போன்ற கருவிகளை வெளியிட இது தேவையில்லை

## 12.8 பத்திரமயமாக்களின் புதிய வழிகாட்டுதல்கள்

சமீபத்தில் சுடீஐ வணிக வங்கிகளுக்கு ளுீஏகளுக்கு நிதியளிக்க அனுமதிக்கும் வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. சில முக்கியமான வழிகாட்டுதல்கள் பின்வருமாறு

- ❖ அனைத்து வங்கிகள், கால கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் டீகுஊ கள் பத்திரங்களை மட்டுமே
- ❖ பத்திரமயமாக்கப்பட்ட சொத்துகளை மாற்றுவதில் ஈடுபட்டுள்ள ளுீஏகளுக்கு வங்கிகள் நிதியளிக்க முடியும்
- ❖ தொடக்க வங்கிகள் குழு நிறுவனங்களைத் தவிர ஒரு சுயாதினமான மூன்றாம் தரப்பினரான ளுீஏகளுக்கு நிதியளிக்கும் போது, குறைந்தது 25 சதவீத பணப்புழுக்க வசதியை வழங்க வேண்டும் ஒவ்வொரு வங்கியும் ளுீஏகளுக்கு நிதியளிப்பதற்காக மூன்றாம் தரப்பினரை கண்டுபிடிக்க வேண்டும்
- ❖ வங்கிகளால் வழங்குப்படும் பணப்புழக்க வசதி பின்வரும் சுழலில் கிடைக்கக்கூடாது

அ) தொடர்ச்சியான பத்திரமயமாக்கலின் குறைபாடுகளை சந்தித்தல்

ஆ) முதலீட்டாளர்களின் நிதி திட்டமிடம்பட்ட திருப்பிச் செலுத்துதலுக்கு நிதிவளித்தல்

இ) உத்தரவாதங்களை மீறுதல்

## 12.9 பத்திரமயமாக்கலுக்கான சட்ட கட்டமைப்பு

பத்திரங்கள் ஒப்பந்த சட்டம் 1956 2007-ல் திருத்தப்பட்டது. இத பத்திரமயமாக்கப்பட்ட கடனில் வர்த்தகம் செய்வதற்கான சட்ட கட்டமைப்பை வழங்கும்.

முக்கியமான திருத்தங்கள்

1) சட்டத்தில் குறிப்பிட்ட படி பத்திரங்கள் என்ற வார்த்தையில் பத்திரமயமாக்கல், கருவிகள் அடங்கம்
2) பத்திரமயமாக்கல் கருவிகளை வழங்கு ளுநுடீஐ –ன் அனுமதி அவசியம்
3) பத்திரமயமாக்கப்பட்ட கடன், அடமான ஆதரவு கடன் போன்றவற்றில் வர்த்தகம் செய்வதற்கு ஒரு சட்ட கட்டமைப்பு வழங்கப்பட்டள்ளது.

## 12.10 தொகுத்தறிவோம்

பொதுவாக இந்த பங்குகள் அதிக மதிப்பீடு செய்யப்பட்ட வணிக வங்கிகளால் வழங்கப்படும் உத்தரவாதங்களால் ஆதரிக்கப்படுகின்றன எனவே அவை முதலீட்டாளரின் பார்வையில் இருந்து கவர்ச்சிகரமானவை இவை பெரும்பாலும் குறுகிய கால் இயல்புடையவை.

## 12.11 கலைச் சொற்கள்

1. கடன்கள்
2. அம்சங்கள்
3. செயல்முறை
4. பத்திரமயமாக்கல்
5. சட்டம்

## 12.12 வினாக்கள்

1. பத்திரமயமாக்கல் மற்றம் காரணமாக்கல்?
2. மோடஸ் ஒபராண்டி விளக்கவும்
3. பாதுகாப்பு பத்திரமயமாக்கலுக்கான கட்டமைப்பை விளக்குக
4. பாதுகாப்பு பத்திரமயமாக்கலுக்கான நன்மைகள் யாவை
5. பத்திரமயமாக்கல் மற்றும் வங்கிகளை விளக்குக

## 12.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India
2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.
3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.
4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 13 துணிகர முதலீடு
## Venture Capital

13.1 அறிமுகம்
13.2 துணிகரமுதலீட்டின் சிறப்பியல்புகள்
13.3 துணிகரமுதலீட்டின் வடிவங்கள்
13.4 துணிகர முதலீட்டு நிதியிடலின் கட்டங்கள்
13.5 இந்தியாவின் துணிகர நிதியிடலின் வடிவங்கள்
13.6 துணிகர முதலீட்டின் பணிகள்
13.7 துணிகர முதலீட்டின் நன்மைகள்
13.8 இந்தியாவின் நிலை
13.9 துணிகர முதலீட்டு நிதி மீதான செபி ஒழுங்கு முறைகள்
13.10 ஈடுகடன் தகுதிநிலை மதிப்பீட்டுத் தரமிடல்
13.11 மதிப்பீட்டுக் காரணிகள்
13.12 கடன் தகுதிநிலை மதிப்பீட்டுத் தரமிடலின் பணிகள்
13.13 இந்திய மதிப்பீட்டுத் தர நிறுவனங்களின் மதிப்பீட்டு முறைகள்
13.14 வரிசைப்படுத்தல் நடைமுறை
13.15 தொகுத்தறிவோம்
13.16 கலைச்சொற்கள்
13.17 வினாக்கள்
13.18 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 13.1 அறிமுகம்
## Introduction

புதிய பொருட்கள் கண்டுபிடிப்புகள் புது முறைகள் போன்றவற்றின் அறிமுகம் அல்லது புதிய தொழில்நுட்பங்களின் வணிகமயமாக்கலுக்கு என அமைக்கப்பட உள்ள திட்டங்களுக்கு அளிக்கப்படும் நீண்டகால நிதி உதவியே துணிகர முதலீடானது பேரளவு அபாயத்தைக் கொண்டிருந்தாலும் கூட கவர்ச்சிகரமான மீள் வருகைகளையும் உறுதி செய்கின்றது. ஆகவே, இது ‘‘அபாய முதலீடு’’ எனவும் அழைக்கப்படுகிறது. நாடு ஒன்றின் பொருளாதார வளர்ச்சிக்கு துணிகர முதலீட்டு நிறுவனங்களின் பங்கு மகத்தானது எனலாம். இவர்களின் உதவியினால்தான், புதிய தொழில் முனைவோரும் வணிகங்களும் தோன்றி, நாடு ஒன்றின் மொத்த வளர்ச்சிக்கு தங்களின் பங்களிப்பைக் செய்கின்றன. இந்தியாவில், இவ்வித நிறுவனங்கள் தேசிய மற்றும் மாநில அளவுகளில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு உதாரணங்களாக நாம் இந்தியத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகவல் கம்பெனி லிட் (Technology Development and Information Company of India Limited), அபாய முதலீடு மற்றும் தொழில்நுட்ப நிதிக் கழகம் லிமிடெட் (Risk Capital and Technology Finance Corporation Limited) மற்றும் குஜராத் துணிகர நிதி லிமிடெட் போன்றவற்றைக் கூறலாம்.

**துணிகர முதலீட்டின் பொருளும் இலக்கணமும்**

**Meaning and Definition of Venture Capital**

மூலதன சந்தையில் துணிகர முதலீட்டு நிதி ஓர் புதிய வகை ஆகும். தொழில்நுணுக்கம் அறிந்த தொழில் முனைவோர் (Technocrat Enterpreneurs) தொழில் திறமையும் அனுபவமும் பெற்றவர்களாய் இருக்கின்றனர். வளம் பெறக் கூடிய (Viable) புதிய திட்டங்களைத் தீட்டவும் பின் அதன்படி தொழிலைத் தொடங்கவும் தேவையான திறமைகள் இவர்களிடம் உள்ளன. ஆனால், இவர்களுள் பெரும் பாலானவர்களிடம் தொழில் ஆரம்பிப்பதற்குத் தேவையான தோற்றுவிப்பாளர் மூலதனம் (15% - 20%) இருப்பதில்லை. அதாவது, தொழில் திட்டத்தை தோற்றுவிக்கத் தேவையான பணம் இவர்களிடம் இருப்பதில்லை. நடைமுறை வழக்கில் பார்த்தால் இதுவே துணிகர மூலதனமாகும்.

துணிகர முதலீடு அளிப்பதில் இடர்கள் அதிகம் உள்ளன. ஆனால், திட்டம் வளம் பெறக்கூடியதாக இருந்தால், பெறக்கூடிய மீள்வருகை வீதத்தின் வாய்ப்பு வளம் நிச்சயம் கணிசமானதாக இருக்கும்.

**துணிகர முதலீடு**

குறுகிய நோக்கில் பார்த்தோமெனில், துணிகர முதலீடு என்ற பொதுக் கருத்தானது “வளர்ச்சியின் நிலையான ஒரு பதிவற்ற புதிய மற்றும் முயற்சிக்கும் நிறுவனங்களில் செய்யப்படும் முதலீடே துணிகர முதலீடாகும்” என்கின்றது. ஆனால், பரந்த நோக்கில் பார்க்கும் பொழுது, துணிகர முதலீடு என்ற சொற்றொடர் ஆனது “புதிய கருத்துக்கள் அல்லது புதிய தொழில் நுட்பங்களில் தனிச் சிறப்பு பெற்றுள்ள சிறிய நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் அமைத்தலுக்கு பங்கு வைப்புகளாக மூலதனத்தை அளித்தல்” எனக் கருதப்படுகிறது. இது நிறுவனம் ஒன்றிற்கு நிதியை மட்டும் அளிக்காமல் அந்நிறுவனத்தை அமைக்கத் தேவையான ஆற்றலை அளிக்கிறது, சந்தையிடுகை நுட்பத்தை வடிவமைக்கிறது மற்றும் அதனை அமைக்கிறது மற்றும் நிர்வகிக்கிறது.

துணிகர முதலீடு என்பது அபாயத்தை கொண்டுள்ள ஆனால் அதே சமயத்தில் வளர்ச்சிக்கான உறுதியான வாய்ப்பு வளத்தை உடைய பேரளவு தொழில்நுட்பத் திட்டங்களுக்குரிய நீண்டகால அபாய மூலதனம் ஆகும். பொதுவாக, துணிகர முதலீட்டாளர்கள் திட்டத்தின் தொடக்க காலங்களில் புதிய தொழில்முனைவோருக்கு உதவும் வகையில் தங்களது வள ஆதாரங்களை சேகரிக்கின்றனர். திட்டம் வளர்ச்சியுற்று இலாபத்தை ஈட்டத் தொடங்கியவுடன், இவர்கள் தங்களது சாதாரணப் பங்குகளை அதிக முனைமத்தில் விற்கின்றனர்.

ஆகவே, துணிகர முதலீட்டுக் கம்பெனி என்பது “நிறுவனம் ஒன்றின் திட்டம் ஒன்றில் துணைத் தோற்றுவிப்பாளராக சேரும் மற்றும்

அந்நிறுவனத்தின் அபாயங்களையும் வெகுமதிகளையும் பங்கிடும் ஒரு நிதி நிறுவனமாகும்''. என வரையறுக்கப் படலாம்.

இத்தருணத்தில் நாம் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு தந்துள்ள இலக்கணத்தைப் பார்க்கலாம்.

''துணிகர முதலீடு என்பது பங்கு மாற்றகத்தில் விலைப்புள்ளி இடப்படாத இளம் கம்பெனிகளில் நிறுவனங்களால் இடப்படும் மூலதனமாகும். இதன் நோக்கமானது முதலீட்டிலிருந்து உயர்ந்த மீள்வருகையைப் பெறுதலாகும். இளம் கம்பெனியில் துணிகர முதலீட்டாளர்களின் பணம் மற்றும் அலுவல் சார்ந்த தேர்ந்த அறிவின் கூட்டின் காரணமாக வணிகத்தின் மதிப்பு உருவாக்கப்படுகிறது.''

செபி ஒழுங்குமுறைகளின்படி, ''எழுப்பப்பட்டு துணிகர முதலீட்டு நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்யப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட முதலின் ஒரு சேர்மத்தைக் கொண்ட இந்த ஒழுங்குமுறைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழக உரு உள்ளிட்ட ஒரு கம்பெனி அல்லது பொறுப்பாண்மை வடிவில் அமைக்கப்பட்ட ஒரு நிதியே துணிகர முதலீட்டு நிதியாகும்.

## 13.2 துணிகர முதலீட்டின் சிறப்பியல்புகள்

## Features of Venture Capital

துணிகர முதலீட்டின் சிறப்பியல்புகள் பின்வருமாறு:

1. துணிகர முதலீடானது வழக்கமாகவே சாதாரண மூலதன வடிவத்திலேயே பங்களிப்பு செய்யப்படுகின்றது. ஆயினும், இது மாற்றத்தக்க கடன் அல்லது நீண்டகாலக் கடன் வடிவிலும் அளிக்கப்படலடாம்.
2. இது ஒரு பேரளவு அபாயத் திட்டமாகும். ஆயினும் இது பேரளவு வளர்ச்சி வாய்ப்புகளையும் கொண்டுள்ளது எனலாம்.
3. துணிகர முதலீடானது புதிய கருத்துக்கள் அல்லது தொழில்நுட்பங்களை வணிகமயமாக்கும் நோக்கில் அளிக்கப்படுகின்றதே அன்றி வாணிபம், நிதிச் சேவைகள், முகவாண்மை போன்ற பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு அளிக்கப்படுவதில்லை.
4. துணிகர முதலீட்டாளரானவர் தொழில்முனைவோருடன் துணைத் தோற்றுவப்பாளர் என்ற நிலையில் சேர்ந்து நிறுவனத்தின் அபாயங்களையும் வெகுமதிகளையும் ஏற்கின்றார்.
5. துணிகர முதலீட்டாளர் தொடர்ந்து வணிகத்தின் செயல்பாட்டில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார்.
6. திட்டம் முழுவீச்சில் வெற்றியுடன் செயல்படத் தொடங்கியவுடன் துணிகர முதலீட்டாளர் தமது முதலீட்டை திரும்பப் பெறுகின்றார்.

7. துணிகர முதலீட்டாளர் தொடக்க முதலீடு அளிப்பதோடு நில்லாமல், ஆற்றலை அளிக்கிறார், சந்தையிடுகை நுட்பத்தை வடிவமைக்கிறார், நிறுவனத்தினை அமைக்கவும் நிர்வகிக்கவும் செய்கிறார்.
8. பொதுவாக, இங்கு முதலீடானது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிலேயே செய்யப்படுகின்றது.
9. வளர்ச்சியுறுவதற்கான காலம் இங்கு நீண்டதாக உள்ளது. ஆகவே, இதிலிருந்து பயன் பெறத் தொடங்க குறைந்தது 4 முதல் 5 ஆண்டுகள் ஆகிறது.
10. இது ஒரு நீண்டகால முதலீடாகும். இதிலிருந்து கிடைக்கும் ஆதாயம் மூலதன ஆதாய வடிவிலேயே இருக்கிறது.
11. இது திட்டம் ஒன்றை மேலாண்மை செய்வதில் உள்ள பேரளவு இடருடன் கூடிய ஒரு ஆக்கரமான முதலீடாகும்.

## 13.3 துணிகர முதலீட்டின் வடிவங்கள்

## Forms of Venture Capital

இயல்பாகவே, துணிகர முதலீடானது வணிகம் ஒன்றின் பல்வேறு கட்டங்களுக்கும் தேவையாக உள்ளது. அவை பின்வருமாறு:

1. கருத்து ஒன்றின் உருவாக்கம் (Development of an Idea).
2. கருத்தினை செயல்படுத்தல் (Implementation of the Idea).
3. வணிகம் சார்ந்த உற்பத்தி (Commercial Production).
4. அமைப்பு நிலை (Establishment Stage).

முதல் கட்டமான ‘‘கருத்துருவாக்க’’ நிலையில், வணிகத்துடன் தொடர்பு உடைய இடர் பேரளவினதாக இருக்கும். இங்குதான் ஒரு கருத்தானது வணிகத்தின் திட்டமாக மாற்றம் பெறுகிறது. இக்கட்டத்தில், ஒரு ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு காலத்திற்கு புலனாய்வு ஆழமாக மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, இக்கட்டத்தில் தேவைப்படும் நிதி ‘‘விதை நிதி’’ (Seed Finance) எனப்படுகின்றது.

இரண்டாவது கட்டம் ‘‘கருத்தினை செயல்படுத்தும் நிலை’’ ஆகும். இந்நிலையில், பொருள் ஒன்றைத் தயாரிப்பதற்கு என நிறுவனம் அமைக்கப்படுகிறது. ஆகவே நிறுவனத்தைத் தொடங்குவதற்கு என துணிகர முதலீட்டாளர்களால் நிதி அளிக்கப்படுகிறது. இரண்டாவது கட்டம் வரை இடப்படும் நிதியானது, பொருட்களின் தயாரிப்பிற்கும் மேலும் வணிகத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாவது கட்டம் ‘‘வணிகம்சார்ந்த உற்பத்தி’’ க்குச் செல்லும் கட்டமாகும். இந்நிலையில்தான் நிறுவனம் உண்மையில் அமைக்கப்பட்ட செயல் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது, பொருள் தயாரிக்கப்படுகிறது. இந்நிலையில், இதற்குப் போதுமான நிதியைப் பெறுவது கடினமாக இருக்கிறது. ஏனெனில், இதற்கு இந்நிலையில், நிறுவனத்தின்

சந்தையிடுகைக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்குக் கூடுதலாக நிதி தேவையாக இருக்கிறது.

நான்காவது கட்டம் “அமைத்தல் கட்டமாகும்.” இக்கட்டத்தில் நிறுவனமானது சந்தையில் காலூன்றி தீவிரமாக வளரத் தொடங்குகிறது. இக்கட்டத்தில், நிறுவனத்திற்கு அதன் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கு நிதி தேவையாக இருக்கிறது. இதனால், நிறுவனத்தினால் பேரளவு உற்பத்தியின் சிக்கனங்களை அடைய முடியும்.

வணிகம் ஒன்றுடன் தொடர்புடைய இடரின் அளவானது, வணிகம் ஒன்று. ஆதன் வளர்ச்சிக் கட்டத்தின் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்ந்து செல்லச்செல்ல குறைந்து கொண்டே வருகிறது.

## 13.4 துணிகர முதலீட்டு நிதியிடலின் கட்டங்கள்

## Phases in Venture Capital Financing

துணிகர முதலீட்டு நிதியிடல் நான்கு கட்டங்களைக் கொண்டுள்ளது. அவையாவன:

1. நிதியை எழுப்புதல் மற்றும் வணிகத் திட்டங்களை தோற்றுவித்தல் (Raising of Funds and Exploring Business Plans).
2. நிறுனவனங்களில் முதலீடு செய்தல் (Investing in Firms).
3. வெற்றிவாய்ப்புமிக்க நிறுவனங்களை விட்டு வெளியேறுதல் (Leaving Successful Firms).
4. முதலீட்டாளர்களுக்கு மூலதனத்தைக் திருப்பி அளித்தல் (Returning Capital to Investors).

இக்கட்டங்களை நான்கும் ஒரு சுழற்சியாக மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, இவை அனைத்தும் ஒட்டுமொத்தமாக துணிகர முதலீட்டு சுழற்சி என அழைக்கப்படுகிறது. அதனை விளக்கும் வரைபடத்தில் தரப்பட்டுள்ளது.




துணிகர முதலீட்டு நிதியிடலின் கட்டங்கள்

மேற்கண்ட ஒவ்வொரு கட்டத்தையும் பற்றி இப்பொழுது நாம் சுருக்கமாக விவரிக்கலாம்.

**1. நிதியை எழுப்புதலும் வணிகத் திட்டங்களைத் தீட்டுதலும் (Raising Of Funds and Exploring Business Plans)** : நிதியை எழுப்புதலும் வணிகத் திட்டங்களைத் தீட்டுதலும் பொதுவாக ஒருசேரவே மேற்கொள்ளப்படுகின்றன. இவை இரண்டுமே தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. வழக்கமாகவே, துணிகர முதலீட்டாளர்கள் பொது முதலீட்டாளர்களிடம் இருந்து நிதியை எழுப்புகின்றனர். அம்முதலீட்டாளர்கள் தமது பணம் எங்கு முதலீடு செய்யப்படுகின்றது. என்பதைப்பற்றி அறியாதவர்களாகவே இருக்கின்றனர். இந்நிலையில் துணிகர முதலீட்டாளர்கள் நிதியை எழுப்புகின்றனர். அதே சமயத்தில் நல்ல வாய்ப்பு வளமிக்க திட்டங்களைக் கண்டறிந்து முதலீட்டிற்கென தேர்ந்தெடுக்கின்றனர்.

**2. நிறுவனங்களில் முதலீடு செய்தல் (Investing in Firms):** துணிகர முதலீட்டு நிதியிடலின் இரண்டாவது கட்டமானது புதிய நிறுவனம் ஒன்றில் எழுப்பிய மூலதனத்தை இடுதலாகும். இயல்பாகவே, புதிதாக உருவாக்கப்படும் நிறுவனங்கள் ஏதேனும் ஒரு பொருளின் உற்பத்தியில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன. ஏனெனில், அவை தொடக்க நிலையில் இருப்பதால், அவற்றால் பல திசைகளில் கவனத்தைத் திருப்ப இயலாது. துணிகர முதலீட்டாளர்கள் அவ்வித தொடக்க நிலையில் உள்ள வணிகத்தைக் தேர்ந்தெடுத்து அவற்றில் முதலீடு செய்து தமது அனுபவம், ஆற்றல், ஆலோசனை ஆகியவற்றையும் பயன்படுத்தி, நிலையான ஒரு நிறுவனமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் இந்நிறுவனங்களின் இயக்கத்தைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். அவைத் தீர்மானங்களில் சுறுசுறுப்பாகப் பங்கேற்கின்றனர். நிறுவனத்தின் வளர்ச்சியில் முழுமையாக தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

**3. நிறுவனங்களை விட்டு வெளியேறுதல் (Leaving the Firms):** நிறுவனங்களை விட்டு வெளியேறுதல் துணிகர முதலீட்டு நிதியிடலின் மூன்றாவது கட்டமாகும். கம்பெனி ஸ்திரத்தன்மை பெற்றவுடன், துணிகர முதலீட்டாளர்கள் தங்களது பணத்தை திரும்ப எடுத்து அவற்றை அதனை முதலீடு செய்தவர்களுக்கு திருப்பி அளித்து விடுகின்றனர். இந்நிலையில் இந்நிலையில் பணத்தைத் திரும்ப எடுப்பதற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் உள்ளன. ஆவையாவன:

நிறுவனம் நன்கு வளர்ச்சியுற்ற நிலையில் மூலதனத்தின் மதிப்பு உயர்ந்திருக்கும். இந்நிலையில் மூலதனத்தினைத் திரும்பப் பெறும் பொழுது அதன் பயனை அடைய முடியும், மற்றும்

அப்பணத்தை மற்றொரு புதிய நிறுவனத்தில் இட்டு அதன் வளர்ச்சிக்கு உதவலாம்.

## 13.5 இந்தியாவில் துணிகர நிதியிடலின் வடிவங்கள்

## Forms of Venture Financing in India

இந்தியாவில் துணிகர நிதி கீழ்க்கண்ட மூன்று வடிவங்களில் கிடைக்கிறது.

சாதாரண நிதி (Equity Finance).

கடன் (Lond)

வருமானக் குறிப்பு (Income Note)

1. **சாதாரண நிதி (Equity Finance):** இந்தியாவில், துணிகர முதலீட்டாளர்கள், கம்பெனியின் மொத்த சாதாரணப் பங்கு முதலில் 49% வரை பங்களிப்புச் செய்கின்றனர். சாதாரண நிதியில் முதலீடு செய்யும் நிலையில், துணிகர முதலீட்டாளர்கள் சாதாரணப் பங்குகள் அதன் மதிப்பில் உயரும்வரை தமது முதலை நிறுவனத்தில் விட்டு வைக்கின்றனர். பங்குகள் அவற்றின் மதிப்பில் உயர்ந்தவுடன், அவர்கள் அவற்றை விற்றுத் தன் பணத்தை திரும்பப் பெற்றுவிடுகின்றனர்.

2. **கடன் (Loan):** துணிகர முதலீட்டாளர்கள் நிபந்தனைக்கு உட்பட்ட கடன்களையும் அளிக்கின்றனர். இக்கடன்கள், திட்டம் நிறைவேற்றப்பட்டு பொருட்களின் விற்பனை தொடங்கிய பிறகு விற்பனை மீது குத்தகை போலத் திரும்பப் பெறப்படுகின்றன. இக்கடன்கள் மீது வட்டி ஏதும் செலுத்தப்படுவதில்லை. ஆயினும் சில துணிகர முதலீட்டாளர்கள் தொழில்முனைவோரின் விருப்பத்திற்கேற்ப குத்தகைக்குப் பதிலாக விற்பனையின் மீது வட்டியாகவும் பெற்றுக்கொள்ள உடன்படுகின்றனர்.

3. **வருமானக் குறிப்பு (Income Note):** வருமானக் குறிப்பு என்பது நிபந்தனைக்குட்பட்ட கடன்கள் மற்றும் மரபுசார்ந்த கடன்கள் ஆகிய இரண்டின் இயல்புகள் இணைந்த ஒரு கடன் வடிவமாகும். இக்கடனைப் பெறும் நிறுவனம் வட்டியும் செலுத்த வேண்டும். விற்பனை மீது குத்தகையும் செலுத்த வேண்டும். திட்டத்தின் அபிவிருத்தி நிலையில் 9% வீதத்தில் கடன் தொகை மீது வட்டி செலுத்தப்படுகிறது. தவிரவும் விற்பனை மீது குத்தகையும் செலுத்தப்படுகிறது.

## 13.6 துணிகர முதலீட்டின் பணிகள்

## Functions of Ventuee Capital

துணிகர முதலீட்டின் முதன்மைப் பணிகள் பின்வருமாறு

1. **நிதி மற்றும் ஆற்றல்களை அளிக்கிறது (Provides Finance as well as skills):** துணிகர முதலீடானது புதிய நிறுவனங்களின் புதிய திட்டங்களுக்கு நிதியையும் ஆற்றல்களையும் அளிக்கிறது. இது நிதிகளை தொடக்க நிலைகளில் மட்டுமல்லாமல் வணிக நிறுவனம் ஒன்றின் ஆயுள்

முழுவதும் அளிக்கிறது. துணிகர முதலீட்டாளர்கள், சொந்த முதலுக்கும் புதிய வணிகம் ஒன்றை வெற்றிகரமாக தொடங்குவதற்குத் தேவையான நிதிக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புகின்றனர்: ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு அவைகளின் உத்தம அளவு இயக்கங்களுக்குத் தேவையான நிதியை அளிக்கின்றனர். இது புதிய வணிகத்தை அமைப்பதில் தூண்டுகோலாகவும் பழைய நிறுவனங்கள், உகந்த செயல்பாட்டை அடையக் கூடிய வகையில் தூண்டும் முறையாகவும் செயலாற்றுகிறது.

2. **தொழில் அடிப்படையை பரவலாக்குகிறது (Widens the Industrial Base):** துணிகர முதலீடு உயர்ந்த தொழில்நுட்பத்தை உடைய திட்டங்களுக்கு நிதியிடுகிறது மற்றும் அதன்மூலம் இது உயர் தொழில்நுட்பத் துறைத் தொழில்களின் அடிப்படையை பரவலாக்குகிறது மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைப் பெருக்குகிறது.

3. **நிறுவனங்கள் அலுவல்சார்ந்த வகையில் தேர்ச்சிபெற உதவுகிறது (Helps in Professionalising the Firms):** துணிகர முதலீட்டாளர்கள், நிறுவனங்களை அலுவல்சார்ந்த வகையில் தேர்ச்சி பெற்றதாக்கும் முகமாக நன்கு திறம்வாய்ந்த நபர்களைக் கண்டுபிடித்து தேர்ந்தெடுத்து, பணியமர்த்த உதவுகின்றனர்.

## 13.7 துணிகர முதலீட்டின் நன்மைகள்

## Advantages of Venture Capital

இன்றைய உலகில், துணிகர முதலீடானது ஒவ்வொரு வணிக நிறுவனத்திற்கும் நடைமுறையில் பேரளவில் முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகிறது. இதன் நன்மைகளை நாம் கீழ்கண்டவாறு மூன்று தலைப்புகளின் கீழ் ஆய்வு செய்யலாம்.

1. முதலீட்டாளர்களுக்கான நன்மைகள் (Advantages to Investors)
2. தோற்றுவிப்பாளர்களுக்கான நன்மைகள் (Advantages to Promoters)
3. பொதுவான நன்மைகள் (General Advantages).

இப்பொழுது நாம் இவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விவரிக்கலாம்.

### 1. முதலீட்டாளர்களுக்கான நன்மைகள்

### Advantages to Investors

துணிகர முதலீட்டின் மூலம் முதலீட்டாளர்கள் பெறும் பல்வேறு நன்மைகள் பின்வருமாறு:

1. **குறைக்கப்பட்ட அபாயம் (Reduced Risk):** முதலீட்டாளர்கள் பொதுவாக, துணிகர முதலீட்டுக் கம்பெனியின் நிதியில்தான் முதலீடு செய்கின்றனர். அந்நிதியை, பின் துணிகர முதலீட்டுக் கம்பெனியானது புதிய வணிகத்தின் சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்கிறது. ஆகவே இங்கு நேர்மையற்ற மேலாண்மைக்கு எதிராக ஏற்பாடும் அபாயமானது. கணிசமான அளவில் குறைக்கப்படுகிறது. துணிகர முதலீட்டாளர்கள்

தொடர்ச்சியாக வணிகத்தில் ஈடுபடுகின்றனர். ஆகவே, இவர்கள் தவறான மேலாண்மை, நேர்மையற்ற நடவடிக்கைகள் போன்றவற்றிலிருந்து மேலாண்மையை பாதுகாக்கும் நிலையில் இருக்கின்றனர்.

**2. வணிகத்தின் வளர்ச்சி வாய்ப்புகளை ஆய்வு செய்யும் வாய்ப்பு (Scope for Analysing the Prospects of the Business):** துணிகர நிதியிடம் தேவையான ஆற்றல்கள் இருப்பதால், அதனால் வணிகத்தின் வளர்ச்சி வாய்ப்புகளை ஆய்வு செய்ய முடிகிறது.

**3. கம்பெனியின் அலுவல்களை விவேகமாக நடத்துவதை உறுதி செய்யும் வழிவகைகளை அளிக்கிறது (Provides Means to Ensure the Prudent Conduct of the Affairs of the Company :** வணிகத்தின் அலுவல்கள் விவேகமாக நடத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கான வழிவகைகள் முதலீட்டாளர்களிடம் இல்லை. ஆயினும் துணிகர நிதிகளுக்கு அவற்றின் பிரதிநிதித்துவம் கம்பெனியின் அவைகளில் உள்ளதால், அவைகளால் இக்குறைபாட்டைப் போக்க முடிகிறது.

**2. தோற்றுவிப்பாளர்களுக்குரிய நன்மைகள்**

**Advantages to Promoters**

துணிகர முதலீடு மூலம் தோற்றுவிப்பாளர்களுக்கு தடையேதுமின்றியும் தொடர்ச்சியாகவும் நிதி கிடைக்கின்றது. துணிகர முதலீட்டின் மூலம் தோற்றுவிப்பாளர்கள் பெறும் பல்வேறு நன்மைகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**1. நிதிகளைப் பெறுவதற்கான எளிதான வழி (Easy Way of Obtaining Funds):** பொது வெளியீடு மூலம் தனக்கு வேண்டிய நிதியைப் பெறும் நிலையில் இருக்கும் தொழில்முனைவோர் பல்வேறு நபர்களை திருப்திப்படுத்தியும் பல்வேறு சட்டச் சடங்குகளை பல்வேறு கட்டங்களில் பூர்த்தி செய்தும் போக வேண்டியுள்ளது. இவருக்கு ஒப்புறுதியர், தரகர், முதலீட்டாளர் என பல குழுவினரின் ஒத்துழைப்பும் தேவையாக உள்ளது. ஆனால், துணிகர முதலீட்டினைப் பெற விழையும் நபர், தமது கருத்தை துணிகர முதலீட்டாளர் ஏற்கும்படி செய்வது மட்டுமே போதுமானது, தனக்கு வேண்டிய நிதியை அவரிடமிருந்து பின் எளிதில் பெற்றுவிடலாம்.

**2. வணிக நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்த வகை செய்கிறது (Enables to Concentrate on Business Activities):** சாதாரணப் பங்குகளின் பொது வெளியீட்டின் பொழுது, தேவையான சட்டமுறைசார்ந்த ஒப்பளிப்புகள், ஒப்புறுதிகள் மற்றும் தரகர் நியமனம், வெளியீட்டினை பிரபலப்படுத்தல் போன்றவற்றிற்கு பேரளவில் முயற்சிகள் எடுக்க வேண்டியுள்ளது. புதிய தொழல் முனைவோரால், ஒப்புறுதி உடன்படிக்கையை ஏற்படுத்துவது என்பது எளிதான ஒரு காரியமல்ல.

துணிகர நிதி உதவியானது அம்முயற்சிகளைத் தவிர்த்துவிடுகின்றது. ஆகவே, தொழில்முனைவோரால் வணிக நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்த முடிகிறது.

**3. நிதியைப் பெறுவதற்காகும் செலவைக் குறைக்கிறது (Reduces Cost of Obtaining Finance):** சாதாரணப் பங்குகளின் பொது வெளியீடுகளுக்காகும் அடக்கச் செலவுகள் பெரும்பாலும் வெளியீட்டின் முக மதிப்பில் 10% முதல் 15% வரையினதாக இருக்கிறது. இது தவிர கம்பெனிகள், பங்குப்பதிவு மையம், பங்கு மாற்றகப்பட்டியலிடுதல் கட்டணம் ஆண்டறிக்கைகளை அச்சடிப்பதற்கும் அவற்றை அஞ்சலில் அனுப்புவதற்கும் ஆகக்கூடிய செலவுகள் போன்ற பல செலவுகளையும் செய்ய வேண்டியுள்ளது. துணிகர நிதியிலிருந்து உதவி பெறுவதற்கு இத்தகைய செலவுகளைச் செய்ய வேண்டியதில்லை.

**3. பொதுவான நன்மைகள்**

**General Advantages**

முதலீட்டாளர்கள் மற்றும் தோற்றுவிப்பாளர்களுக்கு நன்மை பயப்பதோடு மட்டுமல்லாமல், துணிகர முதலீடானது சமுதாயத்திற்கு என பொதுவாகவும் சில நன்மைகளை முன்வைக்கிறது. அவை பின்வருமாறு:

**1. தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு மற்றும் வணிகம் சார்ந்த பயன்பாடுகளுக்கு இடையிலான கால இடைவெளியைக் குறைக்கிறது (Reduces the Time Gap between Technological Innovation and Commercial Exploitation):** ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல, துணிகர முதலீடானது தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை வணிகம்சார்ந்த உற்பத்திகளாக மாற்றுவதற்கு எனவே மூலதனத்தை அளித்து வருகிறது. ஆகவே, நன்கு அபிவிருத்தி பெற்ற துணிகர முதலீட்டு நிறுவனம்சார்ந்த கட்டமைப்பானது தொழில்நுட்பக் கண்டுபிடிப்பிற்கும், அதன் வணிகம்சார்ந்த பயன்பாட்டுக்கும் இடையிலான கால இடை வெளியினைக் குறைக்கிறது.

**2. வாய்ப்பு வளத்தை முழு அளவில் பயன்படுத்த உதவுகிறது (Helps In the Exploitation of Full Potential):** புதிய பொருட்களின் உருவாக்கத்திற்கு உதவுவதன் மூலம் இது வாய்ப்பு வளத்தை முழுஅளவில் பயன்படுத்த உதவுகிறது.

**3. வேலைவாய்ப்பை உருவாக்குகிறது (Generates Employment):** இது புதிய தொழல்முனைவோரை தங்களது வணிகக் கருத்துக்களை நடைமுறைப்படுத்த ஊக்குவிக்கிறது. அதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்க வழிவகுக்கிறது.

**4. நாட்டில் தொழில்முனைவை ஊக்குவிக்கிறது (Fosters Entrepreneurship in the Country):** இது நாட்டிலுள்ள சிறிய மற்றும் முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு அவர்களது கருத்துக்களை

செயலாக மாற்ற உதவுகிறது. இதன் மூலம் இது நாட்டின் தொழில்முனைவை ஊக்குவிக்கிறது.

**5. நாட்டில் தொழில்மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாட்டிற்கு உதவுகிறது (Helps in the Industrialisation and Technological Development of the Country):** பேரளவிலும் பயன்படுத்தப்படாமலும் உள்ள வாய்ப்பு வளங்களை வெளிக் கொணர்வதன் மூலம் துணிகர முதலீடானது நாட்டின் தொழில் மேம்பாட்டினை தீவிரப்படுத்துவதில் மிகவும் முக்கியமான பங்கினை ஆற்றுகிறது. இது உயர் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புசார்ந்த துறையில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களின் பழைய திட்டங்களுக்கும் நிதியை மட்டும் அல்லாமல் ஆற்றல்களையும் அளிக்கிறது. இதன்மூலம் இது நாட்டின் தொழல்நுட்பம் சார்ந்த மற்றும் தொழல்சார்ந்த மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது.

**6. முதலீட்டாளர்களுக்கும் தொழில்முனைவோருக்கும் இடையில் இடைநிலையர் போல சேவை புரிகிறது (Serves as an Intrmediary between Investors and Entrepreneurs):** துணிகர முதலீட்டு நிறுவனமானது உயர்ந்த மீள் வருகையை எதிர்நோக்கும் முதலீட்டாளர்கள் மற்றும் தங்களது திட்டங்களைத் துவக்கத் தேவையான மூலதனத்தைத் தேடி விழையும் தொழில்முனைவோர் இடையில் ஒரு இணைப்புப்பாலம் போல செயலாற்றுகிறது.

## 13.8 இந்தியாவின் நிலை

## Indian Scenario

இந்தியாவில் துணிகர முதலீட்டு நிறுவனங்கள் தேசிய மற்றும் மாநில நிலைகளில் அமைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. இந்தியத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகவல் கம்பெனி லிமிடெட்
2. இடர் முதலீடு மற்றும் தொழில்நுட்ப நிதிக் கழகம்
3. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் துணிகர முதலீட்டு நிதி
4. குஜராத் துணிகர நிதி லிமிடெட்
5. ஆந்திரப்பிரதேச தொழில் வளர்ச்சிக் கழகத்தின் துணிகர முதலீடு லிமிடெட்
6. கனரா வங்கி துணிகர முதலீட்டு நிதி.
7. இந்திய மாநில வங்கி மூலதனச் சந்தை லிட்
8. இந்தஸ் துணிகர முதலீட்டு நிதி
9. கடன் முதலீட்டு துணிகர நிதி லிட்.

இவற்றுள் முக்கியமான நிறுவனங்களின் இயக்கங்களைப் பற்றி நாம் கீழ்க் கண்டவாறு காணலாம்.

**1. இந்தியத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகவல் கம்பெனி லிட் Technology Development and Information Company of India Limited (TDICI – 1988):**

இந்தியத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகவல் கம்பெனி லிட் என்ற நிறுவனம் 1988 ஆம் ஆண்டில், இந்தியப் பொறுப்புரிமைக் கழகம் (UTI) மற்றும் இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (ICICI) ஆகிய நிதி நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டது. இதுவே துணிகர முதலீட்டினை அளிக்க இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் கம்பெனியாகும். இதன் செயல் திட்டத்தில், துணிகர முதலீட்டு நிதியிடல் தவிர, தொழில்நுட்பத் தகவல் அளித்தல் ஆலோசனை அளித்தல், சந்தையிடுக்கைப் பணி, மேலாண்மைப் பணி, விற்பனையாளர் மேம்பாடு போன்ற பணிகளும் அடங்கியுள்ளன. இந்நிதியின் வெற்றிகரமான இயக்கமானது நிச்சயம் தனியார் துறையிலிருந்து பலரை ஈர்த்து இத்துறைக்குள் நுழைய வைக்கும் என்பதில் சந்தேமில்லை.

இதன் முதல் துணிகர முதலீட்டு நிதியான ரூ.20 கோடிகள் இந்தியப் பொறுப்பு உரிமைக் கழகம் (UTI) மற்றும் இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (ICICI) ஆகியவற்றால் சரிசமமாக பங்களிக்கப்பட்டது. இத்திட்டம் இந்திய பொறுப்புரிமைக் கழகத்தின் புதிய துணிகர முதலீட்டு அலகுத் திட்டம் ஐ –ன் கீழ் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இந்தியத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகவல் கம்பெனி லிட் (TCDICI) ஆனது 40 திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தது. இதில் அடங்கும் தொழில் துறைகளாவன – கணிப்பொறி கடினப் பொருள் கணிப்பொறி ஒருங்கிணைக்கப்பட்ட தயாரிப்பு முறை, திசு வளர்ப்பு, இரசாயனம், உணவு மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் போன்றனவாகும்.

இந்தியத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகவல் கம்பெனி லிட். நிறுவனத்தின் இரண்டாவது துணிகர முதலீட்டு நிதியான ரூ.100 கோடிகள் இந்தியப் பொறுப்புரிமைக் கழகம், இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம், மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள், வங்கிகள், கழகத் துறை போன்றவற்றால் அளிக்கப்பட்டன. இது 31.03.1993 அன்றுவரை ரூ.25.81 கோடிகளை 42 கம்பெனிகளுக்கு திட்டம் ஒன்றின் கீழும் ரூ.72.29 கோடிகளை திட்டம் ஐஐ –ன் கீழ் 79 கம்பெனிகளுக்கும் அளித்துள்ளது. இவற்றுள் பலவற்றை முதல் தலைமுறை தொழில்முனைவோரே அமைத்துள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகவல் கம்பெனி லிட். நிறுவனமானது நீண்டகால மூலதன ஆதாயத்தைப் பெறும் பொருட்டு கவர்ச்சிகரமான வளர்ச்சியையும் ஆதாய வாய்ப்பு வளங்களையும் உடைய கம்பெனிகளில் மட்டுமே முதலீடு செய்கிறது. இது உள்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை உள்நாட்டுப் பயன்பாட்டுக்கு

ஏற்றவாறு அமைக்கும் வகையில் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு நிதியிடுகின்றது. இது நிதியுதவியை திடடம் ஒன்றிற்கு ரூ.2 கோடிவரை சாதாரணப்பங்கு முதலாகவோ அல்லது நிபந்தனைக்குட்பட்ட கடனாகவோ அளிக்கிறது. உருவாக்க நிலையில், நிபந்தனைக்குட்பட்ட கடன் மீது வட்டி எனவும் செலுத்தப்பட வேண்டியதில்லை உருவாக்கத்திற்குப் பிறகு, வட்டி வீதமானது திட்டத்தின் வணிகம்சார்ந்த பயன்பாட்டுக்கு ஏற்றபடி அமையும்.

**2. இடர்முதலீடு மற்றும் தொழில்நுட்ப நிதிக் கழகம்**

**The Risk Capital and Technology Finance Corporation (RCTC)**

இடர் முதலீடு மற்றும் தொழில்நுட்ப நிதிக் கழகமானது இந்தியத் தொழில் நிதிக் கழகத்தின் துணை நிறுவனமாகும். இது தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு என துணிகர முதலீட்டினை அளிக்கிறது. இது இடர் முதலீட்டினை அளிப்பதோடு மட்டும் நின்று விடாமல் உயர் தொழில்நுட்பத் திட்டங்களுக்கும் துணிகர முதலீட்டினை அளிக்கிறது. இது குறுகிய கால மரபுசார்ந்த கடன்களை அளிக்கிறது. இது 31.03.1993 அன்று உள்ளபடி இதன் தொழில்நுட்ப நிதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 23 திட்டங்களுக்கு ரூ.13 கோடியும் துணிகர முதலீட்டு நிதித் திட்டத்தின் கீழ், 17 திட்டங்களுக்கு ரூ.10 கோடியும் நிதியுதவி செய்துள்ளது.

**3. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் துணிகர முதலீட்டு நிதி**

**IDBI Venture Capital Fund**

இதன் நோக்கம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தின் வணிகப் பயன்பாட்டை ஊக்குவித்தலும் பரந்த உள்நாட்டுப் பயன்பாடுகளுக்கு என இறக்குமதி செய்யப்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்துமாறு ஊக்குவித்தலுமாகும். இத்திட்டம் ரூ.5 இலட்சங்கள் முதல் ரூ.2.5 கோடிகள் வரை நிதியுதவி அளிக்கிறது. இதில் தோற்றுவிப்பாளரது முதலீடானது, ரூ.50 இலட்சங்களுக்கு குறைவான மதிப்புடைய திட்டங்களாயின் குறைந்தபட்சம் 10% -ம் ரூ.50 இலட்சங்களுக்கு மேற்பட்டதாயின் 15% ஆகவும் இருத்தல் வேண்டும். உதவியானது குறைந்தபட்ச சட்டச் சடங்குகளுடன் பிணையமற்ற கடன் வடிவிலும் அளிக்கப்படுகிறது. தொழில்நுட்ப மேம்பட்டு நிலையிலும் பொருளை முயன்று தயாரிக்கத் தொடங்கும் நிலையிலும் வட்டிவீதம் 9% ஆகவும் பொருள் தயாரிக்கப்பட்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு 17% ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந் நிதியானது, இரசாயனம், கணிப்பொறி மென் பொருள், மின்னணு உயர்- தொழில்நுட்பம், மரபுசாராத எரிபொருள், உணவு பதனமுறை, மருத்துவம் சார்ந்த கருவிகள் போன்ற துறைகளைக் சார்ந்த திட்டங்களுக்கு உதவுகிறது. 1993 ஆம் ஆண்டு

மார்ச் மாதம் வரை இது சுமார் 70 திட்டங்களுக்கு ரூ.46.80 கோடிகள் நிதி அளித்துள்ளது.

1996 ஆம் ஆண்டில் இந்திய துணிகர முதலீட்டுக் கழகத்தின் 14 உறுப்பினர்கள் ரூ.140 கோடிகளைக் கொண்ட 17 நிதிகளைக் கொண்டிருந்தனர். இவற்றுள், 29% தொழில் மற்றும் இயந்திரத்திற்கும், 13% நுகர்வோர்சார்ந்த பகுதகளுக்கும், சுமார் 8% உணவு மற்றும் உணவுப் பதனப்படுத்தலுக்கும், 7% தகவல் தொழில் நுட்பத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான துணிகர முதலீட்டு நிதிகள் அரசுகளுக்குச் சொந்தமான அமைப்புகளின் பகுதியாகவே உள்ளன. இந்தியாவில் துணிகர முதலீட்டுச் சந்தையானது நுகர்வோர் பொருட்கள் சந்தையில் ஏற்பட்ட ஏற்றத்திற்குப் பிறகும் தாராளமயமாக்கலுக்குப் பிறகுமே வளர்ச்சியுறத் தொடங்கியது எனலாம். 1985 ஆம் ஆண்டில் நீண்டகால பொதுக் கொள்கையால் துணிகர முதலீட்டுப் பொதுக்கருத்து அங்கீகரிக்கப்பட்டது.

துணிகர முதலீட்டுக்கு என அரசால் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளாவன: மென்பொருள் தகவல் தொழில்நுட்பம், உயர்தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் துணைத்துறைகள் மற்றும் மருந்தியல் துறையில் அடிப்படை மருந்துகளின் உற்பத்தி போன்றனவாகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அறிவியல் நிறுவனம் அல்லது தேசிய ஆராய்ச்சி ஆய்வகத்தினால் உரிமை (Patent) பெறப்பட்ட இனங்களின் தயாரிப்பில் ஈடுபடும் தொழில்குளம் இதில் அடங்குன்றன.

துணிகர முதலீட்டுத் தொழிலானது 1990 ஆம் ஆண்டில் 120 கோடிகள் நிதியுதவி செய்தது. இந்த உதவி 1996 ஆம் ஆண்டு இறுதியில் ரூ.2,000 கோடிகளாக அதிகரித்தது. அடுத்த பத்தாண்டுகளில் இது ரூ.3,500 – லிருந்து ரூ.4,000 கோடிகள் வரையினதாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**துணிகர முதலீடு மீதான கே.பி. சந்திரசேகர் குழுவின் பரிந்துரைகள்**

**Recommendation of K.B. Chandresekar Committeee on Venture Capital**

கே.பி. சந்திரசேகர் தலைமையில் துணிகர முதலீடு மீது அமைக்கப்பட் குழுவானது நாட்டில் துணிகர முதலீட்டுத் தொழிலின் அபிவிருத்திக்கு என பின்வரும் பரிந்துரைகளைச் செய்தது அதனை சமீபத்தில் செபியும் ஏற்றுக் கொண்டுள்ளது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

1. துணிகர முதலீட்டுக் கம்பெனிகளால் தோற்றுவிக்கப்பட்ட கம்பெனிகளின் தொடக்கப் பொது வெளியீடுகளுக்கு மூன்று ஆண்டு இலாப முன்பதிவிலிருந்து முற்றிலும் விலக்கு.

2. துணிகர முதலீட்டுக் கம்பெனிகளுக்கு செபியின் கீழ் தனிப்பட்ட ஒரு ஒழுங்குபடுத்தும் முறை.
3. துணிகர முதலீட்டுக் கம்பெனிகளில் முதலீடு மற்றும் வெளியேறுதலில் நெகிழ்வுத்தன்மையும் வரிச்சலுகைகளும்.
4. துணிகர முதலீட்டு நிதிக் கம்பெனிகளில் முதலீடு செய்யும் நிறுவனம் சார்ந்த முதலீட்டாளர்களின் பட்டியலைப் பரவலாக்குதல்.

இதனுடன் கூட நிதி அமைச்சகமும், துணிகர முதலீட்டு நிதிகளை ஊக்குவிக்கும் நோக்கில் முதலீட்டுக் கொள்கைகளை வெளியிட்டது. ஆவை பின்வருமாறு:

1. துணிகர முதலீட்டு நிதியின் கம்பெனிகளின் சாதாரணப் பங்குகளின் முதலீடுகள் மீதான 40% வரையறையை விலக்குதல்.
2. துணிகர முதலீட்டு நிதிகள் தாம் எழுப்பிய நிதியின் 25% வரை ஒரே நிறுவனத்திலேயே இட அனுமதி அளித்தல்.
3. 1-04-1999 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ துணிகர முதலீட்டு நிதிகள் செய்த சாதாரண முதலீடுகள் மீது பங்காதாய மற்றும் மூலதன ஆதாய விலக்குகளை அளித்தல்.
4. துணிகர முதலீட்டு நிதிகள் செபி சட்டம், 1992 –ன் சட்டப் பிரிவு 3-ன் கீழ் செபியில் பதிவு செய்யப்பட வேண்டும்.

## 13.9 துணிகர முதலீட்டு நிதி மீதான செபி ஒழுங்குமுறைகள்

## SEBI Regulations on Venture Capital Finance

துணிகர முதலீட்டு நிதி மீதான செபியின் ஒழுங்குமுறைகளுள் முக்கியமானவை மட்டும் இங்கே தொகுத்து வரையப்பட்டுள்ளன.

**1. துணிகர முதலீட்டு நிதியின் பொருள்**

**Meaning of Venture Capital Finance**

''ஒழுங்குமுறைகளின்படி எழுப்பப்பட்டு துணிகர முதலீட்டு நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்யப்பட்ட அர்ப்பணிக்கப்பட்ட முதலின் ஒரு சேர்மத்தைக் கொண்ட இந்த முறைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழக உரு உள்ளிட்ட ஒரு கம்பெனி அல்லது பெறுப்பாண்மை வடிவில் அமைக்கப்பட்ட ஒரு நிதியே துணிகர முதலீடாகும்.''

**2. சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பம்**

**Application for Grant of Certificate**

கம்பெனி ஒன்றோ அல்லது பொறுப்பாண்மை ஒன்றோ அல்லது கழக உரு ஒன்றோ துணிகர முதலீட்டு நிதி போன்ற நடவடிக்கை எதையேனும் மேற்கொள்ள விழையும் நிலையில், அது அந்நடவடிக்கையை இந்தியாவில் மேற்கொள்வதற்கு என சான்றிதழ் அளிக்கப் பெறுவதற்கு என செபிக்கு படிவம் A –ல் ரூ.25,000 விண்ணப்பக் கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். சான்றிதழ் வழங்குவதற்கான பதிவுக் கட்டணம் ரூ.5,00,000 ஆகும்.

**3. தகுதி அளவைக்கட்டளைகள்**

## Eligibility Criteria

சேபி சான்றிதழ் வழங்க வேண்டுமெனில், பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**1. விண்ணப்பம் கம்பெனி ஒன்றால் செய்யப்பட்டிருக்கும் நிலையில் (Ir the Application is made by a Company):**

1. கம்பெனியின் முதன்மை நோக்கமானது அதன் அமைப்புமுறைச் சாசனத்தில் உள்ளபடி துணிகர முதலீட்டு நிதி நடவடிக்கையை மேற்கொள்வதாக இருத்தல் வேண்டும்.
2. தமது ஈடுகளுக்கு பங்களிக்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுப்பதிலிருந்து அதன் அமைப்புமுறைச் சாசனமும் செயல்முறை விதிகளும் அதனைத் தடுத்திருக்க வேண்டும்.
3. அதன் இயக்குநர்கள் அல்லது முதன்மை அதிகாரி அல்லது பணியாளரானவர் இயக்குநர் அல்லது முதன்மை அதிகாரி அல்லது பணியாளர் என்ற நிலையில் ஒரு தகுதியான மற்றும் முறையான நபராக பணிப் புரியத் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

**2. விண்ணப்பம் பொறுப்பாண்மையால் செய்யப்பட்டிருப்பின் (If the Application is made by a Trust):**

1. பொறுப்பாண்மைப் பத்திரமானது பத்திரவடிவில் இருந்து அதுவும் இந்தியப் பதிவு சட்டம், 1908 –ன் கீழ் பதிவு செய்யப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. பொறுப்பாண்மைப் முன்மை நோக்கம் துணிகர முதலீட்டு நிதி நடவடிக்கையை மேற்கொள்வதாக இருத்தல் வேண்டும்.
3. அதன் இயக்குநர்கள் அல்லது முதன்மை அதிகாரி அல்லது பணியாளரானவர் இயக்குநர் அல்லது முதன்மை அதிகாரி அல்லது பணியாளர் என்ற நிலையில் ஒரு தகுதியான மற்றும் முறையான நபராக பணிப் புரியத் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

**4. சான்றிதழ் அளித்தல்**

## Frant of Certification

ஏதேனும் கூடுதல் தகவல் செபிக்கு தேவைப்பட்டால், அதனைக் கேட்டுப் பெற செபிக்கு அதிகாரம் உள்ளது. செபியின் கருத்துப்படி, சான்றிதழ் பெற தகுதியுடையவராக விண்ணப்பதாரா் கருதப்படும் நிலையில் சான்றிதழானது அதற்குரிய தகவல் அளிக்கப்பட்டு, பதிவுக் கட்டணம் ரூ.5,00,000 பெறப்பட்ட உடன் செபியால் படிவம் B –ல் அளிக்கப்படும்.

**5. முதலீட்டு நிபந்தனைகளும் தடைகளும்**

## Investment Conditions and Restrictions

துணிகர முதலீட்டு நிதியால் செய்யப்படும் அனைத்து முதலீடுகளும் பின்வரும் நிபந்தனைகளுக்குத் கட்டுப்பட்டதாகும்.

1. துணிகர முதலீட்டு நிதியானது பதிவுக்கு என விண்ணப்பிக்கும் பொழுதான அதன் முதலீட்டுக் கொள்கையை வெளிப்படுத்த வேண்டும்.
2. துணிகர முதலீட்டு நிதியானது அதன் கரு நிதியில் 25% -க்கு மேற்பட்டு ஏதேனும் ஒரு துணிகர முதலீட்டு நிறுவனத்தில் முதலீட்டு செய்யக் கூடாது.
3. அதனுடைய தொடர்புடைய கம்பெனிகளில் முதலீடு செய்யக் கூடாது.
4. குறைந்தபட்சம் 75% நிதியானது பட்டியலிடப்படாத சாதாரணப் பங்குகளிலோ அல்லது அலகுடன் இணைக்கப்பட்ட கருவிகளிலோ முதலீடு செய்யப்படுதல் வேண்டும். 25% -க்கு மேற்படாத தொகை பட்டியலிடப்படவுள்ள பங்குகளின் தொடக்கப் பொது வெளியீட்டில் பங்களிப்பு செய்யப்படலாம்.

**6. பட்டியலிடத் தடை**

## Prohibition on Listing

தமது பங்குகள் அல்லது அலகுகளை, துணிகர முதலீட்டு நிதிகள் அவை வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தில் பட்டியலிட முடியாது.

**7.பொதுவான கடமைகளும் பொறுப்புக்களும்**

## General Obligations and Responsibilities

எந்தவொரு துணிகர முதலீட்டு நிதியும் தமது ஈடுகள் அல்லுத அலகுகளை வாங்குமாறோ அல்லது அவற்றிற்கு பங்களிப்பு செய்யுமாறோ, பொதுமக்களை அழைப்புவிடுக்கும் விளம்பரம் செய்யவோ அல்லது ஏதேனும் ஆவணத்தைக வெளியிடவோ முடியாது.

**8. தனியார் முன்வைப்பு**

## Private Placement

துணிகர முதலீட்டு நிதியானது தமது ஈடுகள் அல்லது அலகுகளை தனியார் முன்வைப்பு மூலமே வெளியிட்டு பணத்தைப் பெறமுடியும். ஆனால் அவற்றை வெளியிடும் முன்பு செபியில் அதன் முன்வைப்பு ஆவணத்தை பதிவு செய்ய வேண்டும்.

**9. ஏடுகள் மற்றும் பதிவுகளை நிர்வகித்தல்**

## Maintenance of Books and Records

ஒவ்வொரு துணிகர முதலீட்டு நிதியும் அதன் கணக்கு ஏடுகளையும் பதிவுகளையும் 8 ஆண்டு காலத்திற்கு நிர்வகிக்க வேண்டும். அவை அதன் அலுவல்களின் உண்மையான மற்றும் நேர்மையான ஒரு நிலையை வெளிப்படுத்த வேண்டும்

**10. தகவலைக் கேட்க அதிகாரம்**

**Power to Call for Information**

துணிகர முதலீட்டு நிதியின் செயல்பாடு தொடர்பான தகவலைக் கேட்க செபிக்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறு கேட்கப்படும் நிலையில், அத்தகவலை உரிய துணிகர முதலீட்டு நிதியானது செபியால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அளித்துவிட வேண்டும்.

**11. செபியிடம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**Submission of Reports to SEBI**

துணிகர முதலீட்டு நிதியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பாக ஏதேனும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியம் என செபி கருதும் நிலையில் செபி அவற்றைப் பதிவு செய்யும்படி, குறிப்பிட்ட துணிகர முதலீட்டு நிதியினைக் கோரலாம்.

## 13.10 ஈடு கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடல்

## SECURITY CREDIT RATING

“ ஈடு கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரம்” என்பது ஈடுகளின் தகுதியை அதன் கடன் தகுதி நிலை (Credit Quality ) அடிப்படையில், சாதாரண முதலீட்டாளர்களும் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில், எழுத்து அல்லது எண் அல்லது இரண்டும் சேர்ந்த குறியீடுகளை வெளியிடுதல் ஆகும்.

இத்தகைய மதிப்பீட்டுத் தரமானது (Ratings) ஒரு குறிப்பிட்ட ஈட்டிற்கு. ஒரு குறிப்பிட்ட கால அளவில் அதன் வெளியீட்டாளர் அது தொடர்பான கடன் நிறைவேற்றப் பொறுப்பிற்கு (Credit Obligation) அளிக்கும் சேவையின் தகுதி குறித்த கருத்தினை வெளிப்படுத்தும் அடையாளக் குறியீடு ஆகும்.

இவ்வகை மதிப்பீட்டுத் தரங்கள் முதலீட்டாளர்களுக்கு அவர்கள் செய்யும் முதலீடுகளிலுள்ள நட்ட இடர்பாட்டை முன்கூட்டி அறிய உதவுகின்றன. ஈடுகள் மற்றும் பத்திரங்களின் அசல் மற்றும் வட்டித் தொகையை குறிப்பிட்ட காலத்தில் நிறுவனங்கள் செலுத்தத் தவறினால் முதலீட்டாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நிறுவனங்களின் நிதிநிலை மற்றும் கடன் தகுதி நிலை முதலானவை காலத்திற்கு காலம் மாறுபடலாம் எனவே. இவை குறித்து முதலீட்டாளர்கள் கவனமாக ஆய்வு செய்து வர வேண்டும். ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு, சில நிறுவனங்களின் கடன் தகுதி நிலை குறையலாம். அந்நிறுவனம் அசல் மற்றும் வட்டித் தொகையை குறித்த காலத்தில் திருப்பி அளிக்காது தாமதப்படுத்தினால் முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவர். எனவே, இவை குறித்து மதிப்பீட்டுத் தர நிர்ணய நிறுவனங்கள் (Credit Rating Agencies)ஆய்வு செய்து மதிப்பீட்டுத் தரங்களை வெளியிடும் போது,அவற்றை முதலீட்டாளர்கள், தாம் மேற்கொள்ளும் ஆய்வுக்கு இணையாகக் கருதுகிறார்கள். இத்தகைய

சூழ்நிலையே, மதிப்பீட்டுத் தர நிறவனங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் வழிவகுக்கின்றது.

**ஈடுகடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடலின் பொருளும் இலக்கணமும்**

**Meaning and Definition of Credit Rating**

பொதுவாக, மதிப்பீட்டுத் தரம் என்பது ஒரு நிலைத்த வருவாய் (Fixed Income) உடைய ஈட்டிற்கு அதன் வட்டி மற்றும் அசலை, குறித்த காலத்தில் செலுத்த வேண்டிய சட்டபூர்வ பொறுப்பினை நிறைவேற்றுவது குறித்த கருத்து ஆகும்.

இத்தகைய மதிப்பீட்டுத் தரங்கள், ஈடுகளின் கடன் தகுதி நிலை குறித்து முதலீட்டாளர்கள் ஒப்பிட்டுப்பார்க்க உதவுகின்ற எளிய வழியாக அமைகின்றன இதனை பின்வரும் வகையில் வரையறுக்கலாம்.

“மதிப்பீட்டுத் தரமென்பது, ஒரு ஈட்டுப் பத்திரத்தை வெளியிடும் நிறுவனத்தின் கடன் தகுதி நிலை மீதான கருத்தினை சிலவகைக் குறியீடுகள் மூலமாக வெளிப்படுத்துதலைக் குறிக்கும்”

ஆனால் இவ்வகை குறியீடுகள், ஈடுகளை வாங்கவோ அல்லது விற்கவோ பரிந்துரை செய்வதில்லை இவை நிறுவனங்களின் நிலைத் தன்மை, நிதி நிலை, மற்றும் முதலீட்டுத் தொகையை திருப்பியளிக்கும் சக்தி, ஆர்வம் முதலானவற்றைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் அளிக்கப்படுகின்றன.

**ஈடு கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடலின் தொடக்கம்**

**Origin of Credit Rating**

ஈடுகளின் கடன் தகுதி நிலையை மதிப்பீடு செய்யும் நிறுவனம் முதலில் 1841-ல் நியூயார்க்கில் லூயிஸ் டேப்பன் என்பவரால் துவக்கப்பட்டது. இந்நிறுவனம் வணிகர்களுடைய நிதிப் பொறுப்புகளை திரும்பச் செலுத்தும் தகுதியை மதிப்பிட்டு அறிவித்தது. இத்தகைய நிறுவனங்கள் படிப்படியாக வளர்ந்து இன்று திசார் வணிகத்தில் முக்கியப் பங்காற்றுகின்றன. இன்றைய தினத்தில், வணிக நிறுவனங்களின் மூலதனத் திரட்டலில். மதிப்பீட்டு நிறுவனங்களின் தர மதிப்பீடுகள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

இந்தியாவில் கிரைசில் (CRISIL) எனப்படும் மதிப்பீட்டு நிறுவனம் முதன் முதலாக 1987-ல் நிறுவப்பட்டது. இதனை தொடர்ந்து இக்ரா (ICRA) 1991 லும் கேர் (CARE) 1994 லும் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பிறகு 1996-ல் டஃப் & பெல்ப்ஸ் (Duff and Phelps Credit Rating India (p) Ltd) தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**மதிப்பீட்டுத் தரங்கள் வெளிப்படுத்தும் அம்சங்கள்**

**Aspects of Credit Ratings**

ஈடுகளுக்கு அளிக்கப்படும் மதிப்பீட்டுத் தரங்கள் பின்வருவனவற்றை வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

1. ஈடுகளின் தன்மை, கால அளவு முதலானவை

2. ஈடுகள் வெளியீட்டாளர், ஈட்டின் அசல் மற்றும் வட்டியை திருப்பிஅளிக்க முடியாமல் போவதற்கான சாத்தியக் கூறுகள்

3. ஈடுகளின் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் தொகையினை செலுத்துவதற்கான வெளியீட்டாளரின் சக்தி மற்றும் விருப்பம்

4. ஈடுகளின் வெளியீட்டு நிறுவனங்கள் கலைக்கப்பட்டாலோ, மாற்றி அமைக்கப்பட்டாலோ அல்லது நொடிப்பு நிலை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டாலோ முதலீட்டாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலை முதலானவை.

## 13.11 மதிப்பீட்டுக் காரணிகள்

## Factors that are considered for Credit Rating

மதிப்பீட்டு நிறுவனங்கள், ஈடுகளை மதிப்பீடு செய்யும் போது பொதுவாக பின்வரும் காரணிகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கின்றன.

1. ஈடுகள் வெளியீட்டாளரின் கடந்த கால மற்றும் உத்தேச எதிர்கால ரொக்க ஓட்டம் இது நிறுவனத்தின் கடன் தொடர்பான பணியினை, நிறைவேற்றும் திறனை அறியப் பயன்படுகிறது.

2. நிறுவனம் செலுத்த வேண்டிய கடன் அளவு மற்றும் தொகுப்பு

3. ஈடுகளின் வெளியீட்டாளருடைய ரொக்க ஓட்டத்தின் ஸ்திர நிலை

4. ஈடுகளுக்கு ஈடாக காண்பிக்கப்பட்டுள்ளன சொத்துக்களின் மதிப்பு

5. ஈடுகள் வெளியீட்டாளரின் சொத்துகளில் உரிமை கோருவதில் ஈடுதாரருக்கு உள்ள முன்னுரிமை.

6.ஈடுகள் வெளியீட்டு நிறுவனத்தின் ரொக்க அடக்க வீதம் (Cash Coverage Ratio)மற்றும் ரொக்கத் தன்மை (Liquidity) முதலானவை.

முதலீட்டாளர்கள் ஒரு வி'யத்தை நன்கு அறிய வேண்டும். ஈடு கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தர நிறுவனங்கள், எந்த பிற நிறுவனங்களுக்கோ அல்லது அரசுக்கோ ஆலோசகர்கள் அல்ல. அவை எந்த வகை ஈடுகளையும் வாங்கவோ, விற்கவோ பரிந்துரை செய்வதில்லை. அவை,

உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு ஈடுகளை ஒரே விதமான அடிப்படையில் மதிப்பீடு செய்கின்றன.

**இந்தியாவில் ஈடுகளின் கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடல்**

**Security Credit Rating in India**

இந்தியாவில் ஈடுகளை மதிப்பிடும் போது அவற்றில் பொதுவாக கடன் பத்திரங்கள். நிலை வைப்புகள், பரஸ்பர நிதிகள் முதலானவை அடங்கும் கடன் தகுதி நிலை மதிப்பிடப்பட்டு தரமளிக்கப்படுவது குறிப்பிட்ட ஈடுகளுக்குத் தானேயன்றி நிறுவனங்களுக்கல்ல. உதாரணமாக, ஒரு நிறுவனத்தின் கடன் பத்திரத்திற்கு AAA மதிப்பீடும் மற்றொரு நிறுவனத்தின் கடன் பத்திரத்திற்கு BBB மதிப்பீடும் அளிக்கப்பட்டிருந்தால், முதல் நிறுவனத்தின் கடன் பத்திரம் இரண்டாவது நிறுவனத்தின் கடன் பத்திரத்தை விடச் சிறந்தது என்று கொள்ளலாம். இதன் மூலம் ஈடுகளை வெளியிடும் நிறுவனங்கள் தமது கடன் தகுதி நிலைக்கு முதலீட்டாளரிடம் அங்கீகாரம் பெறுகின்றன. ஈடு வெளியீட்டாளரின் பலம், செயல்பாடுகளின் சிறப்பு, நிர்வாகத்திறன், நிறுவனத்தின் போக்கு முதலானவற்றை அந்நிறுவனத்தின் ஈடுகளுக்கு அளிக்கப்படும் மதிப்பீட்டுத் தரம் பிரதிபலிக்கிறது

இத்தகைய மதிப்பீடுகள் நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடலாம். மேலும் ஒரே நிறுவனம் வெளியிம் பலவகை ஈடுகள் கூட வெவ்வேறு மதிப்பீட்டுத்தரத்தைப் பெறலாம். ஏனெனில், பலவகை ஈடுகளில் ஒவ்வொன்றின் நிதிப்பொறுப்புத் தன்மைகளும் மாறுபடுவதால், அவற்றிற்கு வெவ்வேறு மதிப்பீட்டுத் தரங்கள் அளிக்கப்படலாம்.

## 13.12 கடன் தகுதி நிலை மதிப்பீட்டுத் தரமிடலின் பணிகள்

## Functions of Credit Rating

1. இது சிறந்த தகவலை அளிக்கின்றது
    1) சார்பு இல்லாமல் பொது நிலையில் கடன் இடர்பாடுகளை ஆய்வு செய்து மதிப்பளிக்கின்றது
    2) சிறந்த நிதி நிபுணர்களைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப் படுவதால் தவறு ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு
    3) மதிப்பீட்டு நிறுவனங்களால் தமது தகவல் தொடர்பு மூலம் பல்வேறு தகவல்களைத் திரட்ட முடிகிறது. இத்தகைய தகவல்களை சாதாரண பொதுமக்களால் திரட்ட இயலாது

2. மதிப்பீட்டு நிறுவனங்கள். பல்வேறு வழிகளில் ஈடுகளை வெளியிடும் நிறுவனங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி, சிறந்த முறையில் ஆய்வு செய்து மதிப்பீட்டுத் தரங்களை வெளியிடுகின்றன. இத்தகைய பணிகளை பொதுமக்கள் தாமாக மேற்கொண்டால்

அதிக அளவில் செலவிட வேண்டியிருக்கும். எனவே மதிப்பீட்டு நிறுவனங்கள் குறைந்த செலவில் நிறைந்த தகவலை அளிக்கின்றன.

3. ஒரு ஈடு, மதிப்பீடு நிறுவனத்தால் மதிப்பிடப்பட்டால் அது முதலீட்டாளர்களிடையே நன்மதிப்பைப் பெறுகிறது. முதலீட்டாளர்களுக்கு அந்த குறிப்பிட்ட வகை ஈட்டோடு இணைந்த இடர்பாடு முதலானவை குறித்து அறிய முடிகிறது

4. ஒரு நிறுவனத்தின் ஈட்டிற்கு உயர் மதிப்பீட்டுத் தரம் அளிக்கப்படும் போது, அது அந்நிறுவனத்தின் நன்மதிப்பினை உயர்த்துகிறது.

5. பொதுக் கொள்கைகளை உருவாக்குவதில் துணைபுரிகின்றது. ஈடுகள், மதிப்பீட்டு நிறுவனங்களால் மதிப்பிடப்படும் போது, அவை குறித்த இடர்பாடுகள் முதலானவற்றை அறிந்து பொதுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்க ஏதுவாகின்றது

**மதிப்பீட்டுத் தரமிடலின் நன்மைகள்**

**யுனஎயவெயபநள ழக சுயவபைெ**

மதிப்பீட்டுத் தரமிடலினால் பின்வரும் வகையில் முதலீட்டாளர்களும் நிறுவனங்களும் நன்மையடைகின்றன.

நன்மைகள்

(ADVANTAGES)

| முதலீட்டாளர்களுக்கு நன்மைகள் (ADVANTAGES TO INVESTORS ) | வெளியீட்டு நிறுவனங்களுக்கு நன்மைகள் (ADVANTAGES TO ISSUING COMPANIES) |
|---|---|
| 1. திவாலாவதிலிருந்து பாதுகாப்பு<br>2. இடர் பாட்டை உணர முடிகிறது<br>3. வெளியீட்டாளரின் தகுதி நிலை பற்றி அறிய முடிகிறது.<br>4. எளிதாகப் புரிந்து கொண்டு விரைவாக முடிவெடுக்க உதவுகிறது<br>5. நிதி வளங்களை சேமிப்பதில் துணைபுரிகிறது<br>6. முதலீடு செய்வது குறித்து தாமாக முடிவெடுக்க உதவுகிறது<br>7. முதலீடுகளைத் தேர்ந்தெடுப்பதில் துணைபுரிகிறது<br>8. தொடர் மதிப்பீட்டின் நன்மைகளைப் பெற முடிகிறது | 1. கடன் திரட்டலின் செலவு குறைகிறது<br>2. முதலீட்டாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்குகிறது.<br>3. மதிப்பீட்டுத் தரம் சந்தையிடுகை கருவியாகப் பயன்படுகிறது.<br>4. பொது வெளியீட்டின் செலவுகளைக் குறைக்கிறது<br>5. வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது<br>6. புதிய நிறுவனங்களுக்குத் துணைபுரிகிறது<br>7. தரகர்கள் மற்றும் நிதி முகவர்களுக்கு நன்மையளிக்கிறது |

1. முதலீட்டாளர்களுக்கு நன்மைகள்

Advantages to Investors

ஈடுகளை மதிப்பிட்டுத் தரமிடுதல் முதலீட்டாளர்கள் பின்வரும் நன்மைகளை பெறுகிறார்கள்

1. ஈடுகளுக்கு மதிப்பிட்டுத் தரம் அளிக்கப்படும் போது அதை அளிக்கும் மதிப்பீட்டு நிறுவனங்கள், ஈடுகளை வெளியிடும் நிறுவனங்களின் நிதிநிலை போன்ற காரணிகளை அலசி ஆராய்கின்றன. இத்தகைய மதிப்பீடுகள் மூலம், முதலீட்டாளர்களால் ஈடுகளின் வகைகள், அவற்றின் இணைந்துள்ள நட்ட இடர், ஈடுகளை வெளியிடும் நிறுவனங்களின் நிலை போன்றவை பற்றி கணிக்க முடிகிறது. எனவே, அவர்கள், முதலீடு செய்யும்போது நட்ட இடர் அதிகமுள்ள கம்பெனிகளின் ஈடுகளைத் தவிர்க்க முடியும். ஆதலால், இத்தகைய மதிப்பீட்டுத் தரங்கள் முதலீட்டாளர்களை திவாலாவதில் இருந்து காப்பாற்றுகின்றன.

2. மதிப்பீட்டுத் தர அடையாளக் குறியீடுகள் (Rating Symbols) மூலமாக ஈடுகளுடன் இணைந்த இடர்களை எளிதாக உணர முடிகிறது. இத்தகைய அடையாளக் குறியீடுகள் மூலமாக முதலீட்டாளர்கள் ஈடுகளை வெளியிடும். கம்பெனிகளின் மதிப்பினை எளிதாக அறிகிறார்கள் முதலீட்டாளர்களால் இது போன்று ஈடுகளை ஆய்வு செய்ய இயலாது ஏனெனில் அதற்கு ஆகும். செலவு அதிகம் மேலும், இத்தகைய ஆய்விற்கு அதிகப்படியான அனுபவ அறிவும் தேவை. எனவே, மதிப்பீட்டுத் தரக் குறியீடுகள் மூலமாக முதலீட்டாளர்கள், முதலீடு தொடர்பான இடர்பாட்டினை முன்கூட்டியே அறிய முடிகிறது.
3. வெளியீட்டாளரின் தகுதி நிலை பற்றி அறிய முடிகிறது. மதிப்பீட்டுத் தரமிடலின் மூலமாக முதலீட்டாளர்கள், ஈடுகளை வெளியிடும் நிறுவனங்களின் தகுதி நிலை பற்றி அறிய முடிகிறது.
4. முதலீடு செய்யும்போது அது குறித்து ஆய்வு செய்யும் அனுபவ அறிவு முதலீட்டாளர்களுக்குத் தேவையில்லை. தரமிடப்பட்ட ஈடுகளில், எவ்வகை ஈடுகளில் முதலீடு செய்வது என விரைவில் முடிவு செய்ய முடிகிறது.
5. மதிப்பீட்டுத் தர நிறுவனங்கள் சிறந்த நிதி வல்லுநர்களைக் கொண்டு பலவகை ஈடுகளையும் அவற்றை வெளியிடும் கம்பெனிகளைப் பற்றியும் அக்கம்பெனிகளின் நிதிநிலை, பலம், பலவீனம், நிர்வாகம் பற்றிய செய்திகள் அனைத்தையும் திரட்டி அதன் அடிப்படையில் மதிப்பீட்டுத் தரங்களை முடிவு செய்கின்றன. இவை முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளன. முதலீட்டாளர்கள், தங்களின் நிதி வளங்களை சேமிக்க.ஃ.முதலீடு செய்ய இந்த மதிப்பீட்டுத் தரங்களை எளிதாகப் பின் பற்றி செயல்பட முடிகிறது.
6. முதலீடுகள் செய்யும் போது, மக்கள் ஈடுகளை வெளியிடும் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் தரக் குறியீடுகளை அறிந்து தாமாக முதலீடு தொடர்பான முடிவெடுக்க இயல்கிறது. இதற்காக அவர்கள், தரகர்கள், நிதி ஆலோசகர்கள், வணிக வங்கியர் முதலானோரை அணுகி ஆலோசனை பெற வேண்டியது இல்லை.
7. பல்வேறு வகையான ஈடுகள் இருக்கும்போது, அவற்றில் எதில் முதலீடு செய்வது என முடிவெடுப்பது கடினம். ஆனால் ஈடுகள் மதிப்பீட்டுத் தரமிடப்படும் போது, அவற்றின் அடிப்படையில் முதலீடுகளைத் தேர்ந்தெடுப்பது எளிது. மதிப்பீட்டு நிறுவனங்கள், பல்வேறு கம்பெனிகளின் ஈடுகள் குறித்து

தொடர்ந்து ஆய்வு செய்து வெளியிடும் போது. முதலீட்டாளர்கள் கம்பெனிகளின் வளர்ச்சி மற்றும் நிதி நிலை போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. இவை முதலீட்டாளர்களுக்கு பெரிதும் துணைபுரிகின்றன.

**2. கம்பெனிகளுக்கு நன்மைகள்**

**யுனஎயவெயபநள வழ ஊழஅியநைள**

ஈடுகளை மதிப்பீடு செய்து தரமிடுவதால் ஈடுகளை வெளியிடும் கம்பெனிகள் பின்வரும் நன்மைகளைப் பெறுகின்றன

1. கடன் திரட்டலின் செலவு குறைகிறது மதிப்பீட்டுத் தரமிடலில், உயர்மதிப்பிடப்பட்ட கம்பெனிகள் மக்களிடையே அதிக வரவேற்பைப் பெறுகின்றன. குறிப்பாக அதிக இடர் ஏற்க விரும்பாத முதலீட்டாளர்கள் இத்தகைய உயர் மதிப்பிடப்பட்ட ஈடுகளிலேயே விரும்பி முதலீடு செய்ய முன்வருவர் எனவே, இத்தகைய கம்பெனிகள் வட்டி வீதங்களை நிர்ணயிக்கும்போது, மற்ற நிறுவனங்கள் நிர்ணயிப்பதைவிட ஆதரவைப் பெற முடியும். இவ்வகையில், இத்தகைய மதிப்பீட்டுத் தரங்கள், கடனைத் திரட்ட ஆகும் செலவைக் குறைக்கின்றன.
2. உயர்தர மதிப்பீட்டுத் தரம் பெற்ற கம்பெனிகளால், அச்சு மற்றும் இதர விளம்பர சாதனங்கள் மூலமாக பரவலாக அதிகப்படியான மக்களை சென்றடைய முடிகிறது. சமூகத்தின் பல நிலைகளிலும் உள்ள முதலீட்டாளர்களை உயர் மதிப்பிடப்பட்ட ஈடுகள் ஈர்க்கின்றன முதலீட்டாளர்கள், குறித்த காலத்தில் வட்டி மற்றும் அசல் தொகையை அளிக்கும் கம்பெனிகளுக்கே முன்னுரிமை தருகின்றனர். இத்தகைய கம்பெனிகளின் ஈடுகள் உயர்தர மதிப்பிடப்படும் போது மக்கள் அவற்றை எளிதா அடையாளம் காண முடிகிறது. இவ்வகையில் பரவலான முதலீட்டாளர்களைப் பெற முடிகிறது.
3. உயர்தர மதிப்பிடப்பட்ட கம்பெனிகள், மக்களிடையே நற்பெயர் பெறுவதால், அவற்றின் மதிப்பு உயர்கிறது. எனவே, இந்நிறுவனங்கள், தமது ஈடுகளுக்களிக்கப்பட்ட உயர் மதிப்பினை, ஒரு சந்தையிடுகை உபாயமாகக் கையாளுகின்றன. இதன் மூலம், அவற்றின் ஈடுகளை எளிதில் மக்களிடையே பிரபலபடுத்தி விற்க முடிகிறது.
4. உயர்தர மதிப்பிடும் போது ஈடுகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெறுவதால், சாதாரண சூழ்நிலையில் மேற்கொள்ளும் அனைத்து செலவுகளையும் மேற்கொள்ள வேண்டியது இல்லை. உயர்தர மதிப்பீடு, ஈடுகளின் விற்பனையை உறுதி செய்கின்றது.

5. உயர்தர மதிப்பிடப்பட்ட நிறுவனங்கள் இதனால் ஊக்கம் பெறுகின்றன. இவை தனது செயல்பாடுகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாக இதனைக் கருதுகின்றன. மேலும், இவ்வாறு உயர்தர மதிப்பீடு பெறும் போது, அந்நிறுவனங்கள் புதிய திட்டங்களில் ஈடுபடுவதிலும், வணிகத்தை வரிவாக்ககுவதிலும் உற்சாகத்துடன் ஈடுபடுகின்றன.
6. ஈடுகளை வெளியிடும் போது, மக்களிடையே பிரசித்தி பெற்ற நிறுவனங்கள் எளிதாக தமது ஈடுகளை வெளியிட முடிகிறது. புதிய மற்றும் பிரபலம் ஆகாத நிறுவனங்களுக்கு இது சாத்தியமில்லை. ஆனால் இது போன்ற பிரபலமாகத் நிறுவனங்களின் ஈடுகள் உயர்ந்த தரத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தால் அவை மக்களிடையே வரவேற்பும் அங்கீகாரமும் பெறுகின்றன. எனவே, பிரபலமாகாத நிறுவனங்கள் தமது சிறந்த செயல்பாடுகள் மூலம் உயர்தர மதிப்பீட்டைப் பெறும் போது, அவை மக்களிடையே பிரபலமாகின்றன.
7. தரகர்களுக்கும் நிதி ஆலோசகர்களுக்கும், முதலீட்டாளர்களை திருப்திப்படுத்தவது எளிதாகிறது. அவர்கள் நிறுவனங்களின் நிதிநிலை போன்றவற்றை விளக்கி கூறுவதை விட இத்தகைய உயர்தர மதிப்பீடு குறித்து எடுத்துரைக்கும் போது அவற்றை மக்கள் எளிதாகப் புரிந்து கொள்கிறார்கள். இது தரகர்கள் மற்றும் முகவர்களின் பணியினை வெகுவாகக் குறைக்கிறது.

### மதிப்பீட்டுத் தரமிடலின் குறைபாடுகள்

### Defects of Credit Rating

ஈடுகளை மதிப்பீடு செய்து தரமிடுவதால் பல நன்மைகள் உள்ள போதிலும், சில குறைபாடுகளும் உள்ளன. அவையாவன:

**1. தவறான மற்றும் ஒரு நிலைச்சார்பு மதிப்பிடல் (Wrong and Biased Valuation):** நிறுவனங்களின் ஈடுகளை மதிப்பிடும்போது மதிப்பீட்டு நிறுவனங்கள், பிற கம்பெனிகளைப் பற்றி விரிவாக அறிந்திருத்தல் அவசியம். ஆனால் அக்கம்பெனிகளுடன் எந்தவிதப் பிணைப்பும் இல்லாததால் அவற்றைப் பற்றிய முழு விபரங்களையும் அறிதல் என்பது கடினம். எனவே, அவ்வாறு போதிய தகவல்களைத் திரட்டாமல் ஆய்வு செய்தால், அவை அளிக்கும் தர மதிப்பீடுகள் தவறானவைகளாகவோ அல்லது ஒரு நிலைச்சார்பானவைகளாகவோ போய்விட வாய்ப்புண்டு.

மேலும், ஒரு நிறுவனத்திற்கு குறைவான மதிப்பீட்டுத் தரமிடப்பட்டால், அந்நிறுவனம் அதை விளம்பரப்படுத்தாது. எனவே, அது

பற்றி முதலீட்டாளா் அறிய இயலாது. இது போன்ற சூழ்நிலையில் அதில் முதலீடு செய்யும் போது நட்டம் ஏற்படலாம். ஆனால் தற்பொழுது செபியானது வெளியீட்டு நிறுவனம் ஒன்று ஒன்றிற்கு மேற்பட்ட கடன் தர மதிப்பீட்டு நிறுவனங்களிடம் இருந்து தமது ஈட்டிற்கான மதிப்பீட்டுத் தரங்களைப் பெற்றிருந்தால் அவ் அனைத்துத் தரமதிப்பீடுகளும் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தி உள்ளது. ஆகவே, இனி இக்குறைபாடு ஓரளவுக்கு நீங்கிவிடும்.

**2. குறைபாடுடைய ஆய்வு (Defective Analysis):** பொதுவாக, கம்பெனிகளின் கடந்தகால மற்றும் நிகழ்கால செயல்பாடுகள் மற்றும் விபவரங்களின் அடிப்படையிலேயே அவை தரமிடப்படுகின்றன. இதற்கென, இவை நிறுவனததின் எதிர்காலப் போக்கை கருத்தில் எடுத்துக் கொள்வதில்லை. இதனால் மதிப்பீடு மாறிவிட வாய்ப்புள்ளது.

**3. தகவல்களை மறைத்தல் (Hiding of Information):** கம்பெனிகளை மதிப்பிடும்போது, சில கம்பெனிகள் முக்கியத் தகவல்களை ஆய்வுக் குழுவிடம் அளிப்பதில்லை. அளிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளும் ஆய்வு முழுமையாக இருக்காது.

4. மதிப்பீட்டுத் தரம் கம்பெனிகளின் நிதி நிலைக்கு உத்தரவாதமல்ல.

5. குறைத்து தர மதிப்பிடப்பட்ட கம்பெனிகளின் மதிப்பு மக்களிடையே பெரிதும் குறைகிறது. எனவே, அவை தொடர்ந்து சிரமத்திற்குள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

6. ஆய்வுக் குழுவில் உள்ள உறுப்பினர்களின் தனிப்பட்ட குறைபாடுகளும் கூட, ஆய்வின் முடிவினையும், மதிப்பிட்டுத் தரத்தையும் பாதிக்க வாய்ப்புண்டு.

7. ஒரே கம்பெனியின் ஒரு குறிப்பிட்ட வகை ஈடுகளை மதிப்பிடும் போது, இரண்டு மதிப்பீட்டு நிறுவனங்கள் அளிக்கும் முடிவுகள் பல சமயங்களில் மாறுபடுகின்றன. இது முதலீட்டாளா்களிடையே குழப்பத்தை விளைவிக்கின்றது.

## 13.13 இந்திய மதிப்பீட்டுத் தர நிறுவனங்களின் மதிப்பீட்டு முறைகள்

## Rating Methods of Indian Credit Rating Concerns

### 1. கிரைசில் நிறுவனத்தின் தர மதிப்பீடு

**Rating of Credit Rating and Information Dervices of India Ltd.(CRISIL).**

இந்நிறுவனம் கடன் பத்திரங்களுக்கு ஆங்கில எழுத்துக்களான A மற்றும் B யை பயன்படுத்துகிறது. முன்னுரிமைப் பங்குகளை மதிப்பிடும் போது A மற்றும் B க்கு முன் "PF" என்பதை சோ்த்துக் கொள்கிறது.

நிலை வைப்புகளுக்கு “F” என்பதை A மற்றும் B க்கு முன் சேர்த்துக் கொள்கிறது.

| **1) கடன் பத்திர மதிப்பீட்டுத் தரம் (Rating of Debentrues)** | | **வெளியிடும் குறிப்பு (Note Reveales)** |
|---|---|---|
| **உயர்மதிப்பீட்டுத் தரம் (High Investment Grades)** | | |
| AAA | - | மிகவும் அதிகமான பாதுகாப்பு |
| AA | - | அதிகமான பாதுகாப்பு |
| **முதலீட்டுத் தரம் (Intestment Grades)** | | |
| A | - | போதுமான பாதுகாப்பு |
| BBB | - | மிதமான பாதுகாப்பு. |
| **ஊக வாணிபத் தரம் (Speculative Grades)** | | |
| BB | - | குறைந்த பாதுகாப்பு |
| BC & D | - | ஆதிக இடர் மற்றும் நட்ட வாய்ப்பு. |
| **2) நிலை முதல் மதிப்பீட்டுத் தரம் (Fixed Capital Rating)** | | |
| FAAA | - | மிகவும் அதிகமான பாதுகாப்பு. |
| FAA | - | ஆதிகமான பாதுகாப்பு. |
| FA | - | போதுமான பாதுகாப்பு. |
| FB | - | பாதுகாப்புக் குறைவானது. |
| FC | - | அதிக இடருள்ளது. |
| FD | - | நட்ட வாய்ப்புள்ளது. |
| **3) குறுகிய காலக் கருவிகளுக்கான மதிப்பீட்டுத் தரம் (For Shout Term Instruments)** | | |
| P-1 | - | கருவிகள் மீதான காலப்படியான செலுத்தலுக்கான பாதுகாப்பு மிகவும் உறுதியானது. |
| P-2 | - | பாதுகாப்பின் அளவு உறுதியானது. |
| P-3 | - | பாதுகாப்பின் அளவு போதுமானது. |
| P-4 | - | பாதுகாப்பின் அளவு குறைவானது. |
| P-5 | - | கருவி குறைபாடானது ∴ முதிர்வின் பொழுது |

| | | |
|---|---|---|
| | | குறைபாடாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. |

**2. இக்ரா நிறுவனத்தின் தர மதிப்பீடு**

**Credit Rating of Investment Information and Credit Rating Agencey (ICRA)**

இந்நிறுவனத்தின் மதிப்பீட்டுத் தரங்கள் பின்வருமாறு:

**1) நீண்டகாலக் கடன் பத்திரங்கள், முன்னுரிமைப் பங்குகள் முதலானவை (For Long-term Debentures, Preference Shares etc.)**

| | |
|---|---|
| LAAA | மிகவும் அதிகமான பாதுகாப்பு. |
| LAA+<br>LAA<br>LAA- | அதிகமான பாதுகாப்பு. |
| LA+<br>LA<br>LA- | போதுமான பாதுகாப்பு. |
| LBBB+<br>LBBB<br>LBBB- | மிதமான பாதுகாப்பு. |
| LBB+<br>LBB<br>LBB- | போதுமான பாதுபாப்பின்மை. |
| LB+<br>LB<br>LB- | இடர்பாடு உள்ளவை. |
| LC+<br>LC<br>LC- | அதிக இடர் உள்ளவை. |
| LD | நட்ட வாய்ப்புள்ளவை – அதிகப்படியான ஊகவாணிகத் தன்மை உள்ளவை. |

2) **கடன் நிதிக்கான மதிப்பீட்டுத் தரம் (Rating Symbols for Debt Funds)**

| | |
|---|---|
| mfAAA | மிகவும் அதிகமான தரம். |
| mfAA+<br>mfAA<br>mfAA- | அதிகமான தரம். |
| mfA+<br>mfA | போதுமான தரம். |

| | |
|---|---|
| mfA- | |
| mfBBB+<br>mfBBB<br>mfBBB- | மிதமான தரம். |
| mfBB+<br>mfBB<br>mfBB- | போதுமான தரம் இன்மை. |
| mfB+<br>mfB<br>mfB- | மோசமான தரம். |

3) கடன் நிதிகளின் சந்தையிடர் ஏற்பின் மதிப்பீட்டுத் தரம் மற்றும் அவற்றின் குறிப்பீடுகள் (Rating Symbols for Market Risk Rating of Debt Funds and theire Implications)

| | |
|---|---|
| M1 | மாறுகின்ற வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய சந்தை நிலைகளுக்கு மிகவும் குறைவான அளவில் மாற்றம் பெறுவன. |
| M2 | மாறுகின்ற வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய சந்தை நிலைகளுக்கு குறைவான அளவில் மாற்றம் பெறுவன. |
| M3 | மாறுகின்ற வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய சந்தை நிலைகளுக்கு மிதமான அளவில் மாற்றம் பெறுவன. |
| M4 | மாறுகின்ற வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய சந்தை நிலைகளுக்கு உயர்ந்த அளவில் மாற்றம் பெறுவன. |
| M5 | மாறுகின்ற வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய சந்தை நிலைகளுக்கு மிகவும் உயர்ந்த அளவில் மாற்றம் பெறுவன. |

**3. கேர் நிறுவனத்தின் தர மதிப்பீடு**

**Rating of Credit Rating Agency of India Ltd. (CARE)**

நீண்டகால மற்றும் மத்திய கால ஈடுகள் (Long – term and Medium – term Securities)

CARE AAA - மிகஅதிக பாதுகாப்புத் தன்மை உடையவை.

CARE AA - அதிக பாதுகாப்புத் தன்மை உடையவை.

CARE A - போதுமான அளவு பாதுகாப்புத் தன்மை உடையவை.

CARE BBB - மிதமான பாதுகாப்பு உடையவை.

CARE BB - போதுமான அளவு பாதுகாப்புத் தன்மை அற்றவை.

CARE B - உயர்ந்தளவு இடர் உடையவை.

CARE C - அதிக இடர்ப்பாடு உடையவை.

CARE D - குறைபாடு உடையவை.

மேலே குறிப்பிட்ட நிறுவனங்கள் தவிர ONICRA (Onida Individual Credit Rating Agency) போன்ற நிறுவனங்களும் ஈடுகளின் தகுதியை ஆய்வு செய்து மதிப்பீட்டுத் தரங்களை வழங்குகின்றன. இத்தகைய மதிப்பீடுகள் முதலீட்டாளர்களுக்குப் பெரிதும் உறுதுணையாய் அமைகின்றன.

**வரிசைப்படுத்தும் ஆராய்ச்சி முறை**

**சுயவலைபெ ஆநவாழனழடழபல**

ஊசுஐளுஐடு ஆல் பின்பற்றப்படும் வரிசைப்படுத்தல் ஆராய்ச்சி முறை பின்வரும் ஆய்வுகளைக் கொண்டுள்ளது.

1. வணிக ஆய்வு (Business Analysis)

இது பின்வருவனவற்றை ஆய்வு செய்கின்றது.

(a) தொழில் இடர் (Industry Risk)

(b) கம்பெனியின் சந்தை நிலைமை (Market Position of the company).

(c) கம்பெனியின் செயல்முறைத் திறமை (Operating Efficiency of the Company).

(d) சட்ட நிலைமை (Legal Position).

2. நிதி நிலை ஆய்வு (Financial Analysis)

(a) கணக்கு வைப்புத் தரம் (Accounting Quality).

(b) ஆதாயத்தின் பாதுகாப்பு (Earnings Prolection).

(c) ரொக்க ஓட்டத்தின் போதுமான தன்மை (Adequacy of Cash Flows).

(d) நிதிநிலைமையின் நெகிழ்ச்சித் தன்மை (Financial Flexibility).

3. மேலாண்மைத் திறனாய்வு (Management Evaluations)

இத்திறனாய்வின் கீழ், ஊசுஐளுஐடு ஆனது கம்பெனியின் கடந்தகால செயல் நிறைவேற்றம், இலக்குகள், தந்திரங்கள், தத்துவங்கள், கடுமையான சூழ்நிலைகளைக் சமாளிக்கும் அதன் திறன் போன்றவைகளை ஆய்வு செய்கின்றது. மேலும் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த போதுமான வசதி வாய்ப்பு உள்ளதா என்பதோடு அவ்வாறு கடனைத் திருப்பி செலுத்தும் நோக்கம் அதற்கு உள்ளதா என்பதையும் ஆய்வு செய்கின்றது.

4. ஒழுங்கு படுத்துதல் மற்றும் போட்டி சார்ந்த சுற்றுச்சூழல் (Regulatory and Competitive Environment)

நிதிநிலை முறையின் கட்டமைப்பு மற்றும் ஒழுங்கு படுத்துதல் சார்ந்த பணிச் சட்டம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் ஆய்வு செய்கின்றது.

5. அடிப்படை ஆய்வு (Fundamental Analysis)

1. மூலதனத்தின் போதுமான தன்மை (Capital Adequacy).
2. சொத்தின் தரம் (Assets' Quality).
3. ரொக்கமாக்கும் தன்மை மேலாண்மை (Liquidity Management).
4. இலாபத் தன்மை மற்றும் நிதிநிலைமை (Profitability and Financial Position).
5. வட்டி மற்றும் வரியில் ஏற்படும் மாற்றம் (Interest & Tax sensitivity).

## 13.14 வரிசைப்படுத்தல் நடைமுறை

## Rating Process

வரிசைப்படுத்தல் நடைமுறை கம்பெனி தமது கருவியை வரிசைப்படுத்தச் சொல்லிக் கேட்டுக் கொண்டதில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. கம்பெனி ஈடுபட்டு செயலாற்றிக் கொண்டிருக்கும் தொழிலை நன்கு அறிந்திருக்கும், அலுவல்சார்ந்த கல்வித் தகுதியைப் பெற்றிருக்கும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று கம்பெனியின் தொழிற்சாலையை முதலில் பார்வையிட்டு அதன் செயல்முறைகளை மேற்பார்வை செய்கின்றது. பிறகு முதன்மை அதிகார அலுவலர் உள்பட்ட பலதரப்பட்ட மேலாண்மை நிலைகளையும் சந்தித்துப் பேககின்றுத. பொதுவாக, இடைநிலை மற்றும் மேல்நிலை மேலாண்மை நிலைகளுடன் ஆன கூட்டமானது, செயல்முறைகள், நிதி, சந்தையிடுகை, திட்டங்கள் போன்றவை தொடர்பான விஷயங்களை உள்ளடக்கியவாறு அமைகின்றது. இது தவிர, மற்றுமொரு குழு தொழில் தொடர்பான கூடுதல் தகவல்களை சேகரிக்கின்றுத. மேற்சொன்ன நிபுணர் குழு இந்த இரண்டாவது குழுவுடன் கலந்து பேசிய பின் தனது அறிக்கையைத் தயார் செய்கின்றது. இவ்வாறு தயார் செய்யப்பட்ட அறிக்கை CRISIL –ன் அகக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றுத. CRISIL மூத்த அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. பிறகு இக்குழு குழு உறுப்பினர்களுடனும் தங்களுக்குள்ளும் கலந்தாலோசித்து பின் வரிசைப் படுத்தல் ஒரு புறச்சாய்வற்றதாக இருக்கு வேண்டும் என்பதற்கான இது CRISIL பங்குதாரர்களுடன் எவ்விதத் தொடர்பில்லாதவர்களுமாக இருப்பர். இறுதியாக, இப்புறக்குழுதான் வரிசைப்படுத்தல் தொடர்பான இறுதி முடிவை எடுத்து கம்பெனிக்கும் அறிவிக்கின்றது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட வரிசைப்படுத்தலை பாதிக்கக்கூடிய கூடுதல் தகவல் ஏதேனும் கம்பெனியிடம் இருந்து அவற்றை அது தர விரும்பினால் அவை புறக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. பிறகு அதன்படி வரிசைப்படுதல் மாற்றியமைக்கபப்படுகின்றது. எனவே, கடன் வரிசைப்படுத்தலை மறு மதிப்பீடு செய்யக் கோர கம்பெனியால் முடியும் என்பதும் நமக்கு இதிலிருந்து தெரிகின்றது. ஊசுஐளுஐடு –ன் வரிசைப்படுத்தும் நடைமுறையை விவரிக்கும் வரைபடம், வரைபடம் 15.1-ல் தரப்பட்டுள்ளது.

தற்பொழுது CRISIL தனது 5 வருடகாலப் பணியில் ரூ.30,637 கோடி மதிப்பு உள்ள சுமார் 560 கருவிகளை வரிசைப்படுத்தியுள்ளது. வரிசைப்படுத்தலானது, ஒழுங்குமுறை சார்ந்த அமைப்புக்கள், கடன்பெறுவர், இடைநிலை நபர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்ற அனைத்துப் பிரிவினருக்கும் உபயோகமாக உள்ளது. ஒழுங்குமுறை சார்ந்த அமைப்புக்களைப் பொறுத்த வரையில், முதலீட்டாளர்களின் மனதில் வரிசைப்படுத்தப்பட்ட கருவிகளைப் பற்றிய ஓர் நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களின் சேமிப்பை முதலீடாக மாற்ற வைக்க முடிகிறது. கடன்பெறும் கம்பெனியைப் பொறுத்தவரையில், உயர்ந்தளவு வரிசைப்படுத்தல் ஆனது குறைந்த செலவில் தமக்கு வேண்டிய கடன் தொகையை தனிநபர்களிடம் இருந்து பெற முடிகின்றுத. முதலீட்டு வங்கியர்கள், ஒப்புறுதியர்கள் மற்றும் தரகர்களும் கடன் வரிசைப்படுத்தலை கடனின் விலையை நிர்ணயித்தலுக்கு மிகவும் முக்கியமான கூறாகக் கருதுகின்றனர். ஏனெனில், கடன் கருவிகளின் வட்டி வீதம் அதன் வரிசைப்படுத்தலோடு இணைக்கப்படுகின்றது. அதாவது, வரிசைப்படுத்தல் குறைவானதாக இருந்தால் இடர் அதிகமாக இருக்கும். இவ்வாறு இருப்பின் அதன் வட்டி வீதம் அதிகமாக இருக்கும். உண்மையில் சொல்லப் போனால், வரிசைப்டுத்தலால் பெரிதும் பயனடைபவர் முதலீட்டாளர்களே ஆவர். ஏனெனில் வரிசைப்படுத்தலின் மூலம் முதலீட்டாளர்களால் ஒரு முதலீட்டுக் கருவியில் உள்ள இடரை திறனாய்வு செய்ய இயலும், பின் அதன் அடிப்படையில் இடர் அதிக மற்ற கருவியில், அவர்களால் தமது சேமிப்பை முதலீடு செய்யவும் இயலும்.






– வரிசைப்படுத்தல் நடைமுறை

(RATING PROCESS)

இவ்விதமாகப் பல வழிகளில் மூலதனச் சந்தையில் உள்ள அனைத்துப் பிரிவினருக்கும் உதவும் வகையிலான CRISIL –ன் பணியை நன்குணர்ந்த ரிசர்வ் வங்கி கடன் பத்திரங்கள் (18 மாதத்திற்குள் பங்குகளாக மாற்றித தரத்தக்க கடன் பத்திரங்கள் நீங்கலாக), குறுகிய காலக் கருவிகயான வணிகத் தாள்கள் மற்றும் முதலீட்டுக் கம்பெனிகளால் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் வைப்புக்கள் போன்றவை வரிசைப்படுத்தப்பட வேண்டும் என்பதை கட்டாயப்படுத்தியுள்ளது. உயர்ந்த வரிசைப்படுத்தலைப் பெற்ற கம்பெனிகளின் கருவிகள் குறைந்த வரிசைப்படுத்தலைப் பெற்றவைகளையும் விட உயர்ந்தளவு பங்கு ஒப்புதலைப் பெற்றுள்ளதையும் நாம் கண்கூடாகக் காண முடிகின்றது.

## 13.15 தொகுத்தறிவோம்

துணிகர முதலீடு என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு துணிகர முதலீடு நிறுவனங்களின் பங்கு மகத்தானது மேலும் ஒரு தொழில் திட்டத்தை தோற்றுவிக்கத் தேவையான பணம் துணிகர முதலீட்டிலிருந்து பெற முடியும். இந்தப் பாடப்பகுதியில்.

## 13.16 கலைச் சொற்கள்

- துணிகர முதலீடு
- நிதி
- பொருளாதாரம்
- தொழில்
- தேவையான பணம்

## 13.17 வினாக்கள்

1. துணிகர முதலீட்டின் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.
2. துணிகர முதலீட்டின் வடிவங்கள் பற்றி எழுதுக.
3. மதிப்பீட்டுத் தரங்கள் வெளிப்படுத்தும் அம்சங்கள் பற்றி எழுதுக.
4. துணிகர முதலீட்டின் இந்தியாவுடைய நிலைபற்றி எழுதுக.
5. துணிகர முதலீட்டு நிதி மீதான செபி ஒழுங்குமுறைகள் பற்றி எழுதுக.

## 13.18 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, “Financial Markets and Services”, Himalaya Publishing House Pvt. Ltd., India

2. Dr. Guruswamy S, 2009 “Financial Service”, Tata Mc Graw-hill Education, New Delhi.

3. Prasanna Chandra, 2011 “ Financial Management Theory and Practice”, Tata Mc Graw-hill Education, New Delhi.

4. Khan M Y and Jain P K, 2008, “ Financial Management Text, Problems and Cases”. Tata Mc Graw-hill Education, New Delhi.

# அலகு – 14 ஏட்டுக் கடன் தரகு வணிகம்
# FACTORING

14.1 அறிமுகம்
14.2 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் இயக்க ஆற்றல் அல்லது கட்டங்கள்
14.3 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் தேவை
14.4 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் பணிகள்
14.5 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் வகைகள்
14.6 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் நன்மைகள்
14.7 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் குறைபாடுகள்
14.8 இந்தியாவில் இயக்கும் ஏட்டுக்கடன் தரகு வணிக அமைப்புக்கள்
14.9 பற்று அட்டைகள்
14.10 தொகுத்தறிவோம்
14.11 கலைச்சொற்கள்
14.12 வினாக்கள்
14.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

## 14.1 அறிமுகம்
## Introduction

ஏட்டுக் கடன் தரகு வணிகம் என்பது வணிக நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் ஓர் நிதிச் சேவையாகும். இச்சேவை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பொதுவாக நடைமுறையில் உள்ளது. இந்தியா இதே வழியில் இச்சேவையை பின்பற்றுகின்றது. இப்பணி 1991 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் பொருள்**

**Meaning of Factoring**

இந்நடைமுறையில் நிதி நிறுவனத்திற்கும் அதாவது உரிமைப் பேராளுக்கும் (Factor) வணிக வாடிக்கையாளர்களுக்கு (Tracde Customers) தங்களின் பொருளைவிற்கும் அல்லது சேவைகளைச் செய்யும் ஓர் வணிக நிறுவனத்திற்கம் (வாடிக்கைக்காரர்) இடையே ஓர் தொடர்ச்சியான உறவுமுறை ஏற்படுத்தப்படுகின்றது. தமது வாடிக்கைக்காரரின் ஏட்டுக் கடன்களை அல்லது பெறுவதற்குரிய உண்டியல்களை நிதி நிறுவனம் அதாவது உரிமைப் பேராள் கொள்முதல் செய்தலே ஏட்டுக்கடன் வணிகத்தின் மைய (Central) பணியாகும். இப்பணியை மேற்கொள்ளும் பொழுதே உரிமைப் பேராள் பிற தொடர்புப் பணிகளான வாடிக்கைக்காரரின் விற்பனைப் பேரேடுகளை நிர்வகித்தல், கொள்முதல் செய்யப்பட்ட கடன்களுக்கு எதிராகக் குறுகிய காலக்கடன் அளித்தல், கொள்முதல் செய்யப்பட்ட கடன்களை வசூல் செய்தல், சூழ்ந்துள்ள கடன் இடர்களை ஏற்றல் போன்றவற்றையும் புரிகின்றது உரிமைப்பேராள் கடன் மற்றும் நிதிசார்ந்த நடவடிக்கைகளில் தமக்குள்ள முன் அனுபவத்தைக் கொண்டு குறிப்பிட்ட சில அறிவுரைகளையும் தருகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்துப்

பணிகளையும் தனித்தனியே அளிக்க பலதரப்பட்ட அமைப்புக்கள் உள்ளன. ஆயினும், இவை அனைத்தையும் ஒரு சேர அளித்தலே உரிமைப் பேராளின் சிறப்பம்சமாகும். உதாரணமாக வணிக வங்கிகள் உண்டியல்களைக் கொள்முதல் செய்தல், கழிவு செய்தல், ஏட்டுக் கடனின் மீது அதிகப்பற்று வசதி செய்து தருதல், ரொக்கக் கடன் அளித்தல் போன்ற விதத்தில் ஏட்டுக் கடன் மீது நிதி வசதியளிக்கின்றன. கணிப்பொறி முகவாண்மைகள், விற்பனைப் பேரேடுகளை நிர்வகிக்கின்றன. ஆனால், உரிமைப் பேராள் இவ்வனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து, ஏட்டுக் கடனில் முடக்கி வைக்கப்பட்ட பணத்திற்கு ஒருமாறுபட்ட தீர்வை முன் வைத்துள்ளது என்று நாம் கூறினால் அது மிகையாகாது.

இந்திய ரிசர்வ் வங்கி 1988-ல் கல்யாண சுந்தரம் குழு என்ற ஒரு ஆய்வுக் குழுவை நியமித்தது. இக்குழு இந்தியாவில் உரிமைப் பேராள் சேவைகளை அறிமுகப் படுத்துவதற்கான நடைமுறைகளை கண்டறிந்தது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கி 6 வணிக வங்கிளை உரிமைப் பேராள் சேவைகளை ஆரம்பிக்க அனுமதி அளித்தது. பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி போன்றன உரிமைப் பேராள் சேவைகளை மேற்கொண்டு உள்ளன. இவை பாரத ஸ்டேட் வங்கி வணிக சேவை வரையறுத்தது (SBI Commericial Services Limeted) கனரா வங்கி உரிமைப் பேராள் வரையறுத்தது (Canara Bank Factor Limited) போன்ற வங்கி அமைப்புகளை அமைத்து உரிமைப் பேராள் சேவைகளை மேற்கொண்டுள்ளன.

## 14.2 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் இயக்க ஆற்றல் அல்லது கட்டங்கள்

## Steps in Factoring Process

ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் இயக்க ஆற்றல் பின்வரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளைக் கொண்டு விளங்குகிறது.

1. உரிமைப் பேராள் தமது வாடிக்கைக்காரருடைய வாடிக்கையாளர்களின் கடன் திருப்பிச் செலுத்தும் தகுதியை மதிப்பீடு செய்கின்றார். பின் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அவர்களின் பெறுதற்குரிய உண்டியல்களில் எந்தத் தொகை அளவிற்கு மற்றும் கால அளவிற்கு தாம் கொள்முதல் செய்யத் தயாராக உள்ளாரோ அதை வரையறை செய்கின்றார்.
2. எப்பொழுதும் போல வாடிக்கைக்காரர் பொருட்களை விற்று அதற்குரிய சரக்குப் பட்டியலில், இச்சரக்குப் பட்டியலின் மீது நிலுவையாக உள்ள தொகையின் உடைமை உரிமை சட்டப்படி மாற்றி வழங்கப்பட்டுள்ளது, அத்தொகை உரிமைப் பேராளுக்கே அளிக்கப்பட வேண்டும் என்ற அறிவிப்பை எழுதிப் பதிவு செய்து அதை வாடிக்கையாளருக்கே அனுப்புகின்றார்.

3. வாடிக்கைக்காரர், சட்டப்படி உடைமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் நகல்களை உரிமைப் பேராளுக்கு அனுப்புகிறார்.
4. உடனடியாக, உரிமைப் பேராள் அவ்வாறு அனுப்பப்பட்ட சட்டப்படி உடைமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் மதிப்பில் 80% வரையினதான குறுகிய காலக் கடனை தமது வாடிக்கைக்காரருக்கு அளிக்கின்றார். பிறகு அது குறித்த அறிவிப்பை கணக்குகளின் பட்டியல்களை அனுப்புவதன் மூலம் வாடிக்கையாளருக்குச் செய்கின்றார்.
5. வாடிக்கையாளர் சரக்குப் பட்டியலுக்குரிய தொகையை அளித்த உடன் சரக்குப் பட்டியல் மதிப்பில் மீதமுள்ள 20% -ற்குரிய தொகையை உரிமைப் பேராளானவர் வாடிக்கைக்காரருக்கு அளிப்பார்.
6. உரிமை பேராளால் கொள்முதல் செய்யப்பட்ட கடன்களிலிருந்து 20 சதவிகித தக்கவைத்தல் தொகையை கழித்த பின் வரும் தொகையின் மீது வாடிக்கைக்காரருக்கு உள்ள பணம் எடுத்தல் தகுதியின் (Drawing Eligibility) அடிப்படையில் வாடிக்கைக்காரர் தமது கணக்கிலிருந்து பணத்தை எடுக்க அனுமதிக்கப்படுகின்றார்.
7. வாடிக்கைக்காரரின் "பணம் எடுத்தல் தகுதி" ஆனது.
    1) ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட புதிய கடன்கள்,
    2) ஏட்டு கடன் தரகு வணிகத்தின் மூலம் முன்னரே கொள்முதல் செய்யப்பட்ட கடன்களை வசூலித்தல், மற்றும்
    3) பற்று வைக்கப்பட்ட செலவுகள் போன்றவற்றிக்கு ஏற்ப அவ்வப் பொழுது ஒழுங்காக்கப்படுகின்றது. வாடிகக்கைக்காரர், தமது "பணம் எடுத்தல் தகுதி" வரை தமது கணக்கிலிருந்து பணம் எடுத்துக் கொள்ளலாம்.
8. முன்னரே ஏற்றுக்கொண்ட கால இடைவெளிகளில் உரிமைப் பேரான் தமது வாடிக்கைக்காரருக்கு "வயது வாரியான கணக்குகளின் பட்டியலை" அனுப்புகினறார்.
9. ஆனால், முதிர்வு நாளன்று வாடிக்கையாளர் சரக்குப் பட்டியலுக்கான தொகையை அளிக்கவில்லையெனில் உரிமைப் பேராள் "துணை நாடாத உரிமைப் பேராள்" (With Recourse Factoring) முறையில் தமது பணியை மேற்கொண்டால், அதற்கு முன்னதாக அளிக்கப்பட்ட 80% தொகையை தமது வாடிக்கைக்காரரிடம் இருந்து திரும்பப் பெற அவருக்குத் தகுதி உண்டு. அவ்வாறன்றி, பின்பற்றப்பட்ட உரிமைப் பேராள் முறை "துணை நாடும் உரிமைப் பேரான்" முறையாக இருந்தால் உரிமைப் பேராள் அவ்விடரை ஏற்றுக்கொள்ள

வேண்டும். அதாவது முன்னதாக அளிக்கப்பட்ட 80% தொகையை வாடிக்கைக்காரரிடம் இருந்து பெற அவருக்குத் தகுதியில்லை.

## 14.3 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் தேவை

## Need for Factoring

இந்தியாவில் சமீபகாலத்தில், தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள பேரளவு வளர்ச்சி மற்றும் பேரளவு உற்பத்தி மற்றும் விற்பனை போன்றவையினால், வரவுக்குரிய உண்டியல்களின் வசூல் மற்றும் நிர்வாகம் மிகவும் முக்கியத்துவம் பெற்று விட்டது. கடனை வசூலிப்பதில் தாமதம் ஏற்பட்டுவிட்டால், சிறய அளவிலான நடப்பு மூலதனத்தைக் கொண்டு இயங்கிவரும் சிறிய நிறுவனங்கள் நிதிப்பற்றாக் குறையால் அவதியுறும். இதுவே, சிறு தொழில் துறையில் நலிவுற்ற நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதற்கு முக்கியக் காரணமாக விளங்குகின்றது.

இவ்வங்கிகள் தங்களால் கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் கழிவு செய்யப்பட்ட உண்டியல்களை மட்டும் வசூல் செய்கின்றதே அன்றி ஏட்டுக் கடனை வசூல் செய்வதில் அவை ஈடுபடுவதில்லை. மேலும், அவமதிப்புச் செய்யப்பட்ட (Dishonoured) உண்டியல்களுக்குரிய தொகையை, வங்கிக்கு வாடிக்கைக்காரர் அளிக்க வேண்டுமேயன்றி அந்த உண்டியலை எழுதியவர் இதற்குப் பொறுப்பாவது இல்லை. இந்த இடரை வணிகரே ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இவ்விதப் பணிகளை தற்பொழுது ஏட்டுக் கடன் தரகு வணிகம் மேற்கொள்கின்றது. எனவே, வணிக நிறுவனங்களால் தங்களால் விற்கப்பட்ட, எழுதப்பட்ட பெறுவதற்குரிய உண்டியல்களின் மீது உடனடியாக 80மூ வரையிலான தொகையைக் கடனாகப் பெற முடிகின்றது. மேலும், அந்த உண்டியலுக்குரிய தொகை அவரின் வாடிக்கையாளரால் செலுத்தப்பட்வில்லை எனில் அந்த இடரை உரிமைப் பேராளே ஏற்றுக் கொள்வார். இது ஒரு சில ஏட்டுக் கடன் தரகு வணிக முறைகளுக்கு மட்டுமே பொருத்தும். மேலும், பிற துணைப் பணிகளையும் உரிமைப் பேராளே மேற்கொள்கின்றது. எனவே, வணிக நிறுவனம் தமது நேரத்தை உண்டியல்களை வசூல் செய்தல், நிர்வகித்தல் போன்றவற்றில் செலவழிப்பதில் விடுத்து உற்பத்தி போன்ற பிற துறைகளில் கவனம் செலுத்தலாம். இது அவரின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியாக இருக்கும். அவரது விற்பனையும் பெருகும்.

## 14.4 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் பணிகள்

## Factoring Services

1. ஏட்டுக் கடனைக் கொள்முதல் செய்தல் மற்றும் வசூல் செய்தல் - உரிமைப் பேராளவானவர் தமது வாடிக்கைக்காரரின் சார்பில் அவரது வரவிற்குரிய உண்டில்களை வசூலிக்கிறார். அவரை வசூல் பிரச்சனையிலிருந்து முற்றிலும் விடுவிக்கிறார். இதனால், வணிக நிறுவனங்களால், தமது வணிகத்தின் பல்வேறு அம்சங்களில்

கவனம் செலுத்தவும் வசூலிப்புச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளவும் முடிகிறது.

2. ஏட்டுக் கடன் நிர்வாகம் - அதாவது, விற்பனை ஏடு சரக்குப் பட்டியல் வெளியிடுதல் போன்றவற்றை நிர்வகித்தல் மற்றும் பெறப்பட வேண்டிய நாள் அன்று அளித்தல்களை வசூல் செய்தல்.
3. கடன் இடர்களுக்கு எதிரான பாதுகாப்பு – ஏட்டுக் கடனை வசூல் செய்யும் பொறுப்பை தாமே ஏற்பதன் உரிமைப் பேராள் அக்கடனை வசூல் செய்யும் பொறுப்பில் இருந்தும் அதில் உண்டாகும் இடரிலிருந்தும் அளிப்பவரை (Supplier) விடுவித்து விடுகின்றது.
4. குறுகிய காலக் கடன் வசதியளித்தல் - பொதுவாக, உரிமைப் பேராள் ஏட்டுக் கடனின் மதிப்பில் பெரும்பகுதியைக் கடனாக முன்னரே அளித்து விடுகிறது. மீதியுள்ள தொகையை ஏட்டுக் கடனின் முதிர்வு நாளன்று அளிக்கின்றது. இவையே உண்டியல்களின் பணிகள் ஆகும்.
5. ஆலோசனைச் சேவைகளை அளித்தல் - உரிமைப் பேராளானவர் நிதி மற்றும் கடன் நடவடிக்கைகளில் அவருக்கு உள்ள சிறப்புத் தகுதி மற்றும் அனுபவங்களினாலும் கடன் தகவல்களைப் பரவலாகப் பெறும் நிலையில் இருப்பதாலும் இவர் சில ஆலோசனைச் சேவைகளையும் செய்யக் கூடிய நிலையில் இருக்கிறார். இவர், இவரது வாடிக்கையாளருக்கு, பொருளாதார நிலைமைகள் பற்றியும் போக்குகள் பற்றியும் அறிவித்து ஆலோசனைகளை அளிக்கிறார்.

## 14.5 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் வகைகள்

## Types of Factoring

1. முழு ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Full Factoring): இது, "தர அளவு" (Standard) ஏட்டுக் கடன் தரகு வணிகம் எனவும் அழைக்கப்படுகின்றது. இது ஓர் விரிவான ஏட்டுக் கடன் தரகு வணிக முறையாகும். இம்முறையின் கீழ், உரிமைப் பேராள், வணிகக் கடன்களுக்கு எதிராக நிதியளிப்பதோடல்லாமல், விற்பனைப் பேரேட்டை நிர்வகித்தல், கடனை வசூலித்தல், வராக் கடன் போன்ற கடன் இடரை ஏற்றல் போன்ற பிற பணிகளையும் ஏற்கின்றார்.

2. துணை நாடாத ஏட்டுத் கடன் தரகு வணிகம் (Recourse Factoring): இம்முறையில், உரிமைப் பேராள் கடன் இடர் தவிர மீதமுள்ள அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கின்றார். எனவே, ஏதேனும் வராக்கடன் ஏற்பட்டால் அதை வாடிக்கைக்காரர் தான் ஏற்கவேண்டும். கடன் மீது உரிமைப் பேராள் அளித்த கடன் தொகையை உரிமைப் பேராள் தமது வாடிக்கைக்காரரிடம் இருந்து திரும்பப் பெற முடியும்.

3. துணை நாடும் ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Non –Recourse Factoring): இம்முறையில், வராக் கடன் இடரானது உரிமைப் பேராளால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

4. முதிர்வு ஏட்டுக் கடன் தரகு, வணிகம் (Maturity Factoring): இது, "வசூல் ஏட்டுக் கடன் தரகு வணிகம்" எனவும் அழைக்கப்படுகின்றது. இம்முறையில் உரிமைப் பேரான் கொள்முதல் அன்று உடனடியாகச் செலுத்துவதாகவோ அல்லது முதிர்வு நாளன்று செலுத்துவதாகவோ ஒப்புக்கொள்ளலாம்.

5. கடன் உதவும் ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Advance Factoring): உரிமைப் பேராளால் ஏட்டுக் கடன் மீது பணம் உடனடியாக செலுத்தப்பட்டால், அது கடன் உதவும் ஏட்டுக் கடன் தரகு வணிகம் என அழைக்கப்படுகின்றது. இம்முறையில், உரிமைப் பேராள் பிற நிதி சாராத பணிகளுடன் கூட நிதிப் பணியையும் மேற்கொள்கின்றார்.

6. நம்பகமான மற்றும் மறைக்கப்பட்ட ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Confidential and Undisclosed Factoring): இம்முறையில், உரிமை பேராளுக்கும் வாடிக்கைக்காரருக்கும் இடையே ஏற்படுத்தப்படும் ஏட்டுக் கடன் தரகு வணிக ஏற்பாடு வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படுவதில்லை. மற்றும் வாடிக்கைக்காரரே தமது வாடிக்கையாளரிடம் இருந்து உண்டியலுக்குரிய பணத்தையும் பெறுகின்றார்.

7. வங்கி பங்கேற்கும் ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Bank Participating Factoring): இம்முறையில், வாடிக்கைக்காரரின் உண்டியல்களின் மீது உரிமைப் பேராளால் செலுத்தப்பட வேண்டிய தொகை மீது வங்கி மிதக்கும் பற்றுப் பொறுப்பை (Floating Charge) ஏற்படுத்துகின்றது. பின் இதனடிப்படையில், வங்கி வாடிக்கைக்காரருக்க கடனளிக்கின்றது. மேலும், இதன் மூலம் வாடிக்கைக்காரருக்கு இரட்டை நிதிவசதி பெறும் வாய்ப்பையும் அளிக்கின்றது.

8. அளிப்பவர் உத்தரவாத ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Supplier Guarantee Factoring): இவ்வித ஏட்டுக் கடன் தரகு வணிகம், வாடிக்கைக்காரர் அளிப்பவருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே இடைநிலையராகச் செயல்படும் பொழுது ஏற்படுகின்றது. வாடிக்கைக்காரர் பகிர்ந்தளிப்பவராக இருக்கும் பொழுது வாடிக்கைக்காரர் மீது அளிப்பவரால் எழுப்பப்பட்ட சரக்குப் பட்டியல்களுக்கு எதிராக உரிமைப் பேராள் அளிப்பவர் உத்தரவாதம் அளிக்கின்றார். அதன் பிறகு வாடிக்கைக்காரர் வாடிக்கையாளர் மீது உண்டியல்களை எழுப்பி அவற்றை உரிமைப் பேராளுக்கு உடைமை உரிமை ஒப்படைப்பு செய்கின்றார். இதனால் வாடிக்கைக்காரரால் உரிமைப் பேராளின் உதவியால், எந்தவிதமான நிதிசார்ந்த சிக்கலுமின்றி மொத்த இலாபத்தைப் பெற முடிகின்றது.

9. இடாப்பு கழிவு செய்தல் (Invoice Discounting): இடாப்பு கழிவு செய்தலில் உரிமைப் பேராளானவர், ஏட்டுக் கடன்களைக் கொள்முதல் செய்து கொண்டு தொகையை முன்கூட்டியே வாடிக்கைக்காரருக்கு அளித்துவிடுகிறார். இதற்கென உரிமைப் பேராளானவர் ஒட்டுமொத்த காலத்திற்கும் வட்டி விதிக்கிறார். அதாவது முன்கூட்டியே தொகை செலுத்தப்பட்டதிலிருந்து வசூலிக்கும் காலம் வரையிலும் வட்டி விதிக்கிறார். இவ்வகையில், வாடிக்கைக்காரரே விற்பனைப் பேரேட்டு நிர்வாகம், வசூல் போன்ற பணிகளை ஏற்றுச் செய்கிறார். வாடிக்கைக்காரர் அவ்வப்பொழுது, தொகை அளிக்கப்படாத இடாப்புகளின் மதிப்பு மற்றும் அளிக்கப்படாத கடன்களின் பட்டியல் தொடர்பான அறிக்கை ஒன்றை உரிமைப் பேராளிடம் அளிக்கின்றார்.

10. எல்லை தாண்டிய ஏட்டுக் கடன் தரகு வணிகம் (Cross – border Factoring): எல்லை தாண்டிய ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் நடவடிக்கைகளில் நான்கு நபர்கள் அடங்குகின்றனர். அவர்கள்: 1. ஒரு ஏற்றுமதியாளர், 2. ஒரு ஏற்றுமதி உரிமைப் பேராள், 3. ஒரு இறக்குமதி உரிமைப் பேராள், மற்றும் 4. ஒரு இறக்குமதியாளர். ஏற்றுமதியாளர் அவரது நாட்டிலுள்ள ஒரு ஏற்றுமதி உரிமைப் பேராளுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடுகிறார். அவரிடம் வரவிற்குரிய உண்டியல் ஒன்றினை அது எழுப்பப்பட்ட உடனேயே ஒப்படைக்கிறார். இங்கு செலுத்தல் உள்நாட்டு உரிமைப் பேராள் வணிகத்தில் உள்ளது போலவே செய்யப்படுகின்றது. ஏற்றுமதி உரிமைப் பேராள் இறக்குமதி உரிமைப் பேராள் வசிக்கும் நாட்டில் உள்ள உரிமைப் பேராளுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபட்டு, கடனைச் சரிபார்த்தல், விற்பனைப் பேரேடு தயாரிப்பு மற்றும் வசூல் போன்ற பணிகளை குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதாக உடன்பட்டு ஒப்படைக்கிறார்.

## 14.6 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் நன்மைகள்
## Advantages of Factoring

1. இம்முறையினால் பற்பல கடனாளிகள் என்ற விதத்தில் முடக்கப்பட்டு உள்ள மூலதனம் அனைத்தும் உடனடியாகப் பணமாக மாற்றப்படுவதால் அனைத்து விற்பனைகளும் ரொக்க விற்பனை போல ஆகிவிடுகின்றன. எனவே, வணிக நிறுவனங்களின் நிதிப் பற்றாக்குறை பெருமளவிற்குக் குறைக்கப்படுகின்றது.
2. இது சரக்கை விரைவில் ரொக்கமாக மாற்றித் தருகின்றது. எனவே, சரக்குச் சுழற்சியின் வீதமும் அதிகரிக்கப்படுகின்றது. இதனால், சரக்குகளின் மீது செய்யப்படும் முதலீடும் அதிகரிக்கின்றது. இவை அனைத்தும் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதன ஆகும்.
3. இது தொழில் நிறுவனத்தின் கடன் தகுதிநிலை மதிப்பீட்டுத் தரமிடலை அபிவிருத்தி செய்கின்றது.

4. வாடிக்கைக்காரருக்காக உண்டியல்களை உரிமைப் பேராள் வசூல் செய்வதால், குறைந்த செலவில் சிறந்த சேவையைப் பெறமுடிகின்றது.
5. உண்டியல்களை வசூல் செய்வதற்கென பிரத்யேகமான துறை எதுவும் தேவையில்லை. இது கடனைத் திரும்பப் பெறுதல் தொடர்பாக நிறுவனம் செய்ய வேண்டிய செலவுகளைத் தவிர்க்கின்றது.

## 14.7 ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் குறைபாடுகள்

## Limitations of Factoring

1. ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் செயல்பாடு எளிதாகத் தோன்றினாலும் இது அதிக இடர்களையுடையது. வாடிக்கையாளர்கள் நேர்மை தவறி நடக்கலாம்.
2. சிறய வாடிக்கைக்யாளர்கள் ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் சேவையை சிக்கனமாகக் கருத முடியாது.
3. குறைந்த அளவு கடனாளர்கள் உள்ள நிறுவனங்களுக்கு ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் சேவை பயனுடையது அல்ல.
4. பல்வேறு வகையான வாடிக்கையாளர்களுக்கு சிறிய பொருட்களை அதிக எண்ணிக்கையில் விற்பனை செய்பவர்கள் ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் சேவையைப் பெற முடியாது.

மேற்கூறிய குறைபாடுகள் ஏட்டுக் கடன் தரகு வணிகத்தின் சேவையில் காணப்பட்டாலும் இது ஒரு புதிய சேவையாகவே உள்ளது.

## 14.8 இந்தியாவில் இயங்கும் ஏட்டுக் கடன் தரகு வணிக அமைப்புக்கள்

## Factoring Organisations Working in India

இந்தியாவில் நான்கு வணிக வங்கிகள் ஏட்டுக் கடன் தரகு வணிகச் சேவைகளைத் தொடங்க இந்திய ரிசர்வு வங்கியால் அனுமதிக்கப்பட்டுள்ள. அவை பாரத ஸ்டேட் வங்கி, கனராவங்கி. பஞ்சாப் நேஷனல் வங்கி மற்றும் அலகாபாத் வங்கி ஆகியவைகளாகும். அவற்றுள் பாரத ஸ்டேட் வங்கியும் கனரா வங்கியும் தமது துணைக் கம்பெனிகளை அதாவது SBI ∴பேக்டர்ஸ் & கமர்சியல் சர்வீஸஸ் லிட் மற்றும் கேன் பேங்க் ∴பேக்டர்ஸ் லிட் ஆகிய நிறுவனங்களை அமைத்து முறையே தொற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் ∴பேக்டரிங் சேவைகளைத் தொடங்கி விட்டன. பஞ்சாப் நேஷனல் வங்கியும் அலகாபாத் வங்கியும் தங்களின் பகுதிகளை முறையே வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தொடங்க உள்ளன.

பாரத ஸ்டேட் வங்கி தனது SBI ∴பேக்டர்ஸ் அண்டு கமர்சியல் சர்வீஸஸ்லிட் என்ற அமைப்பை 1-9-91 அன்று தொடங்கியது. இந்திய சிறு தொழில்கள் அபிவிருத்திக் கழகம் மற்றும் ஏனைய சில வணிக வங்கிகளும் கூட இணைந்து இக்கம்பெனிகளை உருவாக்கி உள்ளன.

இக்கம்பெனியுடைய மொத்த பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூ.25 கோடிகள் ஆகும். இது பின்வரும் வீதங்களில் அளிக்கப்பட்டுள்ளது.

1. பாரத ஸ்டேட் வங்கி - 54 %
2. இந்தியா சிறு தொழில்கள் அபிவிருத்திக் கழகம் - 20 %
3. இந்தியா யூனியன் வங்கி - 10 %
4. சௌராஷ்டிரா மாநில வங்கி - 10 %
5. இந்தூர் மாநில வங்கி - 10 %

தென்னிந்தியாவில் உரிமம் வழங்கப்பட்ட முதல் வங்கி கேன் பேங்க் ∴பேக்டர்ஸ் லிமிடெட் ஆகும். இது கனரா வங்கியின் துணைக் கம்பெனி ஆகும். ஆந்திரா வங்கியும் இந்திய சிறு தொழில்கள் அபிவிருத்தி வங்கியும் இதன் சக தோற்றுவிப்பாளர்கள் ஆவர். இது தொடக்கத்தில் பெங்க;ர், சென்னை மற்றும் ஹைதராபாத் போன்ற நகரங்களில் இருந்து இயங்கி வந்தன. ஆயினும் தென்னிந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்கள் கூட இதனிடம் இருந்து நிதி பெற முடியும்.

## 14.9 பற்று அட்டைகள்

## Debit cards

பற்று அட்டைகளின் நிலையில், அதனைப் பயன்படுத்தும் பொழுது, நடவடிக்கைத் தொகையானது நேரடியாக உபயோகிப்பாளரது வங்கிக்கு மாற்றப்பட்டு தொகையானது அட்டைதாரரின் கணக்கிலிருந்து கழிக்கப்படுகிறது. இவை காகிதத்தின் உபயோகத்தினைக் குறைக்கிறது குறிப்பாக இது காசோலைகளின் பயன்பாட்டின் அளவைக் குறைக்கின்றது . இது குறைந்த தொகையிலான நடவடிக்கைகளுக்கு, பணம் அளிப்பதையும் ஏதுவாக்குகிறது. தவிரவும், ரொக்கம் மற்றும் நாணயங்களை புழக்கத்தில் விடுவதும் நிதி நிறுவனங்கள் மற்றும் அரசிற்கு மிகவும் செலவு அதிகம் ஆகின்ற ஒரு அம்சமாகவே உள்ளது என்கின்றனர்.

பற்று அட்டைகளை பயன்படுத்தும் பொழுது,நிதியானது மின்னணு மாற்ற முறையின் மூலம் விற்பனை செய்யும் பொழுதே(Electronic Funts Transfer at Point-of-sale)மாற்றப்படுகிறது. இம்மாற்ற முறைம மிகப் பிரசித்தி பெற்ற மின்னணு செலுத்தல் முறையாகும். இம்முறையில், விற்பனைப் புள்ளியில், மின் தொடர்களைப் பயன்படுத்தி, பொருள்கள் வாங்கப்பட்டவுடன் கணிப்பொறியில் வைக்கப்பட்டுள்ள இருப்பில் தொகை கழிக்கப்பட்டு பணம் செலுத்தப்படுகிறது. ஆயினும்,சில்லறை விற்பனையாளர்கள், அதற்காகும் செலவுகளையும் நிதி நிறுவனங்கள் விதிக்கும் நிபந்தனைகளையும் ஏற்க முன˙வர வேண்டும்.

## 14.10 தொகுத்தறிவோம்

வணிக நிறுவனங்களுக்கு தேவையான நிதியை இந்த ஏட்டுக்கடன் தரகு வணிகம் அளிக்கிறது. இந்தப்பாடப் பகுதியில் ஏட்டுக்கடன் நடைமுறையின் பல்வேறு கட்டங்கள் தேவைகள் பணிகள் வகைகள் மற்றும் நன்மைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

## 14.11 கலைச் சொற்கள்

- ❖ ரொக்க விற்பனை
- ❖ முதலீடு
- ❖ நிறுவனம்
- ❖ உண்டியல்கள்
- ❖ வணிக அமைப்புகள்

## 14.12 வினாக்கள்

1. ஏட்டுக்கடன் பல்வேறு கட்டங்கள் பற்றி எழுதுக.
2. ஏட்டுக்கடன் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி எழுதுக.
3. ஏட்டுக்கடனின் தேவைகள் பற்றி எழுதுக.
4. ஏட்டுக்கடனின் வகைகள் பற்றி எழுதுக.
5. இந்தியாவில் இயங்கும் ஏட்டுக்கடன் தரகு வணிக அமைப்புகள் பற்றி எழுதுக.

## 14.13 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்

1. Dr. Natarajan K, 2009, "Financial Markets and Services", Himalaya Publishing House Pvt. Ltd., India
2. Dr. Guruswamy S, 2009 "Financial Service", Tata Mc Graw-hill Education, New Delhi.
3. Prasanna Chandra, 2011 " Financial Management Theory and Practice", Tata Mc Graw-hill Education, New Delhi.
4. Khan M Y and Jain P K, 2008, " Financial Management Text, Problems and Cases". Tata Mc Graw-hill Education, New Delhi.

**மாதிரி வினாத்தாள்**

**10233 – வியாபார வங்கி மற்றும் நிதி தேவைகள்**
B.Com Degree Examination
III semester

Time : 3 hrs
max Marks: 75

Part – A

Answer All the Question (10 x 2 = 20)

1. வணிகர் வங்கியர் என்றால் என்ன?
2. தலைமை மேலாளர்களின் பொறுப்புகள் யாவை?
3. ஒப்புறுதி ஒப்பந்தம் என்றால் என்ன?
4. நிதிச் சேவைகள் பற்றி குறிப்பு வரைக
5. களஞ்சியத்தின் தேவைகள் பற்றி எழுதுக.
6. கழஞ்சியப் பங்கேற்பாளர்கள் என்றால் என்ன?
7. குத்தகையிடல் என்றால் என்ன?
8. வாடகைக் கொள்முதல் என்றால் என்ன?
9. சர்வதேச சந்தையில் மூலதனம் பெறுதல் பற்றி எழுதுக.
10. இணைத்தல் பற்றி குறிப்பு வரைக.

PART-B

Answer All Question (5 x 5 = 25)

11. ய). இந்தியாவின் வணிகர் வங்கியர் வளர்ச்சி பற்றி எழுதுக?
(டிச)
டி). இந்திய நிதிநிலை முறையின் கட்டமைப்பு பற்றி எழுதுக.
12. ய) நிதிச் சேவைகளின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
(டிச)
டி) தேசியப் பங்கு மாற்றகத்தின் நோக்கங்கள் பற்றி எழுதுக.
13. ய) குத்தகையிடுதலின் நன்மைகள் பற்றி எழுதுக?
(டிச)
டி) வாடகைக் கொள்முதல் நிதியின் குறைபாடுகள் பற்றி எழுதுக?
14. ய) முதலீடுகள் பட்டியலின் பல்வேறு நிலையை எழுதுக.
(டிச)
டி) துணிகர முதலீட்டின் பணிகள் பற்றி எழுதுக.
15. ய) வரிசைப்படுத்துதல் நடைமுறை பற்றி எழுதுக.
(டிச)
டி) ஒட்டுக்கடன் தரகு வணிகத்தின் தேவை பற்றி எழுதுக.

PART-C

Answer Any THREE Question (3 x 10 = 30)

16. தற்போதைய இந்திய நிதிநிலை முறையின் நிலையை விவரி.
17. ஒப்புறுதி தொடர்பான கம்பெனிச்சட்டச் சரத்துக்கள் பற்றி விவரி
18. நிதி ஆதாரம் என்ற நிலையில் குத்தகையிடுதல் பற்றி விவரி
19. முதலீடுகளின் பட்டில் மேலாண்மையின் அடிப்படைக் கூறுகள் பற்றி விவரி
20. இந்திய மதிப்பீட்டுத்தரற்றுவனங்களின் மதிப்பீட்டு முறைகளை விவரி